இலங்கை வரலாறு

பிரித்தானியர் காலம் – 1796 – 1948

JAFFNA HINDU LADIES COLLEGE

சி. எஸ். கதிர்காமநாதன். பி.ஏ.

வாதர் வெளியீடு

MADRAS HINDU LADIES COLLEGE

இலங்கை வரலாறு

(பிரித்தானியர் ஆட்சிக்காலம் 1796-1948)

HISTORY OF CEYLON

(BRITISH PERIOD 1796—1948)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புகளுக்குரியது.

சி. எஸ். கதிர்காமநாதன் B. A.

வரதர் வெளியீடு

முதற்பதிப்பு:

டிசெம்பர்மாதம், 1967

விலை ரூபா 4-50

பதிப்புரிமை:
வரதர் வெளியீடு
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

முகவுரை

ஆங்கில மொழி ஆட்சி மொழியாக இருந்த காலத்தில் நாம் அனைவரும் ஆங்கிலத்திலேயே எல்லாப் பாடங்களையும் கற்றோம். ஆங்கில மொழி அந்நிய மொழியாக இருந்ததால் அக்காலத்தில் ஆங்கில அறிவிற் குறைந்திருந்தோர் பலருக்கு வரலாற்றுப் பாடம் பெருந் தலையிடியைக் கொடுத்து வந்ததென்பது உண்மை. ஆனால் நமது தாய்மொழியாம் தமிழ்மொழியில் கல்வி பயிலும் இன்றைய இளஞ்சிறார்களுங் கூட வரலாற்றுப்பாடத்தில் சிறப்புறவில்லையாயின் அது ஒரு பெரிய மர்மமே. இதற்குக் காரணம், எம் தமிழ் மொழியில் எம் மாணவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் எளிய நடையில் நூல்கள் பல தோன்றவில்லை என்றே கூறலாம். இக்குறையை சிறிது நிவர்த்திப்பான் வேண்டியும் ஆங்கில மொழியிலுள்ள பல ஆராய்ச்சி நூல்களிற் பொதிந்துள்ள பல அரிய விடயங்களை மாணவர் மனதிற் புகுத்துவான் வேண்டியும் யான் இப்புது முயற்சியை ஆரம்பித்தேன். என்னலியன்ற அளவில் மாணவர் மனதில் இலகுவில் பதியும்படி வரலாற்றுச் சம்பவங்களைக் கூறியுள்ளேன்.

தனி மனிதர்களைச் சுற்றி வரலாறு வளர்ந்த காலம் மாறி, இன்று வரலாற்றில் சமுதாயத்துக்கே முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. அக் கருத்தை யொட்டியே யானும் அரசியல் வரலாற்றை விபரித்ததுடன் சமுதாயத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் போதிய முக்கியத்துவம் கொடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. வரலாற்றை வெட்டித் துண்டுகள்போடாமல் வரலாறு, தொடர்ச்சியான வரலாறுகவே மாணவர்கள் மனதிற் பதியக் கூடிய அளவுக்கு முயற்சி செய்துள்ளேன்; இம் முயற்சியில் தவறுகள் பல காணப்படலாம். அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியர்களோ மற்றும் அறிஞரோ சுட்டிக்காட்டின் அவற்றைத் திருத்த ஆவன செய்வேன்.

மாணவர்களுக்குப் பரிச்சயம் இல்லாதிருந்தாலும் கலைச்சொற்களைப் புகுத்துவது இக்காலத்தில் தவிர்க்கப்பட முடியாததொன்று; ஆயினும் கூடிய அளவில் மாணவர்களுக்கு விளங்கக்கூடிய முறையில் இந்நூலை ஆக்க முயன்றுள்ளேன்; அத்தியாயங்களின் இறுதியில் காணப்படும் வினாக்கள் மாணவர்களின் பயிற்சிக்குத் துணை புரியுமெனக் கருதுகின்றேன்; அன்றியும் ஆங்காங்கு காணப்படும் அட்ட

வணைகளும் ஆங்கிலப் பதங்களும் மாணவர்களுக்கு உறுதுணை புரியு மென்பது எனது நம்பிக்கை: மாணவர்களுக்குச் சரித்திரத்திலுள்ள ஆர்வத்தை இந்நூல் சிறிதளவாவது தூண்டி விடுமாஞல் அதனையே பெரும் பேருகக் கருதுவேன்.

இந்நூலை ஆக்குவதற்கு யான் பல ஆங்கில நூல்களைக் கலந் துள்ளேன். அவற்றின் ஆசிரியர்களுக்கு யான் கடமைப்பாடுடை யேன். இந்நூலை யான் எழுதுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எனது ஆசிரிய நண்பர்களுக்கும், கையெழுத்துப் பிரதியைச் செவ் வனே தயாரித்த மாணவர்களுக்கும், சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்ட வரதர் வெளியீட்டாருக்கும் என் நன்றி உரியது. இவற் றிற்கு மேலாக இந்நூலை யான் ஆக்குவதற்குரிய எண்ணத்தையே எனக்கு அளித்தவரும், அயராது எனக்கு உற்சாகத்தை ஊட்டிய வரும், இந்நூலுக்கு அணிந்துரை தந்தவருமாகிய எனது மதிப்பிற் குரிய ஆசிரியர் திரு. மா. மகாதேவன் அவர்களுக்கும், எவ்வளவோ வேலைகளுக்கு மத்தியில் சிரமத்தைப் பாராது தமது அரிய நேரத் தைச் செலவிட்டு என் கையெழுத்துப் பிரதியை ஆதியிலிருந்து அந்தம் வரை அலசிப் பார்த்து எனக்கு அணிந்துரை அளித்த இலங் கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. பி. பஸ்தியாம்பிள்ளை அவர்களுக்கும் என் நன்றி என் றென்றும் உரியது.

வேலணை,
11-11-67.

சி. எஸ். கதிர்காமநாதன்

யா: தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிஉப அதிபர்

திரு. மா. மகாதேவன்

B. A. (Cey.), B. A. (Hons.) (Lond.), Dip. in Ed., (Cey.).

அவர்கள் உவந்தளித்த

அணிந்துரை

இந்நூலாசிரியர் திரு: சி. எஸ்: கதிர்காமநாதன் அவர்கள் எனது சிறந்த மாணவரில் ஒருவர். பலவருட காலமாக உயர்தர வகுப்புகளுக்குச் சரித்திரம் கற்பித்த அனுபவம் காரணமாகவும் தனிப்பட்ட முறையில் செய்த பரந்த ஆராய்ச்சிகளின் பயனுகவும் க. பொ. த. வகுப்புகளின் புதிய பாடத்திட்டத்திற்கமைய இந்நூலைத் திறம்பட எழுதியுள்ளார்.

சுயபாஷைக் கல்வியின் பின்னர் பல நூல்கள் எழுந்துள்ளன வாயினும் இந்நூல் பல புதிய சிறப்பு அம்சங்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. தற்போது வெளிவந்துள்ள பல நூல்களில் அரச கரும மொழித்திணைக் களத்தாரின் புதிய பல கலைச்சொற்கள் கலந்துள்ளதால் அவை மாணவர்கள் கற்பதற்குச் சிறிது சிரமத்தைக் கொடுக்கின்றதென்பது யாம் அறிந்ததே. இந்நூலில் புதிய கலைச் சொற்கள் உபயோகிக்கப்பட்டிருந்தாலும் சரளமான தெளிவான நடையும் விடயங்களின் அடுக்குமுறையும் மாணவர்களுக்கு சிரமத்தைப் போக்கிவிடுகின்றது: வரலாற்று நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாயும், நிரலாயும் கூறப்பட்டிருப்பதால் மாணவர் மனதில் படம் பிடிப்பதைப்போல் பதியக்கூடியதாக உள்ளது. அதுவுமன்றி மாணவர்கள் கற்பதற்கும், மனதில் பதியவைப்பதற்கும் இலகுவாகப் பல தலைப்பு அம்சங்களை இவ்வாசிரியர் கையாண்டிருப்பது இந்நூலுக்கு ஒரு தனிச்சிறப்பு: ஒவ்வொரு அத்தியாயமும் படித்து முடிந்தபின், படித்தது மாணவர் மனதிற் பதியும்படியாக அத்தியாயம் முடிவில் வினாக்களை இணைத்திருப்பது கற்பதற்குச் சுலபமாயுள்ளது.

இலங்கைச் சரித்திரத்தைக் கற்கும் மாணவனுக்குச் சிறந்த வழி காட்டியாகவும், கற்பிக்கும் ஆசிரியருக்கு ஒரு அருந்துணையாகவும் இந்நூல் விளங்கும் என்பது எனது அபிப்பிராயம்.

சுதுமலை.
15-10-67

மா. மகாதேவன்

இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை விரிவுரையாளர்

திரு. பி. பஸ்தியாம்பிள்ளை

B. A. Hons. (Cey.), M. A. (Lond.)

அவர்கள் வழங்கிய

அணிந்துரை

எமது நாட்டில் இன்று கீழ் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரையில் கல்வி தாய் மொழியில் போதிக்கப்பட்டு வருகின்றது. தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்கும் நிலை ஏற்பட்டதனால் பல பிரச்சினைகள் எழுந்தன. திருத்தமான முறையில் கல்வி கற்பதற்கு ஏற்ற நூல்கள் தாய்மொழியில் இல்லாமை ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்தது. வரலாற்றுத்துறையைப் பொறுத்தவரையில் பொதுக் கல்வித் தராதரப்பத்திர வகுப்பு நிலையில் கல்வி போதிப்பதற்குத் துணையாக சில நூல்கள் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளனவேனும் அவை இன்றைய தேவையை நிறைவு செய்யக்கூடியனவாயில்லை.

இக்குறைபாட்டை மனதிற் கொண்டே திரு. சி. எஸ். கதிர்காமநாதன் பி. ஏ., அவர்கள் "இலங்கை வரலாறு" (பிரித்தானியர் ஆட்சிக் காலம்) பற்றிய இந்நூலை இயற்றியுள்ளார். திரு. கதிர்காமநாதன் அனுபவமிக்க ஆசிரியர். அன்னாரின் நூலில் பல சிறப்பு அம்சங்கள் காணப்படுகினறன. இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) வகுப்புப் பாடத்திட்டத்திற்கு அமைய இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எனவே இந்நூல் இவ்வகுப்பு மாணவருக்குப் பாடப்புத்தகமாகப் பயன்படுத்தத் தக்கதொன்றாகும். ஏனைய மாணவர், ஆசிரியர் ஆகியோரும் இந்நூலைத் துணையாகக் கொள்ளலாம்.

இலங்கைப் பல்கலைக்கழகம்,
கொழும்பு.
25-10-67

பி. பஸ்தியாம்பிள்ளை

பொருளடக்கம்

—o—

1. இலங்கையைப் பிரித்தானியர் கைப்பற்ற முன்னர் பிரித்தானிய ருக்கும் பிரெஞ்சுக் காரருக்கும் இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்கள். 9

2. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தால் இலங் கையிலுள்ள ஒல்லாந்தப் பிரதேசங்கள் கைப்பற்றப்படல். 21

3. கடற்கரைப் பிரதேசங்களில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி (1796—1802) — 31

4. ஆள்பதி பிரடறிக் நோத் அவர்களின் ஆட்சி, — 44

5. முதலாவது கண்டிப் போர், — — 50

6. ஆள்பதி சேர். தோமஸ் மெயிற்லந்து அவர்களின் ஆட்சி 60

7. i. கண்டி கைப்பற்றப்படல் — — 67

ii. 1815-ம் ஆண்டு கண்டி உடன்படிக்கை — 75

8. i. 1817ம், 1818ம் ஆண்டு கண்டிக் கலகம் — 79

ii. 1817ம், 1818ம் ஆண்டுக் கண்டிக்கலகத்தின் விளைவுகள் 85

9. ஆள்பதி எட்வட் பாண்ஸ் அவர்களின் ஆட்சி — 88

10. கோல்புறூக் ஆணைக்குழுவின் எடுத்துரைகள் — 96

11. 1848-ம் ஆண்டுக் கண்டி விவசாயிகளின் கலகம் 106

12. பொருளாதார அபிவிருத்தி — — 115

13. போக்கு வரத்து அபிவிருத்தி — — 130

14. சமூக அபிவிருத்தி (1831ம் ஆண்டுக்குப் பின்னர்) 149

15. விடுதலைப் போராட்டங்களும் ஹென்றி எட்வட் மக்கலம் அவர்களின் சீர்திருத்தங்களும். — — 166

16. i. விடுதலைப் போராட்டங்களும் சேர் வில்லியம் ஹென்றி மனிங் அவர்களின் சீர்திருத்தங்களும். — — 178

ii. மோர்லி-மின்ரோ சீர்திருத்தங்கள் — — 191

iii. மொந்தேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள் — 193

17. டொனமூர் அரசமைப்பு — — 198

18. சோல்பரி அரசமைப்பு — — 208

19. இலங்கை சுயாட்சிப்பாதையில் — — 220

எனக்கு வரலாறு கற்பித்த

ஆசிரியப் பெருந்தகைகளுக்கு

இந்நூல்



சமர்ப்பணம்

—சி. எஸ். கதிர்காமநாதன்

முதலாம் அத்தியாயம்.

இலங்கையைப் பிரித்தானியர் கைப்பற்றமுன்னர் பிரித்தானியருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் இந்தியாவில் நடைபெற்ற போராட்டங்கள்.

இலங்கையைப் பிரித்தானியர் கைப்பற்றுவதற்கு ஐரோப்பாவில் அக்காலத்தில் நடந்த சம்பவங்களன்றி இந்தியாவில் பிரித்தானியருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் ஏற்பட்ட தகராறும் முக்கிய காரணமாக விளங்குகின்றது. எனவே பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதற்குரிய காரணங்களை ஆராயுமிடத்து இந்தியாவில் அக்காலத்தில் இருந்த நிலைமையையும் அறிவது அவசியமாகிறது. இவ்வத்தியாயத்தில் அவ்விபரங்களை நீங்கள் படிப்பீர்கள்.

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் 1599ம் ஆண்டு இலண்டனில் நிறுவப்பட்டது. 1600ம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாவது எலிசபெத் மகாராணியால் வெளியிடப்பட்ட பட்டயத்தின் படி கீழைத் தேசங்களில் வியாபாரஞ் செய்யும் முழுவுரிமையை மேற்கூறிய சங்கம் பெற்றது. ஆரம்பத்தில் இதுசுமத்திரா, மொலுக்காசு, ஜாவா முதலிய நாடுகளில் மட்டுமே வியாபாரஞ் செய்து வந்தது:

1609ம் ஆண்டு வர்த்தக சங்கத்தின் சார்பில் கப்டின் ஹாக்கின்ஸ், மொகலாய சக்கரவர்த்தி ஜாகாங்கீரை ஆக்ராவில் பேட்டி கண்டு சூரத்தில் வியாபாரஞ் செய்யவும் வியாபாரத் தளங்களை அமைக்கவும் அனுமதி வழங்குமாறு வேண்டினான். இவ் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள ஜாகாங்கீர் பெரும் விருப்புடையவனாக இருந்தபோதிலும் சூரத்தில் நெடுங்காலமாக வியாபாரஞ் செய்து வரும் போர்த்துக்கேயரதும் மற்றும் சூரத் வியாபாரிகளினதும் வெறுப்பைச் சம்பாதிக்க விரும்பாதவனாய் ஹாக்கின்சின் வேண்டுகோளை நிராகரித்தான். 1611ம் ஆண்டு சேர் ஹென்றி மிடில்ரன் பெருங் கப்பற்படை யொன்றுடன் சூரத் துறைமுகத்தையடைந்தான். இவன் ஹாக்கின்ஸ் வாயிலாக இதுவரையும் நடந்தனவற்றை அறிந்து போர்த்துக்கேயரையும் சூரத் வியாபாரிகளையும் அடிபணியச் செய்யத் திட்டமிட்டான். முதல் நடவடிக்கையாக இதுவரையும் செங்கடல் வழியாக சூரத் வியாபாரிகள் செய்து வந்த வியாபாரத்திற்குப் பல இடையூறுகளை விளைவித்தான். இதனால் இவ் வியாபாரிகள் கப்டின் பெஸ்ட் என்பவனின் தலைமையின்கீழ் அனுப்பப்பட்ட இரு பிரித்தானியக் கப்பல்களை சூரத் துறைமுகத்தில் அனுமதிக்கச் சம்மதித்தனர் போர்த்துக்கேயரைக் கடல் யுத்தத்தில்

கப்டின் பெஸ்ட் புறங்காட்டி ஓடச் செய்தான்: பிரித்தானியரின் படைபலத்தை உணர்ந்த ஜாகாங்கீர் சூரத்தில் பண்டசாலை ஒன்றை நிறுவ 1612ம் ஆண்டு ஜனவரி மாதம் அவர்களுக்குச் சட்டபூர்வமாக அங்கீகாரம் வழங்கினன். இதைத் தொடர்ந்து 1619ம் ஆண்டளவில் ஆக்ரா, ஆமதாபாத், பரோச் ஆகிய இடங்களில் பண்டசாலைகளைப் பிரித்தானியர் நிறுவினர்: இரண்டாம் சார்ல்ஸ், போர்த்துக்கல் இளவரசி கதரினுவை மணஞ்செய்ததால் தனக்குச் சீதனமாகக் கிடைத்த பம்பாயை 1668ம் ஆண்டு வர்த்தக சங்கத்திற்குக் குத்தகைக்குக் கொடுத்தான்.

வர்த்தக சங்கம் இந்தியாவின் தென்கீழ்ப் பகுதியிலும் கவனஞ் செலுத்திற்று. 1621, 1626ம் ஆண்டுகளில் முறையே மசூலிபட்டணம், ஆர்மகேயன் என்னும் இடங்களில் இச்சங்கம் பண்டசாலைகளை நிறுவிற்று: இது கோல்கொண்டா இராச்சியத் துறைமுகங்களில் தங்கு தடையின்றி வியாபாரஞ் செய்யுமுரிமையையும் 1632ம் ஆண்டு பெற்றது. 1639ம் ஆண்டு பிரான்சிஸ்டே என்பவன் சென்னையைக் குத்தகைக்குப் பெற்றான்: இதில் ஒரு பண்டசாலை அமைக்கப்பட்டது. இதுவே பிற்காலத்தில் சென்ட் ஜோஜ் கோட்டை எனப் பெயர் பெற்றது:

பின்பு வர்த்தக சங்கம் இந்தியாவின் வடகீழ்ப் பகுதியில் கவனத்தைச் செலுத்திற்று. இது 1633ம் ஆண்டு ஹரிகரபுரம், பாலசோர் ஆகிய இடங்களிற் பண்டசாலைகளை நிறுவிற்று: பின்பு ஹூக்ளி, பட்ஞ, காசிம் பஜார் ஆகிய இடங்களில் பண்டசாலைகளை நிறுவிற்று. 1698ம் ஆண்டு இச் சங்கம் துத்தநூதி, கல்கத்தா, கோவிந்தபுரம் ஆகிய கிராமங்களில் வியாபாரஞ் செய்யும் உரிமையைப் பெற்றது: இவற்றில் கல்கத்தா காலகதியில் ஒரு பெரிய நகரமாக உருப்பெற்றது. 1700ம் ஆண்டு அங்கு ஒரு பண்டசாலை நிறுவப்பட்டது. இதுவே வில்லியம் கோட்டை எனப் பின்பு பெயர் பூண்டது:

பிரித்தானியரது இந்திய ஆதிக்கம் இவ்வாறிருக்க கீழைத்தேசங்களில் ஆதிக்கஞ் செலுத்த பிரெஞ்சுக்காரரும் விரும்பினர்: நான்காம் ஹென்றி, றிச்சல்யூ, கொல்பேட் ஆகியோரின் பேரூக்கத்தினால் பிரெஞ்சுக் கிழக்கிந்திய வர்த்தக சங்கம் (Compagnie de Indes Orientales) 1664ம் ஆண்டு நிறுவப்பட்டது. 1668ம் ஆண்டு பிரெஞ்சுக்காரர் இந்தியாவில் சூரத், மாஹி, காரைக்கால், யனேன் (Yanaon) ஆகிய இடங்களில் பண்டசாலைகளை அமைத்துக்கொண்டனர். இதைத் தொடர்ந்து 1669ம் ஆண்டு மாக்கரா (Marcara) என்பவனின் முயற்சியினால் மசூலிபட்டணத்தில் ஒரு பண்டசாலை நிறுவப்பட்டது. 1673ம் ஆண்டு பிராங்கோயி மாட்டீன் வலிக்

கொண்டைபுரம் முஸ்லீம் ஆள்பதியிடமிருந்து புதுச்சேரியைப் பெற்றான். 1674ம் ஆண்டு வங்காள ஆள்பதியிடமிருந்து பெற்ற சந்திரநகரில் பிரெஞ்சுக்காரர் 1690ம் ஆண்டு ஒரு பண்டசாலையை அமைத்துக்கொண்டனர். 1693 ம் ஆண்டு ஒல்லாந்தர் பிரெஞ்சுக்காரரிடமிருந்து புதுச்சேரியைக் கைப்பற்றினர்; 1697ம் ஆண்டு ஒல்லாந்தருக்கும், பிரெஞ்சுக்காரருக்கு மிடையே ஏற்பட்ட றைசிக் உடன்படிக்கையின்படி (Treaty of Rysick) இது பிரெஞ்சுக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. எனினும் இவ் வுடன்படிக்கையின் பிரகாரம் பிரெஞ்சுக்காரர் சூரத், மசூலிபட்டணம் ஆகியனவற்றை இழந்தனர். 1697ம் ஆண்டிற்கும் 1742ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலம் பிரெஞ்சுக்காரருக்குச் சாதகமாக இருக்கவில்லை; மேலும் இதுவரையும் வியாபார அபிவிருத்தியையே முக்கிய நோக்கமாகக் கொண்ட பிரெஞ்சுக்காரர் இந்தியாவிலுள்ள பிரெஞ்சுச் சைனியத்தின் ஏவுநர் முதல்வனாக 1741ம் ஆண்டு டியூப்ளே (Dupleix) நியமனஞ் செய்யப்பட்ட பின்னர் இந்தியாவில் ஒரு பிரெஞ்சுப் பேரரசை நிறுவப் பேராவாக் கொண்டனர்;

உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிட்டு பலவீனமான சிற்றரசர்களுக்குப் படையுதவி அளித்து அதனால் இந்தியாவின் வியாபாரத்தில் முழுவுரிமையைப் பெறலாமெனவும் பிரித்தானியரை இந்தியாவிலிருந்து அகற்றிவிடலாமெனவும் டியூப்ளே கருதலாயினன்;

பிரித்தானியரும், பிரெஞ்சுக்காரரும் இந்தியாவில் பேரரசை நிறுவத் தனித் தனித் திட்டமிட்டனர். இத்தருணத்தில் உள்நாட்டில் எழுந்த அரசியற் போராட்டங்கள் இவ்விரு சாராருக்கும் சாதகமாகவிருந்தன. மொகலாய சக்கரவர்த்தி அவுரங்கசீப் இறந்ததும் மொகலாய சாம்ராச்சியம் சிதறுண்டு போயிற்று. பல சிற்றரசர்கள் சுதந்திரம் பெற்றனர். சுதேச அரசர்களிடையே நிலவிவந்த பகைமையை இவ்விரு சாராரும் நெய்யூற்றி வளர்த்துத் தங்களுக்குச் சாதகமாக்கிக்கொண்டனர். இதனாலேயே இவர்களிடையே போர்கள் மூளலாயின.

1740ம் ஆண்டு கர்நாடகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை அறிந்துகொள்வாம். கர்நாடகம் தக்கணப் பேரரசின் ஒரு பகுதி. இது ஒரு ஆள்பதியினால் (நவாப்பு) பரிபாலிக்கப்பட்டு வந்தது. இவ் வாள்பதி தக்கணத்து சக்கரவர்த்தியின் (நிஸாம்) கீழுள்ள ஒரு சிற்றரசனென்றே கூறலாம். 1740ம் ஆண்டு மராட்டியர் கர்நாடகத்தின் மீது படையெடுத்து ஆள்பதி டொஸ்த் அலி (Nawab-Dost Ali) யைக்கொன்று அவனது மருமகனாகிய சண்டா சாஹிப் (Chanda Sahib) என்பவனைச் சிறைப்படுத்தினர். இதனால் தக்கணப் பேரரசின் சக்கரவர்த்தி, கர்நாடகத்தின் ஆள்பதியாக அன்வருதின்

(Anwar-ud-Din) என்பவனே நியமனஞ் செய்தான். ஆனால் காலஞ் சென்ற டொஸ்ற் அலியின் உறவினர் கர்நாடகத்தின் ஆள்பதியாக அன்வருதீன் இருப்பதை விரும்பிலர்.

அதே ஆண்டு ஐரோப்பாவில் ஆஸ்திரிய அரசுரிமைப்போர் ஆரம்பமாயிற்று. 1744ம் ஆண்டு இப்போரில் இங்கிலாந்தும், பிரான்சும் ஒன்றுக்கொன்று எதிரிகளாகப் போர்ப் பிரகடனஞ் செய்துகொண்டன. இந்தியாவில் பிரித்தானியருக்கும்பிரெஞ்சுக்காரருக்குமிடையே இப் பகைமை வளர்வதை டியூப்ளே விரும்பிலன். இரு சாராரும் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்பதே இவனது அவாவாகும். இக் கருத்தை இந்தியாவிலுள்ள பிரித்தானிய மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தான். ஆனால் நடுநிலைமை வகிப்பதை பிரித்தானியர் விரும்பவில்லை. அதுவுமன்றி 1746ம் ஆண்டு சோழமண்டலக் கரையோரத்தில் பிரித்தானியக் கடற்படை தோன்றி புதுச்சேரியை முற்றுகையிட்டது. புதுச்சேரியைக் கைப்பற்றத் தவறவே சோழமண்டலக் கரையிலுள்ள பிரெஞ்சுக் கப்பல்கள் சிலவற்றைக் கைப்பற்றியது. ஆனால் டியூப்ளே மொரேஷஸ் தீவிலிருந்து வருவிக்கப்பட்ட கடற்படை ஒன்றினுதவியுடன் பிரித்தானியக் கப்பற்படையைப் புறங்காட்டி ஓடச்செய்து எதிர்ப்பின்றியே சென்னையைக் கைப்பற்றினன். கர்நாடகத்தின் ஒரு பகுதியாகிய சென்னையை டியூப்ளே கைப்பற்றியதையிட்டு பிரித்தானியர் அன்வருதீனிடம் ஆட்சேபனை தெரிவித்தனர். அவன் பிரெஞ்சுக்காரரைச் சென்னையிலிருந்து வெளியேறுமாறு கட்டளை பிறப்பித்தான். இக்கட்டளையை நிறைவேற்ற டியூப்ளே மறுக்கவே அன்வருதீன் பிரெஞ்சுக்காரர்மீது போர்தொடுத்தான். இப்போரில் டியூப்ளே அன்வருதீன் படையை முறியடித்து வாகை சூடினன். ஆனால் ஆஸ்திரிய அரசுரிமைப்போர் முடிவடைந்து எயிக்ஸ்-லா-சாப்பேல் உடன்படிக்கை செய்யப்பட்டதும் பிரெஞ்சுக்காரர் சென்னையைப் பிரித்தானியரிடம் ஒப்படைத்தனர்.

ஏவுநன் டியூப்ளேயின் மதிநுட்பமாகத் தீட்டப்பட்ட புதிய கொள்கை இந்தியாவின் சரித்திரத்தையே மாற்றியமைத்தது. பிரித்தானியரே பிரெஞ்சுக்காரரிலும் பார்க்க படை பலமுள்ளவர்களாகவிருந்தனர். பிரித்தானியரின் குடியேற்றங்கள் பம்பாயிலும், சென்னையிலும் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் பிரெஞ்சுக் குடியேற்றம் கர்நாடகத்தில் மட்டுமே காணப்பட்டது. அதுவுமன்றி பிரித்தானியர் கடலாதிக்கத்தில் திறமையுடையவர்களாகவு மிருந்தனர். ஆனால் பிரித்தானியரின் பலத்தைக் கண்டு டியூப்ளே அஞ்சிலன். டொஸ்ற் அலியின் உறவினர், கர்நாடகத்தில் அன்வருதீன் அரசு செலுத்துவதை விரும்பவில்லையென ஏற்கனவே படித்துள்ளோம். அவர்கள் தற்போது டொஸ்ற் அலியின் மருமகனை சண்டா

சாஹிப்பை அரசனுக்க விரும்பினர். இந்து இவ்வாறிருக்க தக்கணத்திலும் மாற்றங்கள் உண்டாயின. 1748ம் ஆண்டு அசாவ் ஜா (Asaf Jah) இறந்ததும் அவனது மகன் நசீர்ஜாங் (Nasir Jang) சக்கரவர்த்தியானான். இதனால் அசாவ் ஜாவின் பேரன், முஸவார் ஜாங் (Muzaffar Jang) அதிருப்தியடைந்தான். மேற்கூறிய அரசியற் பிரச்சினைகளைப் பயன்படுத்த விரும்பிய டியூப்ளே, சண்டா சாஹிப்புடனும், முஸவார் ஜாங்குடனும் ஒரு இரகசிய உடன்படிக்கையைச் செய்து கொண்டான். இம்மூவரது படைகள் அன்வருதீனது படைகளை ஆம்பூர்ப் போரில் (Battle of Ambur) முறியடித்தன. அன்வருதீன் இப்போரில் இறந்தான். அவனது மகன் மொகமது அலி திருச்சினாப்பள்ளிக்குத் தப்பியோடி கரந்துறைந்தான். மேற்கூறிய வெற்றியின் விளைவாக முஸவார் ஜாங் தக்கணத்தின் சக்கரவர்த்தியாக்கப்பட்டான். சண்டா சாஹிப் கர்நாடகத்தின் ஆளுபதியாக்கப்பட்டான். கிருஷ்ணை நதிக்குத் தென் பகுதியிலுள்ள மொகலாய சாம்ராச்சியத்திற்கு டியூப்ளே ஆளுபதியாக்கப்பட்டான். மேலும் புதுச்சேரிக்கு அண்மையிலுள்ள பிரதேசங்களையும், மசூலிபட்டணத்தையும் பிரெஞ்சுக்காரர் பெற்றுக்கொண்டனர். முஸவார் ஜாங்கின் பாதுகாப்புக்காக நிரந்தரப் படையொன்றை ஏவுநன்மார்க்கியூஸ் புஸி (Marguis de-Bussy) என்பவனின் தலைமையின் கீழ் தக்கணத்தின் தலைநகராகிய ஹைதராபாத்தில் டியூப்ளே நிறுத்திவைத்தான்.

டியூப்ளேயின் தலைமையின் கீழ் பிரெஞ்சுக்காரர் இத்தகைய செல்வாக்குப் பெற்றதைக் கண்டு பிரித்தானியர் நடுநடுங்கினர். 1750ம் ஆண்டு பிரித்தானிய ஆளுபதியாக நியமனம் பெற்ற சான்டேர்சு (Saunders) பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கைச் சிதைத்து அவர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்த ஆர்வங்கொண்டான். இதற்கிணங்க திருச்சினாப்பள்ளியில் தலைமறைவாக இருக்கும் மொகமது அலியின் அனுசரணையுடன் ஒரு பிரித்தானிய படையை சான்டேர்சு 1751ம் ஆண்டு அனுப்பிவைத்தான். இதனால் பிரெஞ்சுக்காரருக்கும் பிரித்தானியருக்குமிடையே திருச்சினாப்பள்ளியில் போர் மூண்டது. இப்போர் வெற்றி தோல்வியின்றி நடந்துகொண்டிருக்கும் வேளையில் பிரித்தானியர் சார்பில் ரொபேட் கிளைவ் (Robert Clive) கர்நாடகத்தின் தலைநகராகிய ஆர்க்காட்டைக் கைப்பற்றினான். ஐந்நூறு போர்வீரர்களடங்கிய சாதாரண படையுதவியுடன் ஆர்க்காட்டை முறியடித்ததனால் மேலும் உற்சாகமுடையவனாய் அவன் திருச்சினாப்பள்ளியை முற்றுகையிட்டான். இதுவும் 1752ம் ஆண்டு ஜூன் மாதம் பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. எனினும் இக்காலத்தில் தக்கணச் சக்கரவர்த்தியிடமிருந்து முஸ்ரவாநகர், எல்லூர், ராஜமகேந்திரபுரம், சிக்காக்கோலி என்னும் மாவட்டங்களைப் பிரெஞ்சுக்காரர் பெற்றுக்கொண்டனர்.

பிரெஞ்சு கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இந்தியாவில் போர் செய்து பெருந்தொகையான போர்வீரர்களையும், பணத்தையும் இழப்பதை பிரெஞ்சு அரசாங்கம் விரும்பவில்லை இந்திய விவகாரங்களை விசாரணை செய்யும் பொருட்டு கொடிகேயு (Godcheu) என்பவன் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டான். இவன் 1754-ம் ஆண்டு பிரித்தானியருடன் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டான். இதன்படி இந்திய அரசர்களிடையே ஏற்படும் சச்சரவுகளில் தலையிடுவதில்லையெனப் பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் கைச்சாத்திட்டுக் கொண்டனர்.

ஆனால் இவ்வமைதி நிலை நிற்கவில்லை. 1756-ம் ஆண்டு ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் ஆரம்பமாயிற்று. அதில் பிரான்சும் இங்கிலாந்தும் ஒன்றுக்கொன்று எதிரிகளாகவே யுத்தம் செய்ய நேர்ந்தது. இப்போரின் எதிரொலி இந்தியாவிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. இக்காலத்தில் வங்காளத்தில் பிரித்தானியர், பிரெஞ்சுக்காரர், ஒல்லாந்தர் ஆகியோர் மூறையே கல்கத்தா, சந்திரநகர், சின்சுரா (Chinsurah) ஆகிய இடங்களில் வியாபாரத் தளங்களை அமைத்துஆதிக்கஞ் செலுத்தி வருகின்றனரென்பதை மனதிற் கொள்வது பயன் தருவதாகும்.

அதே ஆண்டு டில்லி மொகலாய சக்கரவர்த்தியின் கீழுள்ள வங்காள ஆள்பதி அலிவர்த்திகான் (Alivardi Khan) இறக்கவே அவனது பேரன், சிராஜ்-உத்-தௌலா (Siraj-ud-daulah) ஆள்பதியானான். வங்காள ஆள்பதியாக இவன் இருப்பதை இவனது உறவினர் பலர் விரும்பிலர். அவர்கள் இவனுக்கெதிராகக் கலகங்கள் விளைவித்ததோடு பிரித்தானியரிடம் தஞ்சம் புகுந்து சிராஜ்ஜைப் பதவியிலிருந்து நீக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். தஞ்சம் புகுந்த உறவினரைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு சிராஜ் பன்முறை பிரித்தானியரைக் கேட்டபோதும் அவர்கள் செவிசாய்க்கவில்லை. அதுவுமன்றி கல்கத்தாவிலுள்ள வில்லியம் கோட்டையை மேலும் அரண் செய்யத் தொடங்கினர். எங்ஙனம் கர்நாடகத்தில் அரசர்களுக்கு உதவியளித்து அப்பிரதேசங்களில் ஆதிக்கஞ் செலுத்த முயன்றனரோ அதேபோல தனது பகைவர்களுக்கும் படையுதவி அளித்து வங்காளத்தைக் கைப்பற்றும் நோக்குடனேயே பிரித்தானியர் கோட்டையை அரண் செய்கின்றனரென சிராஜ் எண்ணினான். இதனால் அவன் பிரித்தானியர் மீது படையெடுத்து காசிம் பஷாரிலுள்ள பண்டசாலையையும் கல்கத்தாவிலுள்ள கோட்டையையும் 1756-ம் ஆண்டு ஜூன் மாதம் கைப்பற்றினான். சிராஜ் நூற்றி நாற்பத்தாறு பிரித்தானியப் போர்வீரர்களை 267 சதுர அடியுள்ள இருட்டறை ஒன்றில் பூட்டி வைத்தானெனவும் அவர்

களுள் நூற்றிருபத்து மூன்று பேர் அதிகாலையில் இறந்து கிடந்தனர் எனவுங் கூறப்படுகிறது. இதுவே சரித்திர ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் இருட்டறைச் சம்பவமாகும். மேற்கூறிய இரு தளங்களையும் கைப்பற்றி அவற்றைத் தனது ஏவுநனின் பொறுப்பில் விட்டு விட்டு சிராஜ் வங்காளத்தின் தலைநகராகிய மூர்ஷிதாபாத்துக்குச் சென்றான்.

வங்காளத்தைத் திரும்பவும் கைப்பற்றும் எண்ணம் பிரித்தானியரது மனதிலிருந்து நீங்கவில்லை. இவர்கள் தாய்நாட்டிலிருந்தும் ஏனைய குடியேற்றங்களிலிருந்தும் வரும் உதவியை எதிர்பார்த்தும் வங்காளத்தில் தங்களுக்குச் சாதகமாக ஓர் சூழ்நிலை உருவாகும் வரையும் பொறுமையுடன் புல்ரா என்னுமிடத்தில் தங்கியிருந்தனர். 1756-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் பிரமாண்டமான படையொன்றுடன் சென்னையிலிருந்து வங்காளத்திற்கு கிளைவும் அட்மிரல் உவற்சன் (Watson) என்பவனும் வந்து சேர்ந்தனர். இவர்கள் வந்ததும் வராததுமாக சிராஜ் மீது படையெடுத்து 1757ம் ஆண்டு ஜனவரி மாதம் கல்கத்தாவைக் கைப்பற்றினர். அதன் பின்பு ஹூக்ளி என்னும் நகரத்தைக் கொள்ளையடித்து அதைத் தீக்கிரையாக்கினர். இதன் விளைவாக அவ்வாண்டு பெப்புருவரி மாதம் அலிநகரில் சிராஜ்ஜுக்கும் பிரித்தானியருக்குமிடையே ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் ஐரோப்பாவில் ஆரம்பமான ஏழாண்டுப் போர் இன்னும் முடிவடையவில்லை என்பதை மனதிற் கொள்வது நலம். எங்ஙனமாயினும் பிரித்தானியர் பிரெஞ்சுக்காரரது ஆதிக்கத்தின் கீழுள்ள சந்திரநகரைத் தமதாக்கிக்கொள்ள விரும்பினர். சந்திரநகரைக் கைப்பற்ற எண்ணுவது தகாதெனவும் அலிநகர் உடன்படிக்கைக்கு முரணானது எனவும் சிராஜ் எடுத்து இயம்பினான். பிரித்தானியர் செவிசாய்க்கவில்லை. 1757-ம் ஆண்டு மார்ச்சு மாதம் சந்திரநகரைப் பிரித்தானியர் கைப்பற்றினர். இப்படையெடுப்பின் போது பிரெஞ்சுக்காரரைப் பாதுகாக்கும் முகமாக சிராஜ் தனது படைகளை அனுப்பவில்லையென்பது வியப்புக்குரியது. எனினும் அவன் அகதிகளாகிய பிரெஞ்சுக்காரரைத் தனது அரண்மனையில் வைத்துப் பாதுகாத்தான். தங்களது எதிரிகளாகிய பிரெஞ்சுக்காரர் சிராஜ்ஜின் அரண்மனையிலிருப்பதை விரும்பாத பிரித்தானியர் அவர்களை வைத்திருக்க வேண்டாமெனக் கூறியும் அவன் செவிசாய்க்கவில்லை. சிராஜ்ஜின் அனுதாபத்தில் அவனது அரண்மனையிலிருக்கும் பிரெஞ்சுக்காரர் தக்க தருணம் வரும் வேளையில் புதுச்சேரியிலிருந்து படையுதவி பெற்றுத் தங்களை முறியடிக்கலாமெனப் பிரித்தானியர் அஞ்சினர். ஆகவே சிராஜ்ஜைக் கொன்று தங்களது சொல்லுக்கமையக்கூடிய மோர்ஜவார் (Mir Jafar)

என்னும் ஏவுநனே அரசனுக்க எண்ணி ஏவுநன் மேர்ஜவார் என்பவ னுடனும் இன்னும் பலருடனும் சூழ்ச்சி செய்யலாயினர். இச்சூழ்ச் சியின் விளைவாக பிரெஞ்சுக்காரரை வெளியேற்ற சிராஜ் தூண்டப் பட்டான். பிரெஞ்சுக்காரர் மூர்ஷிதாபாத்திலிருந்துவெளியேறியதும் சிராஜ்மீது பிரித்தானியர் போர் தொடுத்தனர். ஒன்று மறியாத சிராஜ் தனது படைக்குத் தலைவனுக ஏவுநன் மேர்ஜவாரை அனுப் பியதில் வியப்பொன்றுமில்லை. 1757-ம் ஆண்டு பிளாசி என்னு மிடத்தில் பிரித்தானியப்படையும், சிராஜ்ஜின் பிரமாண்டமான படையும் மோதின. இப்போரில் மிக எளிதாகப் பிரித்தானியர் சிராஜ்ஜின் படையை முறியடிக்கக் கூடியதாகவிருந்தது. தோல்வி யுற்ற சிராஜ் மூர்ஷிதாபாத்துக்குத் தப்பியோட முனையுங்கால் கைப் பற்றப்பட்டுக் கொலைசெய்யப்பட்டான். மேர்ஜவார் ஆள்பதியாக் கப்பட்டான் எப்படி ஏப்பிரஹாம் மலைச்சாரலில் ஆங்கிலப்படை பிரெஞ்சுப்படையை முறியடித்தபோது அமெரிக்கக் குடியேற்றங் கள் சுதந்திரமடைந்து விட்டதெனக் கருதப்பட்டதோ அதேபோ லப் பிளாசிப் போரில் பிரெஞ்சுக்காரரைப் பிரித்தானியர் முறிய டித்தபோது இந்தியாவில் பிரித்தானியரது ஆட்சி தாபிக்கப்பட்ட தென்பது ஊர்ஜிதமாயிற்று.

அரசாங்கத்தைச் செவ்வனே நடாத்துவதற்கும் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தவர்களுக்கு சன்மானங்களை வழங்கு வதற்கும் போதிய நிதி இல்லாத அவலநிலை புதிய ஆள்பதி மேர் ஜவாருக்கு ஏற்பட்டது. இப்பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட தும் 1761-ம் ஆண்டு பிரித்தானியர், மேர்ஜவாரை நீக்கி அவ னது மருமகனுகிய மேர்-காசிம் (Mir-Kasim) என்பவனை ஆள்பதி யாக்கினர். இவன் வர்த்தக சங்கத்திற்கு பர்த்வான் Burdwan), மிட்னப்பூர் (Midnapore), சிட்டஹாங் (Chittagong) ஆகிய மூன்று மாநிலங்களையும் வர்த்தகசங்க மேலதிகாரிகள் பலருக்கு சன்மா னங்கள் பலவற்றையும் வழங்கினன். இவனது ஆட்சியில் வர்த்தக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வித வரியுமின்றித் தனிப்பட்ட முறை யில் வியாபாரஞ் செய்து வந்தமை இந்திய வியாபாரிகளை மிகவும் பாதித்தது. இவ்வேறுபாட்டை மேர்-காசிம் சமப்படுத்த முனையுங் கால் அவனுக்கும் பிரித்தானியருக்கும் பகைமை உண்டாயிற்று. இதன் பேரில பிரித்தானியர் அவனைப் பதவியிலிருந்து நீக்கி மீண் டும் மேர்-ஜவாரை வங்காள ஆள்பதியாக்கினர்.

மேர் காசிம், அயோத்தி ஆள்பதி சூஜா-உத்-தௌலா (Shuja-ud-daula) என்பவனிடம் தஞ்சம் புகுந்தான்-மேர்-காசிம் சார்பில் அயோத்தி ஆள்பதியும் டில்லி சக்கரவர்த்தி, இரண்டாவது ஷா-அலாம்(Shah Alam I)என்பவனும் பிரித்தானியருடன் போர் தொடுத்

இந்தியா - 1796 இல் பிரித்தானிய ஆள்புலங்கள்



1. கார்வால்
2. பரமஹால்
3. திண்டுக்கல்
4. குடகு
5. கொச்சின்
6. திருவனந்தபுரம்
7. கோவை

இந்தியா - 1796 இல் பிரதான நகரங்கள்



1. பக்ஸர், 2. மூர்ஷிதாபாத், 3. காஷிம்பஜார், 4. பிளாசி, (1757) 5. சின்சுரா (ஒல்), 6. சந்திரநகர் (பிரெ), 7. கல்கத்தா, (1690), 8. வில்லியம் கோட்டை (1696), 9. ஹுக்ளி, 10. பாலசோர், 11. ராஜமகேந்திரபுரம், 12. எல்லூர், 13. ஆம்பூர், 14. ஆர்க்காடு (1751) 15. செஞ்சி, 16. வந்தவாசி (1760), 17. செண்ட் டேவிட் கோட்டை (1690), 18. நாகபட்டணம் (ஒல்), 19. திருச்சிராப்பள்ளி, 20. பரோக்.

தனர்; இவ்விரு சாராரின் படைகளை 1764-ம் ஆண்டுபக்ஸர் (Buxar) என்னுமிடத்தில் பிரித்தானியர் முறியடித்தனர். இதன்பின்பு டில்லி சக்கரவர்த்திக்கும் பிரித்தானியருக்குமிடையே நடைபெற்ற அலஹாபாத் உடன்படிக்கையின் பிரகாரம் வங்காளம், பிஹார், ஒரிசா, ஆகிய மாநிலங்களின் குடியியல் வருமான பாலனங்கள் வர்த்தக சங்கத்திற்கு வழங்கப்பட்டன. இதையடுத்து மைசூர் இராச்சிய அரசியலிலும் பிரித்தானியர் கவனத்தைத் திருப்பி மைசூர் இராச்சிய ஆள்பதியாகிய திப்பு சுல்த்தானுக்கெதிராக தக்கண சக்கரவர்த்தியையும் மராட்டியரையும் படையெடுக்கத்தூண்டி அவ்விரு சாராருக்கும் படை உதவி அளித்து திப்பு சுல்த்தானை அடிபணியச்செய்தனர். இதனால் மைசூர் இராச்சியத்தின் அரைவாசியைப் பெற்று குடகையை (Coorg) மானியமாளி நாடாக்கினர். ஆகவே மேற் கூறியனவற்றிலிருந்து இந்தியாவின் பெரும் பகுதிகளில் ஆதிக்கஞ்செலுத்தி பிரித்தானியர் தங்களை ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் ஆக்கிக் கொண்டனர்.

இனி, பிரித்தானியர் - பிரெஞ்சுக்காரர் தொடர்பை மேலும் அறிந்து கொள்வாம்: 1758-ம் ஆண்டு கவுண்ட்-டீ-லல்லீ (Count -de-Lally) என்பவன் பிரெஞ்சுப் பிரதேசங்களின் ஆள்பதி நாயகமாகப் பதவியேற்றான்; அவன் அவ்வாண்டு மே மாதம் சென்ட் டேவிட் கோட்டையையும் டிசெம்பர் மாதம் சென்னையையும் முற்றுகையிட்டான்; ஆனால் அதனால் எவ்வித பயனுமேற்படவில்லை: அவனது புத்தியற்ற செயல்களில் ஒன்று, ஹைதராபாத்தில் நிரந்தரமாக நிறுத்தி வைக்கப்பட்ட படையை சென்னைக்கு அழைத்தமை. இப்படை சென்னைக்கு அனுப்பப்பட்டதும் பிரித்தானியர் பிரெஞ்சுக்காரரின் ஆதிக்கத்திலிருந்த ராஜமகேந்திரபுரம், மசூலிபட்டணம் ஆகிய இடங்களைக் கைப்பற்றினர். மேலும் 1760-ம் ஆண்டு வந்தவாசி (Wandiwash) என்னுமிடத்தில் நடந்த போரில் பிரித்தானியர் பிரெஞ்சுக்காரரை முற்றுகத் தோற்கடித்தனர். 1761ம் ஆண்டு ஜனவரி மாதம் புதுச்சேரியைப் பிரித்தானியர் தாக்கித் தரை மட்டமாக்கினர். அதே காலத்தில் இந்தியாவின் மேற்குக் கரையோரத்தில் செஞ்சி, மாஹி ஆகிய இரு இடங்களையும் பிரெஞ்சுக்காரர் இழந்தனர்; ஏற்கனவே சந்திரநகரை இழந்துவிட்டனர். ஆகவே 1761-ம் ஆண்டளவில் பிரெஞ்சுக்காரர் இந்தியாவில் எல்லாப் பிரதேசங்களையும் இழந்தனர்; எனினும் 1763-ம் ஆண்டு பரிஸ் உடன்படிக்கையின் பிரகாரம் புதுச்சேரியையும், சந்திரநகரையும் வியாபாரத் தளங்களாக வைத்திருக்கப் பிரெஞ்சுக்காரர் அனுமதிக்கப்பட்டனர்.

வந்தவாசி போரில் முற்றுகத் தோற்கடிக்கப்பட்டபோதிலும் இந்தியாவில் தாங்கள் இழந்த இடங்களைத் திரும்பவும் மீட்கலா

மென்ற எண்ணம் பிரெஞ்சுக்காரரது மனதில் வேரூன்றி இருந்தது. இவ்வெண்ணம் நெப்போலியன் ஐரோப்பாவில் ஒல்லாந்து, இத்தாலி முதலிய இடங்களைக் கைப்பற்றி எகிப்துக்கு வந்தபோது பிரெஞ் சுக்காரர் மனதில் மிகவும் தீவிரமாகவிருந்தது. இதையறிந்து அச்ச மடைந்த பிரித்தானியர் இந்தியாவுக்கு பிரெஞ்சுக்காரரால் வரும் ஆபத்தைத் தடுப்பதற்கு முயற்சி செய்தனர். இலங்கை பிரெஞ்சுக் காரரது கையில் வீழ்ந்துவிட்டால் அவர்கள் அங்கிருந்து இந்தியா வைத் தாக்குவது எளிதாயிருக்குமென உணர்ந்த பிரித்தானியர் பிரெஞ்சுக்காரரின் கையில் இலங்கை சிக்குவதற்கு முன்னரே தாங் கள் அதைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். இதன் விளைவே 1796ம் ஆண்டில் ஒல்லாந்தருக்கும், பிரித்தானியருக்கும் நிகழ்ந்த போரும் இலங்கையை அவர்கள் கைப்பற்றியமையுமாகும்.

வினாக்கள்

1. இந்தியாவில் பிரித்தானிய வர்த்தக சங்கத்தின் செல்வாக்கு பரவிய விதத்தை விளக்குக.

2. கீழைத் தேசத்தில் பிரித்தானியரது வியாபார அரசியல் நட வடிக்கைகள் பரவியமைக்கு வர்த்தக சங்கங்கள் எவ்வாறு உதவி புரிந்தனவென்பதை ஆராய்க.

3. இந்தியாவில் பிரித்தானியருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையில் ஏற்பட்ட போராட்டங்களில் பிரித்தானியர் வெற்றிபெற்ற மைக்குரிய காரணங்களைத் தருக.

4. இந்தியாவில் பிரித்தானிய அதிகாரம் வளர்ச்சியடைந்து பரவிய வரலாற்றினையும் அங்கு தேசிய இயக்கம் தோன்றி வளர்வதற்கு காரணமாய் அமைந்தவற்றையும் விளக்குக. (டிசெம்பர், '49)

5 கர்நாடகத்திலும் வங்காளத்திலும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதில் ரெபேட் கிளைவ் எத்தகைய பங்கு எடுத்துக் கொண்டார்? (டிசெம்பர், '54)

இரண்டாம் அத்தியாயம்

பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தால் இலங்கையிலுள்ள ஒல்லாந்தப் பிரதேசங்கள் கைப்பற்றப்படல்.

பிரித்தானியரும் பிரெஞ்சுக்காரரும் தத்தம் செல்வாக்கையும் அதிகாரத்தையும் இந்தியாவில் நிலைநாட்டுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளே இலங்கையில் பிரித்தானியர் கண்ணோட்டஞ் செலுத்துவதற்கும், அதன்பின்பு அங்கு தங்கள் ஆட்சியையே நிறுவுவதற்கும் சந்தர்ப்பத்தை அளித்தன. அதுமட்டுமன்றி இலங்கையில் அப்பொழுதிருந்த அரசியல் நிலைமையும் பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதற்குச் சாதகமாக இருந்தது.

இந்தியாவின் கிழக்குக் கரையோரமாகப் பிரித்தானியர் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் வேளையில் வேண்டிய உணவுப் பொருள்கள், படை முதலியனவற்றை மேற்குக் கரையிலுள்ள பம்பாயிலிருந்தே அனுப்பி வைக்க வேண்டியிருந்தது. அதுவுமன்றி இந்தியாவின் கிழக்குக் கரையோரமாக நடைபெறுகின்ற கடல் யுத்தங்களில் பழுதடைந்த கப்பல்களைச் செப்பனிடுவதற்கு பம்பாய்க்குக் கொண்டு செல்லவேண்டியிருந்தது. காற்றுச் சாதகமாக வீசுகின்ற காலத்தில் மாத்திரந்தான் பம்பாயிலிருந்து படையுதவியையும், உணவுப்பொருள்களையும் பெறலாம். இதனால் இந்தியாவின் கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தங்களைச் சீரிய முறையில் நடாத்தி வெற்றிபெறுவதற்கு இந்தியாவின் கிழக்குக் கரையோரமாக வங்காள விரிகுடாவை அடுத்துத் துறைமுகமொன்றை வைத்திருத்தல் அவசியமெனப் பிரித்தானியர் கருதினர். இவ்வகைக் கஷ்டத்தைப் போக்கும் துறைமுகமாகத் திருகோணமலை விளங்குவதைக் கண்ட பிரித்தானியர் அத் துறைமுகத்தைத் தம் வசப்படுத்தத் திட்டமிட்டனர்.

திருகோணமலையைக் கைப்பற்றினால் இந்தியாவில் பிரெஞ்சுக்காரரோடு யுத்தம் செய்யும் வேளையில் வேண்டிய படைகளையும், கப்பல்களையும், உணவுப் பொருள்களையும் அங்கிருந்து விரைவாக அனுப்பி அவ் யுத்தங்களில் வெற்றியீட்டலாம் எனப் பிரித்தானியர் கருதினர். மேலும் திருகோணமலைத் துறைமுகத்தின் இயற்கையமைப்பு அவர்களது கவனத்தை ஈர்த்தது. திருகோணமலைத் துறைமுகத்தில் அநேக கப்பல்களை வங்காள விரிகுடாவில் ஏற்படும் சூறாவளிக் காற்றினின்றும் பாதுகாக்கலாமென்றும், துறைமுகத்தில் நடப்பனவற்றை வேறிடத்திலுள்ளோர் அறியமுடியாதென்றும், பிரித்தா

இந்துசமுத்திரத்தில் இலங்கையின் முக்கியத்துவம்



சிக்காங்கோங் : சிட்டஹாங்

னியப் பிரதமரான வில்லியம் பிற் பாராளுமன்றத்தில் புகழ்ந்துரைத் தார். இதிலிருந்து இத்துறைமுகத்தின் முக்கியத்துவத்தைப் பிரித்தா னியர் உணர்ந்து இதைக் கைப்பற்ற ஆவல் கொண்டனர். இலங்கையின் புவியியல் நிலையும் இத்துறைமுகத்தின்பால் இவர்களை நாட்டம்கொள் ளச் செய்தது. இலங்கை மத்தியகோட்டுக்கு வடக்கில் 5° 55° லிருந்து 9° 50° அகலக்கோடு வரையிலும் 79° 42° லிருந்து 81° 53° கிழக்கு நெடுங்கோடு வரையிலும் அமைந்திருக்கின்றது. வடக்கே பலைமுனை தொடக்கம் தெற்கே டொண்டரு முனை ஈறுக இலங்கையின் ஆகக் கூடிய நீளம் 270 மைல்கள். மேற்கே கொழும்பு தொடக்கம் கிழக்கே சங்கமாங்கந்தை ஈறுக இலங்கையின் ஆகக் கூடிய அகலம் 140 மைல் கள். இத்தீவின் பரப்பு 25,332 சதுர மைல்கள். சுற்றளவு 760 மைல் கள். இதன் பரப்பும் ஒல்லாந்து, பெல்ஜியம் ஆகிய தேசங்களின் பரப்பும் சமமாக இருக்கின்றன. மொரேஷஸ் தீவுகள், சிட்னி, இலண்டன், ஏடன், கேப்ரவுண், கல்கத்தா, சிங்கப்பூர் ஆகிய துறை முகங்களிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கை முறையே 2099, 5556, 6725 (ஏடன் மார்க்கமாக 5868) 2100, 4362, 1260, 1567 மைல்கள் தூரத்தில் இந்து மகா சமுத்திரத்தில் அமைந்துள் ளது. பாக்கு நீரிணை இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கின்றது. இது ஒரு சிறிய தீவாயிருப்பதால் வலிமையுள்ள கடற்படையுடைய பிரித்தானியர் அதைச் சிரமமின்றி பகைவர் அணுகாது காக்கக்கூடிய தாகவும் இருக்கும். இலங்கைத் தீவானது இந்தியாவுக்கு அண்மை யிலும், இந்துசமுத்திரத்தின் மத்தியிலும் அமைந்திருத்தல் தங்கள் கீழைத்தேய சாம்ராச்சியத்தைப் பாதுகாப்பதற்குப் பயன்படுமென் பதைப் பிரித்தானியர் நன்கு உணர்ந்திருந்தனர். இந்துசமுத்திரத் தின் மத்தியில் இலங்கை இருப்பதோடு மேற்குக் கிழக்கு நாடுகளின் வியாபாரப் பாதையிலும் அமைந்திருக்கிறது. எனவே இலங்கை யைக் கைப்பற்றி விட்டால் யுத்தகாலங்களில் மேற்கு கிழக்கு நாடு களிடையே இந்து சமுத்திரம் வழியாக நடைபெறும் கடற்போக்கு வரத்தையும் கீழைத்தேய வியாபாரத்தையும் கட்டுப்படுத்தலாமென் பதை பிரித்தானியர் உணர்ந்திருந்தனர். மேலும் திருகோணமலை, கொழும்பு ஆகிய இரு துறைமுகங்களைக் கைப்பற்றுவதன்மூலம் இந் தியாவின் மேற்குக் கரையோரங்களையும், கிழக்குக் கரையோரங்களை யும் காவல் புரிந்து வரலாமென எண்ணினர். இத்தகைய நோக்கங் களைக் கொண்டிருந்த பிரித்தானியர் தமது சாம்ராச்சிய வளர்ச்சிக்கு இலங்கையைக் கைப்பற்றுவது அவசியமெனக் கருதினர்.

1762ம் ஆண்டு கண்டி மன்னன் ஒல்லாந்தரை இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து துரத்தும் நோக்கத்துடன் பிரித் தானியரிடம் படை உதவி நாடினான். அப்பொழுது ஐரோப்பாவில் இங்கிலாந்தும் ஒல்லாந்தும் நேச உறவுகொண்ட நாடுகளாக இருந்

தன. அதனுல் ஒல்லாந்தருக்கெதிராகக் கண்டி மன்னனுக்குப் படை உதவி அளிக்க பிரித்தானியரால் முடியாமலிருந்தது; எனினும் அவர்கள் இச் சந்தர்ப்பத்தை நழுவவிட விரும்பவில்லை; படை உதவி அளிக்க முடியாதிருப்பினும் வியாபாரத் தொடர்பையாவது ஏற்படுத்தலாமெனக் கருதி ஜோண் பைபஸ் என்பவனைக் கீர்த்திஸ்ரீ இராஜசிங்கனிடம் தூதாக அனுப்பினர்; பைபஸ் படை உதவிபற்றித் திட்டவட்டமான முடிவைக் கூறுவதற்கு இயலாமையினுல் வியாபார உரிமையை உடனடியாக வழங்கும்படியும், காலகதியில் படை உதவி அளிப்பதாகவும் கூறினன். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் உடனடியாகப் படையுதவி இல்லையாயின், வியாபார உரிமையையும் வழங்க முடியாதென மறுத்துப் பிரித்தானியர் தொடர்பைத் துண்டித்தான்.

ஆனல், அமெரிக்க சுதந்திரப் போர் நடைபெறுங் காலத்தில் ஒல்லாந்தருக்கும், பிரித்தானியருக்குமிடையே ஏற்பட்ட பகைமை பிரித்தானியர் கண்டி இராச்சியத்துடன் தொடர்பு கொள்ள வழி வகுத்தது. அமெரிக்க சுதந்திரப் போர் நடைபெறுங் காலத்தில் ஒல்லாந்து தேசம் நடுநிலைமை நாடுகளில் ஒன்றுக இருந்தது; ஆனல் பிரித்தானியர், சில நடுநிலைமை நாடுகள் அமெரிக்க குடியேற்றங்களுக்குப் படையுதவி அளிக்கின்றனவென எண்ணி நடுநிலைமை நாடுகளின் கப்பல்களைச் சோதனையிடத் தொடங்கினர். இதனை ஒல்லாந்தர் ஆட்சேபிக்கவே ஒல்லாந்தருக்கும், பிரித்தானியருக்கும் இது வரையு மிருந்துவந்த உறவு முறிந்தது. மேலும் ஒல்லாந்து, அமெரிக்க குடியேற்றங்களுக்கு அனுதாபங் காட்டத் தொடங்கியதும் இங்கிலாந்து அதன்மீது போர் தொடுத்தது. இந்நிலையில் கீழைத்தேய குடியேற்றங்களையும், தாய்நாட்டையுங் காப்பாற்றிக்கொள்வதற்குப் போதிய படையின்றி ஒல்லாந்து தவித்தது. ஆகவே ஒல்லாந்து, சுவிற்சலாந்தைச் சேர்ந்த கொம்மீ டூமூரான் (Compt de Meuman) பிரபுவுக்கும், உவேட்டம்பேக் இளவரசனுக்கும், இலக்சம் பேக்மன்னனுக்கும் சொந்தமான படைகளைக் கூலிக்கு அமர்த்தி அவைகளை இலங்கைக்கு அனுப்பிவைத்தது. இது ஒருபுறமிருக்க பிரான்சு, இங்கிலாந்துக் கெதிராக அமெரிக்க குடியேற்றங்களுக்குப் படையுதவி அளித்தது. இதனுல் கீழைத்தேய குடியேற்றங்களையாவது காப்பாற்றிக்கொள்ளப் பிரித்தானியர் விரும்பினர். ஒல்லாந்தரது நடவடிக்கைகளினுல் ஆத்திரமடைந்த சென்னையிலுள்ள பிரித்தானிய ஆள்பதி மக்காட்னி பிரபு (Lord Macartney) படைகளை அனுப்பி 1781ம் ஆண்டு நாகபட்டினத்தையும் 1782ம் ஆண்டு திருகோணமலையையும் கைப்பற்றினன். இக்கட்டான நிலையில் கண்டி மன்னனின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வது பயன் தருமென எண்ணிய ஆள்பதி மக்காட்னி, ஹியூ பொயிட் (Hugh Boyd) என்பவனை கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனிடம் சென்று படையுதவி அளிப்பதாக வாக்குறுதி

அளித்து உடன்படிக்கையொன்று செய்யுமாறு பணித்தான். பொயிட் கண்டிக்குச் சென்ற வேளையில் கண்டி மன்னனை கீர்த்தி ஸ்ரீ இராஜ சிங்கன் இறந்து இராஜாதி இராஜசிங்கன் அரியாசனமேறியிருந்தான். அவன் அரசபதவியேற்ற சில நாட்களுள் பிரித்தானியர் உடன் படிக்கை செய்யும்படி கேட்டமையாலும் படையுதவி அளிக்க முன் வந்தமையாலும் சந்தேகங்கொண்டு, உடன்படிக்கை செய்து கொள்ள மறுத்தான். உடன்படிக்கை செய்துகொள்ள முடியாமற் போகவே பொயிட் திருகோணமலைக்குத் திரும்பி வந்தான்.

பொயிட் கண்டி மன்னனோடு உடன்படிக்கை செய்யும் முயற்சி யில் ஈடுபட்டிருந்த வேளையில் ஒல்லாந்தர் தென்னிந்தியாவிலிருந்த பிரெஞ்சுக்காரருடன் தொடர்புகொண்டு திருகோணமலையை மீட் கும் முயற்சியிலீடுபட்டனர். பிரெஞ்சுக்காரர் டீ சப்ரன் (Admiral de Suffren) தலைமையில் ஒரு கடற்படையை அனுப்பி திருகோண மலையைக் கைப்பற்றி ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தனர். கண்டியி லிருந்து திருகோணமலைத் துறைமுகத்துக்குத் திரும்பிய பொயிட்டுக்கு மேற்கூறிய சம்பவம் அதிர்ச்சியை அளிக்கவே படகொன்றில் தப்பிச் செல்ல அவன் முயன்றான். எனினும் அவனைப் பிரெஞ்சுக்காரர் கைது செய்யவே அவன் கண்டி விஜயம் பற்றிய குறிப்புகளைக் கடலி லெறிந்தான். ஆனால் பிரெஞ்சுக்காரர், அதைக் கடலிலிருந்து மீட்டு ஒல்லாந்தரிடம் அனுப்பி வைத்தனர். 1802-ம் ஆண்டு கண்டிக்குத் தூது சென்ற பைபஸ் பிரித்தானியருக்கு வியாபார உரிமையை மட் டும் வழங்கும்படி கேட்டான். ஆனால் 1802ம் ஆண்டு தூதுசென்ற பொயிட்டோ வியாபார உரிமையையும், திருகோணமலைத் துறை முகத்தையும் பிரித்தானியருக்கு வழங்கும்படி கேட்டான். பொயிட் டின் கண்டித்தூது பயனளிக்காமற் போயினும் திருகோணமலைத் துறைமுகத்தைத் தம்வசப்படுத்த வேண்டுமென்கிற எண்ணம் அவர் களது மனத்திலிருந்து நீங்கவில்லை.

இவ்வெண்ணத்தை நிறைவேற்றுவதற்குப் பதினெட்டாம் நூற் றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங் கள் பிரித்தானியருக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தன. 1789ம் ஆண்டு ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சி தோன்றியது. இப் புரட்சி வாதிகள் பிரான்சில் ஒரு குடியரசை நிறுவினர். 1793ம் ஆண்டு பிரான்சு பிரித்தானியாமீது போர்தொடுத்தது. ஏனைய ஐரோப்பிய நாடுகள் மன்னராட்சியை நீக்கி மக்களாட்சியை ஏற் படுத்த முனைந்தபோது அந்நாடுகளுக்குப் பிரான்சு ஆதரவளித்தது. ஒல்லாந்து தேசத்தின் மக்கள் கட்சியொன்று குடியரசை நிறுவுவதற் குக் கருமமாற்றியபோது இக்கட்சிக்கு ஆதரவாக 1794ம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரெஞ்சுப்படை சென்றது. இங்கு 1795ம்

ஆண்டு மார்ச்சு மாதம் பற்றேவியாக் குடியரசு நிறுவப்பட்டது. இது நிறுவப்படுங் காலத்தில் ஒரேஞ்சு வம்சத்தைச் சேர்ந்தவராகிய ஐந்தாம் வில்லியம் (ஸ்ராட்ற் ஹோல்டர்-Stadtholder) ஒல்லாந்தில் தலைவராக இருந்தார். இவரே டச்சுக் குடியரசின் ஏவுநர் முதல்வனுகவும் கடமையாற்றினர். இவர் பற்றேவியாக் குடியரசு நிறுவப்பட்டதும் தப்பியோடி இங்கிலாந்தில் தஞ்சம் புகுந்தார்.

பிரெஞ்சுக்காரரது ஆதரவைக்கொண்டு ஒல்லாந்து தேசத்தில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டமையினுல் ஒல்லாந்தரது குடியேற்றங்களிலும் பிரெஞ்சுக்காரது செல்வாக்கு வளரக்கூடியதாகவிருந்தது. கீழ்த்திசை நாடுகளில் குடியேற்றங்களை நிறுவுவதில் போட்டியிட்டுக்கொண்டிருந்த பிரித்தானியர் இதனைக் கண்டு அஞ்சினர். அதனுல் கீழ்த்திசை நாடுகளிலுள்ள ஒல்லாந்த குடியேற்றங்களில் பிரெஞ்சுக்காரரது செல்வாக்கை வளரவிடாமல் தடுப்பது அவர்களது நோக்கமாகவிருந்தது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இங்கிலாந்தையே தஞ்சமெனக்கொண்ட வில்லியத்தை நன்கு பயன்படுத்திக்கொள்ள பிரித்தானியர் விரும்பினர். அவர்கள், வில்லியத்திடம் இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்கள் பிரெஞ்சுக்காரரது தலையீட்டிலிருந்து காப்பாற்றப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு வேண்டிக்கொண்டனர். தான் இழந்த தேசத்தை பிரெஞ்சுப் புரட்சிப் போரின் முடிவில் பிரித்தானியர் மீட்டுத் தருவரென்ற எண்ணம் வில்லியத்தின் மனதில் இருந்ததால் அவர்களது வேண்டுகோளுக்கிணங்கினர். வில்லியம் இலங்கையின் பாதுகாப்புக்காக பிரித்தானியப் படைகளை இலங்கையில் அனுமதிக்குமாறு இலங்கையிலுள்ள ஒல்லாந்த ஆள்பதிக்குக் கட்டளையிட்டார். அப்பத்திரத்தை இலங்கையில் ஒல்லாந்த ஆள்பதியாகிய வான் அஞ்ஜெல்பீக் (Van Angelbeek) என்பவனுக்கு பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் மூலமாக அனுப்பி வைத்தார்.

இக் கட்டளைப் பத்திரம் சென்னைப் பிரித்தானிய ஆள்பதியாகிய ஹோபாட் பிரபுவுக்கு அனுப்பப்பட்டு இலங்கைக்குப் படை அனுப்பும்படி அறிவிக்கப்பட்டது. இவன் மேஜர் அக்நியூ (Major Agnew) என்பவனையும், கேணல் ஜேம்ஸ் ஸ்ருவர்ட் (James Stuart) என்பவனையும் இலங்கைக்குப் படைகளுடன் அனுப்பிவைத்தான். இவ்விருவரும் வில்லியத்தின் கட்டளைப் பத்திரத்தையும், கோபாட் பிரபுவின் திருமுகத்தையும் வான் அஞ்ஜெல் பீக்கிடம் சமர்ப்பித்தனர். அவன் பிரித்தானிய படைகளை அனுமதிக்கும் விடயத்தைத் தீர்மானிக்கும் முகமாகத் தனது அரசியற் சபையை (Political Council) 1795ம் ஆண்டு ஜூன் மாதம் 25ம் திகதி கூட்டினன். கட்டளைப் பத்திரத்தில்

சில குறைபாடுகளை அரசியற் சபையினர் உணரக்கூடியதாகவிருந்தது. ஐந்தாம் வில்லியம் எத்தனை போர்வீரர்கள் இலங்கையில் அனுமதிக்கப்பட வேண்டுமென்றோ எவ்வளவு காலத்திற்கு அவர்கள் இலங்கையில் தங்கியிருப்பார்களென்றோ குறிப்பிடவில்லை. அதுவுமன்றி பிரித்தானியரால் அனுப்பப்படும் படையினர் வான் அஞ்ஜெல் பீக்கின் அதிகாரத்துக்கு உட்பட்டவர்களா அல்லது பிரித்தானிய அதிகாரிகளின் அதிகாரத்திற்குட்பட்டவர்களா வென்பதும் திட்டமாகக் கூறப்படவில்லை. இதனால் அரசியற் சபை பிரித்தானியரிடம் சந்தேகங் கொண்டது. மேலும் திருகோணமலைத்துறைமுகத்தில் பிரித்தானியரதுபடைகளை வான் அஞ்ஜெல்பீக் அனுமதிக்க மறுக்கும் பட்சத்தில் துறைமுகங்களைத் தாக்கத் தயாராகவிருப்பதாகப் பிரித்தானியர், வான் அஞ்ஜெல்பீக்கைப் பயமுறுத்தினர். இப்பயமுறுத்தல், ஏற்கனவே அரசியற் சபையினருக்குப் பிரித்தானியரின் மீதுள்ள ஐயத்தை ஊர்ஜிதப்படுத்திற்று. எனினும் பிரித்தானியப் படைகளை இலங்கையில் அனுமதிக்க மறுப்பின் அதிக படைபலம் கொண்ட அவர்கள் கடற்கரைப் பிரதேசங்களை மிகச் சுலபமாகக் கைப்பற்றி விடுவார்களெனவும், ஒல்லாந்த படைகள் பிரித்தானியரின் தாக்குதலுக்கு எதிர்நிற்கமாட்டார்களெனவும் வான் அஞ்ஜெல்பீக் நன்கு உணர்ந்திருந்தான். எனவே ஒல்லாந்த போர்வீரர்களிலும் பார்க்கக் குறைந்த எண்ணிக்கையுள்ள போர்வீரர்களையே அனுமதிக்க எண்ணி திருகோணமலையிலுள்ள ஒஸ்ரென்பேர்க் கோட்டையில் (FortOstenberg) 300 போர்வீரர்களையும், நீர்கொழும்பு, களுத்துறை, மாத்தறை முதலிய இடங்களிலுமுள்ள கோட்டைகளில் 500 பேரையும் அனுமதிப்பதாக ஒல்லாந்து ஆள்பதி தீர்மானித்தான். திருகோணமலையில் 300 பிரித்தானியப் போர் வீரர்களை அனுமதிக்கும்படி திருகோணமலையில் ஒல்லாந்த படைக்குப் பொறுப்பாகவிருந்த மேஜர் போன் பேருக்கு (Major Fornbauer) ஒரு பத்திரத்தை மேஜர் அக்நியூமூலமாக அனுப்பினான்.

வான் அஞ்ஜெல் பீக் அனுப்பிய பத்திரத்தில், அரசியற் சபையின் பெரும்பான்மையினர் கைச்சாத்திடாமல் வான் அஞ்ஜெல்பீக் மட்டுமே கைச்சாத்திட்டிருப்பதை உணர்ந்த மேஜர்போன்பேர் அப்பத்திரத்தை ஏற்க மறுத்தான். அத்துடன் திருகோணமலையைத் தாக்குவதற்கு நாகபட்டினத்தில் பிரித்தானியர் ஏற்பாடுகள் செய்வதையறிந்து ஆத்திரமடைந்தான். பிரித்தானியப் போர்வீரர்களை அனுமதிக்க போன்பேர் மறுக்கவே, பிரித்தானியர் திருகோணமலையைத் தாக்கினர்; இஃது இவ்வாறிருக்க பிரித்தானியர் விரியோகித்த, பிரித்தானிய தினப் பத்திரிகைகள் வாயிலாக ஐரோப்பிய விவகாரங்களனைத்தையும் ஒல்லாந்த ஆள்பதி அறிந்துகொண்டான். குறிப்

பாக ஒல்லாந்து தேசத்தில் புதிதாக நிறுவப்பட்டிருக்கும் ''பற்றே வியாக் குடியரசு'' ஒல்லாந்து மக்களாலேயே நிறுவப்பட்டதை அறிந் தான்; உடனே இவன் 1795 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ந் திகதி அரசியற் சபையைக் கூட்டி ஐரோப்பிய விவகாரங்களனைத்தையும் திருகோணமலை பிரித்தானியரால் ஆக்கிரமிக்கப்படுவதையும் சபை யினரின் கவனத்திற்குக் கொண்டு வந்தான்; பற்றேவியாக் குடியர சுக்கு விசுவாசம் தெரிவிப்பதாகவும் ஐந்தாம் வில்லியத்தின் பத்திரத் தின்படி செயலாற்றமுடியாதெனவும் அரசியற்சபை தீர்மானித்தது. எனினும் இத் தீர்மானத்தை வெளியிடுவதற்குக் காலதாமதமேற் பட்டது. ஏற்படவே ஒல்லாந்த ஆள்பதிக்குப் பிரித்தானியரது படையை அனுமதிக்க விருப்பமில்லையெனப் பிரித்தானியர் கருதினர். இதனற் போர் தொடுத்து கடற்கரைப் பிரதேசங்களிலுள்ள பட்டி னங்களை ஒவ்வொன்றுக் கைப்பற்றினர்; 1795ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ந் திகதி திருகோணமலையிலுள்ள பிரடறிக் கோட்டையும், 31 ந் திகதி ஒஸ்ரென்பேர்க் கோட்டையும் கைப்பற்றப்பட்டன. அதே வருடம் செப்டம்பர் மாதம் 18ந் திகதி மட்டக்களப்பும், 27 ந் திகதி பருத்தித்துறையும், 28 ந் திகதி யாழ்ப்பாணமும் கைப்பற்றப்பட்டன. அவ்வாண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி வன்னியர் நாட்டின் தலைநகராகிய முல்லைத்தீவும் 5 ந் திகதி மன்னர்க் கோட்டையும், நவம்பர் மாதம் 13 ந் திகதி கற்பிட்டியும் கைப்பற்றப்பட்டன.

மேற்கூறிய இடங்களில் பிரித்தானியரை எதிர்த்து ஒல்லாந்தர் மிக விரைவில் தோல்வி கண்டனர். ஒல்லாந்தரின் படைப்பல வீனத்தை உணர்ந்த வான் அஞ்ஜெல்பீக் ஏனைய ஒல்லாந்தரின் கோட் டைகளை எதிர்ப்பின்றி விட்டு விட்டு கொழும்புக்கு வந்து சேருமாறு கட்டளையிட்டான்; இங்ஙனம் கட்டளையிட்டதற்குக் காரணம், கொழும்பை சிலகாலத்திற்குத்தானும் பிரித்தானியர் கைப்பற்ரு மல் வைத்திருந்தால் அதற்கிடையில் தாய்நாட்டிலிருந்தோ அன் றேல் பிரெஞ்சுக்காரரிடமிருந்தோ உதவி கிடைக்குமென வான் அஞ்ஜெல் பீக் எதிர்பார்த்தமையாகும். அதுவுமன்றி இக்காலத் தில் இந்தியாவில் பிரித்தானியருக்கெதிராக திப்புசுல்த்தானும் மராட் டியரும் படையெடுக்கப்போகிறார்களென்ற வதந்தி பரவியிருந்தது. இவ்வதந்தியைக் கேள்வியுற்ற வான் அஞ்ஜெல்பீக் மேற்கூறியவர் கள் படையெடுத்தால் இலங்கையிலுள்ள பிரித்தானியப் படையின் பெரும்பகுதி இந்தியாவுக்குத் திருப்பி அழைக்கப்படுமென்றும் அச் சமயத்தில் பிரித்தானியரை வெளியேற்றி விடலாமென்றும் நம்பி னான்.

இச்சமயத்தில் பிரித்தானிய மந்திரிசபை, இலங்கையிலுள்ள ஒல்லாந்த படையில் சேவை புரிந்த பியரி டூமூரான் ஒல்லாந்த

மேலதிகாரிகளோடு வெறுப்புற்று இருக்கின்றனென்பதையும் பிரித்தானியர் கொழும்பை மீச்செலவு செய்யும் பட்சத்தில் பிரித்தானியருடன் சேரும் விருப்புடையவனாக இருக்கின்றனென்பதையும் பேராசிரியர் ஹியூகிளேகன் (Hugh Cleghorn) வாயிலாக அறிந்தது, உடனே டீமூரான் படைகளின் உரிமையாளனாகிய கொம்மீ டீமூரானை சந்தித்து அவனது படைகளை ஒல்லாந்தரது சேவையிலிருந்து நீக்கிப் பிரித்தானியரின் பக்கத்துக்கு வரக்கூடியதாக ஓர் இரகசிய உடன்படிக்கை செய்யும் வண்ணம் அது, ஹியூ கிளேகனை சுவிற்சலாந்திற்கு அனுப்பி வைத்தது. அவன் தனக்கு விடுவிக்கப்பட்ட பணியைச் செவ்வனே செய்து முடித்து இலங்கையிலுள்ள டீமூரானின் படையைப் பிரித்தானியர் பக்கம் திருப்பிவித்தான். இதை அறிந்த ஒல்லாந்தர் கொழும்பைத்தானும் தங்களால் பாதுகாக்கமுடியாதென்பதை உணர்ந்தனர். அதுவுமன்றி வான் அஞ்ஜெல் பீக் முன்னர் எதிர் பார்த்திருந்தபடி பிரெஞ்சுக்காரரின் படை உதவியோ அன்றேல் தாய்நாட்டின் உதவியோ அவனுக்குக் கிட்டவில்லை. இந்தியாவில் திப்பு சுல்த்தானை, அன்றேல் மராட்டியரோ பிரித்தானியரின்மீது படையெடுக்கவுமில்லை. உணவுநிலையும் சீராயில்லை. அஞ்ஜெல்பீக் வசம் ஏறத்தாழ 1598 போர்வீரர்மட்டுமே இருந்தனர். பிரித்தானியர்வசம் ஏறத்தாழ 10,000 போர்வீரர் இருந்தனர். படைத் தளபதிகளுக்கும் ஆட்சியாளர்களுக்குமிடையில் ஒற்றுமைக் குறைவும் ஒத்துழைப்பின்மையும், முயற்சியின்மையும் நிலவியிருந்தன. ஒல்லாந்த வர்த்தக சங்கத்தின் நிதிநிலைமை மிகமோசமாகவிருந்ததால் உத்தியோகத்தர் பலரும் கூலிப்படைகளும் பல மாதங்களாக வேதனம் பெறாது உற்சாகங் குன்றி இருந்தனர். சிலர் படையை விட்டு நீங்கினர். பிரித்தானியருக்கும் கண்டி மன்னனுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இவன் பிரித்தானியருக்கு உதவியாக இருந்தான். அதுவுமன்றி எல்லைப்புறங்களில் இடையூறுகள் பலவற்றை விளைவித்தான். மேற்கூறிய விடயங்களை மனதிற்கொண்ட அஞ்ஜெல்பீக் சமாதான ரீதியில் பிரித்தானியரிடம் கொழும்பை ஒப்படைக்க முடிவுசெய்தான். தனது தீர்மானத்தை அரசியற்சபைக்கு அறிவித்து சமாதான நிபந்தனைகளைப் படித்துக் காட்டினான். அச் சபையில் பெரும்பான்மையினர் அதை 1796-ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15-ந் திகதி ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் அரசியற் சபை உறுப்பினர் சிலர் இதை விரும்பவில்லை. பிற்காலத்தில் அஞ்ஜெல்பீக், பிரித்தானியரிடமிருந்து சில சலுகைகளைப் பெறுவதற்காகவே இவ்வாறு கொழும்பை எதிர்ப்பின்றி பிரித்தானியரிடம் ஒப்படைத்தானென பற்றேவியா அரசாங்கத்திற்கு இவர்கள் செய்தி அனுப்பினர். 1796-ம் ஆண்டு பெப்புருவரிமாதம் 16-ந் திகதி கொழும்பில் ஒல்லாந்தருக்கும், பிரித்தானி

யருக்குமிடையில் சமாதான ஒப்பந்தமேற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒல்லாந்தரின் கடற்கரைப் பிரதேசங்கள் பிரித்தானியரிடம் கைமாறின.

வினாக்கள்

1. 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருகோணமலையின் முக்கியத்துவத்தையும் அது இலங்கையின் அரசியலை எவ்விதம் பாதித்தது என்பதையும் விளக்குக.

2. 1795—1796-ம் ஆண்டுகளில் ஒல்லாந்தரது பிரதேசங்களை பிரித்தானியர் கைப்பற்றியமையை விளக்குக. (நவம்பர், '47)

3. பிரிட்டிஷார் இலங்கையிலுள்ள டச்சுப் பிரதேசங்களை வெற்றி பெறுவதற்கு ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் இலங்கையிலும் சாதகமாக இருந்த நிலைமைகளை விபரிக்குக. (டிசெம்பர், '55)

4. 1796-ம் ஆண்டில் இலங்கையில் அரசியல் மாற்றங்களை விளைவித்த (a) உள்நாட்டு (b) பிறநாட்டு காரணங்களைச் சுருக்கமாக எழுதுக. (டிசெம்பர், '63)

5. இலங்கையில் 1796-ம் ஆண்டில் ஒல்லாந்தரது ஆட்சி ஒழிந்து பிரித்தானியரின் ஆட்சி இடம்பெற்றதற்கான காரணங்கள் யாவை? (ஆகஸ்ட், '65)

மூன்றும் அத்தியாயம்

கடற்கரைப் பிரதேசங்களில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி 1796—1802.

பிரித்தானியர் ஒல்லாந்தரிடமிருந்து எங்ஙனம் இலங்கைக் கடற் கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றினரென்று முந்திய அத்தியாயத் தில் அறிந்தோம்; இங்கு அப்பிரதேசத்தில் ஆரம்பத்தில் நடை பெற்ற ஆட்சியைப்பற்றி அறிவாம். 1796ம் ஆண்டு தொடக்கம் 1802ம் ஆண்டு வரையும் இலங்கைக் கடற்கரைப் பிரதேசங்களில் நடைபெற்ற ஆட்சியை (I) பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்க ஆட்சி, (II) இரட்டை ஆட்சி என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்; 1796ம் ஆண்டு தொடக்கம் 1798ம் ஆண்டு வரையும் இலங்கைக் கடற்கரைப் பிரதேசங்களின் குடியியற் பாலனம், படைப்பாலனம், நீதிபாலனம், வர்த்தகம், வியாபாரம் ஆதியன கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் பொறுப்பிலேயே விடப்பட்டன,

1798ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26ந்திகதி வெளியிடப்பட்ட பிர கித்தத்தின்படி இலங்கை மக்களின் இறைமையையும் அரசாங்கத் தையும் பிரித்தானிய மன்னன் சுவீகரித்துக்கொண்டான்; மன்ன னது பிரதிநிதியாகவும் இலங்கை ஆன்பதியாகவும் நோத் பிரபு நிய மனஞ் செய்யப்பட்டான்; குடியியற்பாலனம், படைப்பாலனம், நீதிபாலனம், திருச்சபைக்குரிய அதிகாரங்கள் முதலியன ஆன்பதி யிடம் விடப்பட்டன. வியாபாரம், வர்த்தகம், வரிவசூல் ஆகிய விட யங்களில் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் பணிக்காயர் சபையின தும் கட்டுப்பாட்டுச் சபையினதும் பணியின்படியே நடந்துகொள்ளல் வேண்டுமெனவும் வரிவசூல் செய்வதற்குப் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் குடியியற் சேவையாளரையே பயன்படுத்த வேண்டுமெனவும் நோத் கேட்டுக்கொள்ளப்பட்டான். இவ்வாட்சி முறையே இரட்டை ஆட்சியென அழைக்கப்பட்டது.

முதலில் நாம் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சியைப்பற்றி அறிந்துகொள்வாம்; அக்காலத்தில் சென்னையில் ஆள்பதியாகவிருந்த ஹோபாட் பிரபுவின் ஆணையின்படி பிரித் தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஏறத்தாழ 12000 பவுணையும் பெருந்தொகையான படைவீரரையும் இழந்து இலங்கையின் கடற் கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றியது. இக்காரணத்தினாலும் வேறு பல காரணங்களினாலும் கடற்கரைப் பிரதேசங்களின் ஆட்சி கிழக் கிந்திய வர்த்தக சங்கத்தின் பொறுப்பில் விடப்பட்டது, பிரித்தானி யருக்கும் ஒல்லாந்தருக்கும் ஐரோப்பாவில் நெப்போலியனது யுத்தங்

கள் முடிந்து கீழைத்தேசத்தில் பிரெஞ்சுக்காரரின் ஆபத்தும் நீங்கிய வுடன் இந்து சமுத்திரத்தில் ஆதிக்கஞ் செலுத்துவதற்கும் கடற் படை, இராணுவப்படைத் தலைமைக் காரியாலயங்கள் அமைப்பதற் கும் திருகோணமலையை வைத்துக்கொண்டு ஏனைய பிரதேசங்களை ஒல்லாந்தருக்குத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் பிரித் தானியருக்கு இருந்து வந்தது; இலங்கையில் பிரித்தானியரது பாலனம் தற்காலிகமானதெனவும் சிறிது காலத்திற்கே நிலைத்திருக்கு மெனவும் பிரித்தானியர் கருதினர்; எனவே இலங்கைப் பாலனப் பொறுப்பை பிரித்தானிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாமல் கிழக்கிந் திய வர்த்தக சங்கத்திடமே கொடுத்தது. இதன் பிரகாரம் இலங்கை சென்னை அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டு வர்த்தக சங்கத்தின் பாலனத்தின்கீழ் விடப்பட்டது.

சென்னைப் பாலன முறையில் படைப்பாலனம், குடியியற் பாலனம் என இரு வகையான ஆட்சிமுறைகள் இருந்தன; இவ்விரு பகுதிகளுக்கும் இரு தலைவர்கள் பொறுப்பாக இருந்தனர். இலங்கை யிலும் சென்னை அரசாங்கத்தைப்போன்ற அரசாங்கமொன்று அமைக்கப்பட்டது. படைப்பாலனம் ஜேம்ஸ் ஸ்ருவர்ட் (James Stuart) என்பவனின் பொறுப்பில் 1796ம் ஆண்டு பெப்புருவரி மாதம் விடப்பட்டது. இதனால் குடியியற் பாலனத்தில் எவ்வதிகாரமும் ஆள்பதி ஜேம்ஸ் ஸ்ருவர்ட்டுக்கு இருக்கவில்லையெனக் கருதலாகாது. ஏனெனில் குடியியற் பாலனத்திற்கும், படைப்பாலனத்திற்கும் அவனே பொறுப்புள்ளவன். ஆனால் நடைமுறையில் குடியியற் பாலனத்தை இன்னொருவனிடம் ஒப்படைத்திருந்தான். ஸ்ருவர்ட், இலங்கையில் இராணுவ ஆட்சியையே கடைப்பிடித்தான். படை மன்றைத் தவிர இவனது காலத்தில் எவ்வித நீதிமன்றும் இலங்கையில் இருக்கவில்லை. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார் ஆகிய இடங்களிலுள்ள கோட்டைகளுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு ஏவுநன் நியமிக்கப்பட்டான். ஜேம்ஸ் ஸ்ருவர்ட்டின் காலத்தில் கத்தோலிக்கருக்குத் தொழுகைச் சுதந்திரம் அளித்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். 1796ம் ஆண்டு இறுதியில் படைப் பாலனத்திற்குப் பொறுப்பாக மேஜர் ஜெனரல் எலிஸ் டொயிலி (Ellis Doyle) என்பவன் நியமனஞ் செய்யப்பட்டான். இவனது மரணத்தின்பின் பிரிகேடியர் ஜெனரல் பியரி டி மூரான் (Pierre de Meuron) நியமனஞ் செய்யப்பட்டான்.

குடியியற் பாலனம் சேர் ரொபேட் அன்ட்றூஸ் (Robert Andrews) என்பவனின் பொறுப்பில் விடப்பட்டது. இவனுக்குதவியாக ஜோண் ஜோர்விஸ், ரொபேட் அலெக்சான்டர், கரோ ஆகிய குடியியற் சேவையாளர் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்; பொதுப்பாலனம்,

நிதி, நீதிபாலனம், வரிவசூல் செய்தல் ஆதியன குடியீயற்பாலனத்திற்குள் அடங்கியனவாகும். எனினும் படைப்பாலனத்தினதும் குடியியற் பாலனத்தினதும் அதிகாரங்கள் திட்டவட்டமாக நடைமுறையில் வரையறுக்கப்படாதமையினால் இவ்விரு பாலனங்களின் தலைவர்களும் ஒருவரது விடயத்தில் மற்றவர் தலையிட்டுச் சச்சரவுகள் உண்டாயின. இச்சச்சரவுகள் காரணமாகவும் கண்டி மன்னனோடு பேச்சுவார்த்தையில் தான் ஈடுபட்டிருந்தமையினாலும் அப்பொழுது வருமானப்பகுதி உதவி மேற்பார்வையாளனாகவும் கண்டியில் உதவிப் பிரித்தானிய வதிவாளனாகவும் கடமையாற்றிய ஜோன் ஜேர்விஸ் (John Jervis) என்பவனைத் தனது கடமைகளைச் செய்யுமாறு அண்ட்றூஸ் பணித்தான்.

வரி வசூலிக்கும் வசதிக்காக கடற்கரைப் பிரதேசங்கள் கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என மூன்று கலெக்டர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. கொழும்புப் பிரிவு, சிலாபம் தொடக்கம் மாத்தறையீறாக உள்ள பிரதேசம்; திருகோணமலைப் பிரிவு முல்லைத்தீவு-மட்டக்களப்பு - திருகோணமலைப்பகுதிகள் அடங்கிய பிரதேசம்; யாழ்ப்பாணப்பிரிவு மன்னார் - கற்பிட்டி யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதிகளடங்கிய பிரதேசம் ஓவ்வொரு பிரிவுக்கும் ஓவ்வொரு கலெக்டர் நியமிக்கப்பட்டான். ரூபேட் அண்ட்றூசே வருமானப் பகுதியின் மேற்பார்வையாளனாகவும் கண்டியில் பிரித்தானிய வதிவாளனாகவும் இருந்துகொண்டான். கலெக்டர்களது காரியாலயம் கச்சேரியென்னும் இந்திச்சொல்லால் அழைக்கப்பட்டது. கலெக்டர்களின் கீழ் சென்னையிலிருந்து வருவிக்கப்பட்ட அமீல்தார் (Amildars) என்றழைக்கப்படும் உத்தியோகத்தர் கடமையாற்றினர். கலெக்டரின் மேற்பார்வையில் பொதுப்பாலனஞ் செய்வதும் வரி வசூல் செய்வதும் அமீல்தாரின் கடமைகளாகும். தற்போது அமீல்தார் செய்துவரும் கடமைகளை இதுவரையும் முதலியாரென அழைக்கப்படும் சிங்கள அதிகாரிகளே செய்துவந்தனர். பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இலங்கை பாலனப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் முதலியார்களின் சேவைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அவர்களுக்குப் பதிலாக அமீல்தாரை நியமித்தது. வரிவசூல் செய்வதில் அமீல்தாருக்கு உதவிபுரிவதற்காக கொத்வால் என்றழைக்கப்படும் பொலிசுக்காரரும் குமாஸ்தா என்றழைக்கப்படும் எழுதுவினைஞர் பலரும் இலங்கைக்கு வருவிக்கப்பட்டனர். இவர்களின் தொகை 32,200 இருக்குமென மதிப்பிடப்பட்டது.

இந்நாட்டு மொழியோ, மக்களிடையே தொன்றுதொட்டிருந்து வந்த பழக்கவழக்கங்களோ வரிவசூலிக்கும் முறையோ சென்னையிலிருந்து வந்த உத்தியோகத்தர்களுக்குத் தெரியாமலிருந்தன. பிரித்

தானியர் இங்கு வந்ததும் நெடுங்காலமாக இருந்துவந்த சேவை மானிய முறையையும், நில மானிய முறையையும் நீக்கி இவற்றிற்குப் பதிலாகச் சென்னை முறையைப் புகுத்தினர். புதிய முறைப்படி சகல ரும் விலைவில் அரைவாசியை அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்க வேண்டும். நிலங்கள் யாவும் அரசாங்கத்தினது உடமை என்ற கருத்து அக்காலத்தில் வலுப்பெற்றிருந்ததால் எல்லாரும் இப் புதிய முறையினால் பாதிக்கப்பட்டனர். வருமானம் பெறுவதே வர்த்தக சங்கத்தின் ஒரேநோக்கமாக இருந்தமையினால் அநீதியான முறையில் வரி வசூலித்தும், வியாபாரஞ்செய்தும் பணத்தை ஈட்டிக்கொள்ள இவர்கள் தயங்கவில்லை. இதுவரைகாலமும் சேவையை அரசாங்கத்திற்கு மானியமாகக் கொடுக்கும் முறையும் பண்டமாற்று முறையுமே வழக்கத்திலிருந்து வந்தன. மக்கள் நிலத்தின் விளைபொருள்களைக் கொடுத்து உப்பு, சீனி முதலியனவற்றைப் பெற்று வந்தனர். பணப் புழக்கம் குறைவான அக்காலத்திற்கூட வரியை ரொக்கப்பணமாக இறுக்குப்படி மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். சென்னை வரிவசூலிக்கும் முறையை ஒட்டி வரிவசூல் செய்யும் உரிமை விற்கப்பட்டது. எவன் வரிவசூலிக்கும் உரிமையைக் கூடிய விலைக்கு வாங்குகிறானோ அவனுக்கே அவ்வுரிமை வழங்கப்பட்டது. சிலசமயங்களில் குடியியற் சேவையாளரும் அமீல்தாரும் வரிவசூலிக்கும் உரிமையை விலைக்கு வாங்கினர். இவர்களே அரசாங்க பாலனத்திற்கும் பொறுப் புள்ளவராக இருந்தமையினால் மக்களை வருத்தி வரியைப் பெற்றனர். இத்தகைய முறை இலங்கையருக்குப் புதிதாக மாத்திரமன்றி கொடுமையானதாகவும் இருந்தது. அதுவுமன்றி நீதிபாலனப் பொறுப்பும் குடியியற் சேவையாளரிடமும், அமீல்தாரிடமும் வழங்கப்பட்டிருந்தது. வரிவசூலிக்கும் உரிமையும் நீதிபாலனமும் பொதுப் பாலனமும் ஒருவர் கையிலிருந்தமையினால் வரிசெலுத்தத் தவறியோர்க்கு அநீதியான முறையில் தண்டனை அழிக்கக்கூடியதாக இருந்தது. சென்னை உத்தியோகத்தர் "துப்பாக்கி முனையிற்" கூட வரிவசூலிக்க முயன்றனர். ஆகவே இப்புதிய பாலன முறையினால் மக்கள் அதிருப்தியடைந்தனர்.

சென்னை வரிவசூலிக்கும் முறையைப் புதிய அரசாங்கம் புகுத்தியமையினால் இதுவரையும் இலங்கையில் நிலவி வந்த நிலமானிய முறையும் சேவை மானிய முறையும் ஒழிக்கப்பட்டன. நிலமானிய முறையின் கீழ் இருவகைப்பட்ட நிலங்கள் இருந்துவந்தன. ஒன்று அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்கள். இந்நிலங்கள் சிங்கள மன்னர் காலத்தில் தங்களது சொந்தத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட "கபடகம்" என்றழைக்கப்பட்ட நிலங்கள். இவை ஒல்லாந்தரின் படையெடுப்போடும் அதன் வெற்றியோடும் ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கத்திற்கு உரித்தாயின. முறையே இவை பிரித்தானிய

கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் படையெடுப்போடும் அதன் வெற்றியோடும் அச்சங்கத்திற்கு உரித்தாயின. இக் "கபடகம்" நிலங்களில் மக்கள் ஊழியஞ் செய்து வந்தனர். இவர்கள் அரசாங்க சேவை எதுவுஞ் செய்யவேண்டியதில்லை; அதற்குப் பதிலாக விளைவில் பத்திலொன்றை அரசாங்கத்திற்குக் கொடுத்து வந்தனர். சிலர் சில சமயங்களில் விளைவில் அரைவாசியைக் கொடுத்தனர். இன்னொன்று "நிந்தகம்" என்றழைக்கப்பட்ட நிலங்கள் இவை, சிங்களவரில் அதி செல்வாக்குள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டவை. இந்நிலங்களின் உரிமையாளர் விளைவில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு இறையாகக் கொடுத்தனர்; இந் நிலங்களில் தமது எசமான்களுக்காக வேலைசெய்வோர் அரசாங்கத்திற்கு எதுவும் கொடுக்கவேண்டிய அவசியமேற்படவில்லை; ஆனால் தமது எசமான்களுக்கு விளைவிற் பத்திலொன்றைக் கொடுத்துவந்தனர். சேவை மானிய முறையும் இருபிரிவுகளாக நடைபெற்று வந்தன. ஒன்று சுதேசிகளான முதலியார், கோறளை, விதானை, முதலிய அதிகாரிகள் அரசாங்கத்திற்குச் செய்யும் சேவைகளுக்காகக் கொடுக்கப்பட்ட நிலங்கள்; இன்னொன்று, பொதுவாகச் சிற்றேவலில் உதவி புரிந்தோர்க்கு வழங்கப்பட்ட நிலங்கள். இவர்கள் வருடமொன்றுக்கு மூன்று மாதங்கள் வேதனமின்றி அரசாங்க சேவை செய்யவேண்டும்.

ஆகவே மேற்கூறியனவற்றிலிருந்து நிலமானிய முறையும் சேவை மானிய முறையும் ஒழிக்கப்பட்டமையினால் நிலச்சுவாந்தர்களும், முதலியார், கோறளை, விதானையாகிய சிங்கள அதிகாரிகளும் ஒரு புறமும், சாதாரண மக்கள் இன்னொரு புறமும் புதிய பரலன முறையை எதிர்த்தனரென்பது புலனாகின்றது; முதலியார் என அழைக்கப்படும் அதிகாரிகளே தொன்று தொட்டு ஐரோப்பியரையும் சிங்களவர்களையும் இணைக்கும் பாலங்களாக அமைந்தனர்; ஒல்லாந்த குடியியற் சேவையாளர்களின் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு நடாத்தினர். வரியைச் செவ்வனே வசூலித்துக் கொடுத்தனர். அதுவுமன்றி மக்களிடையே நிலவிவரும் அதிருப்திகளையும் சதித்திட்டங்களையும் அபிலாஷைகளையும் உடனுக்குடன் மேலதிகாரிகளுக்கு அறிவித்து உடனடியான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இவர்கள் தங்களுக்கு பெருமிடையூறுகளை விளைவிக்கக்கூடுமென அஞ்சி பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி இவர்களை பாலனக் கடமைகளிலிருந்து நீக்கி சென்னையிலிருந்து வந்தவர்களும் இந்நாட்டு முறைகளை அறியாதவர்களுமாகிய சென்னைக் குடியியற் சேவையாளருக்கும் அமீல்தாருக்கும் பாலனப் பொறுப்பை

வழங்கிற்று: இதனால் முதலியார்களது வருமானம் அந்தஸ்து முத லியன குன்றின; தொன்று தொட்டு பரம்பரை பரம்பரையாக அனுபவித்துவந்த ஐஸ்வரியங்களும், சலுகைகளும் பறிக்கப்படவே அவர்கள் அரசாங்கத்தை வெறுத்ததோடு பகிரங்கமாக எதிர்க்கவும் தயாராயினர்.

வரி வசூலிக்கும் உரிமை எங்ஙனம் விலைக்கு விற்கப்பட்டதோ அதேபோன்று மீன், உப்பு, சாராயம், கள், துறைமுகம் முதலியன வற்றில் வரிவசூலிக்கும் உரிமையும் தனிப்பட்டவர்களுக்கு விற்கப் பட்டது. அதுவுமன்றி புகையிலை, ஆமைபிடித்தல், மாணிக்கக்கல் எடுத்தல் முதலியனவற்றில் வரி வசூலிக்கப்பட்டது. வரிகளைச் செலுத்தமுடியாத அவல நிலை ஏற்பட்டதும் வீட்டிலுள்ள பொருள் களையும் குடியிருக்கும் நிலங்களையும் பச்சிளங் குழந்தைகளையும் விற்று மக்கள் வரியைச் செலுத்தினர். இறை இறுக்கும்வரை நெற்றியில் கல்வைக்கும் முறைகூடக் கையாளப்பட்டதெனின் புதிய பாலன அமைப்பின் கொடுமையைப்பற்றி விளக்கவேண்டிய அவசிய மில்லை. எரியும் நெருப்பில் எள்நெய் வார்த்தற்கொப்ப போக்கு வரத்துச் சாதனங்கள் இல்லாத அக்காலத்தில் இக்கொடுமையான வரியை மக்கள் மிகவும் சிரமப்பட்டு கிராமங்களிலிருந்து பட்டினங் களிலுள்ள கச்சேரிகளுக்குக் கொண்டுசென்று செலுத்தவேண்டி யிருந்தது.

1796 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஜேம்ஸ் ஸ்ருவர்ட்டினால் தென்னைமர வரி விதிக்கப்பட்டது. இதன் பிரகாரம் தென்னை மரச் சொந்தக்காரன் மரமொன்றுக்கு இரண்டு பென்னிவீதம் வரிசெலுத்த வேண்டியிருந்தது. அநேகமாக, மக்கள் கொடுக்கவேண்டிய வரியி லும்பார்க்க வருடம் முழுவதும் ஒரு மரத்திலிருந்து பெறும் தேங் காய்களின் பெறுமதி குறைவாகவே இருந்தது. அதுவுமன்றி மரம் பயன் தந்தாலென்ன தராவிட்டாலென்ன மரச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மரத்திற்கு இரண்டு பென்னி வீதம் வரி யிறுக்கவேண்டியிருந்தது. இதனால் மக்கள் மேலும் அதிருப்தி யடைந்து பகிரங்கமாகக் கிளர்ச்சிகள் செய்யத் தலைப்பட்டனர். அக்காலத்தில் இலங்கையில் இருந்த ஒல்லாந்தரும் மறைமுகமாக இக் கிளர்ச்சிகளை ஆதரித்தனர். சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் என்ற பேதமையின்றி அனைவரும் மகத்தான எதிர்ப்பைக் காட்டத் தொடங்கினர். நயிகம் கோறளையில் மக்கள் வரிகொடுக்க மறுத்த தோடு வரிவசூலிப்பாளனையும் பிடித்துக் கட்டி வைத்தனர். இதை விடச் சியன்னே, கேவகம், கற்பிட்டி ஆகிய கோறளைகளிலும் மக் கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆயுதங்கள் தாங்கியவண்ணம் கச் சேரிகளுக்குப் படையெடுத்தனர். வன்னிநாட்டு அதிபதியாகிய பண் டார வன்னியன் அமில்தார் ஒருவனை வாளால் வெட்டிக் கொன்

ரூன். யாழ்ப்பாண மக்களும் வரிகளுக்கு எதிர்ப்புக் காட்டுவதிலும் ஆர்ப்பாட்டம் செய்வதிலும் பின்நிற்கவில்லை; ஆனால் அரசாங்கமோ தனது அடக்குமுறைகளால் இக்கலகங்களை கட்டுப்படுத்த முடிந்தது; பலர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர்; மக்களது மனமோ சலிக்கவில்லை; அவர்கள் அநியாய வரிகளுக்கெதிராக மனுச் செய்தனர்; மேற்கூறிய கிளர்ச்சிகளின் பேரில் 1797-ம் ஆண்டு மார்ச்சு மாதம் ஆள்பதி எலிஸ் டொயிலி தென்னமர வரியைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தான். இக்கட்டான நிலையில் இலங்கையில் நிலவி வந்த பாலன முறையைப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பியரி டீமூரானின் தலைமையின் கீழ் ஓர் ஆணைக் குழு 1797 ம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இதில் மேஜர் அக்நியூ, ரெபேட் அன்ட்ரூஸ் ஆகிய இருவரும் பிற அங்கத்தவராவர். தான் புகுத்திய பாலன முறையைப் பரிசீலனை செய்யும் ஆணைக்குழுவில் ஓர் அங்கத்தவனாக இருக்க விரும்பாத அன்ட்ரூஸ் அதில் முக்கிய பங்கெடுத்துக்கொள்ளவில்லை. இக்குழு தனது அறிக்கையை வெளியிடுவதற்கு முன்பேயே, அன்ட்ரூஸ் தென்னமர வரியை மீண்டும் 1797-ம் ஆண்டு ஜூலை மாதம் புகுத்தினான்; இதன் விளைவாக குழப்பங்கள் ஆங்காங்கே உருப்பெற்றன. கடற்கரைப் பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சி செய்வதைக் கண்டி மன்னனும் விரும்பவில்லை. ஆரம்பத்திலிருந்து பிரித்தானியராட்சியை வெறுத்த சிங்களப் பிரதானிகளும் கலகத்திற்கு ஆதரவு அளித்தனர். திருகோணமலையில் அமீல்தார் ஒருவன் கொலைசெய்யப்பட்டான். கடுவலையில் மக்கள் ஆர்ப்பாட்டஞ் செய்தனர். இவற்றைக் கண்டு அஞ்சிய சென்னை ஆள்பதி ஹோபாட் பிரபு தென்னமர வரியை டீமூரான் ஆணைக்குழுவின் எடுத்துரையின்படி 1797-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் விலக்கல் செய்தான்;

நெடுங்காலமாக பலதுறைகளில் இலங்கையில் சேவை புரிந்தவனும் இலங்கையரின் இயல்புகளையும் விருப்பு வெறுப்புக்களையும் நன்கு அறிந்தவனுமாகிய பியரி டீ மூரானின் தலைமையில் ஓர் ஆணைக் குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டமை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் அதிட்டமே. இவனது எடுத்துரைகள் சரித்திரப் புகழ் வாய்ந்தமை. அவை பின்வருமாறு:- கிழக்கிந்திய வர்த்தகச் சங்கத்தின் ஆட்சியால் புதிதாகப் புகுத்தப்பட்ட வரிமுறையை நீக்கி தொன்று தொட்டு இலங்கையிலிருந்து வந்த வரிமுறையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும், தென்னை மரவரி உடனடியாக நீக்கப்படல்வேண்டும்; சேவைமானிய முறையையும், நிலமானிய முறையையும் மீண்டும் அமுலாக்குவதோடு புதிதாகப் புகுத்தப்பட்ட

விளைவில் அரைவாசியை வரியாகப்பெறும் வழக்கத்திற்கு சாவுமணி அடிக்கவேண்டும். சென்னை உத்தியோகத்தர் அனைவரோடு சென்னையிலிருந்து இலங்கைக்கு வந்து வரிவசூலிக்கும் உரிமையை விலைக்கு வாங்குவோரும் சென்னைக்கு உடனடியாக அனுப்பப்படல் வேண்டும்; முதலியார்கள் என்று அழைக்கப்படும் சிங்கள அதிகாரிகளுக்கு மீண்டும் பதவி வழங்கவேண்டும்; அதுவுமன்றி சிறிய சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரமும், சுதேசிகளுக்கும் வரிவசூலிப் போருக்குமிடையே எழும் தகராறுகளை விசாரணை செய்யும் அதிகாரமும் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அவர்கள் பொலிசுப் பகுதிக்குப் பொறுப்பாக இருப்பதோடு பிரித்தானியரையும், சிங்களவரையும் இணைக்கும் பாலங்களாக அமைதல் வேண்டும். மேலும் அவர்கள் ருபேட் அன்ட்றூசின் பொறுப்பில் விடப்பட்ட வருமான திணைக்களத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக இருத்தலாகாது; முதலியார்கள் தமது கடமைகளைப் புரிவதற்கு முகாந்திரங்களும் ஆராச்சிகளும் உதவியாய் இருப்பர்; நீதிபதி ஒவ்வொரு கோறளையிலும் எழும் சிவில் வழக்குகளின் சுதேசிகளின் உதவியுடன் விசாரணை செய்வார்; முஸ்லீம்கள் அரசாங்கத்திற்குச் செய்யவேண்டிய சேவைக்குப் பதிலாக வரியிறுக்க அனுமதிக்கப்படுவர்.

இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்குச் சென்ற உத்தியோகத்தர் வாயிலாக இலங்கை விவகாரங்களனைத்தும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு எட்டியது. இதுவரையும் சென்னை அரசாங்கத்தின் ஒருபகுதியாகவிருந்த இலங்கைப் பாலனத்தைக் குடியேற்ற நாட்டு அலுவலகத்தின்கீழ்க் கொண்டுவர குடியேற்றநாட்டரசுச் செயலாளர் முடிவுசெய்தார். அவர் இம்முடிவை அமுல் நடத்தும் நோக்குடன், பிரித்தானிய மன்னனின் பிரதிநிதியாக பிரடறிக் நோத் அவர்களையும் (Frederick North) அவரது செயலாளனுக ஹியூகிளேகன் என்பவரையும் இலங்கைக்கு அனுப்பிவைத்தார். இச்செய்தி பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினருக்குக் கிடைத்தது; உடனே அவர்கள் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரைப் பேட்டிகண்டு தாங்கள் இலங்கைக் கடற்கரைப் பிரதேசங்களில் செலவிட்ட பணத்தின் பெரும்பகுதி இன்னும்வசூலிக்கப்படாமலிருப்பதால் அப்பிரதேசங்களைப் பாலனஞ் செய்யும் உரிமை தொடர்ந்தும் தங்களுக்கே வழங்கப்படல்வேண்டுமென வாதாடினர். வர்த்தக சங்கத்தின் கோரிக்கைகள் நியாயமானதென உணர்ந்த குடியேற்றநாட்டரசுச் செயலாளர் இலங்கைச் சரித்திரத்திலேயே புதிய முறையில் ஒரு பாலனத்தைப் பரீட்சித்துப்பார்க்க முடிவு செய்தார். இதுவே இரட்டை ஆட்சியாகும்.

இப்புதிய ஒழுங்கின்படி 1798ம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரித்தானிய மன்னனின் பிரதிநிதியாகவும் இலங்கையின் ஆள்பதியாகவும் பிரடரிக் நோத் பதவியேற்றான். ஆள்பதி நோத் வர்த்தகம், வியாபாரம், வரிவசூல் செய்தல் ஆகிய பாலனப் பொறுப்புகளை வர்த்தக சங்கத்தின் பணிக்காயர் சபை, கட்டுப்பாட்டுச்சபை ஆகியனவற்றின் ஆலோசனைப்படி நடாத்தவேண்டுமென்றும்; பாதுகாப்பு, பொதுச் சேவை, நீதி, பொதுப் பாலனம் சம்பந்தமான பாலனக் கடமைகளைக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரின் கட்டளைப்படி நடாத்த வேண்டுமென்றும் விதிக்கப்பட்டான். இவ்வேற்பாட்டினால் ஒரு விசேட மாற்றமொன்று ஏற்பட்டது; சென்னை அரசாங்கத்தின் கீழிருந்த பாலனப் பொறுப்பு நீங்கி வர்த்தக சங்கத்தினதும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரினதும் நேரடியான ஆணைக்குட்பட்டு இலங்கை அரசாங்கம் இயங்கிவரலாயிற்று. இவ்வாட்சி முறையில் ஏவுநர் முதல்வன் பாலனப் பொறுப்பேற்று நிர்வகித்து வந்தமுறை கைவிடப்பட்டது. குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்குப் பொறுப்புள்ள ஆள்பதியின் பாலனம் ஆரம்பமாயிற்று;

பிரித்தானிய மன்னனது பெயரில் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் ஆள்பதியும் ஒன்பது குடியியற் சேவையாளரும் நியமிக்கப்பட்டனர்; ஆள்பதி இவ்வொன்பது பேருடைய சேவையோடும் வர்த்தக சங்கத்தால் நியமனஞ் செய்யப்பட்ட சென்னை, பம்பாய் குடியியற் சேவையாளரின் உதவியோடும் இலங்கைப் பாலனப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்; நோத் பதவியேற்கும் காலத்தில் பாலனத்தில் ஊழல்களும் உத்தியோகத்தர்களிடையே நேர்மையின்மையும் மலிந்து கிடந்தன. அவன், பியரி டூமூரானின் எடுத்துரைகள் அனைவற்றையும் அமுல் நடத்தும் பொறுப்பை ஏற்று பாலனச் சீர்கேடுகளை அகற்றும் பணியையும் மேற்கொண்டான். முதலில் டூமூரானின் எடுத்துரைகளனைவற்றையும் செயற்படுத்துவதற்கு ரெபேட் அன்ட்றாஸ் முட்டுக்கட்டையாக இருந்ததால் அவன் இதுவரையும் வகித்து வந்த பதவியாகிய வருமான மேற்பார்வையாளர் என்ற பதவியை நோத் ஒழித்தான்; மத்திய அரசாங்கத்தில் நோத், ஆள்பதி என்ற கோதாவில் நிதிக்குப் பொறுப்பாக இருந்தான். இவனுக்கு மத்திய அரசாங்கத்தில் ஆலோசகர்களாக ஏவுநர் முதல்வன் பிரதான செயலாளர் அவனது பிரதியாளன், கறுவாத் தினைக்களத் தலைவன், அரசாங்கக் கணக்குப் பரிசோதனை நாயகம் ஆகியோர் அமைந்தனர். கடற்கரைப் பிரதேசங்கள், நிர்வாக சுழுகத்திற்காக கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு கலெக்டரின் பாலனத்தில் விடப்பட்டது; இவர்கள் பிரதான செயலாளருக்குப் பொறுப்பாக இருந்தனர்; ஒவ்வொரு

கலெக்டரின் கீழ் பல முதலியார் கடமையாற்றினர். முதலியாரின் கீழ் கோறளை, விதானை எனப்பல உத்தியோகத்தர் கடமையாற்றினர் முதலியார் அனைவரும் அத்தப்பத்து முதலியார் எனும் அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் இருந்து வந்தனர். ஆனால் இவர்கள் ஆள்பதி யின் கையாளாகிய மஹா முதலியாரின் ஆணைப்படியே நடந்து கொள்ளவேண்டியவராயினர். மத்திய அரசாங்க திணைக்களங்க ளிலும், மாகாண அரசாங்க திணைக்களங்களிலும் சிறிது ஆங்கில அறி வுள்ள பறங்கியர் எழுது வினைஞர்களாகக் கடமையாற்றினர்.

1799ம் ஆண்டு கடற்கரைப் பிரதேசங்கள் யாழ்ப்பாணம், காலி-மாத்தறை, மட்டக்களப்பு - முல்லைத்தீவு, கொழும்பு ஆகிய நான்கு கலெக்டர் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. ஆனால் இப்புதிய பிரிவுகள் சில பாலனச் சிக்கல்களை ஏற்படுத்தியதன் விளைவாக மீண் டும் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. 1801ம் ஆண்டு இம்மூன்று கலெக்டர் மாவட்டங்கள் பதின்மூன்று மாவட்டங்க ளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் கலெக் டரின் மேற்பார்வையின் கீழ் ஒவ்வொரு மாகாண முகவர் நியமிக்கப் பட்டான். மாகாண முகவர்கள் அனைவரும் ஐரோப்பியர்களாகவே இருந்தனர். சிறிதுகாலம் சென்றதும் கலெக்டர் பதவிகள் ஒழிக் கப்பட்டு அவற்றிற்குப் பதிலாக மாவட்ட அரசாங்க முகவர்கள் நிய மிக்கப்பட்டனர். இவர்கள் அவ்வாண்டு புதிதாக நிறுவப்பட்ட வரு மான வர்த்தகசபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட னர். மாகாண வருமான திணைக்களங்கள், கறுவாத் திணைக்களம், முத்துக்குளிப்புத் திணைக்களம், மாகாண பாலனம் ஆதியன வரு மான வர்த்தகசபைக்குள் கொண்டுவரப்பட்டன.

இலங்கையில் செவ்வனே பாலனஞ் செய்வதற்குப் பல இடை யூறுகள் நேரத்முன் நின்றன. கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் பணிக்காயர் சபை, ஒல்லாந்தரின் நீதிபாலன முறையையும் பொலிசு முறையையும் வரிமுறையையும் பின்பற்றுமாறு வற்புறுத்தி வந்தது. வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த சென்னை, பம்பாய், குடியியற் சேவையாளர் ஆள்பதியை பலவிடங்களில் எதிர்த்து ஒத்துழைக்க மறுத்தனர். பாலனத்துக்குத் தேவையான முக்கிய தகவல்களைக் கொடுக்காது வாளாவிருந்தனர். இங்கிலாந்திலிருந்து வந்த குடியி யற் சேவையாளரோடு ஒத்துழைக்க மறுத்தனர். இவர்கள் ஆள்பதி நோத் கடமையேற்று முதல் ஒன்பது மாதங்கள் அவருக்குச் சொல் லொணா நெருக்கடிகளைக் கொடுத்து வந்தனர். இதற்கு முதல் வைத் துக் கணிக்கக்கூடிய காரணம், சென்னை அல்லது பம்பாயைச் சேர்ந்த குடியியற் சேவையாளராக நோத் இல்லாமல் இருந்ததே. இரண்டாவதாக நோத் வந்ததும் வராததுமாக ரெபேட் அன்ட்

றூசின் பதவியை நீக்கினான். இதனால் இக்கெதி தங்களுக்கும் வரக் கூடுமென எஞ்சியிருந்த குடியியற் சேவையாளர் அச்சமடைந்தனர். இதனாலன்றே இவர்கள் நோதின் திட்டங்களுக்கு முட்டுக்கட்டைகள் பல இட்டு அவரைச் சிறுமைப்படுத்த எண்ணினர்: இத் தருணத்தில் அரசாங்கத்திற்கு அதிக வருமானமிறைக்கும் தொழிலாகிய மூத்துக்குளிப்பில் பெரும் நட்டமேற்பட்டது. ஒல்லாந்தரின் நாணயத்தின் பெறுமதி குன்றியது. பாதீட்டில் வருவாயிலும் பார்க்கச் செலவு அதிகரித்தது. அதுவுமன்றி மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல பலர் அம்மை நோயால் பாதிக்கப்பட்டனர். இதைத் தடுப்பதற்குக் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வைத்தியசாலைகள் நிறுவியமையினால் அரசாங்கத்திற்குப் பணநெருக்கடி உண்டாயிற்று. இக்கட்டான நிலையில் பாலனத்திலுள்ள ஊழல்களை அகற்றி குடியியற் சேவை முறையை திருத்தியமைத்து வருமானத்தைப் பெருக்குவதில் கண்ணுங் கருத்துமாக இருந்தான் நோத். பாலன முறையை நன்கு பரிசீலனை செய்த போது குடியியற் சேவையாளர் பலரின் நேர்மையின்மையும், திறமையின்மையும் அம்பலமாயின. இத்தகையோர் தண்டிக்கப்பட்டனர்; உதாரணமாக மட்டக்களப்பில் கலெக்டராகக் கடமையாற்றிய கரோ என்பவனதும், பிரதான செயலாளராகிய ஹியூகிளேகனதும் பதவிகள் இடைநிறுத்தப்பட்டன. படிமுதல்வர் நாயகமாகிய அற்கின்சன் என்பவன் தனது பதவியிலிருந்து விலகல் செய்தான். இக்கடும் நடவடிக்கைகளினால் ஓரளவிற்கு பாலனத்திலிருந்த ஊழல்களை அகற்றிஅரசாங்கத்திற்கு அதிக வருமானத்தைக் காட்டினான் நோத்;

நீதிபாலனத்தைத் திருத்தியமைக்கும் முகமாக எட்மன்ட் கரிங்ரன் (Edmund Carrington) என்ற சட்ட வாதியின் உதவியை நோத் நாடினான்; அவரின் எடுத்துரைகளின்படி நீதிபாலனத்தில் பல மாற்றங்களைக்கொண்டு வந்தான். 1799-ம் ஆண்டு பிரதான பட்டணங்களில் சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்வதற்கென கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், மாத்தறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, சிலாபம் ஆகிய இடங்களில் நீதிமன்றுகள் நிறுவப்பட்டன; 1800-ம் ஆண்டு சிறு கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்வதற்கென வாரியார் மன்றுகள் நிறுவப்பட்டன; இதைவிட ஆள்பதியை முதல்வராகக் கொண்ட உச்சமன்றொன்று நிறுவப்பட்டது. இதில் ஏவுநர் முதல்வனும் பிரதமசெயலாளனும் சேர்ந்து விசாரணை செய்து நீதி வழங்கினர். மேலும் ஆங்கிலத் திருச்சபையின் பிரதிநிதியாகவும் நோத் இருந்ததனால் சமய சம்பந்தமான வழக்குகளை அவரே விசாரணை செய்தார்;

இரட்டை ஆட்சி முறையிலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. இம்முறை புதிய பாலனச் சிக்கல்களை ஏற்படுத்தியது. வியாபாரம், வரிவசூல் முதலியன வர்த்தக சங்கத்தின் கட்டளைகளுக்கிணங்க ஆள்பதி நிர்வகித்துவரவேண்டியனவாக இருந்தன. இதன் காரணமாக முன்னிருந்த பாலனவமைப்பில் இடம்பெற்ற வரிவசூல் உரிமையை விலைக்கு விற்கும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது: எனவே வரிவசூல் முறையினால் மக்கள் அடைந்த இன்னல் குறையவில்லை: சென்னை அதிகாரிகள் தொடர்ந்து அதிகப்படியான வரிகளை வசூலித்து வரலாயினர். மக்களது இன்னல்களைத் தீர்த்துவைப்பதற்காக ஆள்பதி நோதினால் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் அத்தனையும் கட்டுப்பாட்டுச் சபையினால் நிராகரிக்கப்பட்டன. எனவே சென்னை அதிகாரிகட்கும் ஆள்பதி நோதிற்குமிடையே ஏற்பட்ட அதிகாரத் தகராறுகள் அடிக்கடி நாட்டின் பாலனத்தைச் சீர்குலைத்தன. அரசாங்கத்தின் நிர்வாகச் சீர்கேட்டினால் மக்கள் மேலும் அரசாங்கத்தின்மீது அதிக வெறுப்புக்கொண்டனர். இவ்விரட்டை ஆட்சி முறையிலும் சென்னை அதிகாரிகளிடமே தொடர்ந்து வரி வசூலிக்கும் உரிமை ஒப்படைக்கப்பட்டிருந்தமையினால் சிங்களப் பிரதானிகள் முன்போலவே வெறுப்புக்கொண்டு நோதின் அரசாங்கத்தை எதிர்த்துவரலாயினர். சென்னை அதிகாரிகளெனவும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரெனவும் இருவகைப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் இலங்கையில் அப்பொழுதிருந்தனர். வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த சென்னை அதிகாரிகள் ஆள்பதியை எதிர்த்தனர். இவர்கள் இங்கிலாந்திலிருந்து வந்த குடியியற் சேவையாளரோடு ஒத்துழைக்க மறுத்தனர். இதனால் பாலனத்தில் குழப்பமேற்பட்டது: மேலும் வர்த்தக சங்கத்தினால் விடுக்கப்பட்ட கட்டளைகள் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் விடுக்கப்பட்ட கட்டளைகளுடன் முரண்பட்டதால் ஆள்பதி யாருடைய கட்டளையை ஏற்று நடக்க வேண்டுமென்ற பிரச்சினைக்குள்ளானான். இதனாலும் பாலனம் சீர்குலைந்தது:

இந்நிலையில் ஆள்பதி தனது கஷ்டங்களை அறிக்கை மூலமாக குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்குச் சமர்ப்பித்தான். இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களின் ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் ஆங்கில அரசாங்கமே ஏற்று நடத்தும்படி ஆள்பதி தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டான். இதற்கிடையில் ஏமியன்ஸ் சமாதானம் ஐரோப்பாவில் பிரெஞ்சுப் புரட்சி யுத்தங்களின் முடிவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது: கடற்கரைப் பிரதேசங்கள் பிரித்தானியருக்கே உரியதென உறுதிப்படுத்தப்பட்டது. ஆங்கில அரசு இலங்கையில் நிரந்தரமான தெனவும் வர்த்தகசங்கத் தொடர்பைத் துண்

டித்து ஆங்கில அரசாங்கமே இலங்கை அரசாங்கப் பொறுப்பை ஏற்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. 1802-ம் ஆண்டு இலங்கை முடிசார் குடியேற்ற நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

வினாக்கள்

1. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் இலங்கைக் கடற் கரைப் பிரதேசங்களை ஆட்சி செய்த முறையைத் தருக.

2. பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி தோல்வி யடைந்தமைக்குரிய காரணங்களைக் கூறுக.

3. இரட்டை ஆட்சிமுறையின் பாலன அமைப்பை விளக்கி அதன் குறைபாடுகளைத் தருக.

நான்காம் அத்தியாயம்

ஆள்பதி பிரடறிக் நோத் அவர்களின் ஆட்சி

இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்திற்குத் தடையாக ஏனைய ஐரோப்பிய வல்லரசுகளிடமிருந்து வரும் எதிர்ப்புகளை முறியடிப்பதற்குப் போதிய கப்பற்படையை வைத்திருக்கக்கூடிய துறைமுகம் திருகோணமலையெனப் பிரித்தானியர் கருதினர். முதலில் நீனைத்திருந்தபடி ஒல்லாந்தருக்கு இலங்கையைத் திருப்பிக் கொடுக்காமல் தாங்களே வைத்திருப்பதென முடிவுசெய்து ஏமியன்ஸ் சமாதான உடன்படிக்கையை நிறைவேற்றினர். இதற்கிணங்க 1802-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ந் திகதி இலங்கை முடிசார் குடியேற்ற நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இதனால் இலங்கை ஒரு தனித்தியங்கும் குடியேற்ற நாடாகியது. நோத் பிரபு இலங்கையில் பிரித்தானிய மன்னனின் பிரதிநிதியாகவும் இலங்கை ஆள்பதியாகவும் நியமிக்கப் பட்டான்.

இதுவரை சென்னை அரசாங்கத்தோடு இருந்துவந்த தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. நோதிடம் சகல பாலன பொறுப்புகளும் விடப்பட்டன. இவனுக்கு ஆலோசனை கூறுவதற்காக ஒரு ஆலோசனைச் சபை நிறுவப்பட்டது. இச் சபையில் பிரதம நீதிபதி, ஏவுநர் முதல்வன், பிரதம செயலாளர், ஆகிய மூவர் முக்கிய அங்கத்தவராவர்; உதவிப் பிரதமசெயலாளர் ஆலோசனைச் சபையிற் செயலாளராகக் கடமையாற்றினன். இச் சபை முதன்முறையாக 1802-ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 4-ந் திகதி கூடியது. சென்னையிலிருந்த பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட குடியியற் சேவையாளருட் பலர் சென்னைக்குத் திருப்பியனுப்பப்பட்டனர். இலங்கையில் ஒரு குடியியற் சேவை முறை ஏற்படுத்தப்பட்டது. தூர கிழக்குத் தேசங்களில் இலங்கையிலேயே முதன்முதலாக குடியியற் சேவைமுறை நிறுவப்பட்டது. குடியியற் சேவையாளரே வருமான முகவர்களாகவும் மாகாண நீதிபதிகளாகவும் கடமையாற்றினர்.

ஆள்பதி நோத் செல்வனே பாலனம் செய்யும் பொருட்டு இறைசேரி, கறுவாச் செய்கை, நில அளவை, காணிவரி, சுங்கம் முதலிய விடயங்களுக்கு ஒவ்வொரு திணைக்களத்தை நிறுவினன். அரசாங்க சேவையாளருக்கு வேதனம் வழங்குவதற்கு ஒரு திணைக்களமும் கணக்குப் பரிசோதனை நாயகத்திற்கென இன்னொரு திணைக்களமும் நிறுவப்பட்டன. ''வருமான வர்த்தகசபை'' என ஒரு சபையும் இவரது காலத்தில் நிறுவப்பட்டது.

ஆள்பதி நோத் இலங்கையில் நிலவிவரும் சேவை மானிய முறையில் திருப்தியடையவில்லை. தலைமைக்காரர் தங்கள் அதிகாரங்களைத் துர்ப்பிரயோகம் செய்தபொழுது ஆள்பதியால் அவர்களைக் கட்டுப்படுத்தமுடியவில்லை. சேவைமானிய முறையின்கீழ் மஹாமுதலியாரின் செல்வாக்கு வளர்ந்து வருவதை நோத் விரும்பவில்லை. சேவைமானிய முறை, விவசாயமும் வியாபாரமும் அபிவிருத்தியடைவதற்கு முட்டுக்கட்டையாகவிருந்தது. மேற்கூறிய காரணங்களைக் கருத்திற் கொண்ட நோத் சேவைமானிய முறையை 1802-ம் ஆண்டு மே மாதம் நீக்கி புதிய பாலன முறையைப் புகுத்தினன். இப் புதிய பாலன முறையின்படி முன்னர் அரசாங்கத்திற்குச் செய்யவேண்டிய சேவைக்குப் பதிலாகத் தற்பொழுது மேட்டுக் காணிச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் விளைவில் பத்திலொன்றையும் பள்ளக் காணிச் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் விளைவில் ஐந்திலொன்றையும் அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமென விதிக்கப்பட்டது. ஆள்பதி, தலைமைக்காரருக்கு நிலங்களை மானியமாக வழங்குவதற்குப் பதிலாக அவர்களுக்கு வேதனத்தை வழங்கினன். ஆனால் சேவை மானிய முறை நீக்கப்பட்டமையினால் பல தீமைகள் உண்டாயின. இவற்றை மெயிற்லந்தின் ஆட்சியின் கீழ் அறிந்துகொள்வாம்.

ஆள்பதி நோதின் காலத்தில் புதிய நீதிக்களமுறையொன்று நிறுவப்பட்டது. கரிங்ரன் பிரதம நீதிபதியாகவும் எட்மண்ட் ஹென்றி லூசிங்ரன் (Edmund Henry Lushington) துணை நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டனர். 1802ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 8ந் திகதி ஒரு உச்ச மன்று நிறுவப்பட்டது. ஜேம்ஸ் சுன்டர்லண்ட் (James Sunderland) இம்மன்றின் செயலாளராகப் பதவியேற்றான். இதுவரையும் ஆள்பதியின் கீழ் இருந்த நீதி பாலன அதிகாரங்கள் யாவும் ஒழிக்கப்பட்டன. இவ்வுச்ச மன்றிற்கு பிரக்கிராசிமாரையும் வழக்குரைஞர்களையும் பதிவுசெய்யும் உரிமைகள் வழங்கப்பட்டன. சிவில் வழக்குகளை விசாரணை செய்வதற்குக் கொழும்பு மாவட்டத்திற்கென ஒரு சிவில் நீதி மன்று நிறுவப்பட்டது. இதைவிட ஒவ்வொரு மாகாணத்திலும் அவ்வவ் மாகாணங்களில் தொன்றுதொட்டிருந்துவரும் பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் அடிப்படையாகக்கொண்டு நீதி வழங்கும்பொருட்டு நீதிமன்றுகள் நிறுவப்பட்டன. ஒல்லாந்தரின் ''லாண்ராட்ஸ்'' என்ற சிவில் நீதிமன்றுகள் நீக்கப்பட்டு அதன் அதிகாரங்கள் புதிதாக நிறுவப்பட்ட சிவில் நீதிமன்றுகளுக்கு வழங்கப்பட்டன. பொலிசு வழக்குகளை விசாரணை செய்யும்பொருட்டு ஒவ்வொரு பிரதான பட்டினங்களிலும் ஒவ்வொரு சமாதான நீதிபதி நியமிக்கப்பட்டான். இவனே பிற்காலத்தில் பொலிசு நீதிபதியெனப் பெயர்பெற்றான். சகல நீதிமன்றுகளிலிருந்தும் வரும் மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பளிக்

கும் பொருட்டு மேன்முறையீட்டு மன்று நிறுவப்பட்டது. இதில் ஆள்பதி, பிரதம நீதிபதி, துணை நீதிபதி ஆகியோர் அங்கத்துவம் வகித்தனர்.

நோத் விவசாய அபிவிருத்தியிலும் கவனஞ் செலுத்தத் தவற வில்லை. ஒல்லாந்தரால் ஆரம்பிக்கப்பட்ட முத்துராஜவலைத்திட்டம் பயன் தருமென எண்ணி நோத், 1,05,000 றிக்ஸ் டொலர் செலவில் 6000 ஏக்கர் நிலத்தில் நெற்சாகுபடி செய்யத் திட்டமிட்டான். அதன்படி 45,000 றிக்ஸ் டொலர் செலவு செய்தான். இதனிடையில் கண்டிப் போர் ஆரம்பிக்கவே அப்போருக்கு ஏராளமான பணத்தைச் செலவுசெய்யவேண்டி யிருந்ததால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தக சங்கம் கோப்பி, பஞ்சு, கரும்பு ஆகிய பயிர்ச் செய்கைகளை மேற்கொண்டது கொழும்பிலும் கதிரிணுத் தோட்டத்திலும் கறுவா செய்கைபண்ணப்பட்டது. மக்கள் கறுவாத் தோட்டங்களை உண்டாக்கவும் வேறு விளைபொருள்களைச் செய்கை பண்ணவும் ஊக்கமளிக்கப்பட்டனர், இவ்வளவு பெரிய முயற்சிகளில் ஈடுபட சிங்கள மக்களிடம் போதிய பணமோ கல்வியறிவோ இல்லாமலிருந்தன. ஐரோப்பியர் மட்டுமே பணம் படைத்தவர்களாயும், விவசாய அனுபவமும், அறிவுடையோராயும் இன்னும் பல வசதிகளுடையோராயும் இருந்தனர். 1801ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18ந் திகதி பிறப்பிக்கப்பட்ட கட்டளையில் ஐரோப்பியரெவரும் கொழும்பு மாவட்ட எல்லைக்கு வெளியில் ஏழு வருடங்களுக்கு மேல் காணிகளை வைத்திருக்கக் கூடாதெனவும் இராணுவ குடியியற் சேவையிலிருக்கும் ஐரோப்பியரையும் அமெரிக்கரையும் தவிர வேறு அமெரிக்க ஐரோப்பிய மக்கள் ஆள்பதியின் அனுமதியின்றி இலங்கையில் வசிக்கக் கூடாதெனவும் அறிவிக்கப்பட்டது. ஐரோப்பியர் தோட்டங்களில் முதலீடு செய்யவும் இச் சட்டம் முட்டுக்கட்டையாக விருந்தது.

ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றுவதில் செலவு செய்த பணத்தைத் திரும்பப் பெறுவதே பிரித்தானியரது முக்கிய நோக்கமாக விருந்ததேயல்லாமல் கல்வி வளர்ச்சியில் சிறிதளவேனும் அவர்கள் ஊக்கங் காட்டவில்லை. ஒல்லாந்தர் சமயத்தைப் பரப்பும் நோக்குடனேயே பாடசாலைகளை நடாத்தினர். இப் பாடசாலைகள் தேவாலயங்களிலேயே நடைபெற்றன. இத் தேவாலயங்களில் நடைபெறும் விவாகங்களுக்காக வசூல் செய்யும் பணத்தை ஆசிரியர்களுக்குச் சம்பளமாக ஒல்லாந்தர் வழங்கினர். இந்த ஆசிரியர்களே கலியாண பதிவாளர்களாகவும் சேவை புரிந்தனர். விவிலிய நூலையும் ஏனைய நூல்களையும் வாசித்தறிந்து கொள்வதற்காக மக்களுக்குக் கல்வியறிவை ஒல்லாந்தர் ஊட்டினர்.

பொதுமக்களுக்குக் கல்வியறிவு ஊட்டுவது அரசாங்கத்தின் பொறுப்பென்பதை அக்காலத்தில் பிரித்தானியாவிலேயே எவரும் உணரவில்லை. ஒல்லாந்தரைப்போல கல்விமூலம் மதப்பிரசாரத்தில் ஈடுபட்டால் சில சமயம் தமது வியாபாரத்துக்குப் பங்கமேற்படலா மெனப் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கம் எண்ணிற்று. இவ் விரு காரணங்களினால் ஆரம்பத்தில் இலங்கையரது கல்வி விடயத்தில் பிரித்தானியர் சிரத்தையெடுக்கவில்லை. பரந்த மனப்பான்மை யுடைய ஆள்பதி நோத் கல்வியினால் மனிதனுடைய ஒழுக்கம் உயரு மென்ற கொள்கையை உடையவன். அத்தோடு ஒல்லாந்தரது ஆட்சியில் கிறித்தவ சமயத்தைத் தழுவியவர்கள் இப்பொழுது பௌத்த சமயத்தவர்களாகவோ அன்றேல் இந்து சமயத்தவர் களாகவோ மாறிவிட்டால் பிரித்தானிய ஆட்சிக்கு அவர்கள் விரோ திகளாக மாறிவிடக்கூடுமெனச் சந்தேகித்தான். இவ்விரு கார ணங்களைக் கொண்டு 1802ம் ஆண்டில் ஒல்லாந்தரின் கல்வி முறை யையே மீண்டும் அவன் அமுலுக்குக் கொண்டுவந்தான். ஒல்லாந் தரைப்போலல்லாமல் ஆசிரியர்களுக்கு அவன் ஒழுங்காகச் சம் பளத்தை வழங்கினான். தமிழ்ப் பாடசாலைகளும் சிங்களப் பாட சாலைகளுமாக 163 பாடசாலைகள் நிறுவப்பட்டன. மதமாற்றஞ் செய்வதே முக்கிய நோக்கமாக இருந்தபோதிலும் எவரும் பலவந்தப் படுத்தப்படவில்லை.

ஒரு ஆங்கிலப் பாடசாலை வண. ஜேம்ஸ் கோடினர் (Rev. James Cordiner) அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாங்கிலப் பாட சாலையில் அநேகமாக ஐரோப்பிய மாணவர்களே கல்வி பயின் றனர். மனுக்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதால் பெறும் வரு மானத்தைக்கொண்டு இப்பாடசாலை இயங்கிவந்தது. கோடினர் இங்கிலாந்திற்குச் சென்றதும் இப்பாடசாலையை நடத்துவதற்குத் தேவையான 1500 பவுணை நன்கொடையாகக் கொடுக்க அரசாங்கம் மறுத்தது. இதனால் இப்பாடசாலை மூடப்பட்டது. இது மூடப்படு வதற்கு முன்பு பலர் கல்வி பயிலுவதற்காக கிறித்தவ சமயத்தில் சேர்ந்தனர். இப்பாடசாலை மூடப்பட்டதும் இவர்கள் தத்தம் மதங் களை மீண்டும் பின்பற்றத் தொடங்கினர்.

தபாற் சேவை ஒல்லாந்தர் காலத்திலேயே இருந்துவந்தது. அக் காலத்தில் கால்நடையாகவே மக்கள் தபால்களை எடுத்துச் சென் றனர். இவர்கள் செய்யும் சேவைக்காக இவர்களுக்குக் காணிகள் வழங்கப்பட்டன. அதுவுமன்றி வரி இறுப்பதிலிருந்து இவர்கள் விலக்கப்பட்டனர். 1802ம் ஆண்டுவரை பிரித்தானியர் இம்முறை யையே கையாண்டனர். 1802ம் ஆண்டில் ஒரு நிரந்தரமான தபால் திணைக்களம் நிறுவப்பட்டு அந்தோனி பேட்டாலாக்கி (Antony

Bertalocci) என்பவன் தபாற்சேவை நாயகமாக நியமனஞ் செய்யப் பட்டான். இவனுக்குக்கீழ் பலர் வேலைக்கமர்த்தப்பட்டு ஒவ்வொரு நாளும் தபால் போக்குவரவு செய்யப்பட்டது. சென்னை, கல்கத்தா, பம்பாம் முதலிய வெளிநாடுகளுக்குக் கூட ஒவ்வொரு நாளும் தபால் அனுப்பப்பட்டது. பயங்கரமான காடடர்ந்த இடங்களுக்கூடாகத் தபால் ஊழியர் இரவும் பகலும் தபால்களை எடுத்துச் சென்றனர்.

தபாற் சேவை அநேகமாக் குடியியல் இராணுவ அதிகாரிகளி னாலேயே பயன்படுத்தப்பட்டு வந்தது. சுதேசிகளுக்கும் ஒல்லாந்த ருக்கும் தபாற்சேவை தேவைப்படவில்லை. 1803-ம் ஆண்டு தபாற் சேவையினால் வருமானம் 1259 றிக்ஸ் டொலராக இருந்தபோது செலவு 3488 றிக்ஸ்டொலராக இருந்தது. இலங்கைத் தபால் திணைக்களத்தில் கிடைக்கும் வருமானம் செலவிலும் பார்க்கக் குறை வாக இருப்பதை விரும்பாத குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் இலங்கைத் தபாற்சேவை முறையைத் திருத்தியமைக்குமாறு கட் டளையிட்டார். இதன் விளைவாக மூன்று நாட்களுக்கொரு முறை தபால் பட்டுவாடா செய்யப்பட்டது.

கொழும்பிலிருந்த தபாற்கந்தோரைவிட திருகோணமலை, யாழ்ப் பாணம், மன்னார், மாத்தறை முதலிய இடங்களில் தபாற்கந்தோர் கள் நிறுவப்பட்டன. இப் புதிய தபாற் சேவை முறையை வடபிரிவு, தென்பிரிவு என இரு பிரிவுகளாகப் பிரித்தனர். முதற் பிரிவு கொழும் பிலிருக்கும் அரசாங்கத் தலைமைக் காரியாலயத்திலிருந்து தபாலை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு வழியாகத் திருகோணமலைக்கு எடுத்துச் சென்றது. இரண்டாம் பிரிவு கொழும்பிலிருந்து தபாலை அம்பாந் தோட்டை மட்டக்களப்பு வழியாகத் திருகோணமலைக்கு எடுத்துச் சென்றது. மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு ஒரு தபாலனுப்ப ஏழு பணமும், கொழும்புக்கும் திருகோணமலைக்கும் எட்டுப்பண மும், கொழும்பிலிருந்து பேருவலை, பெந்தோட்டை முதலிய அண் மையிலுள்ள இடங்களுக்கு இரண்டு பணமும் அறவிடப்பட்டது.

ஆள்பதி நோதின் காலத்தில் "இலங்கை அரசாங்கச் செய்தி மடல்" ஆரம்பிக்கப்பட்டது. இது அரசாங்கக் காரியங்களையும், இலக்கியம், அரசியற் கவிதைகள் போன்ற விடயங்களையும் பிரசுரிக் கும் புதினப் பத்திரிகையாகவே இருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் எந்த உயர்ந்த தானத்தில் புரட்டத்தாந்து கிறித்தவர் இருந்த னரோ அதே தானத்திலேயே பிரித்தானியர் ஆட்சியிலும் இருந்த னர். இவ்விடயத்தில் பௌத்தர் இந்துக்கள் ஆகியோரிடம் அர சாங்கம் பட்சபாதகமாய் நடந்திருக்கின்றதென்பது வெள்ளிடை மலை. புரட்டத்தாந்து கிறித்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டதானங் களும் சலுகைகளும் மற்றச் சமயத்தவர்களுக்கு அளிக்கப்படவில்லை.

பௌத்தர்களும், இந்துக்களும் தமது சமயங்களைப் பின்பற்றுவதைத் தடுப்பதிலும் நோத் தீவிரமாக ஈடுபட்டான்.

ஆரம்பத்தில் சுகாதார சேவை இராணுவ திணைக்களத்துக்குள் அடங்கியிருந்தது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் அம்மைநோய் பரவவே கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், காலி முதலிய இடங்களில் அரசாங்கத்தால் வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன. 1802 ம் ஆண்டு அம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பால் கட்டும் நவீன முறை கையாளப்பட்டது.

ஆள்பதி நோத் கண்டிமீது படையெடுத்தமையை பிறிதொரு அத்தியாயத்தில் காண்க. நோத் மிகத் திறமையான திட்டங்களைத் தீட்டினான். ஆனால் அவற்றைச் செயற்படுத்தும் ஆற்றலற்றவனாக இருந்தமையே அவனது வீழ்ச்சிக்குக் காரணமாகும். கண்டிப் படையெடுப்புக்குப் பின்பு இங்கிலாந்தில் இவனை வன்மையாகக் கண்டித்தனர். இவன்மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர் குடியேற்ற நாட்டு அரசுச் செயலாளரைக் கேட்டுக் கொண்டனர். இதன் விளைவாக நோத் 1805-ம் ஆண்டு தனது பதவியைத் துறந்து தாயகம் திரும்பவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானான்.

வினாக்கள்

1. ஆள்பதி நோதினுடைய ஆட்சியையும், அவர் அரசியல், பாலனம் ஆகிய துறைகளில் கொண்டுவந்த சீர்திருத்தங்களையும் தருக.

2. "ஆள்பதி நோதே இலங்கையில் தற்கால பாலன முறையைப் புகுத்தினர்" இக் கூற்று சரியானதாவென ஆராய்க.

3. நீதி அமைதிக்கால ஆட்சி ஆகியனவற்றின் நிர்வாகத்தில் அல்லது ஊழிய நில உரிமைத் திட்டத்தில் (இராஜகாரிய முறை) நோத் தேசாதிபதி செய்த சீர்திருத்தங்களைச் சுருக்கமாக ஆராய்க. (டிசெம்பர், '49)

ஐந்தாம் அத்தியாயம்

முதலாவது கண்டிப் போர்

போர்த்துக்கேயர் காலத்திலும் ஒல்லாந்தர் காலத்திலும் கண்டி இராச்சியம் சுதந்திரமாக விளங்கியது. இவர்கள் கண்டியைக் கைப்பற்ற பன்முறை முயன்ற போதிலும் பயனளிக்கவில்லை. ஜோன் பைபஸ், ஹியூ பொயிட் ஆகிய இருவரும் பிரித்தானியர் சார்பில் உடன்படிக்கை செய்துகொள்ளும் முகமாக கண்டி மன்னனோடு தொடர்பு கொண்டனர். இவர்களது முயற்சியும் எவ்வித பயனையும் அளிக்கவில்லை. எனவே 1796ம் ஆண்டுக்கு முன்னர் பிரித்தானியருக்கும் கண்டி மன்னருக்கு மிடையிலுள்ள தொடர்பினால் எப்பயனுமேற்படவில்லை. எனினும் 1796ம் ஆண்டு கண்டி மன்னனின் உதவியின்றி பிரித்தானியர் இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களில் ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டனர். இதன் பின்பு கண்டி இராச்சியத்தில் நடந்த சம்பவங்கள் அவர்களுக்குச் சாதகமாக விருந்தன.

1795ம் ஆண்டு ஜூலை மாதம் திருகோணமலையைக் கைப்பற்றியதும் இதுவரையுங் கைப்பற்றப்படாத ஒல்லாந்த பிரதேசங்களைத் தங்களது ஆணைக்குட்படுத்தப் பிரித்தானியர் நோக்கங் கொண்டனர்; கண்டி மன்னனின் ஒத்துழைப்பைப் பெறுமுகமாக ரெபேட் அன்ட்றூஸ் கண்டிக்கு அனுப்பப்பட்டான். இவர்களிடையே எவ்வித உடன்படிக்கையும் ஏற்படாமற் போகவே சென்னை ஆள்பதியுடன் உடன்படிகை செய்யும் பொருட்டு மன்னனின் பிரதிநிதிகள் இருவரை அனுப்புமாறு கண்டி மன்னனை அன்ட்றூஸ் தூண்டினான். இவர்கள் அவ்வாண்டு டிசெம்பர் மாதம் சென்னைக்குச் சென்றனர். ஐரோப்பாவில் பிரித்தானியருக்கும் ஒல்லாந்தருக்குமிடையே சமாதானமேற்படும் சூழ்நிலை இருந்ததால் ஒல்லாந்தருக்கு விரோதமாக கண்டி மன்னனோடு உடன்படிக்கை செய்வதை இந்தியாவின் ஆள்பதி நாயகம் ரெயின்மத் பிரபு (Lord Teignmouth) விரும்பவில்லை, எனினும் ஒல்லாந்தரின் பரம வைரியான கோபாட் பிரபு மன்னனின் தூதுவர்களோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டான். அவ்வுடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பின்வருமாறு: பிரித்தானியர் கண்டிமீது படையெடுப்பதில்லை; மீன் பிடிப்பதற்கும் உப்பு விளைவிப்பதற்கும் துறைமுகங்களைக் கண்டி மன்னன் பிரித்தானியருக்கு வழங்குதல்; வர்த்தகஞ் செய்வதற்குப் பிரித்தானியரது கப்பல், தோணி, வத்தை, முதலியனவற்றைக் கண்டி மன்னன் பயன்படுத்திக்கொள்ளல். இவற்றைக் கண்டி மன்னனின் தூதுவர்

ஏற்றுக்கொண்டனர்; இவ்வுடன்படிக்கையில் கண்டி மன்னனின் கைச்சாத்தைப் பெறுவதற்காக 1796ம் ஆண்டு ஜூன் மாதம் அன்ட்றூஸ் கண்டிக்குச் சென்றான். கண்டி மன்னன் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தான். மன்னன் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தமை பிரித்தானியருக்குச் சாதகமாகவே இருந்ததென்பதைப் பின் நடந்த சம்பவங்கள் நிரூபிக்கின்றன:

கடற்கரைப் பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பிரித்தானியர் 1797ம் ஆண்டு பியரி டூ மூரானை கண்டிக்கு அனுப்பி வைத்தனர். இவன் கண்டியின் முதலதிகாரியாகிய பிலிமத்தலாவையைச் சந்தித்து உடன்படிக்கை செய்ய முயன்றான்: இது பயனற்றுப்போயிற்று. பிரடறிக் நோத் இலங்கை ஆள்பதியாக நியமனம் பெற்று வரும் வேளையில் குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் வருமானத்தைப் பெருக்குதலையே குறிக்கோளாகக் கொள்ளலன்றி கண்டி மன்னனுடன் போர் தொடுத்து வீண் பண விரயம் ஏற்படுத்தக் கூடாதென இவனுக்குக் கட்டளையிட்டார். அரசனோடு சமாதான முறையில் தொடர்புகொண்டு வியாபாரத்தை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் இவன் கேட்டுக்கொள்ளப்பட்டான். எனவே கண்டியரசனிடமிருந்து வியாபார உரிமையைப் பெறுவதற்காகப் பேச்சு வார்த்தைகளை நோத் ஆரம்பித்தான்

இக்காலத்தில் கண்டியில் நாயக்கருக்கும் சிங்களப் பிரதானிகளுக்குமிடையே யிருந்துவந்த பகைமை அதிகரித்தது. முதலதிகாரியாகிய பிலிமத்தலாவை கண்டி மன்னனை அரச பதவியிலிருந்து நீக்கித் தானே அரசனாக வருவதற்குச் சூழ்ச்சிசெய்யலானான். இராஜாதி இராஜசிங்கன் இறக்கவே அவனுக்குப்பின் யார் கண்டி அரசனாக வேண்டுமென்ற பிரச்சினை எழுந்தது. தான் அரசனுவதற்குப் பிலிமத்தலாவை விரும்பியபோதும் சிங்களப் பிரதானிகளிடையே ஒற்றுமையின்மையால் அவ்வெண்ணத்தைக் கைவிட்டு விட்டு தனக்குச் சார்பானவனும் வயதில் குறைந்தவனுமாகிய கண்ணுசாமியை அரசனாக்கினான். காலகதியில் பிரதானிகள் ஆதரவைப் பெற்றுக் கண்ணுசாமியை நீக்கிவிட்டுத் தானே அரசனாவது இவனது எண்ணமாயிருந்தது. இவ்வேளையில் கண்ணுசாமியாகிய ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுக்கு ஏவுநர்முதல்வனாகிய மக்டோவல் (Mac Dowall) மூலம் பரிசுப் பொருள்களையும் தனது ஆசியையும் நோத் அனுப்பினான். அரச பதவியில் மோசங்கொண்ட பிலிமத்தலாவை நாயக்க அதிகாரிகள் பலரைப் பதவியிலிருந்து நீக்கித் தனது அதிகாரத்தைப் பெருக்கிக்கொள்ள முயன்றனன்.

பிலிமத்தலாவையின் சூழ்ச்சிகளையும் எண்ணங்களையும் அறிந்த ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் பிலிமத்தலாவையின் அதிகாரங்களைப் படிப்படியாகக் குறைத்தான்; இதனாற் கோபமடைந்த பிலிமத்தலாவை பிரித்தானியரின் படையுதவியைப் பெறவெண்ணி நோதுடன் தொடர்பு கொண்டான். 1799, 1800-ம் ஆண்டுகளில் பிலிமத்தலாவை நோதைச் சந்தித்து பேச்சு வார்த்தைகள் நடாத்தினான்; ஸ்ரீவிக்கிரம இராசசிங்கனைத் தானே அரசனுக்கினனெனவும் கண்டி மக்கள் அரசனை வெறுக்கிறார்களெனவும் கூறித் தானே அரசனுவதற்கு உதவி கோரினான். தாங்கள் அரசனாக ஏற்றுக்கொண்ட ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனை அரசபதவியிலிருந்து நீக்குவது தவறென நோத் கூறினான். தான் பிலிமத்தலாவைக்குப் படை உதவி அளித்தால் அரசனின் வீழ்ச்சிக்குத் தானும் காரணமாகலாமெனக் கருதிய நோத், எவ்வித படையுதவியையும் வழங்க மறுத்தான். எனினும் நோத் பிலிமத்தலாவையின் தொடர்பை முற்றுகத் துண்டித்துக் கொள்ள விரும்பவில்லை; மூன்றுவது முறையாக பிலிமத்தலாவையும் நோதின் அந்தரங்க செயலாளருமாகிய பொயிட்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர்; இச் சந்திப்பின்போதுப் பொயிட் கண்டி மன்னனுக்கெதிராகப் படையுதவியளிக்க மறுத்தான்.

இந்நிலையில் கண்டி அரசனுக்கும் பிரித்தானியருக்கும் பகைமையை மூட்டிவிட்டால் கண்டிராச்சியத்தின்மீது நோத் படை எடுப்பானென்ற எண்ணம் பிலிமத்தலாவையின் மனதிலுதித்தது. பொயிட்டுடன் நடாத்திய பேச்சு வார்த்தையே இவ்வெண்ணத்தைச் சுடர்விட்டெரியச் செய்தது. 1802-ம் ஆண்டு மார்ச்சுமாதம் கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வீதி அமைப்பதற்குத் தான், முதல் அதிகாரியென்ற காரணத்தால் அனுமதி வழங்குவதாகவும் ஆனால் வீதி அமைப்பது கண்டி அரசனுக்குத் தெரியாமலேயே இருக்க வேண்டுமெனவும் மக்டோவலுக்கு பிலிமத்தலாவை அறிவித்தான். ஆனால் இச் சூழ்ச்சிவலையில் நோத் விழவில்லை;

1803ம் ஆண்டின் ஆரம்பத்தில் இதுவரையும் பிலிமத்தலாவையின் செல்வாக்கைப் பெரிதாக மதித்து அவன்மூலம் கண்டிமீது ஆதிக்கஞ் செலுத்தலாமென எண்ணிய பிரித்தானியர், அவ்வெண்ணத்தைக் கைவிட்டு ஸ்ரீ விக்கிரம ராஜசிங்களோடு நேரடியான தொடர்பை ஏற்படுத்த விரும்பினர். இந்தியாவில் உவெல்லஸ்லி பிரபு எப்படிச் சிற்றரசர்களோடு ஒப்பந்தஞ் செய்தாரோ, அப்படியே தானும் கண்டி மன்னனோடு ஒப்பந்தஞ் செய்ய நோத் விரும்பினான். இந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு மக்டோவல் கண்டிக்கு அனுப்பப்பட்டான்; கண்டி வியாபாரத்தில் பிரித்தா

னியருக்கு முழுவுரிமையை வழங்குமாறும் வியாபாரக் கட்டுப் பாட்டை நீக்கிவிடுமாறும் கேட்டான். அதுவுமன்றி அரசனது அதி காரமுஞ் செல்வாக்கும் சிங்களப் பிரதானிகளின் மத்தியில் குறைந்து வருவதால் அரசனின் பாதுகாப்புக்காகப் பிரித்தானியப் படை யொன்று கண்டியில் இருக்கவேண்டுமெனவும் அதற்கு அனுமதியளிக் கும்படியுங் கேட்டான். இவ்வேண்டுகோளை அரசன் நிராகரித்து உடன்படிக்கை செய்ய மறுத்தான்:

இச்சமயத்தில் தனது செல்வாக்கைப் பிரித்தானியருக்கு உணர்த்துமுகமாக கண்டியரசனுக்கெதிராகப் பிலிமத்தலாவை கலகம் விளைவித்தான். இக்கலகத்திற்குப் பிரதானிகள் பலர் ஆதர வளிக்கத் தவறியதால் அரசன் சுலபமாக இக்கலகத்தை அடக்கி னான். இதன் பின்னரும் பிலிமத்தலாவையை முதலதிகாரிப் பதவி யிலிருந்து நீக்க அரசனுக்கு நெஞ்சமிருக்கவில்லை. பிரித்தானியருக் கும் கண்டி மன்னனுக்குமிடையே பகைமைத் தீ வளர இன்னு மொரு சூழ்ச்யிசில் பிலிமத்தலாவை ஈடுபட்டான். பிரித்தானியக் குடிகளான சோனக வியாபாரிகள் கண்டி நாட்டில் உப்பு, கருவாடு, புடைவை, புகையிலை, செம்பு, நாணயங்கள், முதலிய பொருள்களை எடுத்துச்சென்று அங்குள்ள கறுவா, பாக்குப்போன்ற பொருள் களுடன் பண்டமாற்றுச் செய்துவந்தனர். இதேபோன்று கண்டி வியாபாரிகளும் தங்களுடைய நாட்டி லுள்ள பொருள்களைக் கடற் கரைப் பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்று பண்டமாற்றுச் செய்வது வழக்கமாகவிருந்தது. வியாபாரம் இங்ஙனமாக நடந்துகொண் டிருக்கும்பொழுது கண்டி நாட்டில் வியாபாரஞ் செய்துவந்த சோனக வியாபாரிகள் பிலிமத்தலாவை வைத்த பொறியில் சிக் கினர். இவ்வியாபாரிகள் பாக்குடன் திரும்பிக்கொண்டிருக்கையில் பிலிமத்தலாவையின் கையாட்கள் அவர்களைத் தாக்கி அவர்கள் கொண்டுவந்த பாக்கை பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப் பட்ட பொருள்கள் பிலிமத்தலாவையின் அந்தரங்க நண்பனொருவ னால் ரூவான்வலியில் விற்கப்பட்டன.

இச்சம்பவம் பிரித்தானியருக்கும் கண்டி மன்னனுக்கும் பகை மையை மூட்டி அதன் பயனாக நன்மை பெறக் கருதிய பிலிமத்தலா வையின் சூழ்ச்சியென அறியாத நோத், மேற்படி சம்பவத்திற்குத் தகுந்த விளக்கங் கொடுக்கும்படியும் தவறின் நட்ட ஈடாக 22 றிக்ஸ் டொலர் கொடுக்க வேண்டுமெனவும் கண்டி மன்னனைக் கேட் டான். வியாபாரிகளைக் கண்டிக்கு அனுப்பும்படியும் விசாரணையில் பாக்குப் பறிமுதல் செய்யப்பட்டது உண்மையெனக் காணின் நட்ட ஈடு கொடுப்பதாகவும் கண்டி மன்னன் ஆள்பதிக்குப் பதி லனுப்பினான். இதன் பிரகாரம் அச்சோனக வியாபாரிகள் கண்

டிக்கு அனுப்பப்பட்டனர்; கண்டியில் விசாரித்துத் தீர்ப்புக் கூறுவ தற்குக் காலதாமதமேற்பட்ட காரணத்தால் தக்க தருணத்தை எதிர் பார்த்திருந்த நோத் கண்டிமீது யுத்தப் பிரகடனஞ் செய்தான்:

நோத் கண்டிமீது படையெடுத்துச் செல்வதற்கு சோனக வியா பாரிகளின் பாக்கு பறிமுதல் செய்யப்பட்டமையும் அதற்கு நட்ட ஈடு வழங்காதமையும் காரணமெனக் கூறமுடியாது. இச்சம்பவம் பல்வேறு காரணங்களைக் கருத்திற் கொண்டு கண்டிமீது படையெடுத் துச் செல்லக் காத்திருந்த பிரித்தானியருக்கு ஓர் சந்தர்ப்பத்தை யளித்தது; கடற்கரைப் பிரதேசங்களைக் கைப்பற்றி அங்கு தங்கள் ஆட்சியை நிறுவிக்கொண்ட பிரித்தானியர் தமதாட்சியில் அமைதி காணவியலாமல் கண்டி இராச்சியம் முட்டுக்கட்டையாக விருந்தது; போர்த்துக்கேயர் காலத்தில் கண்டி மன்னன், ஒல்லாந்தரோடு தொடர்புகொண்டு போர்த்துக்கேயரைக் கடற்கரைப் பிரதேசங்களி லிருந்து வெளியேற்றினான். ஒல்லாந்தரை வெளியேற்றுவதற்குக் கண்டி மன்னர் பிரித்தானியரின் உதவியைப் பெற முயன்றனர்; அதேபோல் கீழைத் தேசத்தில் குடியேற்றங்களை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் பிரெஞ்சுக்காரரின் உதவியைப் பெற்று தங்களை இலங்கையின் கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றும் முயற்சியில் கண்டி மன்னர் ஈடுபடாமலிருக்கக் கண்டி இராச்சியம் பிரித்தானியருக்கு உரியதாயிருக்க வேண்டுமென நோத் உணர்ந் தான். இதனாலன்றே ஐரோப்பிய, இந்திய வல்லரசுகளோடு தொடர்பு வைத்துக்கொள்ளாம லிருப்பதாக உறுதி தந்து உடன் படிக்கை செய்யும்படி நோத் பன்முறை கண்டி மன்னனை வேண்டி னான்.

மேலும் திருகோணமலையையும் கொழும்பையும் இணைப்பது பிரித்தானியரின் படைப்பாதுகாப்புக்கு இன்றியமையாததொன்று. அதுவுமன்றி இவ்வீதி அமைக்கப்பட்டால் பிரித்தானியரின் வியா பாரமும் அபிவிருத்தியடையுமென நோத் கருதினான். இதைக் கருத் திற் கொண்டே மக்டோவல் இவ்வீதியை அமைப்பதற்கு கண்டி மன்னனிடம் அனுமதி கோரினான்; கண்டி இராச்சியத்தினூடாக கொழும்பு, திருகோணமலை வீதி அமையுமானால் கண்டியின் இயற் கைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் வகையில் படைகள் இரு நகரங்களிலிருந்தும் கண்டியை நோக்கி வரலாமென கண்டி மன்னன் கருதினான். இதனாலேயே அவன் வீதி அமைப்ப தற்கு அனுமதி வழங்க மறுத்தான்.

கடற்கரைப் பிரதேசங்களையும் கண்டி இராச்சியத்தையும் பிரிக் கும் எல்லைகள் நன்கு வரையறுக்கப்படாமலிருந்தன. எல்லைப் பிர தேசங்கள் தத்தமக்குரியவையென ஒவ்வொரு சாராரும் உரிமை

கொண்டாடினர். பிரித்தானியர் கடற்கரைப் பிரதேசத்தைக் கைப்பற்றிய காலந் தொடக்கம் இப்பிரதேசங்கள் இரு சாராரிடையேயும் சச்சரவுகளுக்கும், குழப்பங்களுக்கும் காரணமாயிருந்தன; எல்லைப்பிரதேசங்கள் தனக்கே உரியவையென மன்னன் உரிமை கொண்டாடியதுடன் அங்கிருந்து வரிகளைப் பெற்றான். இவ் வேளையில் அவ்விதவரி வசூலிக்குமுரிமை கண்டி மன்னனுக்கு இல்லையென நோத் ஆட்சேபித்தான். எனவே பிரித்தானியர் இந்த எல்லைப்புற சச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் கண்டி கைப்பற்றப்படவேண்டியது அவசியமாயிற்று;

அதுவுமன்றி எல்லைப்புறத்தில் அரசன் வரி வசூலிப்பாளரை நியமித்து கண்டி இராச்சியத்திலிருந்து கடற்கரைப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்படும் பொருள்கள் மீது வரிகளை வசூலித்தான். இத்தகைய வரிகளைப் பிரித்தானியக் குடிகள் கொடுக்கவேண்டியிருந்ததால் அவர்களது வியாபார வளர்ச்சி தடைபட்டது. எனவே கட்டுப்பாடற்ற வியாபாரம் செய்வதற்குக் கண்டியைக் கைப்பற்றல் அவசியமெனப் பிரித்தானியர் கருதினர். கண்டி இராச்சியத்தில் மரம் தறிக்குமுரிமையும் பலாளுவுக்கு மேற்குத் திசையிலுள்ள பிரதேசங்களில் கறுவா சேகரிக்குமுரிமையும் மறுக்கப்பட்டமை கண்டியைக் கைப்பற்றல் அவசியமென பிரித்தானியருக்கு உணர்த்திற்று;

கடற்கரைப் பிரதேசங்களில் பிரித்தானியர் ஆட்சியை நிறுவிக் கொண்டபோதிலும் அதைக் கண்டி மன்னர் ஏற்றுக்கொள்ளவில்லை; கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்படும் கலகங்களுக்கு மறைமுகமாக கண்டி மன்னர் ஆதரவளித்து பிரித்தானியரின் ஆட்சிக்குக் குந்தகம் விளைவித்தனர். இதைத் தடுப்பதற்குப் பிரித்தானியர் ருவான்வலை, ஹன்வலை, அத்தனுக்கலை போன்ற இடங்களில் கோட்டைகளைக் கட்டிப் படைகளை வைத்திருந்தனர். இதனால் ஏராளமான செலவு பிரித்தானியருக் கேற்பட்டது. இந்நிலையில் கண்டி கைப்பற்றப்பட்டால் எல்லைப்புறச் சச்சரவுகளும் வியாபார வரிகளும் நீங்கும்; வியாபாரம் தடையின்றி நடைபெறும்; எல்லைப்புறக் கோட்டைகளாலேற்படும் செலவு இல்லாமற் போகும்; என நோத் கருதினான். இவைகள் எல்லாவற்றையும் உணர்ந்திருந்த நோத் தருணம் வந்ததும் கண்டிமீது யுத்தப் பிரகடனஞ் செய்தான்.

1803-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் திகதி 1700 போர்வீரரடங்கிய படையொன்று மக்டோவலின் தலைமையின்கீழ் கொழும்பிலிருந்து புறப்பட்டது. படையெடுப்பு ஆரம்பிப்பதற்கு முன்பு 'கொக்கோநட் கிளப்'பில் ஒரு விருந்துபசாரம் நடைபெற்று ஆள்பதி நோதும் அவனது நண்பர்களும் மக்டோவலுக்கும் அவரது படைவீரருக்கும் ஆசிகூறி வழியனுப்பி வைத்தனர்; அவ்வாண்டு பெப்புருவரி மாதம் 4-ந் திகதி கப்டின் பாபுட் தலைமையில் 1200 போர்

வீரரடங்கிய இன்னோர்படை திருகோணமலையிலிருந்து புறப்பட்டது; மக்டோவலின் படைகள் ஏழு கோறளை வழியாகச் சென்றன; ஏழுகோறளையில் அதிக எதிர்ப்பின்றி படைகள் முன்னேறின. இரு படைகளும் அம்மாதம் 20ந் திகதி கட்டுகாஸ்தோட்டையில் சந்தித்தன.

21ந்திகதி மஹாநுவரை கைப்பற்றப்பட்டது. ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் மஹாநுவரையிலிருந்து வெளியேறி சிலகாலம் கேதம்பையிலும் பின்னர் ஹங்குருவான்ஹெற்றையிலும் தங்கியிருந்தான். ஏப்ரல் மாதம்வரை பிரித்தானியரால் அரசனைக் கைது செய்ய முடியவில்லை. இவ்வேளையில் பிலிமத்தலாவை மக்டோவலைச் சந்தித்துத் தன்னை அரசனாக ஏற்றுக்கொண்டால் தான் பிரித்தானியரின் நோக்கங்களை நிறைவேற்றுவதாகக் கூறினான். பிலிமத்தலாவையின் வேண்டுகோளை மக்டோவல் நோதிற்கு அறிவித்தபோதிலும் அவன் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும் முத்துசாமியைப் பிரித்தானியர் அரசனுக்கினர். அரசனாகலாமென எண்ணி ஏமாற்றமடைந்த பிலிமத்தலாவை, முத்துசாமி அரசனாயிருப்பதை விரும்பாதவனாக விருந்தபோதிலும் பிரித்தானியரை ஆதரிப்பதாகப் பாசாங்கு செய்தான். முத்துசாமி ஏழுகோறளை, கிரிகம, கலகெதர முதலிய இடங்களையும் கொழும்பிலிருந்து கண்டிக்கு ஒரு வீதி அமைக்கும் உரிமையையும் பிரித்தானியருக்கு வழங்குவதாக வாக்களித்தான்; கண்டி விவகாரங்களில் பிரித்தானியர் ஈடுபட்டிருந்தார்களேயொழிய தப்பியோடிய மன்னனைப்பற்றிச் சற்றும் சிரத்தை கொண்டிலர்.

இந்நிலையில் கண்டியில் மழைகாலம் ஆரம்பிக்கவே ஆறுகள் பெருக்கெடுத்தோடின. கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் பாதைகள் யாவும் இதனால் துண்டிக்கப்பட்டன. கூலியாட்கள்மூலமாகவோ மாட்டுவண்டிகள் மூலமாகவோ படைவீரருக்கு உணவுப் பொருள்களை அனுப்பமுடியாமற் போயிற்று. "சாராயம் ஒரு துளி கூட இல்லை. இருக்கிற அரிசியும் நெல்லும் பத்து நாட்களுக்குக்கூடப் போதாது. பிஸ்கட் ஒரு இரும்புதல் கூட இல்லை" என மக்டோவல் கூறியதிலிருந்து பிரித்தானியப் போர் வீரருக்கு ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டை அறியக்கூடியதாகவிருக்கிறது. இத்துடன் காட்டுச் சுரமும் அவர்களை வாட்ட ஆரம்பித்தது. 1803-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3414 இலங்கைப் படையினரில் 1521 பேரும், 1633 ஐரோப்பிய போர் வீரரில் 774 பேரும் நோய்வாய்ப்பட்டனர்; நோயாளிகளினதும் இறப்போரினதும் தொகை அதிகரித்துக் கொண்டேபோயிற்று.

கப்டின் பாபுட்டுக்கும் காட்டுச்சுரம் பீடிக்கவே கொழும்புக்குத் திரும்பி வரநேர்ந்தது. இங்கு வந்ததும் கண்டியில் பிரித்தானியப்

போர் வீரருக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை நோதிற்கு எடுத்து ரைத்து உடனடியாகப் போர் வீரரை கண்டியிலிருந்து திருப்பி அழைக்குமாறு வற்புறுத்தினன். அதற்கு நோத் உடன்படவில்லை. கண்டியிலிருந்து மக்டோவல் வெளியேறியபின்னர் பிரித்தானியப் படைத் தலைமைப் பீடத்தை மேஜர் டேவி ஏற்றுக்கொண்டான். நிலைமை மோசமடையவே மக்டோவல், கப்டின் பாபுட் முதலியோரின் தூண்டுதலுக்கிணங்க நோத், படையினரை வெளியேறும்படி கண்டிக்குச் செய்தியனுப்பினன். செய்தியுடன் அனுப்பப்பட்ட ஒரு சில தூதுவர்மட்டுமே மிக்க சிரமத்துடன் கண்டிக்குச் சென்று தகவலை அறிவித்தனர்.

பாதைகள் வெள்ளத்தில் அமிழ்ந்திருந்ததனால் பிரித்தானியப் படை வெளியேற முடியாமற் போயிற்று. கண்டியிலுள்ள படைகள் நலிவுற்றிருப்பதைக் கேள்வியுற்ற ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் முத்து சாமியைத் தன்னிடம் ஒப்படைக்குமாறு கேட்டபோது மேஜர் டேவி அதற்கு மறுத்தான். தன்னிடமுள்ள பிரித்தானியப் படையினரைக் கொலைசெய்து விடுவதாக அரசன் பயமுறுத்தவே முத்து சாமியையும் அவனது சகோதரனை கந்தசாமியையும் மேஜர் டேவி ஒப்படைத்தான். இவர்களிருவரும் உடனே சிரச்சேதம் செய்யப் பட்டனர். நோயுற்றிருந்த பிரித்தானியப் படைவீரரைக் கூட அரசன் கொலை செய்வித்தான். மேஜர் டேவி உட்பட பலர் கைது செய்யப்பட்டனர் சிறை வைக்கப்பட்ட கைதிகளில் முந்நூறுபேர் மெயிற்லந்தின் காலத்தில் விடுதலை பெற்றனர். மேஜர் டேவி சிறையிலேயே இறந்தான்.

முதலாவது கண்டி யுத்தத்தில் பிரித்தானியர் தோல்வியுற்றமைக்கு ஆள்பதி நோதின் அவசர புத்தியே முக்கிய காரணமாகும். இது தவிர ஐரோப்பாவில் பிரித்தானியருக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே போர் உருவாகும் சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் இந்தியாவை பிரெஞ்சுக்காரரிடமிருந்து பிரித்தானியர் காப்பாற்ற வேண்டியிருந்ததால் சென்னையிலிருந்தோ வங்காளத்திலிருந்தோ படையுதவி பெறமுடியாமற் போயிற்று. அத்தோடு மேலிடத்தவர்களின் அனுமதியுடன் நோத் கண்டிமீது படையெடுக்கவில்லை. இதனால் போதிய படையை மேலிடத்தவர்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கவில்லை. நோத் சாதாரண கிராமிய மக்களைக்கொண்ட கண்டி இராச்சியப் படையின் திறமையைக் குறைவாக மதிப்பிட்டு தற்கால யுத்த முறையைக் கையாளும் பிரித்தானியப் படையின் திறமையில் அதிக மதிப்பு வைத்துக் கண்டி இராச்சியத்தின்மீது படையெடுத்தான். தற்கால ஆயுதங்களைக் கண்டியில் பயன்படுத்த இயலாதென்பதையும் இயற்கையமைப்புக் கேற்றவாறு யுத்தமுறைகளை மாற்றியமைக்கவேண்டு மென்பதையும் நோத் உணரவில்லை. காடுக

ளில் கொரில்லா யுத்த முறையைக் கையாளும் போர்வீரர்களை எப்படிச் சமாளிப்பதென்பதும் இவன் அறிந்திலன்.

நேர்த் பிரித்தானியப் படையிலும், நவீன யுத்த ஆயுதங்களிலும் அளவு கடந்த நம்பிக்கை கொண்டு அவசர புத்தியுடன் படையெடுத்துச் சென்றமை அவனது அறிவீனத்தைக் காட்டுகிறது. இவனது அறிவீனம் பிரித்தானியரின் தோல்விக்கு வழிவகுத்தது. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கண்டிமீது படையெடுத்து தோல்வியுற்றமைக்குரிய காரணங்களைச் சிந்தித்துப் பார்த்து அவைகளை நிவர்த்தி செய்யாமற் படையெடுத்தமை அவனது குறையாகும்.

கண்டியின் இயற்கையமைப்பையோ சுவாத்தியத்தையோ அந்நியனாகிய நேர்த் அறியவில்லை. பதவியேற்றுச் சிறிது காலத்துக்குள் கண்டிமீது படையெடுத்தமை அரசியல் அஞ்ஞானத்தைக் காட்டுகின்றது. கடற்கரைப் பிரதேசங்களையே பாதுகாப்பதற்குப் போதாத படைபலத்தைக்கொண்டு இயற்கை அரணுள்ள கண்டியைக் கைப்பற்ற எண்ணியமை மிகத் தவருகும். தலைமறைவாகவிருக்கும் அரசனைக் கைப்பற்ற முயற்சிக்காமல் சிலமாதகாலம் கண்டியில் பிரித்தானியர் தங்கியிருந்தனர். மக்டோவலின் வேண்டுகோளையும் பாபுட்டின் விண்ணப்பத்தையும் மறுத்து நேர்த் கண்டியில் படைகளை மழைகாலத்திலும் வைத்திருந்தான். இச் செய்கை அவர்களது படைபலம் நலிவடைவதற்கும் அதைத் தொடர்ந்து அவர்களது தோல்விக்கும் காரணமாயிற்று.

மழைகாலத்தில் கண்டிப் பாதைகள் யாவும் துண்டிக்கப்பட்டன. நலிவுற்ற படைவீரரை வலியுறச் செய்வதற்கு கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களையோ மருந்துகளையோ கண்டிக்கு அனுப்பமுடியாமற்போயிற்று. முத்துசாமியை பிரித்தானியர் அரசனுகப் பிரகடனஞ் செய்தமையால் அவர்களுக்கு மக்களது ஆதரவும் இல்லாமற் போயிற்று. கீழ்த்தர குணமுள்ள முத்துசாமியைத் தம் அரசனுக ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்தனர். கண்டி மக்கள் ஸ்ரீவிக்கிரமஇராஜசிங்கனை ஆதரித்து நின்றமை, அவன் திரும்பவும் அரசாளும் உரிமையைப் பெறுவதற்கும் பிரித்தானியரின் தோல்விக்கும் காரணமாயிற்று.

பிலிமத்தலாவையும் பிரித்தானியரின் தோல்விக்குக் காரணமாயிருந்தான். இவனுக்குக் கண்டியின் இயற்கையமைப்பைப் பற்றியும் காலநிலையைப் பற்றியும் நன்கு தெரியும். அப்படியிருந்தும் ஒன்றுந் தெரியாத பிரித்தானியரை அவன் மழைகாலத்துக்குச் சற்று முன்னதாகக் கண்டிமீது படையெடுக்கத் தூண்டியமை அவன் பிரித்தானிய

ருக்குச் செய்ததுரோகச் செயலாகும்; கண்டி ஓர் சுதந்திரமான இராச்சியம்; கண்டி மன்னனுல் நியமனஞ் செய்யப்பட்ட முதல் அதிகாரி பிலிமத்தலாவை; அப்படியிருக்க சர்வதேச நீதிக்கு முரண்பாடாக நோத் அவனோடு தொடர்பு வைத்திருந்தது முறையற்றது. நோத் கண்டி மன்னனின் செல்வாக்கைத் துச்சமாக மதித்து பிலிமத்தலாவையின் செல்வாக்கைப் பெரிதாக மதித்தான். பிரித்தானியரும் பிலிமத்தலாவையும் பிரதானிகளினதோ, மக்களினதோ ஆதரவைப் பெற்றிருக்கவில்லை; ஆனுல் அரசன் பிரதானிகளினதும் மக்களினதும் ஆதரவைப் பெற்றிருந்தான்; இயற்கைப் பாதுகாப்போடு மக்களது ஆதரவையும் கண்டி மன்னன் பெற்றிருந்தமையால் அவன் பிரித்தானியரை முறியடிக்கக் கூடியதாகவிருந்தது;

ஐரோப்பியப் படைவீரனின் தலையைக் கொண்டு வருவோருக்குப் பத்து ரூபாயும் பிரித்தானியப் படையிலுள்ள சுதேசிகளின் தலைகளைக் கொண்டு வருவோருக்கு ஐந்து ரூபாய்வீதம் வெகுமதியாகக் கொடுக்கப்படுமென கண்டி மன்னன் பறைசாற்றினுன்; இதனுல் சுதேசிகள் பலர் பிரித்தானியரது படையிலிருந்து விலகிக் கொண்டனர். இதைவிட மலாய்க்காரரும் பிரித்தானியப் படையிலிருந்து விலகி மன்னனோடு சேர்ந்துகொண்டனர்; இவையே பிரித்தானியரின் முதல் படையெடுப்பு தோல்வியடைந்தமையின் காரணங்களாகும்;

வினுக்கள்:

1; பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைத் தமது ஆட்சிக்குட்படுத்த விரும்பியமைக்குக் காரணங்கள் யாவை?

2; முதலாம் கண்டிப் போருக்கு வழிகோலிய சூழ்நிலைக் காரணிகளை முறைப்படி எடுத்துக் கூறுக;

3. நோதின் காலத்தில் கண்டி இராச்சியத்தில் இருந்த சிக்கல்களை விளக்குக;

4; "ஆள்பதி நோதின் மடமைத் தனமும் பிலிமத்தலாவையின் சூழ்ச்சியும் தான் முதலாம் கண்டிப் போரின் தோல்விக்குக் காரணமாயிருந்தன" இக்கூற்றை ஆராய்க.

5. கண்டி இராஜதானிமீது ஆள்பதி நோத் அவர்களின் படையெடுப்பை விரிவாகத் தந்து அதன் தோல்விக்குரிய காரணங்களையும் விளக்குக. (டிசெம்பர், '48)

6. கண்டி இராச்சியத்தைப் பொறுத்த வரையில் தேசாதிபதி நோதின் கொள்கை யாது? தோல்வியுற்றதன் காரணம் என்ன? (டிசெம்பர், '60)

ஆரும் அத்தியாயம்

ஆள்பதி சேர் தோமஸ் மெயிற்லந்து அவர்களின் ஆட்சி

ஆள்பதி நோதுக்குப் பதிலாக சேர் தோமஸ் மெயிற்லந்து 1805ம் ஆண்டு ஜூலை மாதம் 15ந் திகதி இலங்கை ஆள்பதியாக நியமனம் பெற்றார். இவர் இலங்கை ஆள்பதியாக நியமனம் பெறுவதற்கு முன்பு பொதுமக்கள், பிரபுக்கள் சபைகளிலும் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகசங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையிலும் அங்கத்துவம் வகித்திருந்தார்; திரிணுட் தீவில் இவர் ஆள்பதியாகவும் இருந்திருக்கிறார். அதுவுமன்றி இவர் கல்கத்தாவில் ஏவநலுகப் பணி புரியும்பொழுதுஅக்காலத்தில் இந்தியாவின் பதிலரையலுகக் கடமையாற்றிய கோண்வாலிஸ் பிரபுவின் நன்மதிப்பைப் பெற்றார். இங்ஙனம் பல துறைகளில் நன்கு அனுபவம் பெற்றவரும், சிறந்த நிர்வாகியெனவும், நிதிநிபுணரெனவும் பெயர்பெற்ற ஒருவர் இலங்கையில் ஆள்பதியாக நியமனம் பெற்றமை இலங்கை மக்களின் அதிட்டமே;

மெயிற்லந்து, இலங்கையின் உண்மையான நிலைமையை நேரில் அறிந்து கொள்ளும்பொருட்டு ஆறுமாத காலமாகத் தீவின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றுலாவை மேற்கொண்டார். ஆள்பதி நோதின் காலத்தில் சீர்குலைந்திருந்த நாட்டின் நிதி நிலைமையைச் சரிசெய்ய வேண்டிய கடமை இவருக்கேற்பட்டது. இலங்கையின் பாலனதைச் சிரமத்தைப் பொருட்படுத்தாது கவனமாகவும், சிக்கனமாகவும் செய்தபடியால் செலவிலும் பார்க்க வருமானம் அதிகரித்தது. நோதின் காலத்தில் வருவாயிலும் பார்க்க 75,000 பவுண் கூடிய செலவாகவிருந்தது; இந்நிலையை மாற்றி செலவு போக இவ்வளவு தொகை மீந்திருக்கும்படி மெயிற்லந்து செய்தார். கண்டி மன்னனுடன் முறைப்படி சமாதான உடன்படிக்கை செய்யாவிட்டாலும் அவன் பிரித்தானிய ஆட்சிக்கு இடையூறு விளைவிக்காமல் இருந்தால், அதுவே போதுமென மெயிற்லந்து எண்ணங்கொண்டிருந்தார். கண்டியைக் கைப்பற்றுமெண்ணம் இவருக்கு இல்லாமலில்லை; எனினும் கண்டிமீது படையெடுப்பது சூதாட்டம் போன்றதெனவும், பணச் செலவெனவுங் கருதினார்.

ஆள்பதி மெயிற்லந்து, நோதின் ஆட்சிக்காலந் தொடக்கமிருந்துவந்த இராணுவ ஆலோசனைச் சபையை ஒழித்தார். இறைசேரியின் அதிக செலவைக் கட்டுப்படுத்து முகமாக பாலனத்தில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தார். காணிப் பதிவுத் திணைக்களம், சுதேசிகளடங்கிய ஆணையாளர் சபை, தர்மகர்த்தா நிறுவனங்கள்,

வர்த்தக வருமான சபை முதலியன ஒழிக்கப்பட்டன. ஏழைகள் நிவாரண நிதிக்கு மேற்பார்வையாளராக வில்லியம் பொயிட் என்பவன் நியமனஞ் செய்யப்பட்டான். ஒரு உப்புத் திணைக்களம் நிறுவப்பட்டது; சுங்கப் பிரிவு ஒரு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பொறுப்பில் விடப்பட்டது. வருமானத் திணைக்களத்திற்குப் பொறுப்பாக ஒரு ஆணையாளர் நியமனஞ் செய்யப்பட்டான். கலெக்டர் தொகை பதினொருக அதிகரிக்கப்பட்டது. ஆள்பதி கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, மாஹகம்பட்டு, மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம் முதலிய இடங்களுக்குச் சென்று மேற்பார்வை செய்தார். மூன்று மாதத்திற்கொருமுறை யாவது தங்கள் தங்கள் மாவட்டங்கட்குச் சென்று கீழ்த்தர உத்தியோகத்தரை மேற்பார்வை செய்யவேண்டுமென கலெக்டர்களை வற்புறுத்தினர்; எந்த அரசாங்க மேலதிகாரிகளில் இலஞ்சமும் நேர்மையின்மையுங் காணப்பட்டதோ அவர்களது பதவிகளை நீக்கி, அவர்களைக் கீழ்த்தர உத்தியோகங்களில் நியமித்தார். உதாரணமாக யாழ்ப்பாணத்தில் வருமான முகவராகக் கடமையாற்றிய லூசிக்னன் என்பவனை அவ்வேலையிலிருந்து விலக்கி கீழ்த்தர உத்தியோகத்தராக்கினர்;

குடியியற் சேவை மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டது இரண்டாயிரம் பவுணுக்கு மேல் சம்பளம் பெற்றோர் முதலாம் வகுப்பைச் சேர்ந்தவராவர்; அறுநூறு பவுணுக்கு மேல் சம்பளம் பெறுவோர் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்தவராவர், அதற்குக் குறைந்த சம்பளம் பெறுவோர் மூன்றும் வகுப்பைச் சேர்ந்தவராவர்; குடியியற் சேவையாளர் ஒவ்வொருவரும் தங்களது பதவியைத் தாங்கள் தனிப்பட்ட முறையிற் செய்து வரும் வியாபாரத்திற்குப் பயன்படுத்தினர், இச்சேவையாளர் தனியார் வியாபாரத்தில் ஈடுபட்டதால் பாலனம் சீர்குலைந்தது, இதனால் மெயிற்லந்து குடியியற் சேவையாளருக்கு இதுவரையுமிருந்துவந்த தனியார் வியாபார உரிமையை நீக்கினர். இதைவிட குடியியற் சேவையில் வேறுபல குறைகளிருப்பதையும் இவர் உணர்ந்தார். இளம் வயதில் அநேகர் இச்சேவையில் சேர்ந்தனர். இவர்கள் சேரும்பொழுது அனுபவமும் வியாபார அறிவுமற்றவர்களாக இருந்தனர். பன்னிரண்டு வருட சேவைக்குப் பின் இவர்களுக்கு ஓய்வுச் சம்பளம் வழங்கப்பட்டது. இதனால், இவர்கள் அனுபவம் பெற்று நாட்டிற்கு இவர்களது சேவை இன்றியமையாததாயிருக்கும் நேரத்தில் ஓய்வு பெறுகின்றனரென்பதை மெயிற்லந்து உணர்ந்தார்; எனவே ஓய்வு பெறுவோரின் சேவை தேவைப்படின், அவர்களைச் சேவையில் மீண்டும் அமர்த்தவும், அவர்களுக்கு ஓய்வுச் சம்பளத்துடன் உரிய சம்பளங் கொடுக்கவும் தனக்கு அதிகாரம் வேண்டுமென ஆள்பதி கேட்டார். இராணுவ அலுவல

ரைக் குடியியற் பகுதிக்கு நியமனஞ் செய்வதால் பல தீமைகள் உண்டாகின்றன வென்பதைக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு மெயிற்லந்து சுட்டிக் காட்டினர்; இதன் விளைவாக இம் முறை நீக்கப்பட்டது;

சேவை மானிய முறை ஒழிக்கப்பட்டதால் பல தீமைகள் உண்டாயின: முதலியார்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினர்; தலைமைக்காரர் இலஞ்சம் வேண்டினர். இதனல் நாட்டில் களவு, கொள்ளை மூதலிய குற்றங்களும், காலித்தனமும் அதிகரித்தன. குற்றங்கள் செய்வோர் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குற்றம் புரிந்தோரை விசாரணை செய்து ஆறுமாதம் வரையுஞ் சிறைத்தண்டனை விதிக்கவும், 100 றிக்ஸ் டொலர் வரையும் தண்டம் விதிக்கவும் அதிகாரம் கலெக்டர்களுக்கு வழங்கப்பட்டது. கொழும்பு மாநகரம் பல பொலிசுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொலிசு விதானையின் கையில் விடப்பட்டது: மாதந்தோறும் குற்றங்களைப் பற்றிய அறிக்கை நீதிவானுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய கடமைப்பாடு இவர்களுக்கு இருந்தது. பொலிசுக்காரனின் சான்றிதழின்றி அந்நியர் நடமாடுவது குற்றமாகக் கருதப்பட்டது; தெருவில் சூதாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டதோடு உத்தரவுச் சீட்டின்றி எவ்விடத்திலும் சூதாடக்கூடாதெனச் சட்டமியற்றப்பட்டது; அதுவுமன்றிக் கொள்ளைக்காரர்கள்வர், அலைவோர் போன்றோர் நெடுந்தீவுக்கு நாடுகடத்தப்படுவரெனப் பறை சாற்றப்பட்டது; கிராமப் பாதுகாப்பு, விதானை மாரின் பொறுப்பில் விடப்பட்டது. இவர்கள், குற்றங்களைக் கண்டு பிடித்து சமாதான நீதிபதிக்கு அறிவிக்கவேண்டும். மேற்கூறிய கடும் நடவடிக்கைகளினற் குற்றங்கள் மிகக் குறைந்தன. ஒரு காலத்தில் கொள்ளையடித்தும், களவெடுத்தும் காலங்கழித்தவன் வயிற்றுப் பிழைப்புக்காக அரசாங்கத்துக்குச் சொந்தமான உப்பளம் போன்ற வேலைத்தலங்களில் வேலை செய்தான்;

கொழும்பு, காலி, மாத்தறை போன்ற இடங்களில் வசித்துவந்த முதலியார்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தமையால், மிதமிஞ்சிய அதிகாரமுடையவர்களாக விருந்தனர். இவர்களது அதிகாரத்தைக் குறைக்கும் நோக்கமாகவே பொலிசு நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். இதுவரையும் முதலியார்கள் செய்துவந்த நீதி பாலனத்தைப் பொலிசு நீதிபதிகள் செய்யத்தொடங்கவே முதலியார்களின் அதிகாரங்கள் குறைந்தன; கொழும்புத் துறைமுகத்திற்குப் பிரத்தியேகமாக சிவில், கிரிமினல் அதிகாரங்களோடு ஒரு பொலிசு நீதிபதி நியமிக்கப்பட்டான். தண்டனை, கைது செய்தல் முதலிய விடயங்களுக்குத் திட்டவட்டமான அதிகாரங்கள்

பொலிசு நீதிபதிகளுக்கு வழங்கப்பட்டன. 1809ம் ஆண்டு ஜூன் மாதம் 31ந் திகதிப் பிரமாணத்தின்படி குற்றகவையர் முறையீட்டு மன்று தேவையான இடங்களில் நிறுவுவதற்கு ஆள்பதிக்கு அதிகாரம் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் வழங்கப்பட்டது. இதில் மாகாண நீதிபதியொருவர், கலெக்டரொருவர், பொலிசு நீதிபதியொருவர், குடியியற் சேவையாள ரொருவருமாக நால்வர் அங்கத்துவம் வகித்தனர்.

மேலும் உச்ச மன்றின் ஆளெல்லை இலங்கை முழுவதற்கும் வித்தரிக்கப்பட்டது. இந்த உச்சமன்று இரு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுக் கடமையாற்றிற்று. முதலாவது பிரிவு பிரதம நீதிபதியை முதல்வராகக் கொண்டு கொழும்பிற் கூடிற்று. இரண்டாவது பிரிவு, ஒரு துணை நீதிபதியை முதல்வராகக் கொண்டு யாழ்ப்பாணத் திற் கூடிற்று. உச்சமன்றின் அதிகாரங்களும், ஆளெல்லையும் வித்தரிக்கப்படவே, மாகாண நீதிமன்றுகளும், சமாதான நீதிபதியின் நீதிமன்றுகளும் ஒழிக்கப்பட்டன. ஆனால் ''லாண்ட்ராட்ஸ்'' என்னும் நீதிமன்றுகள் தேவைக்கேற்ப நிறுவப்பட்டன. வருமான ஆணையாளருக்கு மேன் முறையீட்டு மன்றில் அங்கத்துவமளிக்கப்பட்டது. நீதித் திணைக்களம், பிரதம நீதிபதியின் பொறுப்பில் விடப்பட்டதோடு ஒரு வழக்குரைஞர் வாரியரும் நியமிக்கப்பட்டார். கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்கு நடுவர் முறைமை கையாளப்பட்டது. இம்முறை இலங்கைக்குப் புதிதல்ல. ஏனெனில், மகாநடுவ என்னும் நீதிமன்றில் ஏற்கனவே நடுவர் முறைமை கையாளப்பட்டு வந்திருக்கிறது. தூரகிழக்குத் தேசங்களில் முதன்முதலாக இலங்கையிலேயே இம்முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. முகமதியருக்கென முகமதியர் சட்டமொன்று பிரதம நீதிபதி சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரனல் (Sir Alexander Johnstone) தொகுக்கப்பட்டது.

ஒல்லாந்தர் காலந் தொடக்கமிருந்து வந்த கத்தோலிக்கரைப் பாதிக்கும் தண்டச் சட்டங்கள் யாவும் 1806 ம் ஆண்டு மே மாதம் 27-ந் திகதி பிரித்தானிய மன்னனின்பேரில் விலக்கல் செய்யப்பட்டன. இதன்படி தொழுகைச் சுதந்திரமும், மனித அடிப்படை உரிமைகள் அனைத்தும் கத்தோலிக்கருக்கு வழங்கப்பட்டன. பிரித்தானிய சாம்ராச்சிய நாடுகளில் கத்தோலிக்கரது மத்தியிலிருந்த கீழ்நிலை முதன்முதலாக ஒழிக்கப்பட்டது இலங்கையிலேயாகும். 1806-ம் ஆண்டு ஜூலை மாதம் 4-ந் திகதிதொடக்கம், தேவாலயங்களில் கத்தோலிக்கர் செய்யும் திருமணம் சட்டபூர்வமாக்கப்பட்டது. பௌத்த சமயிகளின் அன்பையும், ஆதரவையும் பெறுமுகமாக பௌத்த பிக்குகளடங்கிய குழுக்கள் எல்லா மாகாணங்களிலும் நிறுவப்பட்டன. காணி; பிக்குகள், சமயச் சடங்குகள் சம்பந்தமாக எழும்

பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரங்கள் இக் குழுக்களுக்கு வழங்கப்பட்டன. 1806-ம் ஆண்டு மூன்றும் இலக்கச் சட்டத்தின்படி அடிமைகளின் சொந்தக்காரரனைவரும் தங்களது அடிமைகளைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். எனினும் அடிமைகளின் எசமான்கள் இச் சட்டத்தின் பிரகாரம் நடந்துகொள்ளவில்லை.

இலங்கையில் விசேட அம்சமாகவிருந்த சேவைமானியமுறையை ஆள்பதி நோத் நீக்கியதன் விளைவாகப் பல தீமைகள் விளைந்தன: முதலாவதாக சாதிக்கட்டுப்பாட்டில் ஊறிக்கிடந்த சுதேசிகள் பகிரங்கமான இடங்களில் கூலிக்கு வேலை செய்வது கௌரவத்திற்கு இழுக்கெனக் கருதினர். இதன் காரணமாக நோதினால் கூலிக்கு வேலையாட்களைப் பெற முடியவில்லை. ஆகவே இவர் இந்தியாவிலிருந்து கூலியாட்களை வருவித்து முக்கியமான பொது வேலைகளைச் செய்வித்தார். தென்னிந்தியாவிலிருந்து கூலியாட்களைக் கொண்டு வருவதற்கு வருடமொன்றுக்கு 30,000 பவுண் செலவுசெய்யவேண்டியிருந்தது. கூலிக்கு வேலையாட்களைப் பெறுவது கடினமெனவும், அதிக செலவானதெனவும் மெயிற்லந்து உணர்ந்தார். "வருடாவருடம் இரண்டு அல்லது மூன்று தென்னைமரங்களையும் தனது சொத்திலிருந்து வரும் வருமானங்களையும் நம்பி உயிர் வாழ்வதற்குச் சுதேசியொருவன் தயாராகவிருக்கிறானேயல்லாமல் கூலிக்கு வேலை செய்து ஊதியத்தைப்பெற்று சௌகரியமாகச் சீவிக்க விரும்புகிறானில்லை" என்பது மெயிற்லந்து கண்ட உண்மையாகும்.

இரண்டாவதாக, நோத் எதிர்பார்த்தபடி வியாபாரமும் விவசாயமும் அபிவிருத்தியடையவில்லை. அதற்கு எதிர்மாறாக முன்பு சேவை மானிய முறைப்படி செய்விக்கப்பட்ட பொது வேலைகள் யாவும் தற்போது கூலி கொடுத்துச் செய்யவேண்டிய நிலையேற்பட்டது. மூன்றுவதாக சேவைமானிய முறை நீக்கப்பட்டமை, கறுவாச் செய்கையையும் பாதித்தது. 1802-ம் ஆண்டு தொடக்கம் அரசாங்கம், கறுவாச் செய்கையையும் கறுவா சேகரிப்பதையும் மேற்கொண்டது. ஆனால் கறுவா ஏற்றுமதி வர்த்தக சங்கத்தின் முழுவுரிமையாகவேயிருந்து வந்தது. அரசாங்கத்திற்கும் வர்த்தக சங்கத்திற்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் அரசாங்கம் வர்த்தக சங்கத்திற்கு வருடமொன்றுக்கு 179 தொன் கறுவா வழங்கவேண்டுமெனவும், அதற்கீடாக 60,000 பவுண் வர்த்தக சங்கம் அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் சேவை மானிய முறை நீக்கப்பட்டமையினால் இத்தொகையை அரசாங்கம் சேகரிக்க முடியாமற் போகவே அரசாங்கத்திற்குப் பெரும் நட்டம் உண்டாயிற்று.

நான்காவதாக, சேவைமானிய முறை நீக்கப்பட்டதால் தாம் பெற்ற சுதந்திரத்தின் மதிப்பையுணராத மக்கள் குற்றங்கள் புரியலாயினர்: 1806-ம் ஆண்டு பெப்புருவரி மாதம்வரை 6812 சிவில் வழக்குகளையும்: 585 கிரிமினல் வழக்குகளையும் பொலிசு நீதிபதிகள் விசாரணை செய்தனர். இதிலிருந்து எந்த அளவிற்குத் தங்களுக்குக்கிடைத்த சுதந்திரத்தை மாந்தர் துர்ப்பிரயோகம் செய்திருக்கிறார்களென்பது வெள்ளிடை மலை. மேலும் காலகதியில் இலங்கை பொருளாதார ரீதியில் முன்னேறும்போது தானுகவே சேவைமானிய முறை மறைந்துவிடுமென ஆள்பதி மெயிற்லந்து அபிப்பிராயப்பட்டு மேற்கூறிய காரணங்களைக்கொண்டு சேவைமானிய முறையை மீண்டும் உயிர்ப்பித்தார்.

மெயிற்லந்தின் ஆட்சிக்காலத்தில் அலெக்சாண்டர் ஜோன்ஸ்ரன் செய்த எடுத்துரைகள் சரித்திரப்புகழ் வாய்ந்தவை. இவர் விவசாயத்தை அபிவிருத்தி செய்யும்பொருட்டு பாழடைந்த குளங்கள் பழுதுபார்க்கப்படல் வேண்டுமென உணர்ந்தார். ஆயினும் பாழடைந்த குளங்களைத் திருத்துவதில் ஏராளமான பணம் செலவாகுமெனவும் உணர்ந்தார். எனவே ஐரோப்பியர் கொழும்பிற்கு வெளியே நிலம் வாங்கக் கூடாதென்றிருந்த சட்டத்தை நீக்கல் செய்வதுடன் விவசாயத்திலும், வியாபாரத்திலும் அரசாங்கத்திற்கிருந்துவந்த முழுவுரிமையையும் நீக்கினுல் ஐரோப்பியரும் இலங்கையில் எப்பகுதியிலும் முதலீடு செய்வார்களெனக் கருதினர். விவசாயிகள் நன்மை பெறும்பொருட்டு விவசாய உபகரணங்களைக் காட்சிக்கு வைக்க வேண்டுமெனவும் தொழில் நுட்பக் கல்லூரியொன்று திறக்கப்படல் வேண்டு மெனவுந் தகவுரை செய்தார்:

அதுவுமன்றி இலங்கைக் குடியியற்சேவை முறையைத் தாபித்து சாதிசமய பாகுபாடின்றி சுதேசிகளுக்குச் சந்தர்ப்பமளிக்கவேண்டும்; நியாயமற்ற முறையில் இலங்கையின் எக் குடியையும் மறியலில் வைக்கக்கூடாது; பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு சட்டக் கழகம் அமைக்கப்படல்வேண்டும்; என்பனவும் ஜோன்ஸ்ரன் செய்த எடுத்துரைகளாகும்:

மெயிற்லந்தின் ஆட்சிக்காலத்தில் கல்வித்தரம் மிகவும் குறைவாகவிருந்தமைக்குக் காரணம், அரசாங்கம் கல்வி விடயத்தில் சிரத்தை கொள்ளாமையே. இலங்கை அரசாங்கத்தின் கல்விக் கொள்கை இங்கிலாந்தில் கண்டனத்துக்குள்ளாகியது. வில்பர்போசுபோன்ற சீர்திருத்த வாதிகள், இலங்கை அரசாங்கம் கல்வித் துறையில் செலவு செய்யவேண்டிய பணத்தை மட்டுப்படுத்துவதால் அது இலங்கையர் ஒழுக்கமற்றவர்களாகவாழ்வதற்கு வழிவகுக்கின்ற

தெனக் கூறினர். அரசாங்கம், பாடசாலைகளைக் கவனிக்காமல் விட்ட படியால் பௌத்தரும் இந்துக்களும் தத்தம் சமயத்தைத் தழுவத் தொடங்கினர்.

இங்கிலாந்தில் இலங்கைக் கல்விமுறை விவாதிக்கப்பட்டதன் விளைவாகக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளர், பாடசாலைகளை மீண்டும் நிறுவும்படி மெயிற்லந்துக்கு அறிவித்தார். பாடசாலைகளை மேற் பார்வை செய்வதன் பொருட்டு ஆர்ச்டீக்கன் ருவிஸ்டன் (Archdeacon Twistleton) என்பவரின் தலைமையின்கீழ் ஒரு குழு நியமிக்கப்பட்டது. பதினேழு பாடசாலைகள் நிறுவப்பட்டன. மேலும் தனிப்பட்டவர்களின் முயற்சியினால் யாழ்ப்பாணம், மாத்தறை, கற்பிட்டி முதலிய இடங்களில் பாடசாலைகள் நிறுவப்பட்டன. வண. பிஸெற் (Rev. Bisset) அவர்களின் பொறுப்பில் அரசாங்கப் பாடசாலைகள் விடப்பட்டன. எனினும் மதத்தைக் கட்டாயப்படுத்தாத படியினற் பலர் தத்தம் சமயத்தில் திரும்பவும் சேர்ந்தனர். இதனற் கிறித்தவ சமயம் நலிவுற்றது.

இலங்கையின் நல்வாழ்விற்காக ஆட்சிசெய்த ஆள்பதிகளுள் சேர். தோமஸ் மெயிற்லந்து முதலிடம் வகிக்கின்றார். இவர் 1811-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ந் திகதி சுகவீனம் காரணமாகப் பதவியிலிருந்து விலகித் தாயகம் திரும்பினர்.

வினாக்கள்

1. சேர். தோமஸ் மெயிற்லந்து பிரித்தானிய பாலனத்தை வலுப்படுத்துவதற்குக் கையாண்ட முறைகளை ஆராய்க.
2. சேர். தோமஸ் மெயிற்லந்து நிர்வாகத்திலும் நீதி பாலனத்திலும் அனுசரித்த சீர் திருத்தங்கள் யாவை?
4. ஆள்பதி நோதின் நிர்வாகத்தை ஆள்பதி மெயிற்லந்தின் நிர்வாகத்தோடு ஒப்பிடுக.
5. மெயிற்லந்து தேசாதிபதிகாலத்தில் சிவில்சேவிஸ் திறமையுள்ள நிர்வாக சாதனமாக இருந்தது. இதற்குக் காரணமென்ன? (டிசம்பர், '53)
6. மெயிற்லந்து பிரித்தானிய பாலனத்தை வலுப்படுத்துவதற்குக் கையாண்ட முறைகளை ஆராய்க. (ஆகஸ்ட், '64)
7. கரையோர மாகாணங்களில் பிரித்தானிய ஆட்சியை வலுவடையச் செய்வதற்கு மெயிற்லந்து தேசாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகளை விபரிக்க. (டிசெம்பர், '65)

ஏழாம் அத்தியாயம்

பகுதி I

கண்டி கைப்பற்றப்படல்

சேர் தோமஸ் மெயிற்லந்து அவர்களின் அமைதியான ஆட்சிக் குப் பின் சேர் ரொபேட் பிறவுண்றிக் அவர்கள் 1812ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11ந் திகதி இலங்கை ஆள்பதியாகப் பதவியேற்றார். மெயிற்லந்து கண்டியைக் கைப்பற்றுவதற்கு எம்முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், பிறவுண்றிக்கின் கண்டிக்கொள்கை மிகவும் மதிநுட்பமாகத் தீட்டப்பட்டதொன்று: இவனது காலத்தில் பல நூற்றாண்டு காலமாகச் சுயேச்சை பெற்றிருந்த கண்டி இராச்சியம் பொலிவிழந்து பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கையிற் சிக்கிற்று: கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியருக்குப் பெற்றுக் கொடுத்த வெற்றிவீரனாக இங்கிலாந்தில் பிறவுண்றிக் போற்றப்பட்டான்: இவனே விருது செய்யும்முகமாக இங்கிலாந்து மன்னனை மூன்றாம் ஜோஜ், கடைசிக் கண்டி மன்னனாகிய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் செங்கோலையும், முடியையும் இவனுக்கு அணிவித்தான்.

பிறவுண்றிக் இலங்கை ஆள்பதியாக நியமனம் பெற்றபோது கண்டி விடயத்தில் மெயிற்லந்தின் கொள்கையைப் பின்பற்றும்படி யும், கண்டியைக் கைப்பற்றும் நோக்கமிருக்கக் கூடாதெனவும் குடியேற்றநாட்டரசுச் செயலாளர் கட்டளையிட்டிருந்தார். கண்டி மன்னன் கடற்கரைப் பிரதேசங்களை மீச்செலவு செய்யும் பட்சத்திற் கூட, அப்பிரதேசங்களைக் காப்பாற்றுவதோடு மட்டுமே நின்றுவிட வேண்டுமெனவும், கண்டிமீது படையெடுக்கக் கூடாதெனவும் அரசுச் செயலாளர் ஆணித்தரமாக எச்சரித்திருந்தார்; ஆனால், பிறவுண் றிக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றவேண்டுமென்னும் பேரவாக் கொண்டிருந்தான். கண்டி இராச்சியத்தின் படை பலத்தை அவன் முற்றாக அறிந்திருந்ததுடன் கண்டியரசனை நம்பமுடியாது என்னுங் கருத்தையுங் கொண்டிருந்தான்: கண்டி இராச்சியத்தைக் கடற் கரைப் பிரதேசங்களோடு இணைத்து, இலங்கை முழுவதையும் பிரித் தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ்க் கொண்டுவருவதே அவனது நோக்கமாகவிருந்தது. தான் ஆள்பதியாக இருக்கும் காலத்திலேயே கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தைக் கொண்டான்: கூடிய அளவிற்குக் கண்டி அரசியலில் ஈடுபடாவிட் டாலும் தன்னுடைய குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு மிகவும்

அமைதியாக ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்; இவனுடைய ஆசையை நிறைவேற்றுவதற்கு அக்காலத்துக் கண்டியின் உள்நாட்டு அரசியல்நிலை சாதகமாகவிருந்தது.

முதலாம் கண்டி யுத்தம் பிலிமத்தலாவையின் (Pilima Talawe) பேரவாவினாலும் சூழ்ச்சியினாலும் ஏற்பட்டதெனின், 1815ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் கண்டி யுத்தம் நாயக்கருக்கெதிரான கன்னைக்குத் தலைவனானவனும், பிலிமத்தலாவையின் மருமகனுமாகிய எகிலப்பொலை (Ehelapola) யின் சூழ்ச்சியால் ஏற்பட்டதெனலாம்; முதலாம் கண்டி யுத்தம் ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்கனுக்கு அவனது உண்மையான நிலைமையை எடுத்துரைத்தது; யுத்த முடிவில் முதல் நடவடிக்கையாக பிலிமத்தலாவையை முதல் அதிகாரி பதவியிலிருந்து நீக்கினான். அவனுக்குப் பதிலாக முதல் அதிகாரியைத் தெரிவு செய்யவேண்டிய பொறுப்பு பிரதானிகளினதாகும். இவர்கள், எகிலப்பொலையை முதல் அதிகாரியாகத் தெரிவு செய்தனர். எகிலப்பொலை பிரதம அதிகாரியாகவிருப்பது தனக்கு ஆபத்தெனக் கண்டி மன்னன் உணர்ந்தபோதிலும், எகிலப்பொலை பிரதானிகளால் தெரிவு செய்யப்பட்டமையால் அவனை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானான்.

இதேவேளையில் இரண்டாவது பிரதானியாகிய மீகஸ்தன (Migastenne) இறக்கவே அந்த இடத்துக்கு எகிலப்பொலையின் விரோதியாகிய மொல்லிகொடை (Molligoda) நியமிக்கப்பட்டான்; இவன் முதல் அதிகாரியின் விரோதியாகவிருப்பதால் தனது ஆட்சியை திடப்படுத்திக்கொள்ள ஆதரவாக விருப்பானென எண்ணி கண்டி மன்னன் ஒருவாறு ஆறுதலடைந்தான். இரண்டாவது, பிலிமத்தலாவையிலும் அவனது ஆதரவாளர்களிலும் வஞ்சந்தீர்க்கு முகமாகக் கண்டி மன்னன் அவர்கள்மேல் பல குற்றங்களைச் சுமத்தி அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் துன்புறுத்தினான். ஆத்திரங்கொண்ட பிலிமத்தலாவை மன்னனுக்கெதிராகக் கலகஞ் செய்தான். ஆனால் கலகம் அடக்கப்பட்டு பிலிமத்தலாவை கைது செய்யப்பட்டான். எனினும் 1812ம் ஆண்டு இவன் அரசனைக் கொல்ல எடுத்துக்கொண்ட சூழ்ச்சி அம்பலமாகவே மன்னன் இவனைச் சிரச்சேதஞ் செய்வித்தான்.

பிலிமத்தலாவை அரசனுக்கெதிராகச் செய்த சூழ்ச்சிகளின் விளைவாகப் பிரதானிகளின் செல்வாக்குக் குறைக்கப்படல் வேண்டுமென்பதைக் கண்டி மன்னன் உணர்ந்தான்; கண்டிப் பிரதானிகள் பெரும் நிலச்சுவாந்தரர்களாக விருந்தனர். அதுவுமன்றி இவர்கள் அனைவரும் உறவினர்களாகவும், ஒற்றுமையுடையவர்களாகவும் இருந்தமையால், மக்களிடையே பெருஞ் செல்வாக்கைப் பெற்

றிருந்தனர்; இதனால், இவர்களது சூழ்ச்சிகளையறியாது மக்கள் சில சமயங்களில் இவர்களது தூண்டுதலுக்கிணங்க மன்னனுக்கெதிராகக் கலகம் விளைவித்தனர்; ஆகவே பிரதானிகளிடையே நிலவி வரும்ஒற்றுமையைக் குலைத்து, அவர்களிடையே போட்டி மனப்பான்மையை உண்டாக்கி அவர்களின் பலத்தைக் குறைக்கவேண்டுமெனத் திட்டமிட்டு செயலாற்றத் துணிந்தான்;

கண்டி மன்னன், பிலிமத்தலாவையினதும், எகிலப்பொலியினதும் உறவினர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் பிரதானிகள் பதவியிலிருந்து நீக்கினன். வம்சாவழி மூலம் பதவியளிக்கும் முறையை நீக்கித் தன் மனம்போனவாறு வயதிற் குறைந்தோர்க்கும் தாழ்குடியிற் பிறந்தோர்க்கும் உயர்ந்த பதவிகளை வழங்கினன். ஏழுகோறளை, சப்பிரகமுவ முதலிய திசாவணிகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, அவற்றிற்கு நாயக்க வம்சத்தவரைத் திசாவைகளாக நியமித்தான். இதனால் நாயக்கருக்கும், சிங்களப் பிரதானிகளுக்கு மிடையே பகைமை தோன்றி வளரலாயிற்று. மேலும் பிரதானிகளிடம் இதுவரையு மிருந்துவந்த நீதி பாலன அதிகாரங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தான். பிரதானிகள் மக்களைத் துன்புறுத்தியபோதெல்லாம் உடனடியாக அவர்கள் விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். பிரதானிகளிற் சிலர் குற்றப்பணமுஞ் செலுத்தவேண்டி யேற்பட்டது. அரசுத் துரோகம் செய்வோரை சிரச்சேதம் செய்ய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் சிறிதேனும் தயங்கவில்லை; உதாரணமாக கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனது மகனாகிய மாம்பிட்டியா பண்டாராவை (Mampitiya Bandara) அரசுத் துரோகி எனக் குற்றஞ் சாட்டிச் சிரச்சேதம் செய்வித்தான். தனக்கு விரோதிகளென யாரைச் சந்தேகித்தானோ அவர்களை மூன்று கோறளையிலும், நாலு கோறளையிலுமிருந்து அப்புறப்படுத்தினன். இதன் விளைவாகக் கண்டி இராச்சிய மக்களுட் பலர் அகதிகளாகப் புலம்பெயர்ந்து கொழும்பு, மாத்தறை, களுத்துறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வாழலாயினர்; 1814ம் ஆண்டில் மட்டும் 500 கண்டிக் குடும்பங்கள் புலம்பெயர வேண்டியிருந்தது. கடைசியாக உள்ளூராட்சிப் பொறுப்பைப் பிரதானிகளிடம் விடாது கன்சபாவுக்கும், இரட்டசபாவுக்கும் வழங்கினன்;

கண்டி மன்னனின் இத்தகைய நடவடிக்கைகளினால் அதிருப்தியடைந்த பிரதானிகள் எகிலப்பொலியின் தலைமையின் கீழ் ஒன்று சேர்ந்து ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைப் பதவி நீக்கஞ் செய்வதில் ஆர்வங் காட்டினர். பொதுவாகப் பிரதானிகளுக்கெதிராக கண்டி மன்னன் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவுந் தனது அதி

காரத்தைக் கட்டுப்படுத்தவே எடுத்துக்கொள்ளப்பட்டதென எகிலப்பொலை எண்ணத் தலைப்பட்டான். சுருங்கக்கூறின் நாயக்கருக்கெதிராக உதித்த கன்னைக்கு எகிலப்பொலை தலைமை தாங்கித் தனது சுயவடிவத்தைக் காட்டத் தலைப்பட்டான்; பிலிமத்தலாவை, கண்டி மன்னனைப் பதவி நீக்கஞ் செய்து தான் அரசனுவதற்குப் பிரித்தானியரைப் பயன்படுத்த விரும்பினனே தவிர, அவர்கள் கண்டியை ஆட்சிசெய்வதை விரும்பவில்லை. ஆனால் எகிலப்பொலையோ தனது மூக்கையிழந்தேனும் எதிரிக்கு சகுனப்பிழை காட்ட விழைந்து கண்டியில் பிரித்தானியர் தமது ஆட்சியை நிறுவக்கூடுமே யென்றுகூடக் கவலை கொண்டானில்லை; கண்டியரசன் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்பதனையே கருத்திற் கொண்டான்.

எகிலப்பொலையின் மனைநிலை இவ்வாறிருக்கக் கண்டி மன்னன் அவனை நடத்திய முறை மேலும் அவனுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. அக்காலத்தில் கண்டி மன்னரின் திருமண வைபவங்களில் பிரதானிகள் கலந்து வைபவங்களைச் சிறப்பிப்பதோடு, வெகுமதிகளும் காணிக்கைகளும் கொடுத்துச் செல்வது வழக்கம். ஆனால் 1813ம் ஆண்டு பெப்புருவரி மாதம் நடைபெற்ற ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் திருமண வைபவத்தின்போது எகிலப்பொலையின் உறவினரான பிரதானிகள் பலரும் அவனது திசாவணிகளிலுள்ள மக்களும் மேற்கூறியபடி செய்யத்தவறினர். இதனால் கண்டி மன்னன் ஆத்திரமடைந்தான்; எகிலப்பொலை சன்மானங்களோடு சென்றபோதிலும் அவனை மன்னன் அவமானப்படுத்தினன். அதிருப்தியடைந்த எகிலப்பொலை பிரித்தானியருடன் தொடர்பு கொண்டு மன்னனை உடனடியாகப் பதவிநீக்கஞ் செய்யும் முயற்சியில் இறங்கினன்.

பிறவுண்றிக், கண்டியுடன் தொடர்பு கொள்வதற்குச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வேளையில் எகிலப்பொலை பிரித்தானியரின் உதவியை நாடிச் சென்றமை அவனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. எகிலப்பொலை சார்பில் எக்னெல்லிக்கொடையும் (Egnelligoda), பிறவுண்றிக் சார்பில் டீ ஓயிலியும் (D'Oyly) கண்டி மன்னனைப் பதவியிலிருந்து நீக்க எகிலப்பொலைக்குப் படையுதவியளிக்கும் விடயமாக 1813ம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலும், 1814ம் ஆண்டு பெப்புருவரி மாதத்திலும் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். டீ ஓயிலி பிறவுண்றிக்கோடு கலந்தாலோசித்த பின்னர் கண்டி மன்னனைப் பதவி நீக்கஞ் செய்வதற்குத் தகுந்த காரணமின்றிப் படைகளை அனுப்பவியலாதெனக் கூறினன்; இதனால் எகிலப்பொலை—பிரித்தானியர் தொடர்பு

ஓர்ளவு குறைந்திருந்தது. ஆனால், பிரித்தானியரது படையுதவி பெற்றுக் கண்டி மன்னனைப் பதவி நீக்கஞ் செய்யவேண்டுமென்ற எண்ணம் எகிலப்பொலியின் மனதிலிருந்து விலகவில்லை.

அலுப்பொத்தநிலமை (AlapataNilame) இறக்கவே அவனது சொத்திலிருந்து அரசனுக்குச் சேரவேண்டிய "மராள" வரியைப் பெறுஞ் சாட்டில் அலுப்பொத்த நிலமையின் சொத்தை அபகரித்ததோடு அவனது குடும்பத்தினரை எகிலப்பொலி கொடுமைப்படுத்தினான். இலங்கையில் பாக்கு வியாபாரத்திலீடுபட்ட ஒரு இந்திய வியாபாரியின் பணத்தை எகிலப்பொலி மோசடி செய்தான். எகிலப்பொலியின் மீது சுமத்தப்பட்ட இக்குற்றங்களை விசாரிக்கும் முகமாக அவனைக் கண்டிக்கு வரும்படி மன்னன் கட்டளையிட்டான். கண்டிக்குச் சென்றால், தான் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுச் சிரச்சேதஞ் செய்யப்படலாமென அஞ்சி அவன் அங்கு செல்ல விரும்பவில்லை. உடனே மன்னன் அவனை முதலதிகாரிப் பதவியிலிருந்து நீக்கி, மொல்லிகொடையை முதலதிகாரியாக்கினான். மேலும் எகிலப்பொலை நீதிமன்றில் சமுகந் தரும்வரை அவனது மனைவியையும், பிள்ளைகளையும் பிணையாக வைத்திருந்தான். எக்னெல்லிக்கொடை, எகிலப்பொலியின் சார்பில் டச்சுயிலியைச் சந்தித்துப் பிரித்தானியரின் படை உதவியைக் கோரியமைக்காக மன்னன், எக்னெல்லிக்கொடையினதும் எகிலப்பொலியினதும் திசாவாணிகளை அவர்களிடமிருந்து பறித்து மொல்லிக்கொடை திசாவைக்குக் கொடுக்கத் தீர்மானித்தான்.

இவற்றைக் கேள்வியுற்ற எகிலப்பொலி 1814-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பத்துகெதரையில் கலகத்தை விளைவித்தான். எனினும் இக் கலகம் அடக்கப்பட்டது. அடுத்த மாதம் இன்னொரு கலகத்தை சப்பிரகமுவாவில் எகிலப்பொலி விளைவித்தான். இக் கலகம் மொல்லிக்கொடை தலைமையில் அனுப்பப்பட்ட படையால் அடக்கப்பட்டது. நாற்பத்தேழு போர்வீரர் கைதுசெய்யப்பட்டுக் கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எகிலப்பொலியும் எக்னெல்லிக் கொடையும் தப்பியோடி களுத்துறையில் டச்சுயிலியிடம் சரணடைந்தனர்.

எகிலப்பொலியின் இத்தகைய செயல்கள் கண்டி மன்னனது கோபக் கனலை நெய்யூற்றி வளர்த்தன. அவனது உற்றாருறவினரைக் கொலைசெய்து வஞ்சந் தீர்க்கமன்னன் ஆவேசங் கொண்டான். மாத்தளைத் திசாவை புஸ்வல்லே (Pusvalle) என்பவனையும் ஊவாவில் திசாவையாக விருந்த எகிலப்பொலியின் மைத்துனனையும், கொலை செய்வித்தான். எகிலப் பொலியின் நான்கு பிள்ளைகளையும் கொலை

செய்வித்து அவர்களது தலைகளை உரலிலிட்டு எகிலப்பொலியின் மனைவியைக் கொண்டு இடிப்பித்தான். தாய் தன் குழந்தைகளின் தலைகளைத் துவைக்கின்றோமேயென்றுகூட மன்னன் மனம் இளகவில்லை. வஞ்சந்தீர்க்கவேண்டுமென்ற எண்ணத்தால் வைரித்த மனமுடைய மன்னன் புஸ்வல்லேத் திசாவையின் மனைவியையும் அவளது சகோதரியையும் எகிலப்பொலியின் மைத்துனியையும் போகம்பர ஏரியில் அமிழ்த்திக் கொலைசெய்வித்தான். (இச் செய்தி அவதூறான தென ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது:) இன்னும் எகிலப்பொலிக்கு உடந்தையாகவிருந்த அனைவரையும் ஈவிரக்கமின்றிக் கொலைசெய்வித்தான். இரண்டு நாட்களாகக் கண்டி இராச்சியம் அல்லோலகல்லோலப்பட்டு அங்கு பயங்கரவாட்சி நிலவியது. இரு நாட்களாக உண்ணாது உறங்காது கண்டி மக்கள் துக்கத்தை அனுட்டித்தனர்.

மேலும் பௌத்த பிக்குகளின்மேற் கூட வஞ்சந்தீர்க்க மன்னன் அஞ்சினனில்லை. இதுவரையும் தலதாமாளிகையின் பாலனச் செலவை ஈடுசெய்யும் முகமாக வழங்கப்பட்டிருந்த கிராமங்கள் இரண்டை மன்னன் தனதாக்கிக்கொண்டான்; எவ்வகையிலும் அரசியலில் பங்கு கொள்ளாத பௌத்த பிக்குகளைக்கூடச் சிறையிலிட்டான். சிறந்த மேதையாகிய மொறத்தோட்டை குட உனன்சே(Moratota Kuda Unanse) என்னும் பௌத்த பிக்குவைக்கூடச் சிரச்சேதம் செய்வித்தான்; இந்நிகழ்ச்சிகளால் பொறுமையே உருவெடுத்தன்ன பௌத்த சங்கமும் பொறுமையையிழக்க நிர்ப்பந்தித்தான் மன்னன்; இதுவுமன்றி அரசாங்கத்திற்குச் செய்யவேண்டிய கட்டாய இராணுவ சேவையைச் செய்ய மறுத்தமைக்காக ஒரு சோனகக் கிராமத்தையே தீக்கிரையாக்கினன். இக் கொடூரச் செயல்களினால் மன்னன் முக்கிய பிரதானிகளினதும், பௌத்த பிக்குகளினதும், பௌத்த சங்கங்களினதும், பொதுமக்களினதும் வெறுப்பைச் சம்பாதித்துக்கொண்டான். இச் செய்கைகளுக்காக இவர்கள் கண்டி மன்னன்மீது வஞ்சந் தீர்க்கச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

கண்டி விவகாரங்கள் இப்படியிருக்க எகிலப்பொலி கல்கிசையில் ஆள்பதி பிறவுண்றிக்கைச் சந்தித்து, கண்டி மன்னனைப் பதவி நீக்கஞ் செய்வதற்கு உதவியளித்தால், அதற்குப் பிரதியுபகாரமாகத் தான் கண்டியில் நிரந்தரமான பிரித்தானியப் படையொன்றை வைத்திருக்கவும், கொழும்புக்கும் கண்டிக்குமிடையே பாதையமைக்கவும் அனுமதியளிப்பதாகவும் உறுதி கூறினன். அதற்கு பிறவுண்றிக் கடற்கரைப் பிரதேசங்களைக் கண்டி மன்னன் மீச்செலவு செய்தாலன்றி, அல்லது பிரித்தானியரை அவமதித்தாலன்றி, தான் படையுதவி அளிக்க முடியாதெனத் திட்டவட்டமாகக் கூறினன்.

ஆகவே பிரித்தானியருக்குக் கண்டி மன்னன்மீது ஆத்திரமுண்டாக்கும் வகையில் பிலிமத்தலாவையைப் போன்று எகிலப்பொலை சூழ்ச்சிகள் செய்யலானான். கண்டியில் வியாபாரத்திலீடுபட்டிருந்த பத்துப் பிரித்தானியக் குடிகள்இவன் சூழ்ச்சியால் ஒற்றரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு கண்டியரண்மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் கண்டியில் அங்கவீனஞ் செய்யப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இவர்களில் ஏழுபேர் வழியிலிறந்து விட்டனர். எஞ்சிய மூவர் மூலமாக பிறவுண்றிக் நடந்ததையறிந்து கொண்டான்.

ஆனால், இச் சம்பவம் எகிலப்பொலையின் சூழ்ச்சியென வறியாத பிறவுண்றிக் மனம் புழுங்கினான். இந்நேரத்தில் துரதிட்டவசமாக கண்டிப் போர்வீரர்களால் பிரித்தானிய எல்லைக்குள்ளிருந்த சில குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. இச் செய்கைகளினால் ஆத்திரமடைந்த பிறவுண்றிக் இதைத் தக்க தருணமாகக் கொண்டு கண்டி மீது படையெடுக்கத் தீர்மானித்தான். 1815-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10ந் திகதி வெளியிடப்பட்ட பிரசித்தத்தின்படி கண்டிமீது பிறவுண்றிக் யுத்தப்பிரகடனஞ் செய்தான்.

1815 ம் ஆண்டு ஜனவரி மாதம் கண்டியைக் கைப்பற்ற அனுப்பப்பட்ட பிரித்தானியப் படை கண்டிக்கு பலானே, கலகெதரை, பலக்கடுவையென்னும் கணவாய்கள் வழியாகச் சென்று எவ்வித எதிர்ப்புமின்றித் தலைநகரையடைந்தது. 1815 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ந் திகதி கண்டியைக் கைப்பற்றினர். அம்மாதம் 18ந் திகதி மெய்காப்பாளரினுதவியுடன் தும்புரையினுள்ள கல்லேஹேவத்தையில் உடுப்பிட்டியே ஆராய்ச்சியின் (Udupitiye Aratchi) இல்லத்தில் கண்டி மன்னனும் அவனது இரு இராணிகளும் கைப்பற்றப்பட்டனர். 1816ம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ந் திகதி கடைசிக் கண்டி மன்னனாகிய ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் அறுபது இனத்தவர்களோடு கோர்ண்வாலிஸ் என்ற கப்பலில் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான். நாடு கடத்தப்பட்டபோது பிரித்தானியருக்கு இராஜசிங்கன் விடுத்த எச்சரிக்கை சரித்திரப் புகழ் வாய்ந்தது: "எகிலப்பொலை விடயத்திலும், மொல்லிக்கொடை விடயத்திலும் ஜாக்கிரதையாகவிருங்கள். அவர்கள் என்னை ஏமாற்றியதுபோல் உங்களையும் ஏமாற்றுவார்கள்."

பிரித்தானியர், எவ்வித கஷ்டமுமின்றி மிகவெளிதாகக் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியமைக்குக் காரணங்கள் பலவுள. முதலாவதாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன், பிரதானிகளினதும் மக்களினதும் ஆதரவை இழந்திருந்தான். முதலாம் கண்டி யுத்தத்திற்குப் பிரதானிகளே காரணமென்பதை அறிந்த மன்னன் யுத்த முடிவில்

அவர்களின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைக்கும் நடவடிக்கைகளிலீடுபட்டான். இதனால் பிரதானிகள் எகிலப்பொலியின் தலைமையில் மன்னனை எதிர்க்கத் தொடங்கினர். ஈற்றில் பிரித்தானியரையும் கண்டிமீது படையெடுக்கத் தூண்டினர். ஆகவே நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் கடமைப்பாடுடையவர்களான பிரதானிகள் சுதந்திரத்தை விற்கும் துரோகிகளாக மாறியமையினால் கண்டி தன் சுதந்திரத்தை இழந்தது.

பிரதானிகளின் சூழ்ச்சிகளினால் அவர்கள்மீது அவநம்பிக்கை கொண்டிருந்த அரசன் அவர்களால் வழிநடத்திச் செல்லப்படும் மாந்தர்மீதும் அவநம்பிக்கை கொண்டான். பிரதானிகள் அரசனுக்கெதிராக நடவடிக்கை எடுக்குங்கால் அதற்கு மக்களும் ஆதரவளிப்பார்களென்ற வெண்ணம் மன்னன் மனதில் குடிகொண்டிருந்தது. இதனால் மக்கள் அரசியலில் அக்கறை கொள்ளாமலிருப்பதற்காக அவர்களைப் பொது சேவையிலீடு படுத்தினான். மக்கள் மன்னனது சேவையை நிறைவேற்றும்போது அதிக சிரமத்திற்கும், இம்சைக்கும் ஆளாயினர். இதனால் அரசன்மீது மக்கள் வெறுப்புற்றனர்.

அதுவுமன்றி மன்னன் பௌத்த குகுமாரையும் கொலைசெய்வித்தான். இதனால் பௌத்த குருமார்களின் ஆதரவை மன்னன் இழந்தான். மன்னன் மக்களினதும், பிரதானிகளினதும் ஆதரவை இழந்திருக்கும் வேளையில் பிறவுண்றிக் படையெடுத்து வந்தமை பிரித்தானியருக்கு எவ்வித எதிர்ப்புமில்லாமல் வெற்றியைக் கொடுத்தது.

முன்னைய முதலதிகாரியாகிய எகிலப்பொலி பிரித்தானியரை ஆதரித்ததோடு அவர்கள் படையெடுத்து வரும்பொழுது வழிநீளம் தன் உறவினர்களை நியமித்தே அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான். அதுவுமன்றி கண்டியின் திடநிலைமை பற்றியும் படையினர் பற்றியும் முக்கியமான செய்திகளைக் கொடுத்தான். சுருங்கக் கூறின் பிறவுண்றிக் யுத்தத்தை நடத்துவதற்கு வேண்டிய திட்டமொன்றைத் தயாரிக்க எகிலப்பொலி உதவினான்.

பிறவுண்றிக் முன்னேற்பாடாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் அவனது வெற்றிக்குக் காரணமாயிற்று. ஆள்பதி நோதைப் போல பிறவுண்றிப் பிரித்தானியரின் படை பலத்தில் அதிக நம்பிக்கை வைத்திருக்கவில்லை. ஐரோப்பாவில் நெப்போலியனுக்கெதிரான யுத்தமும், இந்தியாவில் மராட்டியர் யுத்தமும் முடிவடைந்தமையால், பிறவுண்றிக் வசம் தற்போது போதுமான படைகளிருந்தன. இயற்கையமைப்புக்கேற்றவாறு கண்டிப்படையினர் கொரிலா யுத்த முறையினைப் பயன்படுத்துவதைக் கண்டான். அதைச் சமா

ளிப்பதற்கு ஐரோப்பாவில் நெப்போலியனுக்கெதிராகப் பயன்படுத்தப்பட்ட கொரிலாப் படையை வருவித்துக் கண்டி யுத்தத்தில் ஈடுபடுத்தினன்.

பிலிமத்தலாவையின் கூற்றை முற்றுக நம்பி நோத் கண்டிமீது படையெடுத்துச் சென்றான். ஆனால் கண்டிமீது படையெடுத்து வரும்படி எகிலப்பொல பிறவுண்றிக்குக்குச் செய்தியனுப்பிய போதும் உடனடியாக அவன் படையெடுத்துச் செல்லவில்லை. கண்டியின் உள்நாட்டு நிலைமை, தனக்குச் சாதகமாகவிருந்தவேளையிலேயே பிறவுண்றிக் படையெடுத்துச் சென்றமை, அவனது வெற்றிக்கும் கண்டியின் வீழ்ச்சிக்கும் காரணமாயிற்று. டீஓயிலியின் திறமையும், அவன் கண்டி அதிகாரிகளுடன் வைத்திருந்த தொடர்பும் பிரித்தானியரின் வெற்றிக்கு இன்னொரு காரணமாகும்.

பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றுவதற்கு முக்கியமாக விருந்த காரணம், அவர்களுக்குப் போர்த்துக்கேயர் ஒல்லாந்தரைப் போலல்லாது கண்டி அதிகாரிகள், பிக்குகள், மக்கள் ஆகியோருடைய அமோகமான ஆதரவு இருந்ததேயாகும்.

பகுதி II

1815ம் ஆண்டு கண்டி உடன்படிக்கை

1815ம் ஆண்டு பெப்புருவரி மாதம் கண்டியைக் கைப்பற்றிய பிரித்தானியர் மார்ச்சு மாதம் இரண்டாம் திகதி ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். இவ்வுடன்படிக்கையானது சிங்களப் பிரதானிகளுக்கும், ஆள்பதியின் பிரதான செயலர்களாகிய டீஓயிலிக்குமிடையே ஏற்பட்டது. மன்னன், மக்களினதும் பிரதானிகளினதும் உரிமைகளையும் சலுகைகளையும் மதியாமல் அவர்களைப் பலகாலமாக அவமதித்து வந்தமையால், தொடர்ந்தும் கண்டி அரசபீடத்தில் வீற்றிருப்பதற்கு அருகதையற்றவனெனப் பிரித்தானியர் அபிப்பிராயப்பட்டனர். எனவே, அவனோடு தாங்கள் எத்தகைய உடன்படிக்கையும் செய்துகொள்ள விரும்பவில்லையென்றும், சிங்களப் பிரதானிகளே கண்டியைக் கைப்பற்ற உதவியவர்களாகையினால் அவர்களுடனேயே உடன்படிக்கை செய்ய விரும்புவதாகவும் பிரித்தானியர் கூறினர்.

இவ்வுடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரதான அம்சங்களைப் பன்னிரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: முதலிரு பிரிவுகளிலும் மன்னனைப்பற்றிய அம்சங்கள் அடங்கியிருந்தன. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன், மக்களையும் பிரதானிகளையும் கொடுங்கோன்மையாக நடத்தியமையால் அரசனுக்குரிய கடமைகளினின்றும் தவறினன். எனவே அவன் அரச உரிமையை இழக்கவேண்டும்; அவனுடைய இனத்தவர்களில் எவரும் கண்டியரசுக்கு உரிமையற்றவர்களென அதிற் கூறப்பட்டது. மூன்றும் பிரிவின்படி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும், அவனது இனத்தவரும் கண்டியில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் அரசாங்கத்தின் எதிரிகளெனக் கருதப்படுவதால் அவனே அல்லது அவனது உறவினரோ கண்டியில் தங்கியிருப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது; நான்காவது பிரிவின்படி கண்டி இராச்சியம் பிரித்தானிய முடியாட்சியின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. பிரித்தானிய மன்னனே கண்டியின் மன்னனென ஏற்றுக் கொள்ளப்பட்டது. கண்டிமீது பிரித்தானிய மன்னன் பரிபூரண அதிகாரமுடையவனென்றும் இலங்கையில் அவனது அதிகாரத்தை அவனது பிரதிநிதியாகிய ஆள்பதி ஏற்று நடத்துவாரெனவும் கூறப்பட்டது. இதுவரையும் பிரதானிகள் அனுபவித்து வந்த சலுகைகள், அதிகாரங்கள், உரிமைகள் முதலியனவற்றைப் பிரித்தானிய அரசாங்கம் பாதுகாக்கும். மேலும் கண்டி இராச்சியத்திலுள்ள சட்டங்கள், சம்பிரதாயங்கள் முதலியனவற்றிற்கேற்ப அங்குள்ள எல்லா வகுப்பினரது குடியியல் உரிமைகளும், சொத்துக்களும் பாதுகாக்கப்படும்.

ஐந்தாவது பிரிவின்படி பௌத்த மதம் புதிய அரசாங்கத்தினால் பாதுகாக்கப்படுமென்றும், பௌத்த சங்கம், பௌத்த ஆலயங்கள் என்றும்போல் இயங்கிவருவதற்கு அனுமதியளிக்கப்படுமெனவும் கூறப்பட்டது; ஆறும், ஏழாம் பிரிவுகளின்படி குற்றவாளிகளைத் தண்டிக்கும்போது சித்திரவதை, அங்கவினஞ்செய்தல் போன்ற நீதிக்குப் புறம்பான அநாகரீகமான தண்டனைகள் நீக்கப்படுமென்றும், மரண தண்டனை விதிப்பதற்கு ஆள்பதியின் அங்கீகாரம் வேண்டுமென்றும் கூறப்பட்டது. எட்டாவது பிரிவில் கண்டியில் பிரத்தியேகமான நீதிபாலனம் நடைபெறுமெனவும், இப்பாலனம் கண்டி இராச்சியத்தில் தொன்றுதொட்டிருந்துவரும் சட்டங்களையும், சம்பிரதாயங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்குமெனவும், இத்தகைய பாலனத்தைப் பிரித்தானிய அதிகாரிகள் மேற்பார்வை செய்வார்களெனவும் வாக்குறுதியளிக்கப்பட்டது.

ஒன்பதாவது பிரிவின்படி, கண்டிக் குடிகளல்லாதவர்களிடையே எழும் வழக்குகள் ஆங்கிலச் சட்ட முறைக்கேற்ப விசாரணை செய்து நீதி வழங்கப்படுமெனவும் கூறப்பட்டது; படைவீரர்களின் வழக்கு

களை அவர்களுக்கென பிரத்தியேகமாக நிறுவப்படும் படைமன்று விசாரணைசெய்து தீர்ப்பளிக்குமெனவும் விதிக்கப்பட்டது. பத்து, பதினைராவது பிரிவின்படி தொன்றுதொட்டு வழங்கிவந்த முறைப்படி வரிவசூல் நடைபெறுமென்றும், வசூல் செய்யப்படும் வரி புதிய அரசாங்கத்திற்கே உரியதெனவும் கூறப்பட்டது; பன்னிரண்டாவது பிரிவில் கண்டி இராச்சியத்தின் வியாபார ஒழுங்குகளைப்பற்றிய தீர்மானங்களையும் நடவடிக்கைகளையும் எடுப்பற்கு ஆள்பதி ஒருவருக்கே உரிமை உண்டென்றும் கூறப்பட்டது;

இவ்வுடன்படிக்கை பிரித்தானியர் படைவலிமை கொண்டு பெற்ற கண்டி இராச்சிய ஆட்சி அதிகாரத்தையும் சட்டபூர்வமாக்கியது. இதனைப் பிரதானிகள் ஏற்றுக்கொண்டனர், பிரித்தானியர் தாங்கள் பெற்றுக்கொண்ட ஆட்சி அதிகாரத்தினை நிலைநாட்டும் போது பழைய வழக்கங்களையும் சட்டமுறைகளையும் ஒட்டியே புதிய பாலனம் நடைபெறுமெனக் கூறியமை கவனிக்கற்பாலது. ஆரம்பத்திலேயே கண்டிப் பிரதானிகளின் பகைமையைச் சம்பாதித்துக் கொள்ள விரும்பாதமையினாலேயே பிரதானிகளின் உரிமைகளும் சலுகைகளும் இவ்வுடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பிரதானிகள் பலர் இவ்வுடன்படிக்கை மூலம் ஓரளவு திருப்தியடைந்தவர்களாயினும், எகிலப்பொலை பெரும் ஏமாற்றத்தை அடைந்தான். அவன் தன்னைப் பிரித்தானியர் அரசனுக்குவார்களென எதிர்பார்த்தான். பிரித்தானியர் அவ்வாறு அரசபதவியை வழங்காதவிடத்தும் தகுந்த பாலனப் பொறுப்பையாவது வழங்கித் தன்னை அதிகாரத்துடன் விளங்கச் செய்வார்களென எதிர்பார்த்தான். பிரித்தானியர் இதனையும் செய்யத் தவறிவிடவே எகிலப்பொலை, டை ஒயிலியைச் சந்தித்துப் பிரதம பாலன அதிகாரியாக நியமிக்கும்படி வேண்டினன். இதனையும் டை ஒயிலி வழங்கவில்லை; ஆத்திரமடைந்த எகிலப்பொலை முதலதிகாரிப் பதவியிலிருந்து விலகிக்கொண்டான். இதன்பின் பிரித்தானியர் தாம் தீர்மானித்தபடி புதிய பாலன அமைப்பைக் கண்டியில் அமைத்துக்கொண்டனர்.

பிரித்தானியர் தம்மை அரசனுக்குவதற்கு மறுத்ததைக் கண்ட எகிலப்பொலை, தனக்கு அவர்கள் அளித்த முதல் அதிகாரிப் பதவியையும் ஏற்கவில்லை. ஆயினும் அவனுடைய செல்வாக்கு கண்டி இராச்சியத்தில் மிகுதியாகவேயிருந்தது. இச்செல்வாக்குக் காரணமாகவே அவன் கண்டிக் கலகத்தின்போது, அதில் நேரிர பங்கெடுக்காமலிருந்துங்கூட அக்கலகத்தினால் வீழ்ச்சி அடைந்தான்.

வினாக்கள்

1. எக்காரணங்களை முன்னிட்டு ஆள்பதி பிறவுண்றிக் கண்டிமீது படையெடுத்தான்? அப்படையெடுப்பின் வெற்றிக்குரிய காரணங்கள் யாவை?

2. "கண்டியின் வீழ்ச்சி பிரதானமாக உள்நாட்டுக் காரணங்களினாலேயே நிகழ்ந்தது" இக் கூற்றை ஆராய்க.

3. ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன் பிரதானிகளை அடக்கி மக்களுக்கு உதவி புரியும் மன்னனாகவிருந்தும் அவன் வீழ்ச்சியடைந்தமைக்குரிய காரணங்கள் யாவை?

4. வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக:

   (1) கண்டியைப் பிரித்தானியர் கைப்பற்றியதில் எகிலப்பொலை பங்கை விளக்குக.

   (2) டீ ஓயிலி (டிசெம்பர், '56)

   (3) கண்டி உடன்படிக்கை (டிசெம்பர், '61)

5. கண்டி இராஜதானியைப் பிரித்தானியர் கைப்பற்றியதன் பயனாக ஏற்பட்ட புதுப்பிரச்சினைகள் எவை? அவை எவ்வாறு தீர்க்கப்பட்டன? (டிசெம்பர், '57)

6. இலங்கையில் டச்சுக்காரருக்குரியன யாவும் எவ்வாறு பிரித்தானியருக்கு உரியனவாயின என்பதை விபரிக்குக. இலங்கையில் எஞ்சிய பகுதியை எவ்வாறு பிரித்தானியர் தம் வசமாக்கினர்? (ஆகஸ்ட், '59)

7. 1815 ம் ஆண்டுக் கண்டி உடன்படிக்கை என்பது யாது? அதன் பிரதான உட்பிரிவுகள் யாவை? அவற்றின் முக்கியத்துவத்துக்கு காரணங்கள் தருக. (டிசெம்பர், '62)

8. 1815 ம் ஆண்டுக் கண்டி உடன்படிக்கைக்கு வழிகோலிய சம்பவங்களை ஆராய்ந்து கூறுக. 1815 ம் ஆண்டுக் கண்டிய ஒப்பந்தத்தினுடைய பிரதான ஏற்பாடுகளைத் தருக. (டிசெம்பர், '66)

9. கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி அதனை முற்றுகத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதற்குப் பிரித்தானியர் செய்த முயற்சிகளை ஒழுங்கு முறைப்படி சுருக்கமாக விபரிக்க. அவர்களின் வெற்றிக்கான இரண்டு காரணங்கள் தருக. (ஆகஸ்ட், '67)

எட்டாம் அத்தியாயம்

பகுதி I

1817 ம், 1818 ம் ஆண்டுக் கண்டிக் கலகம்

எந்தவொரு அரசாங்கம் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கின்றதோ அவ்வரசாங்கம் நிலைத்திருக்கும்; எப்பொழுது மக்களின் ஆதரவு அதற்குக் கிடைக்காமற் போகின்றதோ அப்பொழுது அவ்வரசாங்கத்தின் ஆயுளுக்குப் பங்கமேற்படுகின்றது. இதனையே நமக்கு 1815ம் ஆண்டு கண்டியில் பிரித்தானியர் ஏற்படுத்திக் கொண்ட பாலனத்திற்கெதிராக ஏற்பட்ட 1817ம், 1818ம் ஆண்டுக் கலகம் எடுத்துணர்த்துகின்றது. மக்கள் ஸ்ரீவிக்கிரமஇராஜசிங்கனுடையஆட்சியில் அதிருப்தியடைந்திருந்தார்களேயன்றி பிரித்தானிய ஆட்சியை ஏற்றுக்கொள்ளும் மனோநிலையிலிருக்கவில்லை. பிரித்தானியதராட்சி அந்நியராட்சி என்ற முறையில் மக்கள் இயல்பாகவே அவ்வாட்சியை வெறுத்தனர், அவ்வாட்சியைக் கண்டியிலிருந்து நீக்கவேண்டுமென்னும் அவா காலக்கிரமத்தில் கண்டி மக்களிடையேயும் பிரதானிகளிடையேயும் வளர்ந்து வரலாயிற்று. இத்தகைய எண்ணம் துரிதமாக வளர்ந்து ஒரு கலகமாக மாறுவதற்குப் பிரித்தானியர் கண்டியிலெடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் காரணங்களாக அமைந்தன;

கண்டி மக்கள் பழமையைப் போற்றும் மனவியல்புடையவர்கள்; பிரித்தானியரின் பாலனத்தில் புதிதாக இடம்பெற்ற அரசாங்க வதிவாளனையும் அவன் கீழியங்கிய அரசியற்சபை, நீதிபாலனம், இறைசேர் பகுதி, ஆகியனவற்றையும் ஏற்றுக்கொள்ள மக்கள் மறுத்தனர். மேலும் கண்டியிலேற்படுத்தப்பட்ட ஆட்சிமுறையானது, இராணுவ பலத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஆட்சியேயாகும். எனவே இவ்வாட்சியைப் பாதுகாப்பதற்கு பிரித்தானியர் கோட்டைகளைக் கட்டி படைகளை வைத்திருந்தனர். படைகளை வைத்திருந்ததோடு அப்படைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைக் காலந் தாழ்த்தாது கண்டிக்கனுப்புவதற்கு கப்டின் சினெயிடர் (Captain Schneider) தலைமையில் பாதைகளமைப்பதற்குத் திட்டமொன்றுந் தீட்டினர். கோட்டைகள் கட்டியமையும், படைகள் நிறுவியமையும், பாதைகள் அமைக்க முயன்றமையும், புதிய அரசாங்கத்தில் மக்களையும், பிரதானிகளையும் சந்தேகங் கொள்ளும்படி செய்தன. தம்மையடக்கி ஆள்வதற்கே இத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுகின்றதெனச் சந்தேகங்கொண்டனர்;

1815ம் ஆண்டின் உடன்படிக்கையின் பிரகாரம் பிரதானிகளுடைய அதிகாரங்களும், சலுகைகளும், சிறப்புரிமைகளும் நடைமுறையில் அனுசரிக்கப்படுமெனப் பிரித்தானியர் உறுதியளித்திருந்தனர். ஆனால் நடைமுறையிற் படிப்படியாகத் தமது அதிகாரமும் செல்வாக்கும் குறைந்து வருவதைப் பிரதானிகள் உணர்ந்தனர்; அவர்கள் உத்தியோக ரீதியாக மதிப்புடன் நடத்தப்பட்டாலும் ஏனையவிடங்களில் பிரித்தானிய உத்தியோகத்தரால் எவ்வித மரியாதையும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. கண்டி மன்னன் ஆட்சிக்காலத்தில் அவனைத் தவிர வேறு எவருக்கும் பிரதானிகள் தலை வணங்கவேண்டிய அவசியமிருக்கவில்லை. ஆனால் இப்பொழுது சாதாரண பிரித்தானிய உத்தியோகத்தர்களிலும் பார்க்கப் பிரதானிகள் தாழ்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். பிரித்தானிய உத்தியோகத்தரைவிட சாதாரண போர்வீரர் கூட இவர்களை நடத்தியவிதம் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இதுவரையும் நீதித்துறையிற் பிரதானிகள் அனுபவித்து வந்த அதிகாரங்கள் யாவும் புதிதாக அமைக்கப்பட்ட நீதிபாலன முறையால் கட்டுப்படுத்தப்பட்டன. இறைசேர் பகுதியில் கடமையாற்றிய பிரித்தானிய குடியியற் சேவையாளரின் கட்டளைகளுக்கமைய பிரதானிகள் கடமையாற்ற வேண்டியிருந்தமையால் இறைசேர் பகுதியில் இதுவரையுமிருந்துவந்த அதிகாரங்களைப் பிரதானிகள் இழந்தனர். எனினும் குடியியற் சேவையாளர் சுதேச மொழிகள் தெரியாதவர்களாக விருந்ததன் விளைவாக பிரதானிகள் மூலமாகவே அவர்கள் பொதுமக்கள் மத்தியில் நிருவாகக் கடமைகளைக் கவனித்து வரவேண்டியவராய் இருந்தனர். இதன்காரணமாகப் பொதுமக்கள் பிரதானிகளையே நிருவாக அதிகாரிகளாகக் கருதி வந்தனர்; தலைநகரத்துக்கருகாமையிலுள்ள திசாவணிகளைத் தவிரத் தூரத்திலேயுள்ள திசாவணிகளிலுள்ள திசாவைகள் அரசனுடன் நெருங்கிய அரசியற் தொடர்பு கொள்ளாது குறுநில மன்னர்களைப் போலவே ஆட்சி செய்து வந்தனர். ஆனால் புதிய பாலனவமைப்பில் பிரதானிகள் பிரித்தானிய நீதிபதிகளுக்குங் குடியியற் சேவையாளருக்குங் கட்டுப்பட்டு ஆட்சி புரியவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. இதனால் அவர்கள் தம் மனம் போனவாறு ஆட்சிசெய்ய இயலவில்லை. அதுவுமன்றி கண்டிநாட்டின் எல்லைப்புறத்திலுள்ள திசாவைகள் கண்டி மன்னரது காலத்தில் பெற்றுவந்த தீர்வையைப் பிரித்தானியராட்சியில் இழந்தனர்; எனவே நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகிய இருதுறைகளிலும் தம் அந்தஸ்தையும், செல்வாக்கையும் இழந்துவிட்டதாகவே பிரதானிகள் கருதினர்;

கண்டி உடன்படிக்கையில் பௌத்த மதத்தைப் பாதுகாப்பதாகப் பிரித்தானியர் கூறியிருந்தும் அதையிட்டு அவர்கள் எவ்விதநடவடிக்கையுமெடுக்கவில்லை. காலக்கிரமத்தில் பிரித்தானியராட்சி, கிறித்தவ ஆட்சியென்பதை மக்களுணர்ந்தனர். பௌத்த மதத்தைப் புறக்கணித்து பிரித்தானியர், புரட்டத்தாந்து மதத்தைப் பரப்ப சிலநடவடிக்கைகள் எடுத்துக்கொண்டனர். முதலில் பௌத்த நிறுவனங்கள் ஒழிக்கப்பட்டு அவைகளுக்குச் சொந்தமான சொத்துக்கள் யாவும் கிறித்தவ நிறுவனங்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன. மேல்நாட்டுக் கல்வியையும், பண்பாட்டையும் கண்டி மக்களிடத்துப் பரப்புவதற்கு பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கையெடுத்தது. இதைக் கண்ணுற்ற பௌத்த குருமார்கள் கிறித்தவ சமயத்தை மக்கள் மத்தியிலே வலோற்காரமாகப் புகுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறார்களென்ற வதந்தியைப் பரப்பினர். இதனால் மக்கள், பிரித்தானியர்பால் வெறுப்புற்றனர்.

கண்டி மன்னரது ஆட்சிக்காலத்தில் சமய விழாக்களில் மன்னர் கலந்துகொண்டு அவற்றைச் சிறப்பித்தனர். ஆனால் புதிய பாலனத்தில் கண்டியிலுள்ள பிரித்தானிய வதிவாளன் அத்தகைய கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவில்லை. கண்டி மன்னர், பௌத்த பிக்குகளுக்கு மிகுந்த மரியாதை கொடுத்துவந்தனர். ஆனால் இப் பொழுது பௌத்த பிக்குகள் பிரித்தானிய அதிகாரிகளுக்கு மரியாதை செலுத்தவேண்டிய நிலைமை யேற்பட்டது. இதனால் பௌத்த சமயம், நல்நிலையி லிருக்கவேண்டுமாயின் ஒரு பௌத்த சிங்கள மன்னன் ஆட்சியிலிருக்கவேண்டுமென பௌத்தரும், பௌத்த குருமாரும் கருதினர்.

கண்டி மக்களும், பிரதானிகளும் மன்னனை நேரிற்கண்டு அவனுக்குரிய மரியாதையைச் செலுத்தி அவன் நீதி வழங்குவதில் திருப்தியடைந்தனர். எவ்வளவு கொடூரமான தண்டனையாக விருந்தபோதிலும் பேழக்கப்பட்ட தன்மையால் அதை ஏற்றுக்கொண்டனர். இத்தகைய விசுவாசத்தை 6000 மைல்களுக்கப்பாலுள்ள மூன்றாம் ஜோர்ஜ் மன்னனுக்குச் செலுத்த முடியவில்லை. இதுவரையும் வியாபாரத்திலீடுபட்டு வந்த சோனக வியாபாரிகள் திசாவைகளுக்கு வரிகளாகவும் சன்மானங்களாகவும் குற்றப் பணமாகவும் இறையளித்து வந்தனர். இம்முறை பிரித்தானியர் காலத்தில் நிறுத்தப்பட்டது. இது நின்றுவிடவே திசாவைகளின் அந்தஸ்திற்கு இழுக்கேற்பட்டுவிட்டதெனவும் அதிகாரம், கௌரவம் முதலியன குன்றிவிட்டனவெனவும் அவர்கள் கருதி பிரித்தானியர்மீது ஆத்திரமடைந்தனர். மக்கள், பிரதானிகள், பௌத்த குருமார் முதலியோர் அரசாங்கத்தினமீது கொண்ட வெறுப்பின் காரணமாகவே கலகந் தோன்றிற்று,

கலகம் அரசாங்கத்திற்கெதிராகத் திட்டமிட்டுத் தொடங்கப் பட்டதாகவிருக்கவில்லை. கண்டி இராச்சியத்தில் ஊவா, வெல்லச என்ற இரு திசாவணிகள் மிகப் பிற்போக்கான பிரதேசங்களாக இருந்தன. இங்குள்ள பௌத்தர் புரட்சிவாதிகளாகவும் பழைய அரசவம்சத்திற்கே விசுவாசமுள்ளவர்களாகவும் காணப்பட்டனர். ஆனால் இவ்விரு பிரதேசங்களிலுள்ள சோனகரோ பிரித்தானிய ருக்கு விசுவாசமுள்ளவர்களாகவே இருந்துவந்தனர். சோனகர் இதுவரையும் ஊவா, வெல்லச திசாவைகளுக்குத் தேவையான உப்பும் வேறு பல பொருள்களும் அரை விலைக்கோ அன்றேல் இல வசமாகவோ கொடுத்து வந்தனர். இந்நட்டத்தைத் தவிர்ப்பதற் காக அப்பகுதியிலுள்ள சோனகர் தங்களுள் ஒருவனை முகாந்திர மாக நியமிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டனர். இதன்படி ஹாஜீ மரைக்காயர் (Hadjee Maraikkar) முகாந்திரமாக நியமிக்கப்பட் டான்.

இந்நியமனம், இப்பகுதியில் இதுவரையும் அதிகாரஞ் செலுத்தி வந்த சிங்களத் திசாவைகளுக்கு ஆத்திரமூட்டியதால் அவர்கள் மக்களைத் தூண்டிக் கலகத்தைக் கிளப்பினர். இச்சமயத்தில், இராஜாதி இராஜசிங்கனின் மைத்துனனாகிய துரைசாமி பௌத்த குருமாரின் அனுசரணையுடன். கண்டி அரசனுக வர எண்ணி ஊவா, வெல்லசப் பகுதிகளுக்கு வந்திருப்பதாகவும் அவனைக் கலகக்காரர் மன்னனுகப் பிரகடனப்படுத்தி விட்டனரெனவும் ஒரு வதந்தி வெளி வந்தது. இவ்வதந்தி புதுவையில் பிரித்தானியரது உதவி வதிவாள னுகிய வில்சனுக்கு எட்டியது. உடனே வில்சன் அக்குழப்பத்தை அடக்கும் பொருட்டு ஹாஜி மரைக்காயரை அனுப்பினன். ஆனால் அவன் கலகக்காரரால் கொல்லப்பட்டான். இதனைக் கேள்வியுற்று கலகத்தை அடக்குவதற்கும், துரைசாமியைக் கைது செய்வதற்கும் ஒரு படையோடு புறப்பட்டுச் சென்ற வில்சனும் கலகக்காரரின் அம்புக்கு இரையானன்.

எகிலப்பொலியின் வேண்டுகோளுக்கிணங்கவும் வெல்லசப் பகுதி திசாவை மில்லாவே (Millave) வயதில் முதிர்ந்தவனுக இருந்தமை யாலும் அவனைப் பதவியிலிருந்து நீக்கி அவனுக்குப் பதிலாக ஊவா திசாவையான கப்பட்டிப்பொலையை வெல்லசப் பகுதி திசாவையாக வும் பிறவுண்றிக் நியமித்தான். கப்பட்டிப்பொலை கலகத்தை அடக்குமுகமாக அனுப்பப்பட்டான். அங்கு சென்ற அவன் சுதந்திர உணர்ச்சியினுல் பின்னப்பட்டு கலகக்காரருடன் சேர்ந்து பிரித்தானி யரை எதிர்த்து நின்றதோடு கலகக்காரரின் தலைவனுமானன்.

ஊவா, வெல்லசப் பகுதிக்கு வெளியில் கலகம் பரவாமல் தடுப்ப தற்குப் பிரித்தானிய அரசாங்கம் அதிக கவனம் எடுத்துக்கொண்

டது: ஊவா, வெல்லசப் பகுதி இயற்கை அரணுள்ள பகுதியாகவிருந் தமையால் அங்கு படைகளையனுப்பி கலகத்தை அடக்குவது பிரித்தா னியருக்குச் சிரமத்தை ஏற்படுத்திற்று: ஆகவே கலகத்தை அடக்கு வதற்குக் காலதாமதம் ஏற்பட்டது. இதனல் ஏனைய கண்டி இராச் சியப் பகுதிகளிலும் கலகம் பரவியது. ஏற்கனவே பிரித்தானியரின் மேல் வெறுப்புற்றிருந்த மக்கள் ஊவா, வெல்லசப் பகுதியில் நடந்து கொண்டிருக்கும் கலகத்தைச் சாட்டாகக் கொண்டு கலகத்தில் பங் கெடுத்துக்கொண்டனர்.

மூன்றுகோறளை, நான்கு கோறளை, உடநுவரை, யட்டிநுவரை ஆகிய பகுதிகள் மொல்லிக்கொடை அதிகாரியின் ஆட்சிக்குட்பட் டிருந்ததால் அப்பகுதி மக்கள் பிரித்தானியருக்கெதிராக கலகக் காரரரை ஆதரிக்கவில்லை. ஆள்பதி பிறவுண்றிக், கலகத்தின் வேகத் தைக் கண்ணுற்று அதிருப்தியடைந்தான். இலங்கையிலிருந்த பிரித் தானியப்படை கலகத்தை அடக்குவதற்குப் போதாமையினல் இந்தி யாவிலிருந்து படைகளை பிறவுண்றிக் வருவித்தான்; அத்துடன் பிரதானிகளைக் கைதுசெய்யுமாறு கட்டளை பிறப்பித்தான். கப்பட் டிப்பொலை மாத்திரம் தொடர்ந்தும் வெல்லசப் பகுதியில் கல கத்தை நடாத்திவந்தான். 1817ம் ஆண்டு நவம்பர் மாதம் கப்பட் டிப்பொலையின் தலையைக் கொண்டு வருவோருக்கு 2000 றிக்ஸ் டொலர் வழங்கப்படுமெனப் பிரகடனப்படுத்தப்பட்டது. 1818ம் ஆண்டு ஜனவரி மாதம் கப்பிட்டிப்பொலை, அதிகாரம் (Adikarama) கொடேகெதர (Godegedara) ஆகிய புரட்சிவாதிகளின் சொத்துக் கள் பறிமுதல் செய்யப்பட்டதெனப் பிரசித்தம் செய்யப்பட்டது; பெப்புருவரி மாதம் அப்பகுதிகளில் படையியற் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஈற்றில் கப்பட்டிப்பொலை 1818ம் ஆண்டு அக்டோ பர் மாதம் கைப்பற்றப்பட்டுச் சிரச்சேதம் செய்யப்பட்டான்; பிர தானிகள் அனைவரும் படிப்படியாகச் சிரச்சேதஞ் செய்யப்படவே, அப்பிரதேச மக்கள் கலகத்தைக் கைவிட்டனர்.

மக்களும் பிரதானிகளும், திட்டமிடாது கலகத்தை ஆரம்பித் தமை, கலகம் தோல்வியடைவதற்கான காரணங்களி லொன்றாகும். சிங்களப் பிரதானிகள் முன்னேற்பாடாக ஒன்றுகூடித் திட்டமிட்டுக் கலகத்தை ஆரம்பிக்காமல் வெல்லசப் பகுதியிலேற்பட்ட ஆர்ப்பாட் டத்தைக் காரணமாகக் கொண்டு கலகத்தை ஆரம்பித்தமையால் வெற்றிபெற முடியவில்லை. மேலும் கலகத்தை நடாத்திய பிரதானி கள் ஒரே காலத்தில் கண்டி இராச்சியத்தின் எல்லாப் பகுதிகளிலுங் கலகத்தை ஆரம்பியாமல் ஒவ்வொரு பகுதியாக ஒன்றன்பின் ஒன் றாகக் கலகத்தையாரம்பித்தமையால் பிரித்தானியப்படைகளுக்கு கலகத்தையடக்குவது இலகுவாயிற்று;

கலகவேளையில் பிரதானிகள் ஒற்றுமைப்பட்டு செயலாற்றுதது கலகத்தின் தோல்விக்கு இன்னெரு முக்கிய காரணமாகும்: மொல்லிக் கொடைத் திசாவை, கலகத்திற் கலந்துகொள்ளாமையால் மூன்று கோறளையிலும், நான்கு கோறளையிலுங் கலகம் ஏற்படாமலிருந்தது. கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் படைகள் மூன்று கோறளை, நான்கு கோறளை வழியாகக் கண்டியைச் சென்றடைவது வழக்கம்: இவ்வழியாகப் பிரித்தானியப்படைகள் கண்டிக்குள் நுழைவதை மொல்லிக்கொடை அனுமதித்ததோடு அப்படைகளுக்கு வேண்டிய உதவி, ஒத்தாசைகளையுஞ் செய்தான். இதன் காரணமாகப் படைகள் வெகு விரைவாகக் கண்டியை அடைந்து, கலகத்தை மிக இலகுவாக அடக்க முடிந்தது: ஸ்ரீ விக்கிரம இராஜ சிங்கனை அரச பதவியிலிருந்து நீக்குவதற்கு ஒற்றுமைப்பட்ட சிங்களப் பிரதானிகள் பிரித்தானியரின் ஆட்சியை கண்டியிலிருந்து நீக்குவதில் ஒற்றுமையுடன் செயலாற்றுதது வியப்புக்குரியதேயாகும்:

கலக வேளையில் இராஜாதி இராஜசிங்கனின் மைத்துனன் துரைசாமியைக் கலகக்காரர் தங்கள் எதிர்கால மன்னனுக்கினர் என முன்பு படித்தோம். அவன் துரைசாமியன்றெனவும், துரைசாமியெனத் தன்னைக் கூறிக்கொண்ட வேடதாரி பௌத்த பிக்குவாயிருந்த வில்பாவா (Vilbava) எனவும், உண்மையான துரைசாமி மதுரையில் இருக்கின்றனெனவும் பிரித்தானியர் நிருபித்தனர்: இது மக்கள் முழுமூச்சுடன் கலகத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமற் செய்தது:

தற்கால யுத்த முறையைக் கையாண்டு பிரித்தானியர் கலகத்தை அடக்க முயன்றபோது அதை எதிர்த்துச் சமாளிக்க கலகக்காரரால் முடியாமற்போகவே கலகம் தோல்வியடைந்தது: கலக வேளையில் பிரதானிகள் குடும்பங்களுக்குச் சொல்லொணாத் துன்பத்தைப் பிரித்தானியப் படைகள் விளைவித்து வந்தன: இக்குடும்பங்களைத் துன்புறுத்துவதன் மூலம் பிரதானிகள் சரணடைந்து விடுவார்களென்பது பிரித்தானியரின் கருத்தாகும்: தம் குடும்பத்தவர்கள் படுந்துன்பத்தினைச் சகிக்காத பிரதானிகள் தாமாகக் கலகத்தை நிறுத்திவிட்டுப் பிரித்தானியரிடம் சரணடைந்தனர். சரணடைந்த தலைவர்களில் பலருக்கு அரசாங்கம் விசாரணை செய்து அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதித்தது: எகிலப்பொலையும் இன்னுஞ்சிலரும் மொரே ஷஸ்தீவுக்கு நாடுகடத்தப்பட்டனர்: எகிலப்பொல அங்கு 1829ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5ந் திகதி மரணமடைந்தான்:

தந்ததாது யாரிடம் இருக்கின்றதோ அவர்களே அரசாளும் உரிமையுடையவர்களென்ற எண்ணம் புராதன காலந்தொட்டு கண்டி மக்களிடையே யிருந்துவந்தது: கலகவேளையில் கலகக்காரர் தந்த

தாதுவை தலதா மாளிகையிலிருந்து அப்புறப்படுத்தி மறைத்துவைத் தனர்; மறைத்து வைக்கப்பட்ட தந்ததாதுவைப் பிரித்தானியர் கைப்பற்றி அதனை மீண்டும் தலதா மாளிகையில் இடம்பெறச் செய்யவே மக்கள், பிரித்தானியரை அதிபதிகளாக ஏற்றுக்கொண்டு கலகத்தைக் கைவிட்டனர்.

ஆகவே தொடக்கத்தில் பிரித்தானிய ஆட்சியை ஆட்டங்காணச் செய்த பயங்கரமான கலகம் இறுதியில் அதிகாரிகளின் திறமையின் மையாலும் ஒற்றுமையின்மையாலும், மக்கள் அனுபவித்த சொல் லொணாக் கஷ்டங்களினாலும், பிரித்தானியப் படையினரின் கொடிய அடக்கு முறையினாலும், வீழ்ச்சியுற்ற பிரித்தானியருடைய அதி காரத்தைக் கண்டியில் இன்னும் பலமுறச் செய்வதற்குக் காரணங் களாயின;

பகுதி II

1817 ம், 1818 ம் ஆண்டுக் கண்டிக் கலகத்தின் விளைவுகள்

கண்டி உடன்படிக்கையிலும் பார்க்கக் கண்டிப் பிரசித்தம் வர லாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. கண்டி உடன்படிக்கை, கண் டிப் பிரதானிகளுக்கும் பிரித்தானிய அரசாங்கத்திற்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையாகும். கண்டி உடன் படிக்கையினால் கண்டிப் பிரதானிகளினது அதிகாரங்களும் சலுகை களும் மக்களது பழக்க வழக்கங்களும் பாதுகாக்கப்பட்டன; ஆனால் 1818-ம் ஆண்டுப் பிரசித்தமோ கண்டிமக்கள்மீது பிரித்தானியரால் திணிக்கப்பட்டதொன்றாகும்; இதை ஏற்றுக்கொள்வதைத் தவிர கண்டி மக்களினால் வேறுயாதும் செய்யமுடியாமலிருந்தது.

1818ம் ஆண்டுப் பிரசித்தத்தின்படி கண்டி அரசியலில் சகல அதி காரங்களையும் பிரித்தானிய அரசன் ஏற்றுக்கொண்டான்; பிரித்தா னிய அரசனுடைய அனுமதியின்றி எந்த உத்தியோகத்தரும் தனது அதிகாரத்தை மக்கள்மீது சுமத்த முடியாதிருந்தது. இதன்மூலம் பரம்பரை பரம்பரையாக அனுபவித்து வந்த அதிகாரங்களைப் பிரதா னிகள் இழந்தனர்; இப் பிரதானிகள் தமது உத்தியோகத் தோர ணையில் மக்களிடமிருந்து பெற்று வந்த கட்டணங்களையும் குற்றப் பணங்களையும் இழந்து பிரித்தானிய அரசாங்கத்தால் கொடுக்கப் பட்ட வேதனங்களை ஏற்றுக்கொள்ள வேண்டியவராய் இருந்தனர். பிரதானிகளுக்கிருந்த அதிகாரங்களும் உரிமைகளும் சட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டன. பிரதானிகள் மக்களிடமிருந்து பெறவேண் டிய மரியாதைகள் தானும் எவை எவையென சட்டத்தால் வரை யறுக்கப்பட்டன;

இதுவரையுமிருந்துவந்த வழக்கத்தைக் கைவிட்டுத் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்களுக்கும் அவர்கள் திறமையை மதித்துப் பிரித்தானியர், உயர் பதவியை வழங்கினர். இப்பொழுது உயர்ந்த பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிக்கும்பொழுது வதிவாளன் ஆள்பதியைக் கலந்தாலோசித்தான். அப்படிப் பதவியேற்றோரை அவர்களிடம் குறைகாணப்படும்போது காரணங் காட்டாது அகற்றும் உரிமை ஆள்பதியினிடம் இருந்தது. சிங்கள உத்தியோகத்தர்களாகிய கோறளைகள், விதானைகள், அத்துக்கோறளைகள் போன்றோரை நியமிக்கும் பொறுப்பு கண்டியிலுள்ள பிரித்தானிய வதிவாளனுக்கு வழங்கப்பட்டது. இவ்வதிகாரிகள் யாவரும் வதிவாளனதும், குடியியற் சேவையாளரினதும் அதிகாரத்திற்குட்பட்டே கடமையாற்றவேண்டுமெனவும் பிரசித்தத்தில் விதிக்கப்பட்டது. மேலும் பிரதானிகளுக்குப் பரம்பரை பரம்பரையாகச் சொந்தமாகவிருந்த நிந்தகம் நிலங்கள் அரசாங்கத்தினால் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் முன்பு பெற்ற ''நிந்தகம்'' நிலங்களுக்குப் பதிலாக இப்பொழுது அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டது.

இப்பிரசித்தத்தின் மூலம் புதிய வரிவசூல் முறையொன்று புகுத்தப்பட்டது. விகாரகம், தேவாலகம் தவிர ஏனைய நிலங்களின் விளைவில் பத்திலொரு பங்கு அரசாங்கத்திற்கு வரியாகக் கொடுக்கப்படவேண்டும். கலகத்தின்போது பிரித்தானிய அரசாங்கத்தை ஆதரித்த அதிகாரிகளுக்குச் சலுகை காட்டுமுகமாக அவர்கள் விளைவில், பதினொன்றிலொரு பங்கை வரியாகக்கொடுத்தால் போதுமென விதிக்கப்பட்டது. இதுவரையும் சிங்கள அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பட்டிருந்த வரிவசூல் நீக்கப்பட்டு அப்பொறுப்பு குடியியற்சேவையாளர் கையில் விடப்பட்டது.

பிரதானிகளிடம் விடப்பட்டிருந்த குறைந்த நீதிபாலன அதிகாரத்தை அவர்களிடமிருந்து நீக்கி குடியியற் சேவையாளரை முதல்வராகக் கொண்ட நீதிமன்றுகளுக்கு விடப்பட்டது. இதனால் சிங்களப் பிரதானிகளுக்கு நாட்டிலிருந்த செல்வாக்குக் குறைந்தது. பிரதானிகள் நிந்தகங்களை இழந்ததினாலும் சம்பளம் பெற்றுக் கடமையாற்றும் அதிகாரிகளாக மாறியமையினாலும் அவர்களது வருவாய் குறைந்தது. இவ்வாறு பிரதானிகளது அதிகாரத்தையும் செல்வாக்கையும் அரசாங்கம் ஒடுக்கியுங் கூட பிரித்தானியர், பிரதானிகளிடத்து நம்பிக்கையற்றவர்களாகவேயிருந்தனர். இதன் காரணமாக கண்டி இராச்சியத்தில் ஆங்காங்கு கோட்டைகளைக் கட்டிப் படைகளை நிறுத்தி வைத்திருந்தனர்.

இந்நடவடிக்கைகளின் மூலம் அதிகாரிகளின் செல்வாக்கை கண்டி இராச்சியத்தில் மிகவும் குறைத்து பிரித்தானியர் தங்கள் அதிகாரத்தை அங்கு பலப்படுத்திக் கொண்டனர்.

வினாக்கள்:

1. 1817—1818 ம் ஆண்டுக் கண்டிக் கலகத்தின் சரித்திர முக்கியத்துவத்தை ஆராய்க.
2. கண்டிக் கலகத்தின் காரணங்களையும் அதன் பெறுபேறுகளையும் தருக.
3. கண்டிக் கலகத்தில் மொல்லிக்கொடையினது பங்கினையும் கப்பட்டிப் பொலியினது பங்கினையுந் தருக.
4. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகள் எழுதுக.
   (a) புத்தகோயில் ஆதனங்கள் (டிசெம்பர், '56)
   (b) கப்பட்டிப் பொலி திசாவை (டிசெம்பர், '62)
   (c) கண்டிக் கலகம் (1817—1818) (டிசெம்பர், '63)
   (d) கப்பட்டிப்பொலி திசாவை (ஆகஸ்ட், '65)
5. 1818 ம் ஆண்டில் நிகழ்ந்த கண்டிக் கலகத்தின் ஆரம்ப வெற்றிக்கும் இறுதித் தோல்விக்குமுரிய காரணங்கள் என்ன? (டிசெம்பர், '54)
6. இலங்கையில் கி. பி. 1801—1818 என்ற காலத்தில் கண்டியைப் பொறுத்த வரையில் பிரித்தானியரின் இராசதந்திரம் தோல்வியடைந்தமைக்குரிய காரணங்களைக் கூறுக. (டிசெம்பர், '58)
7. (1817—1818) கண்டிப் புரட்சிக்குரிய காரணங்களைக் கூறுக. அது தோல்வியுற்றமைக்குக் காரணம் என்ன? (ஆகஸ்ட், '60)

ஒன்பதாம் அத்தியாயம்

ஆள்பதி எட்வட் பாண்ஸ் அவர்களின் ஆட்சி

1819ம் ஆண்டு ஏவுநர் முதல்வனுக இலங்கைக்கு வந்த எட்வட் பாண்ஸ் அடுத்த ஆண்டு இராணுவ ஆள்பதியாகப் பதவியேற்ருன்; ஆனல் இரண்டு ஆண்டுகளின்பின் இந்திய இராணுவத்தின் ஏவுநர் முதல்வனுக அவன் அங்கு சென்ருன்; இவனுக்குப் பதிலாக வந்த எட்வட் பஜெற் இலங்கையில் கறுவாத் தீவுக்களத்தை திருத்தியமைத்ததுடன் உணவுற்பத்தியை அதிகரிப்பதற்காகத் தானியத்தில் இருந்துவந்த இறக்குமதி வரியை உயர்த்தினன்; இவனே அரசாங்க சேவையிலுள்ள கீழ்த்தர உத்தியோகத்தரும் ஓய்வுகாலச் சம்பளம் பெறும்பொருட்டு ஒழுங்குகள் செய்தவன். இவனுக்குப்பின் மீண்டும் பாண்ஸ் 1824ம் ஆண்டு இங்கு ஆள்பதியாகப் பதவியேற்ருன்;

எட்வட் பாண்ஸ் தலைமைக்காரர், அதிகாரிகள் முதலிய சுதேச அலுவலர்களின் நன்மை தீமைகளிற் பங்கெடுத்து அவர்களின் நன் மதிப்பைப் பெற்ருன். இதனல் அவன் தனது பாலனத்தைச் சுலபமாக்கிக்கொண்டான். இதற்கு முந்திய காலத்தில் அதிகரித்திருந்த செலவை மட்டுப்படுத்தி செலவிலும் பார்க்க மேலதிக வருமானத்தைக் காட்டினன். கடற்கரைப் பிரதேசத்திலுள்ள உதவிச் செயலாளன் பதவி நீக்கப்பட்டது; கொழும்பும் களுத்துறையும் இணைக்கப்பட்டு ஒரே கலெக்டரின் கீழ்க் கொண்டுவரப்பட்டன; அதேபோல் மாத்தறையும் தங்காலையும் இணைக்கப்பட்டு இன்னெரு கலெக்டரின் கீழ்க் கொண்டுவரப்பட்டன; குடியியற் சேவையாளர் தமிழ் சிங்களமாகிய சுதேச மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றிருக்கவேண்டுமெனவும் அவர்களுக்குமட்டுமே உத்தியோகவுயர்வு வழங்கப்படவேண்டுமெனவுஞ் சட்டங் கொண்டுவரப்பட்டது;

பாண்ஸ் உள்நாட்டுத் தொழிலுற்பத்தியில் ஊக்கங் காட்டினன். பின்னுக்கு, தேங்காய்நெய், புகையிலை, மிளகு, தும்பு முதலிய பொருள்கள் வெளிநாடுகளுக்கு இவனது காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டதால் இலங்கையின் செல்வம் இரட்டித்தது; கொழும்பில் வீடுகள், கடைகள் முதலியனவற்றில் வரி விதிக்கப்பட்டது. இவ்வரிப் பணம் கொழும்பு மாநகர வீதிகளைத் திருத்துவதற்கும், நகரத்தைக் காவல் புரிவதற்கும் வெளிச்சமேற்றுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. இதேபோல் காலியிலும் வரி வசூலிக்கப்பட்டு அவைபோன்ற தேவைகளுக்குச் செலவு செய்யப்பட்டது;

ஆள்பதி பாண்ஸ், நீதிபாலனத்திலும் பல மாற்றங்களைக் கொண்டுவந்தான். இதுவரையும் நீதிபதிகளே பதிவாளரை நியமித்துவந்தனர். பாண்ஸ் இம்முறையை நீக்கித் தானே அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டான். உச்சமன்றின் ஆளல்ல கொழும்பு மாநகரத்திற்கும் கோட்டைக்குமென மட்டுப்படுத்தப்பட்டது: மாத்தறை மாவட்டத்திற்கும், காலி மாவட்டத்திற்கும் வெவ்வேறாக இருந்துவந்த மாவட்ட நீதிமன்றுகள் ஒன்றுக்கப்பட்டன. சுதேசிகளிடையே எழும் வரி சம்பந்தமான வழக்குகளை விசாரணை செய்வதற்கு வருமான மன்றுகள் (Revenue Courts) நிறுவப்பட்டன. வருமான குற்றகவையர் முறையீட்டு மன்று (Minor Courts of revenue appeal) என ஒரு நீதி மன்று நிறுவப்பட்டது: இது, வரி சம்பந்தமான வழக்குகளின் தீர்ப்புக்கெதிராக வரும் முறையீடுகளை விசாரணை செய்தது: கடற்கரைப் பிரதேசங்களில் கிரிமினல் வழக்குகளை விசாரணை செய்யுமுரிமையும் ஐரோப்பியரை விசாரணை செய்யுமுரிமையும் உச்ச மன்றுக்கு வழங்கப்பட்டன: இலங்கையரின் சிவில் வழக்குகளை விசாரணை செய்யுமுரிமை மாகாண நீதிமன்றுகளுக்கு வழங்கப்பட்டது. இவ்விரு பிரிவான நீதிமன்றுகளின் நீதிபதிகள் ஆள்பதியாலேயே நியமனஞ் செய்யப்பட்டனர்: இவ்விரு நீதிமன்றுகளின் தீர்ப்புகளுக் கெதிராக முறையிடுவோர், ஆள்பதியை முதல்வராகக் கொண்ட மேன்முறையீட்டு மன்றுக்கே முறையிட்டனர்:

பிறவுன்றிக் கண்டியைக் கைப்பற்றியவுடன் அதனைத் தெருக்கள் மூலம் ஏனைய பகுதிகளுடன் இணைக்க நினைத்தான்: எனினும் 1817, 1818ம் ஆண்டுகளில் ஏற்பட்ட கலகங்கள், அம்முயற்சிக்குத் தடையாயின: எட்வட் பாண்ஸ் ஒரு புதிய முறையினைக் கையாளத் தொடங்கினான்: பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை இலங்கையில் நிலைநாட்டுவதற்குக் கோட்டைகள் அமைப்பதை இவன் ஏற்றுக் கொள்ளவில்லை. இக்கோட்டைகளில் பெரும்பாலானவை மலேரியாப் பிரதேசத்தில் இருந்ததன் காரணமாக ஏராளமான போர் வீரர் மலேரியாக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர்; பலர் இறந்தனர்: இங்கிலாந்தில் 1745ம் ஆண்டு ஏற்பட்ட கலகத்தின் பின்னர் ஸ்கொட்லாந்தின் உயர்ந்த பிரதேசங்களை இராணுவத் தெருக்களினால் இணைத்தனர். அதன்மூலம் அங்கேற்படும் கலகங்களை இலகுவாக அடக்கலாமெனவும் கருதினர்: மேலும் இக்காலத்தில் இங்கிலாந்திலும் ஏராளமான புதுத் தெருக்கள் அமைக்கப்பட்டன. அம்முன்மாதிரியைப் பின்பற்றி ஒரு இடத்திலிருந்து போர் வீரரைக் கலகங்கள் நடக்கும் இடத்திற்கு விரைவாக நடாத்திச் செல்லும் வகையில் இலங்கையிலும் பாதைகளையமைக்க பாண்ஸ் முற்பட்

டான்: இவ்வாறு வீதிகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த இவன் வீதிகள் அமைப்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு செயலாற்றினான்.

இந்நிலையில் அக்காலத்திற் கண்டியின் போக்குவரத்து வசதிகளை யறிந்து கொள்வது நன்று; கண்டி எல்லைப் புறங்களில் திட்டமிட்டே அடர்ந்த காடுகள் வளர்க்கப்பட்டன. ஒற்றையடிப் பாதையே வீதியாக இருந்தது. இதனால் அந்நியரின் படைகள் கண்டி நாட்டைக் கைப்பற்ற முயற்சி செய்யும்போது வழி தெரியாமல் தவித்தனர். அநேகமாக மக்கள் கால்நடையாகவும் யானைகள்மீதும் பிரயாணஞ் செய்தனர். திசாவைகள் மாத்திரமே பல்லக்கிற் செல்ல அனுமதிக்கப்பட்டனர் பாக்கு, வாசனைத் திரவியங்கள் முதலிய பொருள்கள் பொதிமாடுகளின்மீது ஏற்றிச் செல்லப்பட்டன. கண்டிக்குப் போகும் பாதை கரடுமுரடாகவும் செங்குத்தாகவும் ஒடுங்கியதாகவும் இருந்தமையினால் எவ்வாகனமும் செல்லமுடியாமலிருந்தது. கண்டியைக் கைப்பற்றும் நோக்குடன் செல்லும் எப்படையுந் தங்களுக்குத் தேவையான சுமைகளைக் கூலியாட்கள்மூலம் எடுத்துச் சென்றனர்.

கண்டி இராச்சியத்தில் போக்குவரத்து இப்படி இருக்கக் கடற்கரைப் பிரதேசங்களிலிருந்த வீதிகளும் நல்லநிலைமையிலில்லை. கோட்டைகளையுங் கடற்கரைப் பட்டினங்களையும், ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட வீதிகள் இணைத்தன. இவ் வீதிகள் மணலால் அமைக்கப் பட்டவையாயும் அகலமானவையாயும் காணப்பட்டன. இருமருங்கிலும் வானளாவிய மரங்கள் வளர்ந்திருந்தன. இவ் வீதிகள்கூடத் திருத்தப்படவேண்டிய நிலைமையிலேயே இருந்தன. 1800 ம் ஆண்டில் ஆள்பதி நோதும் பிரதம நீதிபதியும் சுற்றுலாவை மேற்கொண்டபோது 160 பல்லக்குச் சுமப்போரையும், 400 சுமைகொண்டு செல்லுங் கூலியாட்களையும் கூடாரங்களைக் காவுவதற்கு 50 இலஸ்கரின் களையும் எடுத்துச் சென்றதிலிருந்து அக்காலத்துப் போக்கு வரத்து நிலைமை தெளிவாகின்றது. இந்நிலைமையில் 1814-ம் ஆண்டு சிறிது மாற்றமேற்பட்டது. கொழும்பு, காலி வீதி அமைக்கப்பட்டது. அரசாங்க அலுவலர்களின் வசதிக்காக முக்கியமான இடங்களில் வாடி வீடுகள் கட்டப்பட்டன. இதனால் பிறவுண்றிக் நோத் மேற்கொண்ட சுற்றுலாவை ஒரு குதிரைவண்டியில் மேற்கொள்ள முடிந்தது.

கொழும்பிலிருந்தும் திருகோண மலையிலிருந்தும் வீதிகள் வழியாகப் படைகளை தேவையான நேரத்தில் கண்டிக்கு அனுப்பலாமெனக் கருதிய பாண்ஸ் கொழும்புக்கும் கண்டிக்குமிடையே வீதி அமைக்கும் வேலையை ஆரம்பித்தான். 1820ம் ஆண்டில் இவ்வீதியமைக்கும் வேலை ஆரம்பமாகி 1821ம் ஆண்டில் கல்லுப் பதிக்காத

நிலையில் போக்குவரத்துக்குத் திறந்துவிடப்பட்டது: இவ்வீதி ஹெனரட் கொடை, வியாங்கொடை, அம்பேபுச, அம்பன்பிட்டியா, கடுகணுவைக் கணவாய், பேராதனை வழியாகக் கண்டியை அடைந்தது: இது 1825 ம் ஆண்டு கல்பதித்து திருத்தியமைக்கப்பட்டது. இவ் வீதியமைப்பதற்குரிய பாதையை வரையறை செய்தவன் பிறேசர் என்பவனுவான். வீதி ஆக்கும் வேலையை மேற்பார்வை செய்தவன் மேஜர்ஸ்கின்னர் என்பவனுவான். இவனே இலங்கையின் முதல் வீதி ஆணையாளனுகப் பதவி வகித்தான். இவ் வீதியிலுள்ள கடுகணுவைக் கணவாயை அமைத்தவன் கப்டின் டோசன் என்பவனுகும். ஏழுகோறளை வழியாகவும் கண்டியை அடைதற்கு பாண்ஸ் நடவடிக்கை எடுத்தான். 1821ம் ஆண்டு குருநாகலையிலிருந்து கலகதெரைக் கணவாய் வழியாகக் கண்டியையடைவதற்கு ஒரு வீதியமைக்கப்பட்டது. 1825 ம் ஆண்டு குருநாகலை, அம்பேபுசவோடு இணைக்கப்பட்டது:

பாண்ஸ் கண்டியிலிருந்து அட்டகலைக் கணவாய் வழியாக நாலந்தைக்கூடாக டம்புளைவரை இன்னெரு வீதியையமைத்தான். 1827ம் ஆண்டில் குருநாகலைக்கும், டம்புளைக்குமிடையே வீதியொன்று அமைக்கப்பட்டது: இதே ஆண்டில் கண்டிக்கும் நுவரெலியாவுக்குமிடையில் வீதியொன்று ஆரம்பித்து 1837 ம் ஆண்டில் பூர்த்தியாயிற்று: பாண்சின் காலத்தில் திருகோணமலையிலிருந்து கண்டிக்கு வரும் வீதி கந்தளாய் வரையும் அமைக்கப்பட்டது. 1831 ம் ஆண்டில் பூர்த்தியான கண்டி, மாத்தளை வீதி 1833 ம் ஆண்டில் திருகோணமலை வீதியோடு இணைக்கப்பட்டது: ஆள்பதி பாண்ஸ் கடலோரமாக அமைக்கப்பட்டிருந்த வீதியைத் திருத்தியமைக்க முன்வந்தான்: கொழும்பிலிருந்து வடக்கே நீர்கொழும்பு வரையுமுள்ள வீதியும் தெற்கே அம்பாந்தோட்டைவரையுமுள்ள வீதியும் திருத்தியமைக்கப்பட்டன: ஆள்பதி பாண்ஸ் இராசகாரிய முறையைப் பயன்படுத்திப் பொதுமக்களை வீதிகட்டும் வேலையில் ஈடுபடுத்தினுன். அவன் பதவியிலிருந்து விலகிய காலத்தில் சகல மாகாணங்களின் தலைநகரங்களும் வீதிகள்மூலம் இணைக்கப்பட்டிருந்தன:

தலைநகரங்களிடையே தபாற் போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்க வீதிகள் உதவின. மேலும் வீதிகள் அமைக்கப்பட்டதன் விளைவாகக் கண்டியில் பிரித்தானியராட்சி வலுவடைந்தது. பிற்காலத்தில் கோல்புறூக் விசாரணைக் குழுவினருண்டாக்கிய பொதுப்பாலன அமைப்புச் செயற்படுவதற்கு இவ் வீதிகள் பெரிதும் பயன்பட்டன. ஆள்பதி பாண்ஸ், போக்குவரத்துச் சம்பந்தமாக எடுத்த நடவடிக்கைகள் காசுப் பயிர்ச்செய்கை அபிவிருத்தியடைய வழிவகுத்தன:

பிரித்தானிய ஆள்பதிகளில் பாண்ஸ் அவர்களே முதன் முறையாக காசுப் பயிர்ச் செய்கையிற் கவனம் செலுத்தினன். ஒல்லாந்தர் காசுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டபோதிலும் அவர்களுக்கு அது அதிக பயனை அளிக்கவில்லை. ஆரம்பத்தில் வியாங்கொடையில் சாயவேர் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டு தங்காலையில் ஒரு தொழிற்சாலையும் நிறுவப்பட்டது. கரும்புப் பயிர்ச்செய்கை டம்புறை, கம்பளை, பத்தேகம முதலிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நாளடைவில் சாயவேர் பயிர்ச் செய்கையும் கரும்புப் பயிர்ச்செய்கையும் கைவிடப்பட்டன.

இவைகளுக்குப் பதிலாக கோப்பிப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப் பட்டது. கோப்பிப் பயிர்ச் செய்கை இலங்கைக்குப் புதிதன்று: ஐரோப்பியர் இலங்கைக்கு வருமுன்னரே கோப்பிச் செய்கையில் இலங்கையர் ஈடுபட்டிருந்தனர். ஆனால் அவர்களுக்குக் கோப்பியில் எப்படிச் சிறந்த பானம் தயார் செய்வதென்பது தெரியாமலிருந்தது. ஒல்லாந்தரும் கோப்பிச் செய்கையில் கவனஞ் செலுத்தினர், ஆனால் கடற்கரைப் பிரதேசங்களில் அது அபிவிருத்தியடையாமற் போகவே கைவிடப்பட்டது.

ஐரோப்பியர் காசுப் பயிர்ச் செய்கையில் முதலீடு செய்தமைக்கு அரசாங்கத்தினது நிலக்கொள்கையும் அவர்களுக்கு வழங்கிய சலுகைகளும் ஓரளவு காரணமாக அமைந்தன. 1800ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டப்படி ஒவ்வொரு இலங்கைக் குடியும் 100 ஏக்கருக்கு மேற்படாத காணியைப் பெற உரிமையுடையவராயினர். 1810ம் ஆண்டு பிரகடனத்தின்படி இலங்கையின் எப்பகுதியிலுங் காணி வாங்குமுரிமை ஐரோப்பியருக்கு வழங்கப்பட்டது. 1812ம் ஆண்டு 4000 ஏக்கருக்கு மேற்படாத காணியைப் பெற ஐரோப்பியர் உரிமையுடையவராயினர்; இக் காணிச் சொந்தக்காரர் ஐந்து வருடங்களுக்கு அரசாங்கத்திற்கு வரியெதுவுஞ் செலுத்தவேண்டியதில்லையெனவும் அறிவிக்கப்பட்டது.

ஜோஜ் பேட் (George Bird) என்பவன் 1823ம் ஆண்டு சிங்கப்பிட்டியாவில் கோப்பிச் செடியைப் பரீட்சார்த்த முறையில் பயிரிட்டான். கோப்பியைச் செய்கை பண்ணுவதற்கேற்ற சுவாத்தியமுள்ள பிரதேசமாக மலையகம் அமைந்துள்ளதென்பதை இப்பரிசோதனை மூலம் இவன் அறிந்துகொண்டான். இதைப்பின்பற்றி ஆள்பதியுட்பட அரசாங்க உத்தியோகத்தர் பலர் கோப்பித் தோட்டங்களை நிறுவினர். பாண்ஸ் 1825ம் ஆண்டில் பேராதனையில் கங்கறுவாத் (Gangaruwa) தோட்டத்தை நிறுவினன். இவ்வாறு மலையகத்திலுள்ள காடுகள் யாவும் கோப்பித் தோட்டங்களாக மாறின.

பாண்ஸ் காசுப் பயிர்ச் செய்கையை மேலும் ஊக்கப்படுத்து முக மாக பன்னிரண்டு வருட காலத்துக்குக் கோப்பி, பருத்தி, சாயவேர் கரும்பு முதலிய பணவருவாயுடைய பொருள்களில் ஏற்றுமதி வரி விதிக்கப்படமாட்டாது; தோட்டங்களில் வேலைசெய்யுந் தொழிலா ளிகள் அரசாங்கத்திற்கு எவ்வித சேவையுஞ் செய்யவேண்டியதில்லை; எனக் கட்டளை பிறப்பித்தான். இந்நிலையில் மேற்கிந்திய தீவுகளிற் கோப்பிச் செய்கையில் மந்தமேற்படவே இலங்கைக் கோப்பிக்கு அருமையேற்பட்டது. இதையறிந்து இன்னும் பலர் கோப்பித் தோட்டங்களை நிறுவினர்; கோப்பித் தோட்டங்களில் வேலைசெய்வ தற்குத் தொழிலாளர் பற்றுக்குறையேற்பட்டது. இதை நிவர்த்தி செய்ய இந்தியாவிலிருந்து, தொழிலாளிகள் வருவிக்கப்பட்டனர். இவர்கள் இலங்கையில் நெடுங்காலந் தங்கியிருந்து தொழில் புரிய விரும்பாதவர்களாய் விரைவில் தாய்நாடு திரும்பினர். மறுபடியுந் தொழிலாளர் பற்றுக் குறையேற்படவே தோட்டமுதலாளிகள் சிலர் தோட்டங்களை மூடவேண்டிய நிலையேற்பட்டது.

1812, 1814, 1816, 1818ம் ஆண்டுகளில் மூறையே பப்ரிஸ்ற், வெஸ்லியன், அமெரிக்கன், சேச் மிஷனரி ஆகிய மிஷனரி சங்கங் கள் தாபிக்கப்பட்டன: இவைகள் பாடசாலைகளை விசேடமாக தமிழ் மாவட்டங்களில் நிறுவி சமயத்தைப் பரப்புவதையே முழு நோக்கமாகக் கொண்டு கல்வியைப் போதித்தன. கல்வியின் பெய ரில் சமயத்தைப் பரப்புவதை பாண்ஸ் விரும்பிலன். அதுவுமன்றி சுதேசிகளின் கலாச்சாரம், நாகரீகம் முதலியனவற்றில் அவர்கள் சிரத்தை கொள்ளவில்லை. பயிற்றப்பட்ட ஆசிரியர் பற்றுக்குறை, போதிய நிதியில்லாமை, பாடசாலைகள் செவ்வனே மேற்பார்வை செய்யப்படாமை, முதலியனவற்றால் கல்வித்தராதரம் மிகக் குறை வாகவிருந்தது. பாண்ஸ் இக்கல்வி முறையிலுள்ள குறைகளை அகற்றுமுகமாக கல்விப் பொறுப்பைத் தானே ஏற்றுச் சீர்திருத்தங் கள் செய்ய விரும்பினன். முதல் நடவடிக்கையாகப் பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு அரசாங்கச் செலவில் பயிற்சியளிக்க எண்ணினன்: ஆனால் அரசாங்கத்திற்குப் பண நெருக்கடியேற்படவே இத்திட்டத் தைக் கைவிடவேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளானன்.

இதனால் முன்போலக் கல்விப் பொறுப்பு முழுவதும் மிஷனரி சங் கங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் விடப்பட்டது: 1823 ம்ஆண்டு கிறித்தவ மிஷனரி சங்கங்கள் கண்டியில் ஒரு பாடசாலையையும் அதன் சுற்றுப்புறத்தில் நான்கு பாடசாலைகளையும் நிறுவின: ஆனால் 1826 ம் ஆண்டு இத்தொகை இருநூறாக அதிகரித்தது. 1829ம் ஆண் டில் இலங்கை முழுவதும் தொண்ணூறு அரசாங்கப் பாடசாலைகள் மட்டுமே இருந்தன. தமிழ் மாவட்டங்களில் நான்கு அரசாங்கப்

பாடசாலைகள் மட்டுமே காணப்பட்டன. இதிலிருந்து கிறித்தவ மிஷனரி சங்கங்கள் தமிழ் மாவட்டங்களில் அநேக பாடசாலைகளை நிறுவினரென்பது புலனுகின்றது. பாண்ஸ் கிறித்தவ மிஷனரி சங்கங்களுக்கு பணம், நிலம் ஆகியனவற்றை வழங்கிப் பாடசாலைகளை நிறுவும்படி ஊக்கப்படுத்தினன். இச் சங்கங்கள் புரட்டத்தாந்து கிறித்தவரை மட்டுமே பாடசாலைகளிற் சேர்த்தன; இதனுல் இவர்களுக்கே ஆங்கிலக் கல்வி பயிலச் சந்தர்ப்பம் கிடைத்தது. அரசாங்கத்தில் உத்தியோகமும் கிடைத்தது; மற்றைய சமயத்தவர்கள் கூடிய தராதரமுடையவர்களாக இருந்தவிடத்தும் சில சமயங்களில் புரட்டத்தாந்து கிறித்தவர்களுக்கே உத்தியோகம் வழங்கப்பட்டது. இதனுல் இந்துக்களும், பௌத்தரும், கத்தோலிக்கரும் புறக்கணிக்கப் பட்டனர்.

ஆள்பதி பாண்ஸ், பதவி துறக்கும் காலத்தில் மிஷனரி சங்கங்களுக்குச் சொந்தமான 215 பாடசாலைகளில் 10,000 மாணவர்கள் கல்வி பயின்றனர்; கத்தோலிக்கருக்கு அரசாங்கம் உதவிநன்கொடையோ அன்றேல் வேறு எவ்வித ஊக்கமோ அளிக்காதிருந்தபோதிலும் அவர்களுக்கென 63 சுயமொழிப் பாடசாலைகள் தனியார் முயற்சியினுல் நிறுவப்பட்டிருந்தன; ஆகவே இக்காலத்தில் மூன்று விதமான பாடசாலைகள் இருந்தனவென்பதைக் காணமுடிகின்றது; அவையாவன: மிஷனரி சங்கங்களின் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள். ஆனுல் பௌத்தர்கள் இந்துக்கள், முஸ்லீம்கள் ஆகிய சாகியத்தவர்கள் ஒரு பாடசாலையைத் தானும் நிறுவாமல் வாளாவிருந்தனர்;

இலங்கைச் செல்வத்தை அதிகரிப்பதற்கு ஆள்பதி பாண்ஸ் செய்த சேவையைப்போல எந்தப் பிரித்தானிய ஆள்பதியும் செய்யவில்லை; இவன் இந்தியாவின் ஏவுநர் முதல்வனுக நியமிக்கப்படவே 1831ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ந் திகதி இலங்கையை விட்டுச் சென்றுன்.

வினுக்கள்

1; எக்காரணங்களினுல் 1818ம் ஆண்டு தொடக்கம் 1832ம் ஆண்டு வரையும் வீதிகள், தபாற்சேவை அபிவிருத்தியடைந்ததென்பதையும் எங்ஙனம் அபிவிருத்தியடைந்த தென்பதையும் தருக. விடையைப் புறவரிப் படமொன்றினுதவியுடன் விபரிக்க (நவம் பர், '47)

2; 1832ம் ஆண்டுக்கு முன்பு கல்வி அபிவிருத்திக்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும்; அரசாங்கம், மிஷனரி சங்கங்கள் ஆகியன கடைப்பிடித்த கல்விக்கொள்கைகளின் வேறுபாடுகளையுந் தருக; (ஜூலை, '48)

3. "1818ம் ஆண்டுக்குப் பின்பு வீதிகள், கோட்டைகள் ஆகியன அமைத்தும், பிரதானிகளின் அதிகாரங்களைக் குறைத்தும், தமக்கென ஒரு குடியியற்சேவை முறையை ஏற்படுத்தியும் தம தாட்சியைக் கண்டி இராச்சியத்தில் வலுப்படுத்த பிரித்தானியர் முயன்றனர்." இக்கூற்றை ஆராய்க;

4. ஆள்பதி பாண்ஸ் முதலில் தெருக்களை அமைத்தற்குரிய காரணங்களையும் அவற்றினால் ஏற்பட்ட விளைவுகளையுங் கூறுக.

5, ஆள்பதி பாண்ஸ் இலங்கையின் பொருளாதார விருத்திக்கு வித்திட்டாரென்பதைக் காரணங் காட்டி விளக்குக,

6. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எமது நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கு எட்வட் பாண்ஸ் செய்த சேவைகள் யாவை (ஆகஸ்ட்,63)

பத்தாம் அத்தியாயம்

கோல்புறூக் ஆணைக் குழுவின் எடுத்துரைகள்

1815ம் ஆண்டு கண்டி இராச்சியம் இலங்கையின் ஏனைய பாகங்களுடன் இணைக்கப்பட்டபின் இலங்கை முழுவதும் ஒரே அரசின்கீழ்க் கொண்டுவரப்பட்டது; எனினும் கடற்கரைப் பிரதேசங்களில், ஒரு விதமான ஆட்சிமுறையும் கண்டிநாட்டில் இன்னொருவிதமான ஆட்சி முறையும் யாழ்ப்பாணத்தில் வேறுவிதமான ஆட்சிமுறையும் நடைபெற்று வந்தன. நீதிபாலன முறையிலும் ஆட்களுக்கேற்றவாறும் பிரதேசங்களுக்கேற்றவாறும் வெவ்வேறு விதமான நீதிகள் வழங்கப்பட்டன.

ஆகவே மேற்கூறிய முறைகேட்டை நிவிர்த்தி செய்து இலங்கை முழுவதையும் ஒரே பாலனத்தின் கீழும் ஒரே நீதி பாலனத்தின் கீழும் கொண்டுவரவேண்டிய தேவை ஏற்பட்டது. அரசாங்கத்தின் செலவு, வருமானத்திலும் பார்க்க அதிகமாக இருந்தது; இங்கிலாந்திலிருந்தே, இலங்கையிலேற்பட்ட மேலதிகச் செலவுகளை ஈடுசெய்ய வேண்டியிருந்தது; இக்காலத்திற் சேவை மானிய முறைப்படி மக்கள் நிலத்தையே வேதனமாகப் பெற்றனர்; ஆனால் பிரித்தானியர் கைப்பற்றிய பின் அரசாங்கம் தனது உத்தியோகத்தர்களுக்குப் பணத்தையே வேதனமாகக் கொடுத்தது. இதனால் வருடா வருடம் பாலனச் செலவு அதிகரித்தது. புதிதாக வருமானம் பெறக்கூடிய வழிமுறைகளும் ஆராயப்படவில்லை; இலங்கையிற் பெரும்பான்மையினர் விவசாயிகளாயிருந்ததனாலும் அவர்களது வருமானம் குறைவாக இருந்தமையினாலும், அவர்களிடமிருந்து அதிக வரியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

இங்கிலாந்து பொதுமக்கள் சபையின் உள்ளும் புறமும் இலங்கை அரசாங்க அமைப்பிலுள்ள குறைபாடுகளை வன்மையாகக் கண்டித்து இலங்கை மக்களுக்கு புனர்வாழ்வு ஏற்படுத்தவேண்டுமென இங்கிலாந்து அரசாங்கத்தைப் பலர் கேட்டுக்கொண்டனர்; அவர்கள் இலங்கையில் நெடுங்காலமாக நிலவிவரும் சேவை மானிய முறை ஒழிக்கப்படல் வேண்டுமெனவும், ஒரு சட்டக் கழகம் அமைக்கப்படல் வேண்டுமெனவும் பாரபட்சமற்ற நீதிபாலன முறை ஏற்படுத்தவேண்டுமெனவும், அரசாங்க சேவையில் சாதிமத இன பேதமின்றி அவர்களது தகமைக்கேற்றவாறு எவரையும் வேலைக்கு அமர்த்தவேண்டுமெனவுங் கேட்டுக்கொண்டனர்.

இந்நிலையில் இலங்கை ஆள்பதிக்கிருந்த அதிகாரங்களை ஆராயவும் அவரது ஆலோசனைச் சபையின் உபயோகம் என்ன என்பதை

மதிப்பிடவும் இலங்கைத் தீவின் வருமானம், செலவு முதலியன எந் நிலையிலிருந்தன என்பதைப் பரிசீலனை செய்யவும் ஒரு ஆணைக்குழுவை 1829ம் ஆண்டு ஆங்கில அரசு இலங்கைக்கு அனுப்பிவைத்தது. இக்குழுவின் தலைவர் டபிள்யூ. எம். ஜி. கோல்புறூக் (W. M. G. Colebrooke) என்பவராவர். நீதிபாலன முறையைப் பரிசீலனை செய்து எடுத்துரைகள் செய்யும் பொருட்டு சி. எச். கமரன் (C. H. Cameron) என்பவர் 1830ம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டார். இவர்கள் இருவரின் செயலாளராக ஜோன் கிரகரி என்பவரும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். கோல்புறூக் பெயர்போன பொருளாதார விற்பன்னரும், மனிதாபிமானியுமாவர். கமரன், அடம் சிமித் அவர்களால் எழுதப்பட்ட "தேசங்களின் செல்வம்" என்ற நூலிலும் ஜெரமி பெந்தம் எழுதிய "அரசியல் ஒழுக்கம்" என்ற நூலிலும் ஊறிக்கிடந்த ஒரு தாராள மனப்பான்மை யுடையவராவர். இவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டமை இலங்கையரின் அதிட்டமே.

கோல்புறூக்கும், கமரனும் இலங்கையின் பலபாகங்களுக்குஞ் சென்று சலியா உழைப்புடன் மிக உபயோகமான தகவல்களைச் சேகரித்தனர். பாலனத்தில் பல ஊழல்களிருப்பதை உணர்ந்த கோல்புறூக் இங்கிலாந்திலுள்ளது போன்ற ஆட்சிமுறைதான் இலங்கைக்கு உகந்ததென அபிப்பிராயப்பட்டார். இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டு எடுத்துரைகள் செய்யவிரும்பிய இவர், புதிய அரசியல் மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கு இலங்கையர் தகுதியுடையவர்களா யிருக்கின்றார்களா வென்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. மேலும், அக்காலத்தில் பிரித்தானியாவில் நிலவிய அரசியல், சமூக பொருளாதார கருத்துக்களின் அடிப்படையிலேதான், இவரது எடுத்துரைகள் அமைந்திருந்தன. அடம் சிமித், ஜெரமி பெந்தம், ஜோன் ஸ்ருவர்ட் மில்ஸ், வில்பர் போஸ் போன்ற சீர்திருத்த வாதிகள் மேற்கூறிய மாற்றங்கள் இங்கிலாந்தி லேற்படுவதற்கு உதவியவர்களாவர்.

இவர்கள் ஆங்கில அரசின் வணிகவியற் கொள்கை, வியாபார முழுவுரிமை முதலியனவற்றை வன்மையாகக் கண்டித்தனர். அத்துடன் சமத்துவம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், வாக்குரிமை போன்ற சனநாயக உரிமைகள் சகல குடியேற்ற நாட்டு மக்களுக்கும் வழங்கப்படல் வேண்டுமென வற்புறுத்தினர். அமெரிக்க குடியேற்றங்களை இழந்தபின் ஆங்கில அரசு, தன் குடியேற்ற நாட்டுக் கொள்கைகளின் முறைகளை உணர்ந்து, மேற்கூறிய சீர்திருத்தவாதிகளின் நியாயங்களுக்குச் செவி சாய்த்தது. வணிகவியற் கொள்கையின்படி குடியேற்ற நாடுகள் தாய்நாட்டின் நன்மைக்காகவே இருந்தனவென்று எண்ணப்பட்டது. ஆனால், நாளடைவில்

இக்கொள்கை கைவிடப்பட்டது. இப்புதிய கருத்தினைக் கோல் புறூக் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டு எடுத்துரைகள் செய்தது:

கோல்புறூக் ஆணைக்குழு, இலங்கையில் நிலவிவந்த இராச காரிய முறையைப் பொருளாதாரக் கண்கொண்டும் மனிதாபிமானக் கண்கொண்டும் நோக்கியது. இராசகாரிய முறை, மக்களின் அன் றூட வாழ்க்கையில் தலையிட்டதனால் விவசாயமும், வியாபாரமும் தடைப்பட்டன. மக்கள், தாம் தொழில் செய்யும் இடங்களையோ செய்யுந் தொழிலையோ மாற்றிக்கொள்ளத் தடையாக விருந்ததுடன் அவர்கள் குலத்திற்கேற்ப தொழில்செய்ய வேண்டியுமிருந்தது. இம் முறை மக்களை அடிமைகளாக உபயோகப்படுத்த வழிவகுத்தது. சகலர்க்கும் ஒரேவித உரிமையை அளிக்காது மக்களிடமிருந்து வேலை வாங்குவதற்காக அரசாங்கம், இராசகாரிய முறை மூலம் மறைமுக மாகச் சாதி வித்தியாசத்தைப் பேணச் செய்தது.

இராசகாரியம் செயற்பட்ட முறையிலும் பல குறையாடுகள் காணப்பட்டன. வேலை எல்லோருக்கும் சமபங்காகக் கொடுக்கப்பட வில்லை. பிரதானிகளது உறவினர்களும் அவர்களுக்கு வேண்டியவர் களும் கைலஞ்சம் கொடுத்தவர்களும் இராசகாரியம் என்னும் அர சாங்க சேவையைச் செய்வதிலிருந்து விலக்கப்பட்டனர். இவ்வண் ணம் சலுகை பெற்றோரது வேலைகள் அனைத்தும் செல்வாக்கில்லாத மக்கள் தலையில் விழுந்தன. மேற்கூறிய குறைபாடுகளினால் தூண் டப்பட்ட கோல்புறூக் ஆணைக்குழு இம்முறை ஒழிக்கப்படல் வேண்டு மெனத் தகவுரை செய்தது. இராசகாரிய முறை நீக்கப்பட்டமை யைப் பௌத்த பிக்குகளை விட ஏனையோர் வரவேற்றனர். பௌத்த பிக்குகளைத் திருப்திசெய்யுமுகமாக நிந்தகம், தேவாலகம், விகார கம், ஆகியவை சம்பந்தமாக இராசகாரிய முறையை அனுட்டிக்க லாமெனப் பிற்காலத்தில் அரசாங்கம் அனுமதித்தது. இராசகா ரிய முறை ஒழிக்கப்பட்டமை, இலங்கை வரலாற்றில் ஓர் மைற்கல் லெனலாம். இதனால் நிலமானிய முறைக்கும் சாதிக்கட்டுப்பாட்டுக் கும் இதுவரையுமிருந்துவந்த சட்ட அங்கீகாரம் முற்றுப்பெற்றது.

கறுவாச்செய்கை, கறுவா வியாபாரம் முதலியனவற்றில் முன் னர் அரசாங்கம் முழுவுரிமை பெற்றிருந்தது. அத்துடன் தேங்காய் நெய், மின்னரம் முதலியனவற்றையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. இதனால் அரசாங்கத்தின் மேற்கூறிய முழுவுரிமை தனிப் பட்டவர்களின் உரிமைக்குப் பாதகமானதெனக் கோல்புறூக் ஆணைக் குழு கருதியது. சகல வியாபாரங்களையும் அரசாங்கமே செய்துவந் தமை கட்டுப்பாடில்லா வர்த்தகமும் தனியார் முயற்சியும் விருத்தி யடைவதற்கு தடையாகவிருந்தது. அரசாங்கத்தின் வியாபார முழுவுரிமை நீக்கப்பட்டு வியாபாரம் நடைபெறுமாயின் தனியார்,

வியாபாரத்தில் ஊக்கங் காட்டுவர்; இதனால் மக்கள் கையில் மூல தனம் வந்து சேரும்; இலங்கையில் ஓர் வர்த்தக யுகம் ஆரம்பமாகும்; என கோல்புறூக் ஆணைக்குழு அபிப்பிராயப்பட்டது:

கறுவாச் செய்கையும் கறுவா வியாபாரமும் அரசாங்கத்தின் முழுவுரிமையாக விருந்தபோதும் அவற்றால் அரசாங்கத்திற்கு அதிக வருமானங் கிடைக்கவில்லை. இலங்கையின் நிதி நிலைமையை ஆராய்ந்து, தேவையான எடுத்துரைகளைச் செய்வது, இக் குழுவின் கடமைகளில் ஒன்றாகையால் அது அரசாங்கத்தின் கறுவா வியாபார முழுவுரிமை நீக்கப்படல்வேண்டுமெனத் தகவுரை செய்தது; மேலும் நிலவரி, ஏற்றுமதி வரி போன்றவை இலங்கையின் உற்பத்திப்பொருள்களைப் பாதிக்கின்றபடியால் உடனடியாக அல்லாவிடினும் படிப்படியாக அவ்வரிகள் நீக்கப்படல்வேண்டுமென்றும் அது தகவுரை செய்தது. இக்குழு அரசாங்கத்தின் வியாபார முழுவுரிமையை ஒழிப்பதற்கு இன்னொரு காரணம், அது வணிகவியலில் கொண்டிருந்த வெறுப்பேயாகும்:

1815ம் ஆண்டு கண்டி உடன்படிக்கையின்படி கண்டி இராச்சியம் இலங்கையின் ஏனைய பாகங்களுடன் இணைக்கப்பட்டது. ஆனால் அதன் பாலனம் ஆள்பதியினால் நியமிக்கப்பட்ட பிரத்தியேக உத்தியோகத்தரிடம் விடப்பட்டது: அவர்கள் ஆள்பதிக்குப் பொறுப்பானவர்களாக இருந்தனர்: ஆகவே கண்டியைப் பிரித்தானியர் கைப்பற்றிய பின்னரும் கண்டியிலும் கடற்கரைப் பிரதேசங்களிலும் வெவ்வேறான பாலனம் நடைபெற்றது: இவ் வெவ்வேறான பாலனம் பிரிவினைக்கு வழிவகுத்ததோடு சுமுகமான பாலனத்திற்கும் தடையாகவிருந்தது: இவ்விரு பிரிவான பாலனம் கண்டிப் பிரதானிகளது செல்வாக்கு, மக்களிடையே வளர்ச்சியடையவும் கண்டி மக்களும் கடற்கரைப் பிரதேச மக்களும் பரஸ்பரம் தமது வாழ்க்கை முறைகளை அறிந்துகொள்வதற்கும் தடையாகவிருந்தது.

எனவே இத்தகைய குறைபாடுகளை நிவிர்த்திசெய்யு முகமாக மேற்கூறிய பிரதேசங்களிரண்டையும் இணைத்து ஒரு பொது பாலனத்தின் கீழ்க் கொண்டுவரவேண்டுமெனக் கோல்புறூக் ஆணைக்குழு தகவுரை செய்தது: கண்டிமக்களுக்கும் கடற்கரைப்பிரதேச மக்களுக்கு மிடையே தொன்றுதொட்டு பிரதேச ரீதியாக ஏற்பட்டிருந்த வேற்றுமை மனப்பான்மை நீங்குவதற்கும் இலங்கை ஒரு பிரதேசம் என்ற கருத்து இடம்பெறுவதற்கும் இப் பொதுப் பாலனவமைப்புப் பயன்பட்டது. எங்ஙனம் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, உவேல்ஸ் என்னும் முப்பெரும் பிரிவுகள் ஒரே அரசியல் பாலன முறைகளினால் ஒற்றுமைப்படுத்தப்பட்டு பிரித்தானியா என்னும் தேசமாக வளர்ந்ததோ அதேபோல், கண்டி இராச்சியமும் கடற்கரைப் பிர

1833-ம் ஆண்டு மாகாணப் பிரிவுகள்



தேசங்களும் இணைக்கப்பட்டு ஒன்றுபட்ட இலங்கைத் தேசம் உருவா
யிற்று; அத்துடன் இப் பொதுப் பாலனத்தின் கீழ்ச் சிங்கள நாட்டு

இன்றைய மாகாணப் பிரிவுகள்



நிர்வாகத்திற்கும் தமிழ்நாட்டு நிர்வாகத்திற்குமுள்ள வித்தியாசங்கள் நீக்கப்பட்டன: கண்டி பதினறு நிர்வாகப் பகுதிகளாகவும் கடற்

கரைப் பிரதேசங்கள் ஐந்து நிர்வாகப் பகுதிகளாகவும் முன்னர் பிரிக்கப்பட்டிருந்தன. அவற்றை நீக்கி, இலங்கை ஐந்து நிர்வாகப் பகுதிகளாகக் கோல் புறூக் ஆணைக் குழுவின் எடுத்துரைகளின்படி பிரிக்கப்பட்டது. அவையாவன: வட, கீழ், தென், மேல், மத்திய மாகாணங்களாகும்.

கோல்புறூக் ஆணைக்குழுவின் எடுத்துரைகள் குடியியற் சேவையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தின: மாகாணங்களின் தொகை குறைக்கப்பட்டதையடுத்து குடியியற் சேவையாளரின் தொகையும் குறைந்தது. இவர்களின் இலைப்பாற்றுச் சம்பளங் குறைக்கப்பட்டது. ஏராளமான உயர் பதவிகள் ஒழிக்கப்பட்டன; சிலவற்றிற்குச் சம்பளமும் குறைக்கப்பட்டது. குடியியற் சேவையில் ஐரோப்பியர், இலங்கையர் என்ற பாகுபாடின்றி எல்லோரும் அங்கம் வகிக்கலாமெனக் கருதப்பட்டது. இப்படிக் கருதியமைக்குக் காரணம் பிரித்தானியருக்குக் கொடுக்கப்படும் சம்பளத்திலும் பார்க்கக் குறைந்த சம்பளத்தை இலங்கையர்க்குக் கொடுக்கலாமென நினைத்தமையே. இதனால் பாலனச்செலவு குறையுமெனக் கருதப்பட்டது. கோல்புறூக் ஆணைக்குழு கிராமச் சங்கங்களான கன்சபாவின் நீதி பாலன அதிகாரங்களை மாவட்ட நீதி மன்றுகளிடம் ஒப்படைத்தது.

கோல்புறூக் ஆணைக்குழு, இலங்கையரை அரசியலிலீடுபடுத்தப் பெரும் விருப்பினையுடையதாகவிருந்தது. இங்கிலாந்திலிருந்த பிரதிநிதித்துவ ஆட்சி முறையைப் பின்பற்றியே மக்களை அரசாங்கத்திலீடுபடச் செய்யவேண்டி இருந்தது. நெடுங்காலமாக மன்னராட்சியில் பழக்கப்பட்ட இலங்கையருக்கு தேர்தல் வழிவந்த பிரதிநிதித்துவ முறை பொருத்தமாயிரா தென்பதைக்கண்டு, நியமன முறை கொண்ட பிரதிநிதித்துவத்தை அளிக்க இக்குழு முன்வந்தது.

இதன் அடிப்படையில் ஆணைக்குழு, ஒரு சட்டக் கழகமும் ஒரு கரும நிருவாகக் கழகமும் அமைக்கப்படல் வேண்டுமெனத் தகவுரை செய்தது. செயல்படுவதற்கு முன்னர் சட்டத்தைத் திட்டவட்டமாக ஆராய்வதே சட்டக் கழகத்தின் கடமை. சட்டத்தைச் செயல்படுத்துவதிலும் வரி வகுத்தல், வரி பெறுதல் போன்ற விடயங்களில் ஆள்பதிக்குதவி புரிவதே கரும நிருவாகக் கழகத்தின் கடமையாகும். சட்டக் கழகத்தில் ஒன்பது உத்தியோகத்தரும் ஆறு உத்தியோகத்தரல்லாதோரும் அங்கத்துவம் வகிப்பர்; உத்தியோகத்தரல்லாதோர் ஆள்பதியால் நியமிக்கப்படுவர். இவர்களில், இயலும் வரையில், "வர்த்தகம் அல்லது வேறு முயற்சிகளிற் சம்பந்தப்பட்ட கௌரவமான ஐரோப்பியர் அரைவாசியினராகவும் மற்றரைவாசி உள்ளூர் மக்களில் உயர்ந்த சாதியினராகவுமிருத்தல் வேண்டும்" எனத் தகவுரை செய்யப்பட்டது; கரும நிருவாகக் கழகத்தில் ஆள்

பதியைவிட நால்வர் அங்கத்துவம் வகிப்பர். இவர்கள் பின்வருமாறு:- குடியேற்றச் செயலாளர், குடியேற்ற நிதிச் செயலாளர், முடிசார் வழக்குரைஞர், மத்திய மாகாண அரசாங்க முகவர்; இங்ஙனம் நியமிக்கப்பட்ட புதிய கழகம் 1833ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாந் திகதியன்று கூடிற்று;

இப்புதிய அரசமைப்பிலும் பல குறைபாடுகள் காணப்பட்டன. கரும நிருவாகக் கழகம், சனநாயக முறைக்கேற்பச் சட்டக்கழகத்தின் அங்கமாக இருக்கவில்லை. இதன் தலைவராக ஆள்பதியே கடமையாற்றினர். அவராலேயே இக்கழகம் கூட்டப்பட்டது; சட்டக் கழகத்திலும் பார்க்கக் கூடிய அதிகாரங்களைக்கொண்ட கருமநிருவாகக் கழகம் ஆள்பதியின் கைப்பொம்மையாகவிருந்து, அவர் செய்கையைத் தட்டிக் கேட்காது வாளாவிருந்தது; சட்டக் கழகத்தின் ஆலோசனையை ஆள்பதி செவி சாய்க்காமலிருப்பதற்குக்கூட கோல்புறூக் ஆணைக்குழு இடமளித்தது. மேலும் சட்டக் கழகத்தில் உத்தியோகத்தர் தொகை பெரும்பான்மையாக விருந்தமையால் ஆங்கில ஆட்சியைப் பாதுகாத்துவரும் அரசியற்றாபனமாக அக்கழகம் அமைந்தது;

சட்டக் கழக அங்கத்தவர்களோ மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் ஆள்பதியால் நியமனஞ் செய்யப்பட்டனர். உத்தியோகத்தரல்லாதோர் தம்மை நியமனஞ் செய்தவராகிய ஆள்பதியைத் திருப்திப் படுத்துவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். அதனால் அவர்கள் எப்போழுதும் அரசாங்கத்தையே ஆதரித்து வந்தனர்; உத்தியோகத்தரல்லாதோர் இன அடிப்படையில் நியமனஞ் செய்யப்படுவர் எனக் கூறப்பட்டது. ஆனால் நடைமுறையில் முஸ்லீம்களுக்கும் கண்டிச் சிங்களவருக்கும் 1889 ம் ஆண்டு வரையும் சட்டக் கழகத்தில் பிரதி நிதித்துவம் வழங்கப்படவில்லை; அதுவுமன்றி உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர் ஆயுள் அங்கத்தவராய் இருப்பதும் ஒரு பெருங் குறைபாடே; பாதீட்டைப் பொறுத்தளவிலும் ஆள்பதிக்குப் பூரண அதிகாரம் இருந்தது. அநேக சந்தர்ப்பங்களில் இவர் பிற அங்கத்தவர்களின் கண்ணுக்கு எட்டாமலேயே அதைத் தயார் செய்தார்; அரசியலிற் சுதேசிகள் கலந்துகொள்ளும் சந்தர்ப்பத்தைக் கோல்புறூக் ஆணைக்குழு அளித்தது; சட்டக் கழகத்தில் சுதேசிகள் சிறுபான்மையினராயிருப்பினும் மக்களின் அபிலாஷைகளை ஆட்சியினருக்கு எடுத்துரைப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. இவ்வளவில் மட்டுமே இலங்கையர், சட்டக் கழக அமைப்பினால் பயனடைந்தனரென்றே கூறவேண்டும்;

ஆள்பதியின் எல்லையற்ற அதிகாரங்கள் கோல்புறூக் ஆணைக்குழுவின் கவனத்தைக் கவர்ந்தன. அவரது எல்லையற்ற அதிகாரங்

கள் படிப்படியாகக் குறைக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு அபிப் பிராயப்பட்டது. அரசுத் துரோகியெனக் குற்றஞ்சாட்டி எவரையும் விசாரணையின்றி நாடுகடத்தவும் மறியலில் வைக்கவும் ஆள்பதிக்கு அதிகாரமிருந்தது; இதுவரையும் ஒருவருக்கொரு நீதி ஆள்பதியால் வழங்கப்பட்டது. அதுவுமன்றி ஆள்பதியின் இத்தகைய செயலைக் கட்டுப்படுத்த எந்த நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இருக்கவில்லை; ஆகவே இவர் தன்னிச்சைப்படி நடந்துகொள்ளக்கூடிய நிலையி லிருந்தார். கமரனின் தகவுரையின்படி உச்சமன்றுகள் நிறுவப்பட் டன. இதனால் சட்டத்தின் முன் சகலரும் சமன் என்ற கொள்கை வலுப் பெற்றது; இம்மன்றுகள் ஆள்பதியின் எல்லையற்ற அதிகாரங் களுக்குச் சாவுமணி அடித்தன. ஈற்றில் இராசகாரிய முறை ஒழிக் கப்பட்டமையாலும் இவரது செல்வாக்குக் குன்றிற்று;

கோல்புறூக் ஆணைக்குழு, இலங்கையின் அரசாங்க மொழி ஆங் கிலமாக விருக்கவேண்டுமெனத் தகவுரை செய்தது. இந்தியாவிலும் இதே காலத்தில் கல்வி சம்பந்தமான சீர்திருத்தங்களைச் செய்த மக் காலே ஆணைக்குழு ஆங்கிலக் கல்விக்கே முக்கியத்துவத்தைக் கொடுத்தது. மேல்நாட்டு அறிவியற் கலைகளையும், வாழ்க்கை முறை களையும் இலங்கையில் வளர்ப்பதன்மூலம் நவீன சமுதாய மொன்றை உருவாக்கலாமென கோல்புறூக் ஆணைக்குழு கருதியது; அவற்றைப் பரப்புவதற்கு ஆங்கிலக் கல்வி பயன்படுமெனத் தீர்மானித்து மேல் நாட்டு வாழ்க்கை முறைகளை இலங்கையரும் இக் கல்வியின் மூலம் பின்பற்றுவர்; இதனால் இலங்கையரது தேவையைப் பூர்த்திசெய் யும் பொருட்டு இங்கிலாந்தில் பொருள்களை உற்பத்தி செய்து ஆங் கிலேயரின் வியாபாரத்தை விருத்தியடையச் செய்யலாம்; அதுவுமன்றி இலங்கையர் ஆங்கிலக் கல்வி பயின்று அரசாங்க சேவையில் சேர் வார்களேயானால் அரசாங்கச் செலவு குறையும். மேற்கூறிய கார ணங்களினால் கோல்புறூக் ஆணைக்குழு ஆங்கிலம் அரசாங்க மொழி யாக இருக்க வேண்டுமெனத் தகவுரை செய்தது;

கமரன் தனது நீதித்துறை அறிக்கையில் ஆள்பதியின் அதிகாரத் திற்கு உட்பட்டிருந்த சிவில் நீதிமன்றுகளின் விசாரணை முறை திருப்தியற்றதெனவும் அவைகளின் நீதிபதிகளுக்குச் சட்டவறிவு இல்லையெனவும் சுட்டிக் காட்டினார். இவரது எடுத்துரைகள் பின் வருமாறு: குடியியற் பாலனமும், நீதிபாலனமும் வேறுக்கப்படல் வேண்டும்; இவ் முழுவதையும் ஒரே மாதிரியான நீதிபாலனத்தின் கீழ்க் கொண்டுவரவேண்டும்; ஐரோப்பியரது வழக்குகளை உச்ச மன்றே விசாரணை செய்ய வேண்டுமென்ற நியதி நீக்கப்படல் வேண்டும்; சிவில் நீதிமன்றுகள் ஆள்பதியின் அதிகாரத்திலிருந்து எடுக்கப்படல் வேண்டும்; உச்சமன்று கிரிமினல் வழக்குகளை விசா ரணை செய்வதோடு, சிவில் மன்றுகளிலிருந்து வரும் மனுக்களையும்

விசாரணை செய்யவேண்டும்; பிரதான நகரங்களில் மாவட்ட மன்று கள் நிறுவப்படல் வேண்டும், இவ்வெடுத்துரைகளிலுல் ஐரோப்பிய ரும், இலங்கையரும் சட்டத்தின் முன் சமன் என்ற கருத்து வெளி யாயிற்று. நீதிபாலனமும் இலங்கை முழுவதற்கும் ஒன்றுக்கப்பட்ட தால் இலங்கை ஒரே தேசம் என்ற உணர்ச்சி இலங்கையரிடையே வலுவடைந்தது.

கோல்புறூக் ஆணைக்குழுவின் எடுத்துரைகள் பழமைக்கும் புது மைக்குமிடையில் உள்ள ஒரு மகத்தான திருப்பம். அது பொரு ளாதாரம், சமூகம், அரசியல் ஆகியனவற்றில் இலங்கையில் ஒரு மாற் றம் உண்டாவதற்குக் காரணமாய் இருந்ததோடு பிற்காலச் சரித் திரத்தையே மாற்றியமைத்தது.

வினுக்கள்

1. எவ்வகையில் கோல்புறூக் ஆணைக்குழு தனியார் தாளாண்மை யை இலங்கையில் ஊக்கப்படுத்திற்று (ஜூலை, '47)
2. (a) இலங்கையின் குடியியற் சேவை
   (b) நீதிபாலனம் ஆகியனபற்றி கோல்புறூக், கமரென் ஆகிய இருவரும் வெளியிட்ட கண்டனங்கள் யாவை? (ஆகஸ்ட், '50)
3. கட்டாயக் கூலிவேலை முறையை நீக்கும்படி கோல்புறூக் சிபார்சு செய்ததன் காரணமென்ன? 1802ம் ஆண்டிலும் பார்க்க 1833ம் ஆண்டில் மக்களால் மிகவும் வரவேற்கப்பட்டதேன்? (டிசம். '55)
4. கோல்புறூக் கமரென் என்பவர்களின் சீர்திருத்தங்களுடன் தற் கால இலங்கை ஆரம்பமாயிற்றென எவ்வகைகளிற் கூறலாம்? (டிசெம்பர், '56)
5. கோல்புறூக் கமிஷனரின் சிபார்சுகளின் பயனுக வியாபாரத் தடைகளின் நீக்கமும் இராசகாரிய ஒழிப்பும் எவ்வாறு நாட் டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவியாகவிருந்தது. ஜூலை, '57)
6. இராசகாரியமுறை என்றுல் என்ன? இம்முறையை அகற்றுவதை சிங்கள மக்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் எதிர்த்ததேன்? கோல்புறூக் குழுவினர் இம்முறை அகற்றப்படல் வேண்டுமென்று கூறியபோது அவர்கள் தம் கருத்தை மாற்றிய தேன்? (டிசெம்பர், '60)
7. கோல்புறூக் குழுவினரின் முக்கிய சிபார்சுகள் யாவை? 1850 ம் ஆண்டுவரை இச்சீர் திருத்தங்களின் விளைவுகளைத் தொடர்பா கக் கூறுக. (டிசெம்பர், '61)
8. கோல்புறூக்—கமரென் விசாரணைக் குழுவின் முக்கிய சிபார்சு கள் யாவை? இச் சீர் திருத்தங்கள் எமது நாட்டின் பிற்காலச் சரித்திரத்தை எவ்வாறு மாற்றியமைத்தன? (டிசெம்பர், '63)
9. வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.
   (1) இலங்கையை மாகாணங்களாகப் பிரித்தல் (ஆகஸ்ட், '
   (2) கோல்புறூக் (ஆகஸ்ட், '67)

பதினைராம் அத்தியாயம்

1848–ம் ஆண்டுக் கண்டி விவசாயிகளின் கலகம்

கோல்புறூக் ஆணைக்குழுவின் சீர்திருத்தங்களிலுள்ள குறைபாடுகளே 1848ம் ஆண்டுக் கலகத்தின் முக்கிய பெருங் காரணங்களாக அமைந்தன. மாகாண எண்ணிக்கை குறைக்கப்பட்டமை, பெரும்பாலும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தைப் பாதித்து அவர்களிடையே அதிருப்தியை உண்டாக்கியது. இக்குழுவின்எடுத்துரைகளின் விளைவாக நாடு முழுவதும் ஒரே பாலனத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது; இச் சீர்திருத்தங்களின் முன் இலங்கை, இருபத்தொரு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது; இதனால் மாகாணத்திற்குப் பொறுப்பான நிர்வாக அதிகாரி அம்மாகாண மக்களை நன்கு நிர்வகித்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார். ஆனால் தற்போது இலங்கை ஐந்து மாகாணங்களாகக் குறைக்கப்பட்டமையால் மாகாணங்களின் வித்தீரணம் கூடிற்று. இதனால் மாகாணத்திற்குப் பொறுப்பாகவிருந்த குடியியற்சேவையாளர் தலைநகரங்களைச் சுற்றியுள்ள பிரதேசங்களைக் கவனித்தார்களேயன்றி கிராமப் புறங்களில் கவனஞ் செலுத்தாது விட்டமையினால் கிராமப் புறங்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்பட்டது.

கோல்புறூக் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின் விளைவாக இதுவரையும் விவசாயிகளுக்கு உதவியாகவிருந்த கன்சபாவ போன்ற தாபனங்கள் மறைந்தன. சட்டக் கழகத்தில் அங்கத்துவம் வகித்த உத்தியோகத்தரல்லாதோரின் தலையீட்டினால் அரசாங்கம் வியாபாரிகளினிதும், தோட்ட முதலாளிகளினதும் நன்மைகளையே கவனித்து வந்தது; ஆனால் ஏழை விவசாயிகளின் குறைகளை அரசாங்கத்திற்கு எடுத்துரைக்க எத்தாபனமும் இருக்கவில்லை. முற்காலத்தில் அரசாங்கம், நீர்ப்பாசன வசதிகளைச் செய்துகொடுத்து விவசாயத்தை அபிவிருத்தி செய்வதில் பேரூக்கங்காட்டிற்று; விவசாயிகள் இவ்விடயத்தில் அரசாங்கத்தையே நம்பியிருந்தனர். 1833ம் ஆண்டிற்குப் பின் காசுப் பயிர்ச் செய்கையில் அதிக கவனமெடுத்து விவசாயத்தையும் நீர்ப்பாசனத்தையும் புறக்கணித்தது. கோல்புறூக் ஆணைக்குழு தானிய வரியிலிருந்தும், முடிக்குரிய நிலங்களை விற்று வரும் வருமானத்தின் அரைப்பகுதியிலிருந்தும், பழைய குளங்களையும், கால்வாய்களையும் திருத்தவேண்டுமெனத் தகவுரை செய்தது. ஆனால் இத் தகவுரைப்படி செய்யக்கூட அரசாங்கம் தவறிற்று. இலங்கையின் பல்வேறு பகுதிகளில், குறிப்பாக அனுராதபுரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், ஊவாப் பகுதியிலும் பல

குளங்களும் கால்வாய்களும் தூர்ந்து போயின; இதனால் விவசாயம் தடைப்பட்டது; இப்பிரதேச மக்கள் உண்ண உணவின்றி வறுமையால் நலிந்ததுமன்றி மலேரியாச் சுரத்தின் கொடுமைக்குமாளாயினர்; தங்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் அரசாங்கமே என்பதை உணர்ந்த விவசாயிகள் அரசாங்கத்தின் மேல் வெறுப்படைந்தனர்;

இராசகாரியமுறையின் கீழ் கன்சபாக்கள் இருந்தமையால் விவசாயிகளுக்கு இக் கஷ்டநிலைமை ஏற்படவில்லை; கன்சபாக்கள் குளங்களையும் கால்வாய்களையும் பாதுகாத்து வந்தன. விவசாயிகள் தங்களுக்கென பிரித்துக் கொடுக்கப்பட்ட பங்கை பாதுகாத்து வந்தனர்; இவர்களிடையே ஏற்படும் பிணக்குகளை கன்சபாக்களே தீர்த்து வைத்தன; அக்காலத்தில் மக்களிடையே நிலவி வந்த ஒற்றுமைக்குக் காரணமாயிருந்த இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டதும் அவர்களிடையே வழக்குகள் எழலாயின;

புதிதாக நிறுவப்பட்ட நீதிமன்றுகள் இவ் வழக்குகளை விசாரணை செய்து சரியான தீர்ப்பை அளிக்கமுடியாமலிருந்தன; அத்தோடு வழக்குகள் முடிவடைந்து தீர்ப்புக் கூறுவதற்கு காலதாமதமேற்பட்டது; இதற்குக் காரணம் ஐரோப்பிய நீதிபதிகளுக்கு இந்நாட்டு தேச வழமையோ, நாட்டில் தொன்றுதொட்டிருந்துவந்த சட்ட திட்டங்களோ தெரியாமலிருந்ததே; அதுவுமன்றி ஆங்கில காணிச் சட்டங்கள் கிராமங்களில் குடும்பம் கூட்டு வாழ்வினைப் பாதித்தது. முற்காலத்தில் காணிகளை மற்றவர்களுக்கு விற்பதும் பிரிவிடுதல்செய்வதும் கடினமாயிருந்தது. தற்போது இவை இலகுவாக்கப்பட்டமையினால், மக்கள் நீதிமன்றுகளிலே நேரத்தைச் செலவு செய்தனர்; சிவில் வழக்குகளைத் தவிர கிரிமினல் வழக்குகளிலும் மக்கள் ஈடுபடத் தொடங்கினர். இவர்களுக்குச் சரியான முறையில் வழக்கை நடத்துவதற்குத் தேவையான சட்டஅறிவும் இல்லாதிருந்தது; இதனால் மக்கள் வழக்குரைஞர்களுக்குப் பணத்தை ஏராளமாகக் கொடுத்தனர். எஞ்சியிருந்த காணிகளைக் கூட விற்று வழக்குகளை நடாத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயினர். ஆகவே இவர்கள் வறுமையுற்றமைக்கு அரசாங்கமே காரணமாயிருத்தது.

மலேயகத்தில் காசுப் பயிர்ச்செய்கை விருத்தியடையவே முடிக்குரிய காணிகளையும் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான காணிகளையும் தோட்ட முதலாளிகள் வாங்கினர்; அக்காலத்தில் சரியான முறையில் பங்கீடு செய்யும் முறை இல்லாததன் காரணமாக தோட்ட முதலாளிகள் தங்கள் விருப்பப்படி நிலங்களைச் சுவீகரித்துக் கொண்டனர், மந்தை மேய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களிற்

கூட தோட்ட முதலாளிகள் தோட்டங்களை உண்டாக்கினர்; பல வருடங்களாக நிலத்திற்குச் சொந்தக்காரராகவிருந்த கண்டி மக்கள் அந்நிலங்கள் அந்நியரிடஞ் செல்வதை விரும்பிலர். அதுவுமன்றிக் காசுப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்ததன் காரணமாகப் பல புதிய தொழில்கள் உண்டாயின; இத்தொழில்களுக்கு மூற்றிலும் புதிதான கண்டி மக்கள் அவைகளில் ஈடுபடப் பின் நின்றனர்.

ஆனால் தாழ்நிலச் சிங்களவர் இத்தொழில்களில் ஈடுபட்டுக் கண்டிப் பிரதேசத்திற் குடியேறினர்; தோட்டங்களில் வேலைசெய்வதற்காக இந்தியத் தொழிலாளர் இப்பிரதேசங்களுக்கு வருவிக்கப்பட்டனர். மேலும் அரசாங்கத்தின் மதுக்கொள்கை காரணமாக மக்களுக்கு இலவசமாகச் சாராயத்தை விநியோகித்துக் குடிக்கும் பழக்கத்தைத் தோற்றச் செய்து வெற்றிகண்டபின் காசுக்கு விற்றனர்; 1848ம் ஆண்டில் 133 சாராயத் தவறணைகள் கண்டிப்பிரதேசத்திற் காணப்பட்டன; அதே சமயம் அக்காலத்தில் நான்கு பாடசாலைகள் மட்டுமே இருந்தன; இவை அரசாங்கத்தின் போக்கையே பிரதிபலிப்பனவாயிருந்தன; அந்நியர் மலையகத்தில் குடியேறித் தீய ஒழுக்கங்களைப் பரப்பி அச்சமுதாயத்தின் சீரிய ஒழுங்கினைக் குலைத்தனர்; மேற்கூறிய காரணங்களினாற் கண்டி மக்கள் அந்நிய ஆட்சியை வெறுப்புடன் நோக்கினர்;

1818ம் ஆண்டுக் கண்டிக் கலகத்தின் பின் பிரதானிகளது அதிகாரங்கள் குறைக்கப்பட்டன; இவர்களது அதிகாரங்கள் சட்டரீதியாகக் குறைக்கப்பட்டாலும் இவர்களது செல்வாக்கு மக்களிடையே நிலவியிருந்தது. இந்நாட்டு மொழிகளையும் நாட்டு வழக்கங்களையும் தெரியாத குடியியற் சேவையாளர் இதுவரையும் பிரதானிகள் செய்து வந்த கடமைகளைச் செய்யும் பொருட்டு நியமிக்கப்பட்டனர். குடியியற் சேவையாளர், சுதேச மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றிருக்கவேண்டுமென்ற நியதியிருந்தபோதிலும் அவர்கள் அதை மீறினர்; ஆகவே அவர்கள், பிரதானிகள் மூலமாகவே மக்களுக்கும் தங்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்திக்கொண்டனர். நாளடைவில் பிரதானிகளின் செல்வாக்குக் குறைக்கப்பட்டுவிட்டதென்பதை அறிந்த மக்கள் அவர்களுக்குக் கீழ்ப்பணிய மறுத்தனர்; அத்துடன் பிரதானிகள், மக்களின் சீர்கேடுகளையும் குறைகளையும், அபிலாஷைகளையும் அரசாங்கத்திற்கு எடுத்துரைக்கத் தவறி வாளாவிருந்தனர்; மேலும் குடியியற் சேவையாளரிற் பலர் அதிக வருமானத்தைப் பெறும்பொருட்டு காசுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இவர்கள் தமது உத்தியோக கருமங்களிலும் பார்க்கச் சொந்த வருமானத்தைப் பெருக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர், இதனால் இவர்களால் நல்லாட்சி புரிய முடியவில்லை

கண்டி மக்கள், இவர்களைத் தோட்டச் சொந்தக்காரர்களாகக் கருதினர்களே தவிர அரசாங்க சேவையாளராகக் கருதவில்லை.

பிரித்தானிய அரசாங்கம் எப்பொழுதும் பிரதானிகளையும், பௌத்த சங்கத்தையும் சந்தேகக் கண்கொண்டே நோக்கி வந்தது. பௌத்த சங்கம் பிரித்தானியரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்குப் பிரெஞ்சுக்காரரின் உதவியையும், சீயத்து மன்னனது உதவியையும் நாட முயலுகின்றது என்ற வதந்தி வெளிவரலாயிற்று. இத்தகைய நடவடிக்கையில் பிரதான பங்கு முதலதிகாரியாகிய இளைய மொல்லிக்கொடைக்கு உண்டென்ற தகவலை பிரித்தானிய ரிடமிருந்து சில சலுகை பெறும் குறிக்கோளுடன் மஹாவலதென (Mahavalatenne) என்பவன் அரசாங்கத்திற்குக் கொடுத்தான். இந்த ஆதாரமற்ற செய்தியை உண்மையென எண்ணிய அரசாங்கம் மொல்லிக்கொடையைப் பதவியிலிருந்து நீக்கி மஹாவலதெணயை முதல் அதிகாரியாக நியமித்தது. சிறிது காலஞ் சென்றபின் தங்களது அபிப்பிராயம் பிழையென உணர்ந்து நான்கு கோறளைக்கு மொல்லிக்கொடையை திசாவையாக நியமித்தனர். ஆகவே இத்தகைய நடவடிக்கைகளும் பிரதானிகளது மத்தியில் ஒருவித அதிருப்தியை உண்டாக்கியது. இவை ஒருபுறமிருக்க இன்னொரு புறம் அரசாங்கத்தின் வேறொரு செயல் பௌத்த சங்கத்தை அதிருப்தியடையச் செய்தது. முன்பு தலதா மாளிகை கண்டி மன்னன் பொறுப்பிலேயே பெரளவில் விடப்பட்டிருந்தது. அவன் மல்வத்தை அஸ்கிரியா வகுப்பின் பிரதம குருவிற்கே பௌத்த தேவாலயங்களின் பாலனப் பொறுப்பைக் கொடுத்தான். ஆனால் 1847ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் தேவாலயங்களின் பாலனப் பொறுப்பை மல்வத்தை அஸ்கிரியா வகுப்பின் பிரதம குருவிடமிருந்து பறித்து அப்பொறுப்பை ஒரு நிலமை (Nilame) யிடம் கொடுத்தது. இதுமட்டுமன்றி இதுவரையும் வருடா வருடம் தலதா மாளிகைக்கு உதவி நன்கொடையாகக் கொடுக்கப்பட்டு வந்த 300 பவுண் நிறுத்தப்பட்டது. இதனாலும் பௌத்தர் அரசாங்கத்தின்மீது வெறுப்புக்கொண்டனர்.

இலங்கைச் சுதேசிகள் மட்டுமே அரசாங்கத்தின்மீது அதிருப்தியடைந்திருக்கவில்லை. இலங்கை வாழ் பறங்கியரும் வெறுப்புற்றிருந்தனர். இவர்களில் அதிகமாக நகர்ப்புறங்களில் வீடுகளை அமைத்து வாழ்ந்து வந்தனர். இவர்களது வீட்டு விருந்தைகள் வீதியோரமாகக் கட்டப்பட்டிருந்தன. இவ்விருந்தைகள், வீதி வித்தரிப்புக்குத் தடையாகவிருந்தன. ஆனால் வீதி வித்தரிப்பும் இன்றியமையாததாகவிருந்தது. மேலும் விருந்தைகள் கட்டுவதைத் தடுப்பதற்காகவும் ஏற்கனவேயுள்ள விருந்தைகளை அகற்றுவதற்

காகவும் "விருந்தை வரி" விதிக்கப்பட்டது; இதனால் அதிருப்தி யடைந்த பறங்கியர் இவ்வரியை எதிர்த்துப் பிரசாரஞ் செய்தனர்; "ஒப்சேவர்" பத்திரிகையில் கண்டனப் பிரசுரம் வெளியாயிற்று. அதுவுமன்றி அவர்கள், ஆள்பதி ரொறிங்ரனின் ஆட்சியின் குறை பாடுகளை குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அறிவித்தனர்.

இங்ஙனம் மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்புற்றிருக்கும் பொழுது உலகச் சந்தையில் இலங்கைக் கோப்பியின் விலை வீழ்ச்சி யடைந்தது; ஆகவே கோப்பி வியாபாரத்தில் அரசாங்கத்திற்கு நட்டம் உண்டாயிற்று. இக்காலத்திற்முன் ஐரோப்பிய அரசியற் கருத்துக்கள் முதன் முதலாக இலங்கையிற் புக ஆரம்பித்தன. இலங்கையின் வரிமுறை நன்கு பரிசீலனை செய்யப்பட்டது; அர சாங்க வருமானம், ஏற்றுமதி இறக்குமதி வரிகளில் தங்கியிருப்பதி லும் பார்க்க நேரடியான வரிகளில் தங்கியிருப்பது உகந்ததென ஆங்கில அரசு தீர்மானித்தது. இதனால் இலங்கையில் ஏற்றுமதி இறக்குமதி வரி குறைக்கப்பட்டமையால் அரசாங்கத்தின் வருமா னங் குறைந்தது; ,ஆகவே அரசாங்கத்தின் பண நெருக்கடியைச் சமாளிப்பதற்காக பல வரிகள் 1847ம் ஆண்டு விதிக்கப்பட்டன. முதலாவதாக முத்திரை வரி உயர்த்தப்பட்டது. இது வழக்குத் தொடர்வோரை மிகவும் பாதித்தது. இரண்டாவதாக கப்பல், தோணி, வண்டி, நாய், துப்பாக்கி முதலியனவற்றில் வரி விதிக்கப் பட்டது; கிராமங்களிலே வாழ்ந்து வந்த ஏழை விவசாயிகளை நாய் வரியும் துவக்கு வரியும் பாரதூரமாகப் பாதித்தன. தங்கள் வயல் நிலங்களையும் தோட்டங்களையும் வன விலங்குகளிலிருந்து காப்பாற் றிக்கொள்வதற்கு அவர்கள் வைத்திருந்த துவக்குகள் மீதும் நாய்கள் மீதும் வரி விதித்தமை, அவர்களை அரசாங்கத்தின்மீது வெறுப்புக் கொள்ளச் செய்தது. கடற்கரைப் பட்டினங்களிலுள்ள மீனவர் களை கப்பல் வரியும், தோணி வரியும் பாதித்தன. சில்லறைச் சாமான்களை ஏற்றி, இறக்கி, அதனால் பெறும் வருமானத்தை ஊதிய மாகக் கொள்வோரை, வண்டி வரி பாதித்தது;

மூன்முவதாகப் புதிதாகக் கொண்டுவரப்பட்ட வீதிச் சட்டத் தின் பிரகாரம் ஒவ்வொரு ஆணும் தலைவரியாக மூன்று சிலிங் அர சாங்கத்திற்குக் கொடுக்கவேண்டுமெனவும் அன்றேல் ஒவ்வொரு ஆணும் வருடத்தில் ஆறு நாட்களுக்கு வீதியமைக்கும் வேலையில் ஈடு படவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது; இப்புதிய வீதிச் சட்டத் தின் வாயிலாக, ஒழிக்கப்பட்ட இராசகாரிய முறையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர ஆள்பதி ரொறிங்ரன் முயற்சிக்கின் முரென மக்கள் சந்தேகங் கொண்டனர்; இத்தகைய வரிகள் விதிக் கப்பட்டபோதும் அவற்றை மக்கள் செலுத்தியிருப்பர். ஆனால் அர

சாங்கம் ரொக்கப் பணமாகவே வரிகளைச் செலுத்தவேண்டுமெனக் கூறிற்று. மக்களிடையே பணப்புழக்கம் குறைவாகவிருந்த காலத்தில் ரொக்கப்பணமாகவே வரிகளைச் செலுத்துவது சிரமத்தைக் கொடுத்தது; இச்சமயத்தில் அரசாங்கம், குடிசனப் பொருளியல் மதிப்பீடொன்றை நடத்த முன்வந்தது. இதற்கு முப்பது கேள்விகளடங்கிய பத்திரமொன்றை மக்களிடம் வழங்கி ஒவ்வொரு குடும்பத்தின் பொருளியல் நிலைபற்றிய கணக்கு விபரங்களைப் பெற்றது. இவ் விபரங்களைப் பெற்று மேலும் முப்பது வரிகளை அரசாங்கம் விதிக்கவிருக்கின்றதென்ற வதந்தி நாடெங்கும் பரவிற்று. ஏற்கனவே அரசாங்கத்தின் வரிக்கொள்கையினால் வெறுப்புற்ற மக்களிடையே இக்குடிசன மதிப்பீடு அவ்வெறுப்புணர்ச்சியை மேலும் வளர்த்தது:

இச் சமயத்தில் மாத்தளை, டம்புளை ஆகிய இடங்களில் முயே புறங் அப்பு (Purang Appu) கொங்கலகொடை பண்டா (Gongallagoda Banda) என்ற இருவர் தோன்றி தங்களை அரசர்களாகப் பிரகடனஞ் செய்துகொண்டு அவ்வப் பகுதிகளில் மக்களின் ஆதரவை நாடினர், ஏற்கனவே அரசாங்கத்தின் மீது வெறுப்புற்று அதை அரசாங்கத்திற்கு வெளிக்காட்ட ஒரு சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்த மக்களுக்கு மேற்கூறிய தலைவர்களின் ஆர்ப்பாட்டம் அரியதொரு சந்தர்ப்பத்தை அளித்தது. இதை அடுத்து 1848-ம் ஆண்டு ஜூலை மாதம் கண்டியில் தூவக்கு வரியை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டஞ் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டம் குடியேற்றச் செயலாளர் சேர் எமேர்சன் ரெனன்ட் (Sir Emerson Tennent) என்பவனின் தலையீட்டினால் அடக்கப்பட்டது; கொழும்பிலும் வரிகளை எதிர்த்துச் சில இடங்களில் சிறு குழப்பங்கள் உருவெடுத்தன; ஆனால் கிறிஸ்தோபர் எலியட் என்பவரின் தலையீட்டினால் அவை தணிந்தன: அவர் ''கொழும்பு ஒப்சேவர்'' எனும் தனது பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கந் தீட்டி வரிகளை வன்மையாகக் கண்டித்தார்: மக்கள் பிரெஞ்சுக்காரரைப் பின்பற்றி வரிசெலுத்த மறுக்கவேண்டுமென்றும், இனச் சமத்துவம் சர்வசன வாக்குரிமையுங் கொண்ட சனநாயக சமுதாயம் இலங்கையில் உருவாகவேண்டுமென்றுங் கோரினார்; மேலும் இவர் அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கெதிராக குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு மனுச் செய்வதன் மூலம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென விரும்பினார். இதுபோன்ற கோரிக்கைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு கண்டிப் பிரதேசத்தில் விநியோகஞ் செய்யப்பட்டன; எனினும் இதனால் போதிய பலன் கிடைக்கவில்லை;

கண்டி, மாத்தளை, குருநாகலை ஆகிய இடங்களிற் காட்டுத்தீ போல் கலகம் பரவிற்று; கலகக்காரர், அரசாங்கத் திணைக்களங்களை

யும் கடைகளையும் தோட்ட முதலாளிகளின் வீடுகளையும் தாக்கினர்; ஆள்பதி ரொறிங்ரன், பதவியேற்று சில மாதங்களுள் கலகம் ஆரம்பித்தமையால் என்னசெய்வதென்பதறியாது படைத்தலைவர்களையும் அரசாங்கத் திணைக்களத் தலைவர்களையும் அழைத்து ஆலோசனை நடத்தினார்; ரொறிங்ரனின் ஆலோசகர்களாக விளங்கியவர்களுட் பலர் 1817, 1818ம் ஆண்டுக் கலகத்தின்போது இலங்கையில் கடமையாற்றியவர்களும் தோட்ட முதலாளிகளுமாவர். இத் தோட்ட முதலாளிகள் தோட்டங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் கலகத்தைத் தீவிரமாக அடக்கும்படி ரொறிங்ரனைத் தூண்டினர். இதன் முந்திய கலகத்தில் இலங்கையில் கடமையாற்றியோர், அக் கலகத்தின் வேகத்தையும், அதை அடக்க அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும், அதனாற்பட்ட கஷ்டங்களையும் எடுத்துரைத்தனர்.

இவற்றைக் கேள்வியுற்ற ரொறிங்ரன் இக்குழப்பமும் 1817-ம் 1818ம் ஆண்டுக் கலகத்தைப்போல் மாறிவிடுமென அஞ்சி முதல் நடவடிக்கையாக மத்திய, மேல்மாகாணப் பகுதிகளில் படையியற் சட்டத்தைக் கொண்டு வந்தார்; மாத்தளை, டம்புளை, குருநாகலைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்குப் படைகள் சென்று குழப்பத்தில், கலந்துகொண்டோர், கொள்ளாதோர் என்ற பேதமையின்றி மக்களைத் துன்புறுத்தினர்; மக்களைப் பயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களது வீடுகளையும் பயிர் நிலங்களையும் தீக்கிரையாக்கினர், மக்கள் இத்தகைய கொடுமைக்கு அஞ்சித் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறிக் கரந்து வாழலாயினர்;

மேலும் கண்டி, குருநாகலை, மாத்தளை முதலிய இடங்களில் இராணுவ நீதிமன்றுகளை நிறுவிக் குழப்பத்தில் எத்தகைய தொடர்புங் கொள்ளாதவர்களையுங் கூடத் தொடர்பு கொண்டோரெனக் குற்றஞ்சாட்டித் தண்டனை அளித்து வந்தனர். பிரித்தானிய ஆட்சியை ஒழிப்பதற்கு பிரதானிகளாலும் பௌத்த குருமார்களாலும் நடாத்தப்படும் கலகம் இதுவென அரசாங்கம் தவறுக எண்ணியது. கிறிஸ்தோபர் எலியட், பேக்குசன் (A. M. Firguson) ஆகிய இருவரும் கலகத்தைத் தூண்டி விட்டவர்களென அரசாங்கம் ஐயுறவு கொண்டது. அதுவுமன்றி படையியற் சட்டம் அமுலிலிருக்கும் பகுதிகளில் தலை காட்டக் கூடாதெனவும் இவர்கள் எச்சரிக்கப்பட்டனர். பலர் சிறை வைக்கப்பட்டனர். இன்னும் பலர் நாடுகடத்தப்பட்டனர். வேறு பலர் சவுக்கடித் தண்டனைக்குள்ளாயினர். புறங் அப்பு, கொங்கல கொடை பண்டா ஆகிய இருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்; இவர்களிருவரைப்பற்றிய தகவல் கொடுக்காத குற்றத்திற்காக குட்டபொல உனன்சே (Kuddapolla Unanse) என்னும் பௌத்த பிக்கு

குரு அங்கியுடன் சுட்டுக் கொல்லப்பட்டார். 1848ம் ஆண்டில் மட்டும் இருநூறுபேர் சுட்டுக் கொல்லப்பட்டனரெனின் ரொறிங்ரன் கலகத்தையடக்குவதற்கு எடுத்துக்கொண்ட தீவிர நடவடிக்கை எத்தகையது என்பது வெள்ளிடை மலை. ரொறிங்ரனின் இத்தகைய தீவிர நடவடிக்கையாலும், படையியற் சட்டம் அமுலில் இருந்தமையாலும் விரைவில் கலகம் அடக்கப்பட்டது.

கலகத்தின் காரணங்களையும் அதை அடக்குவதற்கு ரொறிங்ரன் கடைப்பிடித்த மனிதநீதிக் கப்பாற்பட்ட அடக்குமுறைகளையும் இங்கிலாந்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பலர் விரும்பினர். லோறன்ஸ் ஒலிபன்ட் (Lawrence Oliphant) பேக்குசன், எலியட் ஆகியோர் இங்கிலாந்திலுள்ள தங்களது நண்பன் கிறிஸ்ரீ (T. J. Christie) மூலமாக ரொறிங்ரனும், அவனது அதிகாரிகளும் இலங்கையில் விளைத்த அநீதிகளைப் பற்றி குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கும் இங்கிலாந்து பொதுமக்கள் சபைக்கும் தெரிவித்தனர். எனவே பொதுமக்கள் சபை உறுப்பினராகிய ஜோசேப் ஹியூம், (Joseph-Hume) செல்பி (H. C. Selby), ஹென்றி பெய்லி (Henry Baile) ஆகியோர் ரொறிங்ரனும் அவனது அதிகாரிகள் சிலரும் முறைகேடாக நடந்து கொண்டார்களென்றும் அவர்களது நடவடிக்கைகள்பற்றி விசாரணைசெய்து அவர்களைத் தண்டிக்கவேண்டுமென்றும் பொதுமக்கள் சபையில் பிரேரித்தனர்.

1848 ம் ஆண்டு பிற்பகுதியில் கலகத்தைப்பற்றி ஒரு விசாரணைக் குழு விசாரணை நடத்திற்று. இவ்விசாரணைக் குழுவின் முன் கருத்துரைகள் வழங்கியோர் பிரித்தானிய அரசாங்கத்தின் பாலனச் சீர்கேடுகளைப் பற்றி விளக்கினர். விவசாயிகளின் சீர்கேடுற்ற நிலையும் அவர்கள்மீது திணிக்கப்பட்ட வரிகளுமே கலகத்தை விளைவித்தன்ற உண்மையை உணர்த்தினர். இவர்களின் கருத்துரைகள் இரு பிரதானமான உண்மைகளை அரசாங்கத்திற்கு உணர்த்திற்று. ஒன்று, பாலனச் சீர்கேடுகளை நிவிர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். இரண்டு, கீழ்நிலையை அடைந்துள்ள விவசாயிகளின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதற்கு அரசாங்கம் வழிவகுக்கவேண்டும். மேலும் இவ் விசாரணைக் குழு ஆள்பதி ரொறிங்ரனும் கப்டின் உவற்சனும் (Captain Watson) கலகவேளையில் அநீதியான முறையில் நடந்துகொண்டார்களென அபிப்பிராயப்பட்டது. பதவிநீக்கம் செய்யப்படுவதற்கு முன்பேயே ரொறிங்ரன் தனது பதவியை விலகல் செய்துவிட்டுத் தாயகம் திரும்பினன். கப்டின் உவற்சன் இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்டான்.

வினாக்கள்

1. 1848 ம் ஆண்டுக் கலகத்திற்கு கோல்புறூக் ஆணைக் குழுவின் சீர் திருத்தங்கள் எவ்வகையில் காரணங்களாக இருந்தன.

2. 1848ம் ஆண்டுக் கலகத்தினால் இலங்கைச் சமுதாயத்தில் பிற்காலத்திலேற்பட்ட மாற்றங்கள் யாவை?

3. 1848ம் ஆண்டுக் கலகம் தோன்றியமைக்குரிய பொருளாதாரக் காரணங்களைத் தருக.

4. புரங் அப்பு 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இலங்கையின் மறுமலர்ச்சி இயக்கத்தில் எத்தகைய பங்கு எடுத்துக் கொண்டார். (ஜூலை '54)

5. சிறு குறிப்புகள் எழுதுக, டொறிங்ரன் பிரபு (டிசெம்பர், '59)

6. 1848ம் ஆண்டுக் கலவரங்களை உண்டாக்கிய நாட்டு நிலைமைகள் யாவை? இவற்றின் விளைவுகள் யாவை? (ஆகஸ்ட், '63)

7. 1848ம் ஆண்டுக் கலகம் விளைவதற்கான காரணங்கள் யாவை? அதனுடைய விளைவுகள் யாவை? (டிசெம்பர், '64)

பன்னிரண்டாம் அத்தியாயம்

பொருளாதார அபிவிருத்தி

கைத்தொழிற் புரட்சியின் விளைவாக பத்தொன்பதாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கைத்தொழில் அதிக முன்னேற்றமடைந்தது; இங்கிலாந்தி லுற்பத்தி செய்யப்படும் கைத்தொழிற் பொருள்கள் குடியேற்ற நாடுகளிலேயே விற்பனை செய்யப்பட்டன; எனவே குடியேற்ற நாடுகளில் கைத்தொழில் பெருகினால் இங்கிலாந்தின் பொருள்களுக்கு அருமை இருக்காதென நினைத்து ஆங்கில அரசாங்கம் குடியேற்ற நாடுகளில் கைத்தொழிலுற்பத்தியைத் தடை செய்தது. குடியேற்ற நாடுகளில் விவசாயத்தை அபிவிருத்தியடையச் செய்து விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்கி அதிக வருவாயைப் பெறுவது ஆங்கில அரசின் கொள்கையாகவிருந்தது. எனவே இலங்கையில் மாத்திரமல்லாமல் பிரித்தானிய சாம்ராச்சியத்தின் எல்லாப் பகுதிகளிலும் விவசாய அபிவிருத்தியை ஊக்கப்படுத்தினர்.

ஆரம்பத்தில் கறுவா அதிக இலாபத்தைக் கொடுத்து வந்தமையால் கறுவாச் செய்கை அபிவிருத்தியிலேயே கவனஞ் செலுத்தப்பட்டது. சுதேசமக்கள் இத்தொழிலிலீடுபட்டபோதிலும், அதனை அபிவிருத்தி செய்யப் யோதிய முதலற்றவர்களாக இருந்ததோடு ஆர்வமற்றவர்களாகவும் இருந்தனர்; அந்நிய முதலீடே இம்முயற்சியிலீடுபடுத்தப்பட்டது; அந்நியர், உணவு விவசாயத்தில் முதலீடு செய்வதற்கு ஆர்வங் கொள்ளவில்லை; ஏனெனில் உணவு விவசாயம் பெரும்பாலும் உள்நாட்டுத் தேவையைக் கருதுவதாகவும், அதிக இலாபத்தைக் கொடாததாகவும் இருந்தது; ஆனால் ஏற்றுமதி விவசாயம் அதிக இலாபத்தைக் கொடுக்கக்கூடியதாகவிருந்தது; எனவே, அதிலேயே அந்நியர் முதலீடு செய்தனர்.

கோப்பிச் செய்கைக்கு ஜோஜ் பேட், ஆள்பதி பாண்ஸ் போன்றோர் புத்துயிரளித்தனரெனவும், இதன் பயனைப் பலர் கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தனரெனவும் ஏற்கனவே படித்துள்ளோம். மேலும் 1831ம் ஆண்டுக்குப் பின்பு வளர்ச்சியுற்ற காசுப் பயிர்ச் செய்கையை ஆராய்வாம். 1831ம் ஆண்டுக்குப் பின்பு இலங்கையில் கோப்பிச்செய்கை அபிவிருத்தியடைந்தமைக்குப் பல காரணங்கள் உள. 1833ம் ஆண்டு ஆங்கில அரசாங்கம் அடிமைகள் விடுதலைச் சட்டத்தைக் கொண்டுவந்தது. இதைத் தொடர்ந்து

மேற்கிந்தியத் தீவுகளிலும் கயனாவிலுள்ள கோப்பித் தோட்டங்களிலும் கிளர்ச்சிகள் உண்டாயின; இங்குள்ள கோப்பித் தோட்டங்களில் இதுவரையும் சம்பளமின்றி வேலைசெய்து வந்த அடிமைகளுக்குச் சம்பளம் வழங்கவேண்டியிருந்தது. அன்றியும் தொழிலாளிகள் புதிதாகப் பெற்ற சுதந்திரத்தைச் சீரிய முறையில் பயன்படுத்த அறியாது வேலைக்கு ஒழுங்காகச் செல்லத் தவறினர்; இதனால் மேற்கிந்தியத் தீவுகளில் கோப்பியின் உற்பத்திச் செலவு அதிகரித்ததுடன் எற்றுமதியும் அதனாற் குறைந்தது. கோப்பியின் விலையும் அதிகரித்தது. இந்நிலையிலே இலங்கைக் கோப்பி அதிகமாக விலைப்படவே இலங்கைக் கோப்பி கூடுதலாக ஏற்றுமதி செய்யப்பட்டது;

இரண்டாவதாகக் கைத்தொழிற் புரட்சியின் விளைவாக இங்கிலாந்தில் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. இங்கு பல துறைகளில் தொழில் புரிந்த தொழிலாளிகள் மதுபானம் அருந்தும் பழக்கத்தை மேற்கொண்டு சமூகத்தில் பல இன்னல்களை விளைவித்தனர். இதையுணர்ந்த வெஸ்லி என்னும் பெரியார் மதுபானமருந்தும் பழக்கத்திற்கெதிராகப் பிரசாரஞ் செய்தார். மதுபானத்திற்கு மாற்று மருந்தாக கோப்பியை அருந்தும்படி பிரசாரஞ் செய்யவே பலர் வெஸ்லியின் புத்திமதியைப் பின்பற்றலாயினர்; ஆங்கிலேயரைப் பின்பற்றி பிரான்ஸ், பெல்ஜிய நாட்டு மக்களும் மதுபானத்திற்கு மாற்று மருந்தாகக் கோப்பியை அருந்தினர்; இதனாலும் கோப்பிக்கு அருமையுண்டாயிற்று;

மூன்றாவதாக, இங்கிலாந்திலே மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோப்பிக்கு இறக்குமதி வரியாக ஆறு பென்னியும் இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கோப்பிக்கு ஒன்பது பென்னியும் முன்னர் விதிக்கப்பட்டு வந்தமையால், இலங்கைக் கோப்பியை அதிக விலையிலேயே விற்கவேண்டியிருந்தது; இதனால் இலங்கைக் கோப்பிக்கு அருமை குறைவாகவிருந்தது; இந்நிலையில் இலங்கை அரசாங்கம் இங்கிலாந்து அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டதன் பயனாக மேற்கிந்திய தீவுக் கோப்பிக்கும் இலங்கைக் கோப்பிக்கும் சமமான இறக்குமதி வரி விதிக்கப்பட்டது.

நான்காவதாக, அந்நியர் இலங்கையில் காணி வாங்கக்கூடாதென முன்பிருந்த சட்டம் கோல்புறூக் ஆணைக் குழுவினால் நீக்கப்பட்டதால் இப்பொழுது ஐரோப்பியரும் அமெரிக்கரும் பிறரும் கோப்பித் தோட்டங்களை நிறுவ ஆரம்பித்தனர்;

ஐந்தாவதாக, வீதிகள் கொழும்புக்கும் கண்டிக்கும் அமைக்கப்பட்டபடியால் உற்பத்திப் பொருள்களைக் கொழும்புத் துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லுஞ் செலவு ஓரளவுக்குக் குறைந்தது. ஆரு

தாகக் கோப்பிச் செய்கை அந்நிய முதலாளிமாரின் முதலீட்டைக் கொண்டதாகவே வளர்ந்துவந்தது. ஆள்பதி பாண்ஸ் காலத்தில் முடிக்குரிய நிலங்கள் காசுப் பயிர்ச்செய்கைக்கு இலவசமாக விநியோகஞ் செய்யப்பட்டன; இம்முதலாளிகளுக்கு கோல்புறூக் ஆணைக்குழுவின் தகவுரைகளின்படி அரசாங்கம் கூடுதலான ஆதரவளித்தது. இலங்கையில் கோப்பி செய்கைபண்ண விரும்பிய முதலாளிகளுக்கு முடிக்குரிய நிலங்களை நில அளவைக் கூலியாக ரூபா இரண்டு வீதம் பெற்றுக்கொண்டு அரசாங்கம் கொடுத்துதவியது.

கடைசியாக மேற்கிந்தியத் தீவுகளில் கோப்பிச் செய்கை முறைகளில் நன்கு அனுபவம் வாய்ந்த நிபுணர்களை இலங்கை அரசாங்கம் வருவித்து அவர்களின் அனுபவங்களைத் தோட்ட முதலாளிகளுக்குப் பயன்படும்படி செய்தது. இவர்களில் ஒருவரான ரைற்லர் (R. B. Tytler) என்பவர் அரிய தொண்டாற்றினார்; இவர் 1834ம் ஆண்டு தொடக்கம் 1837ம் ஆண்டுவரை ஜமேக்காவில் கோப்பிச் செய்கை முறையில் ஆராய்ச்சி நடத்தியவர். இவரது தோட்டங்கள் முன் மாதிரியாகவிருந்தன.

1833ம் ஆண்டு தொடக்கம் 1838ம் ஆண்டு வரையும் வருடமொன்றுக்கு சராசரி 6412 ஏக்கர் நிலம் விநியோகஞ் செய்யப்பட்டது; நாளடைவில் முடிக்குரிய காணிகளுக்கு அருமையேற்படவே காணிகள் விலைக்கு விற்கப்பட்டன. 1840ம் ஆண்டு தொடக்கம் 1845ம் ஆண்டு வரையும் வருடமொன்றுக்கு சராசரி 42,880 ஏக்கர் நிலம் விற்கப்பட்டது. 1848ம் ஆண்டு வரையும் விற்கப்பட்ட நிலத்தின் தொகை 400,000 ஏக்கராகவிருந்தது; இப் பெருந்தொகை நிலம் விற்கப்பட்டபோதிலும் ஏறத்தாழ 60,000 ஏக்கர் நிலத்தில் மட்டுமே கோப்பி செய்கை பண்ணப்பட்டது; ஆள்பதி முதல் கிழக்கிந்திய வர்த்தக சங்க ஊழியர், குடியியற் சேவையாளருட் பலர், நீதிபதிகள், இராணுவ உத்தியோகத்தர்கள், பணம் படைத்த இந்தியச் செட்டிமார், முஸ்லீம்கள் ஈறாக கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தனர்; ஆள்பதி 2264 ஏக்கர், ஏவுநர் முதல்வன் 2391 ஏக்கர், குடியேற்றச் செயலாளர் 855 ஏக்கர், ரைற்லர் 6169 ஏக்கர் குறைக் கம்பெனி 16,552 ஏக்கர் நிலங்களை வாங்கினர். இதிலிருந்து கோப்பிச் செய்கை எவ்வளவு விரைவாக முன்னேறியுள்ளதென்பதை அறியலாம்;

1847ம் ஆண்டில் கோப்பியேற்றுமதி பாதிக்கப்பட்டது; ஜாவா, பிறேசில் ஆகிய நாடுகள் சிலகாலமாகக் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டு, கோப்பியை ஐரோப்பாவிற்கு அனுப்பின. இதனால் இங்கிலாந்தில் கோப்பி, தேவையிலும் பார்க்க அதிகமானவளவு விற்

பனைக்கு வந்தது; இதனால் இலங்கைக் கோப்பியின் விலை குறைந்தது. 1840 ம் ஆண்டு இலண்டனில் 100 சிலிங்காக இருந்த ஒரு அந்தர் கோப்பியின் விலை நாற்பத்தைந்து சிலிங்காகக் குறைந்தது. 1848ம் ஆண்டு மேலும் இருபத்தேழு சிலிங்காக குறைந்தது; பலர் தோட்டங்களை விட்டுத் தாயகம் திரும்பினர்; எனவே இவ் விலை வீழ்ச்சி இலங்கைத் தோட்ட முதலாளிகளுக்கும் பாரதூரமான நட்டத்தை ஏற்படுத்தியது: இதைவிட இங்கிலாந்தில் இதே காலத்தில் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. அங்கிருந்து பணத்தைப் பிறநாடுகளுக்கு அனுப்பலாகாது என்ற தடையை அரசாங்கம் விதித்தது. ஆகவே இலங்கையிலுள்ள தோட்ட முதலாளிகள் பணத்தை இங்கிலாந்திலிருந்து பெறமுடியவில்லை: இதனால் பல தோட்ட முதலாளிகள் தோட்டங்களைக் கைவிடவேண்டியதாயிற்று.

கோப்பித் தோட்டங்களுக்கேற்பட்ட இந்நிலையானது நீண்ட காலம் நிலைத்திலது. 1853ம் ஆண்டுக்குப் பின் நிலைமை மாறிற்று; கோப்பிச்செய்கை மீண்டும் உயிர்பெற்று எழலாயிற்று. ஐரோப்பாவிலே கோப்பி அருந்தும் பழக்கம் படிப்படியாக வளர்ந்து வந்ததனால் தேவை அதிகரித்தது: விலையும் அதனாலுயர்ந்தது. விலையுயர்ந்ததனால் கோப்பிச் செய்கையில் இலாபத்தைப் பெறமுடிந்தது; உதாரணமாக 1850ம்ஆண்டில் 41 சிலிங்காக விற்ற கோப்பி 1856ம் ஆண்டில் 44 சிலிங்காக அதிகரித்தது. மேலும் இலங்கையில் 1865ம் ஆண்டு தொடக்கம் புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டதனால் போக்கு வரத்துச் செலவு குறைந்தது. இலாபம் அதிகரித்தது. 1850ம் ஆண்டு 5,60,000 அந்தர் கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்டது. 1870ம் ஆண்டில் 10 இலட்சம் அந்தராக அதிகரித்தது. மேற்கூறிய புள்ளி விபரங்கள் 1850ம் ஆண்டுக்கும் 1870ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கோப்பிச் செய்கை அடைந்த வளர்ச்சியைக் காட்டுகின்றது.

1870ம் ஆண்டு மீண்டும் இலங்கையில் கோப்பிச் செய்கையில் மந்தமேற்பட்டது; "கெமிலியா வஸ்ராறிக்ஸ்" (Hemileia Vastatrix) எனப்படும் மூட்டைப்பூச்சி கோப்பிச் செடிகளைத் தாக்கியமையால் வீழ்ச்சியுண்டாயிற்று. இந்நோயினால் கோப்பிச் செடிகள் அழியத் தொடங்கின. இந்நோயைத் தடுப்பதற்காக பேராதனை தாவரவியல் தோட்டத்தில் பணிக்காயனைக் கடமையாற்றிய டாக்டர் துவைற்ஸ் (Dr. G. H. K. Thwaites) என்பவரால் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை. நோயினற் பீடிக்கப்பட்ட செடிகளிலிருந்து குறைந்த அளவுக் கோப்பியை மட்டுமே பெறமுடிந்தது; 1882ம் ஆண்டு இந்நோய் கோப்பித் தோட்டங்கள்

அனைத்தையும் பாதித்தது. தோட்டங்கள் பல மூடப்பட்டன; 1800 தோட்டத்துரைமார் இருந்த இடத்தில் 400 தோட்டத் துரைமார் மட்டுமே இருந்தனர்; இப்புள்ளி விபரங்கள் கோப்பிச்செய்கை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டதென்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

இந்நோயை விட ஐரோப்பியச் சந்தையில் ஏராளமாகக் கோப்பி காணப்பட்டமையால் இலங்கைக் கோப்பியின் விலை குறைந்தது; மேலும் கோப்பி வியாபாரம் அதிக இலாபத்தைக் கொடுத்து வந்த காலத்தில் கோப்பிச் செய்கையில் அநேகர், முதலீடு செய்தனர்; அவர்களுட் பலர் சுவாத்தியமற்ற இடங்களிற் கோப்பிச் செய்கையை ஆரம்பித்திருந்தார்கள்; இவ்விடங்களில் கோப்பிச் செடிகள் நன்கு செழித்து வளராமையினால் அவர்கள் நட்டமடைந்தனர். இந்நிலையில் தோட்ட முதலாளிகள் பலர் தோட்டங்களை விற்கக்கூடிய விலைக்கு விற்றுப் பெறக்கூடிய பணத்தைப் பெற்றுக்கொண்டு இங்கிலாந்து திரும்பினர்;

கோப்பிச் செய்கையில் மந்தமேற்படுமென்பது எதிர்பார்க்கப்பட்டதே; டாக்டர் துவைற்ஸ் ஏற்கனவே சிங்கோனா, தேயிலை முதலிய பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறு எச்சரித்திருந்தார்; இலங்கையிற் கோப்பித் தோட்டங்களிற் பணத்தை முதலீடு செய்ய வேண்டாமெனவும், அவைகளில் ஈட்டுக்குப் பணங்கொடுக்க வேண்டாமெனவும் பல நண்பர்களை இவர் தீர்க்க சிந்தனையுடன் பன்முறை எச்சரித்திருந்தார்.

கோப்பிச் செய்கை குன்றவே பலர் சிங்கோனாத் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் பணத்தை முதலீடு செய்தனர்; அத்துடன் மின்னரம் என்னும் தாதுப்பொருள் வெட்டி எடுக்குந் தொழில் ஊக்கப்படுத்தப் பட்டது. 1861ம் ஆண்டு அரசாபிமான பலவினத் தாவரவியல் பூந்தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஹக்கல என்ற இடத்தில் சிங்கோனாத் தோட்டமொன்றை நிறுவி நன்கு பரீட்சித்து, 1867ம் ஆண்டு அதைத்தோட்டத் துரைமாரின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்; தோட்டத்துரைமார் சங்கத்தால் விநியோகஞ் செய்யப்பட்ட கன்றுகளை ஜேம்ஸ் ரெயிலர் (James-Taylor) "லொலிக்கொண்டெரு" (Loolecondera) தோட்டத்தில் பயிரிட்டு வெற்றிகண்டார்;

மேலும் இதுவரை பிரித்தானியர் கோடைக்கானலிலிருந்தே சிங்கோனாப் பட்டையை இறக்குமதி செய்து "குவினைன்" என்னும் மருந்தைத் தயார் செய்தனர்; கோடைக்கானல் சிங்கோனாப் பட்டையிலும் பார்க்க இலங்கைச் சிங்கோனாப்பட்டை தரத்தில் சிறந்

திருந்தது; ஆகவே இலங்கைச் சிங்கோனுப் பட்டைக்கு அருமை யுண்டாயிற்று; இதன் காரணமாக சிங்கோனுச் செய்கையில் பல ரீடுபட்டனர்; 1872ம் ஆண்டு 500 ஏக்கர் நிலத்தில் மட்டுமே சிங் கோனு பயிரிடப்பட்டது. 1882 ம் ஆண்டு 6500 ஏக்கர் நிலத்தில் சிங்கோனு பயிரிடப்பட்டது; ஆனுல் இந்நிலே நீடிக்கவில்லே; ஜாவா வில் கோப்பிச் செய்கை நோயினுல் பாதிக்கப்படவே அங்கே கோப் பிச் செய்கையில் மந்தமேற்பட்டது; இதை ஈடுசெய்யும் நோக்கத் தோடு ஜாவா, சிங்கோனு பயிரிட் ஆரம்பிக்கவே இலங்கைச் சிங் கோனு வியாபாரத்திற்குப் போட்டியேற்பட்டது. எனவே இலங் கைத் தோட்ட முதலாளிகள் தேயிலேச் செய்கையில் ஈடுபட்டனர். இத்தருணத்தில் இலங்கையின் தேயிலேச் செய்கையின் வரலாற்றை அறிதல் பயன்தருவதாகும்.

18ம் நூற்ருண்டு ஆரம்ப காலத்தில் தமது குடியேற்ற நாடாகிய இலங்கையில் தேயிலேச் செடியை ஒல்லாந்தர் பயிரிட முயன்றனர். ஆனுல் ஓர் காசுப்பயிராக இது வெற்றியடையாததன் காரணமாகக் கைவிடப்பட்டது; 1805ம் ஆண்டு வண; ஜேம்ஸ் கோடினர் திரு கோணமலேயில் இச்செடி வளருவதை அவதானித்தார். அக்காலத் தில் தேயிலேயின் முக்கியத்துவத்தை அறியாத பிரித்தானிய அரசாங் கம் இதற்கு ஊக்கமளிக்கவில்லே; கோப்பிச் செய்கையின் வீழ்ச்சி யைக் கண்டு துவைற்ஸ் இலங்கையில் தேயிலேயை காசுப்பயிராக விளேவிக்கும் நோக்கத்தோடு ஆராய்ச்சியில் இறங்கினர்:

ஏற்கனவே, 1824ம் ஆண்டு அஸாமிலிருந்து வருவிக்கப்பட்ட தேயிலேச் செடிகள் மாதிரிப் பயிராகப் பரீட்சிக்கப்பட்டன. துவைத் சும் 1839ம் ஆண்டில் அஸாமிலிருந்து வருவிக்கப்பட்ட விதைகளேப் பரீட்சித்தார். வெற்றிகிடைக்கவே தேயிலேச் செய்கையில் ஈடு படும்படி பலரைத் தூண்டினர், ஆனுல் கோப்பி நல்ல நிலேயிலிருந்த தால் எவரும் இவரது புத்திமதிக்குச் செவிசாய்க்கவில்லே. மேலும் மொறிஸ் வேம்ஸ் (Maurice Worms) என்பவர் சீனுவுக்குச் சென்று அங்கிருந்து தேயிலே விதைகளே இலங்கைக்குக் கொண்டுவந்து புச லாவைக் கருகிலுள்ள ஓர் தோட்டத்தில் பயிரிட்டார். தேயிலேச் செய்கைக்கேற்ற சுவாத்திய நிலே புசலாவையில் இருந்தமையால் நன்கு செழிப்புற்று வளர்ந்தது. ஆனுல் தேயிலே இலேயில் எப்படித் தேயிலேத் தூள் தயாரிப்பதென இவர்களுக்குத் தெரியாதிருந்தது; எனவே சீனுவிலிருந்து ஒரு சீனரைக் கொண்டுவந்து தேயிலேத்தூளே உற்பத்தி செய்ய ஆரம்பித்தனர். இதனுல் உற்பத்திச் செலவு அதி கரித்தது. ஒவ்வொரு ருத்தல் தேயிலேயும் இங்கிலாந்தில் ஐந்து ரூபாவுக்கு விற்கவேண்டியதாயிருந்தது; கட்டுபடியாகாதென்பதை உணர்ந்த தோட்டத்துரைமார் இதைக் கைவிட்டனர்;

இக்காலத்தில் ஜேம்ஸ் லீவெலின் (James Llewellyn) என்பவர் இலங்கை சுவாத்திய நிலை தேயிலைச் செய்கைக்கு உகந்ததென அறிந்து டொலஸ்பாகேயில் "பெனிலாந்து" தோட்டத்தை நிறுவினர். இதுவும் எதிர்பார்த்த பயனைக் கொடுக்கவில்லை; 1867ம் ஆண்டு ஜேம்ஸ் ரெயிலர், ஹேவஹெற்றைக் கருகிலுள்ள லூயி கொண்டெரு தோட்டத்தில் தேயிலையைப் பயிரிட்டார். கோப்பிச் செய்கையில் மந்தமேற்படவே தேயிலைச் செய்கையில் பலரீடுபட்டனர். ஆள்பதி சேர் ரெபேட் ரெபின்சன் காலத்தில் தேயிலைச் செய்கைக்கு இன்னும் ஊக்கமளிக்கப்பட்டது.

தோட்டத்துரைமார் சங்கத்தின் தகவுரையின்படி ஹேவஹெற்றையிலுள்ள மூலோயாத் தோட்டத்தின் துரையாகிய ஆதர் மொறிஸ் என்பவர் தேயிலை ஆணையாளராக நியமிக்கப்பட்டார். இவர், அஸாமுக்குச் சென்று தேயிலை உற்பத்தி சம்பந்தப்பட்ட நுணுக்கமான விபரங்களை அறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆள்பதி ரெபின்சன் அவர்களால் கேட்டுக்கொளளப்பட்டார்; இவரது அறிக்கையின் பயனால் இலங்கையர் பலர் தேயிலைச் செய்கையில் அதி தீவிரமாக ஈடுபட்டனர்; 1873, 1880, 1883, 1885, 1888ம் ஆண்டுகளில் முறையே 280, 9,000, 32,000, 70,000, 1,50,000 ஏக்கர் நிலங்களில் தேயிலை செய்கைபண்ணப்பட்டது. இந்நிலையில் சாம்ராச்சிய நாடுகளிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் பிரசாரத்தின் விளைவாக நீர் அருந்தும் பழக்கம் அதிகரித்தது; இதனால் அந்நாடுகளில் தேயிலைக்கு அருமையேற்பட்டது, தேயிலை ஏற்றுமதி அதிகரிக்கவே தேயிலைத் தோட்ட முதலாளிகள் அதிக இலாபத்தைப் பெற்றனர்.

புராதன காலந்தொட்டு இலங்கையில் தென்னை பயிரிடப்பட்டு வந்தது; பிரித்தானியர் இலங்கைக்கு வந்த சமயம் தற்போதைய மேல்மாகாணம், வடமேல் மாகாணம், கீழ்மாகாணம், தென்மாகாணம், சப்பிரகமுவ மாகாணம் முதலிய மாகாணங்களில் ஒவ்வொரு வீட்டு வளவிலும் தென்னை மரங்கள் காணப்பட்டன; ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமே தென்னந் தோட்டங்கள் காணப்பட்டன. காலகதியில் தேங்காய், தேங்காய்நெய், கொப்பரு, பிண்ணாக்குமுதலிய தெங்குப் பொருள்களுக்கு மேற்கு நாடுகளில் அருமை யேற்பட்டது; இதன் காரணமாக வடமேல் மாகாணம், மேல்மாகாணம், தென்மாகாணம், கீழ்மாகாணம் முதலிய மாகாணங்களில்பெரு மளவில் தென்னந்தோட்டங்கள் நிறுவப்பட்டன.தெற்கே மாத்தறை தொடக்கம் வடக்கே பருத்தித்துறை வரையுமுள்ள கடற்கரை யோரங்களில் தோட்டங்கள் அதிகமாக நிறுவப்பட்டன. அதேசமயம் இலங்கையின் கிழக்குப் பகுதியில் உள்ள கடலோரங்களிலும்

தோட்டங்கள் நிறுவப்பட்டன; இதனால் தெங்குப் பொருள்களின் ஏற்றுமதியும் அதிகரித்தது. இலங்கை அரசாங்கத்துக்கு அதிக வரு மானத்தையும் ஈட்டிக்கொடுத்தது.

1876ம் ஆண்டில் கியூ தோட்டத்திலும் (Kew Gardens) பேரா தனை, ஹெனரட்கொடை (Heneratgoda) முதலிய இடங்களிலும் றப்பர் விதைகளும் செடிகளும் பரீட்சிக்கப்பட்டன. 1883ம் ஆண்டு பணவருவாயுடைய பொருள்களுள் ஒன்றாகக் கருத்துறையில் றப் பர்த்தோட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 1883ம் ஆண்டு 877 ஏக்கர் நிலத் தில் மட்டுமே றப்பர்த் தோட்டங்கள் நிறுவப்பட்டிருந்தன. 1889ம் ஆண்டில் 1071 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டது. றப்பர்ச்செய்கை முன்னேற்றமைக்கு ஒரு காரணம், தோட்டத்துரைமாருக்குச் சிறந்த முறையில் பயிர் செய்யவும், எப்படி றப்பர்ப் பாலிலிருந்து றப்பர் செய்வதெனவும் தெரியாமலு மிருந்தமையே. இரண்டாவதாக, மேற்கு நாடுகளில் றப்பருக்குத் தேவையேற்படவில்லை. விரைவில் அரசாபிமான பல்லினத் தாவரவியற் பூந்தோட்டத்தித் செய்த ஆராய்ச்சியின் பயனாக றப்பரைச் சரியான முறையில் செய்கை பண் ணவும், பதப்படுத்தவும்; தோட்டத்துரைமார் அறிந்துகொண்ட னர்; 1900 ஆண்டுக்குப் பின் எதிர்பாராத விதமாக வெளிநாடு களில் றப்பருக்கு அருமையுண்டாகவே இலங்கையின் றப்பர்த் தோட்டங்களும், றப்பர் உற்பத்தியும் அதிகரித்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் செய்கைபண்ணப்பட்ட புகை யிலைக்கு, திருவாங்கூரில் நல்ல மதிப்பு உண்டாயிற்று. இதன் விளை வாக யாழ்ப்பாணத்தில் பலர் புகையிலை செய்கைபண்ணுவதில் ஈடு பட்டனர். 19ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் இலங்கையில் கொக்கோச் செய்கையும் அபிவிருத்தியடைந்தது.

பிரித்தானிய ஆட்சியின் பின்பு ஏற்பட்ட விவசாய, நீர்ப்பாசன அபிவிருத்தியை ஆராய்வாம்; புராதன காலத்தில் இலங்கை மக் களது பொருளாதாரம் விவசாயத்திலேயே தங்கியிருந்தது; பழைய இராச்சியங்களின் வீழ்ச்சியோடு மக்கள் புலம்பெயரவே இதுவரையு மிருந்துவந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் கைவிடப்பட்டன. மக்கள் மத்திய மாகாணம், தென்மாகாணம், மேல்மாகாணம் முதலிய மாகாணங்களில் குடியேறவே பொருளாதார நிலையில் ஒரு மாற்றம் உண்டாயிற்று; ஏற்றுமதிவியாபாரமே பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியது; போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் செய்து வந்ததுபோல் பிரித்தானியரும் ஆரம்பத்தில் தங்கள் வியாபாரத்திற் குத் தேவையான பொருள்களையே செய்கைபண்ணி வந்தனர்

ஆனல் கோல்புறூக் ஆணைக்குழு தனியார் துறைக்கு கொடுத்த ஆதரவும் முக்கியத்துவமும் காசுப் பயிர்ச் செய்கையை ஊக்கப்படுத்தியது; காலப்போக்கில் உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வதில் வருமானத்தின் பெரும் பகுதியைச் செலவு செய்யவேண்டியிருப்பதை அரசாங்கம் உணர்ந்தது. இதனல் உள்நாட்டு உணவுப்பொருளுற்பத்தியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைக்க முயற்சித்தது. இதன் முதல் நடவடிக்கையாக அரசாங்கம் பாழடைந்த குளங்களையும், கால்வாய்களையும் புனருத்தாரணம் செய்ய உத்தேசித்தது. இதற்கிணங்க ஆள்பதி கொலின் கமெல் நாட்டின் நீர்ப்பாசன வசதிகளை ஆராயும்பொருட்டு ஒரு காரியசபையை நிறுவினர்;

இச்சபை, பழைய குளங்களைச் சீர்திருத்த வேண்டுமெனவும், வீதிச் சட்டத்தின் மூலம், கிடைக்கக்கூடிய தொழிலாளரை இந்த வேலைக்குப் பயன்படுத்தலாமெனவும் தகவுரை செய்தது. இத் தகவுரைகளை குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் ஏற்றுக்கொள்ளாத தன்காரணமாக காரியசபையின் திட்டம் கைவிடப்பட்டது. சுதேசிகள் சிலரும் அரசாங்க உத்தியோகத்தரும் நீர்ப்பாசன வசதிகள் சீரழிந்து கிடப்பதை ஆள்பதி வாட்டுக்கு எடுத்துக்காட்டினர். இதற்குச் செவிசாய்த்த ஆள்பதி, தென், கீழ், வடமத்திய மீர்காணங்களுக்குச் சென்று புராதன காலத்தில் மன்னர்களால் கட்டப்பட்ட குளங்களும் கால்வாய்களும் தூர்ந்து கிடப்பதை நேரடியாகக் கண்டார்: இவற்றைத் திருத்தியமைப்பதாலும், வசதியான இடங்களில் நீர்ப்பாசனத் திட்டங்களை அமைப்பதாலும் நெற்சாகுபடியை அதிகரிக்கலாமெனத் திட்டமிட்டு, உடனடியாகத் தனது திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தார்: மட்டக்களப்புப் பகுதியிலுள்ள இரக்காமம், அம்பாரை ஆகிய குளங்கள் திருத்தியமைக்கப்பட்டன; தென்மாகாணத்திலும், கிராம, ஊரு பொக்கை ஆகிய குளங்களையும் செப்பனிட்டார். இவரது நடவடிக்கையால் விவசாயத் துறையிலே ஒரு புதிய சகாப்தம் உருவாயிற்று.

புராதன காலத்தில் கன்சபா கிராமங்களின் விவசாயக் கண்காணிப்புக்குப் பொறுப்பாகவிருந்தது. கோல்புறூக் சீர்திருத்தத்தின் விளைவாக இதன் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதும், அதன் பொறுப்பிலிருந்த நீர்ப்பாசனத் திட்டங்கள் சீர் குலைந்தன; இக் குறைபாடுகளை நிவிர்த்தி செய்யுமுகமாக ரொபின்சன், கன்சபாக்களை புத்துயிர் பெறச்செய்து இவற்றிற்கு முன்னர் போலவே குளங்களைப் பராமரிக்கும் உரிமையை வழங்கினர். மேலும் 1867ம் ஆண்டு அரசாங்கம் பத்து வருடத்தில் திருப்பிக் கொடுக்கக்கூடியதாக ஏழை விவசாயி

களுக்குக் கடனுதவி அளித்தது. இவ்வுதவிப் பணத்தை முதலீடாகக் கொண்டு இலங்கையர் விவசாயத் துறையில் ஈடுபட முடிந்தது.

ஆள்பதி சேர். வில்லியம் கிரெகரி, இலங்கையின் வடபாகம் விவசாயத்திற்கேற்ற பகுதியென்பதையறிந்து, அதை அபிவிருத்தி செய்ய எண்ணினார். இவைகளைச் சுலபமாக்குவதற்காக வடமத்திய மாகாணத்தை உருவாக்கினார். அம்மாகாணத்தின் பாலனப் பொறுப்பை பிரடரிக் டிக்ஸனின் கையில் ஒப்படைத்தார். இவரது காலத்தில் தூர்ந்து கிடந்த 900 குளங்கள் திருத்தியமைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. மேலும் பல வருடங்களாக கவனிப்பாரற்று காடடர்ந்து கிடந்த நிலங்களெல்லாம் விவசாயத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. இலங்கையின் வடமேற்குப் பாகத்திலுள்ள காலவீவாக் குளம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இக் குளத்திலிருந்து அனுராதபுரம் வரையும் கட்டப்பட்டிருந்த யோடை எலி என்ற கால்வாய் மிகவும் மோசமான நிலையிலிருந்தபடியால், அக் கால்வாயும் திருத்தியமைக்கப்பட்டது.

இவ்வாறு பிரித்தானிய ஆள்பதிகள் நீர்ப்பாசனத் துறையில் செலுத்திய கவனத்தினால் 1880 ம் ஆண்டுவரை கீழ், தென் மாகாணங்களில் நீர்ப்பாசன வசதிகள் அதிகரித்தன. குறிப்பாக ரெபின்சன், கிரெகரி முதலிய ஆள்பதிகள் இத்துறையில் கூடிய கவனஞ் செலுத்தினர். எனினும் ஆதர் கமில்ரன், கோடன் காலங்களிலேயே 30 இலட்சம் ரூபா குளங்களையும், நீர்த் தேக்கங்களையும் செப்பனிடப் பயன்படுத்தப்பட்டது. ஆள்பதி சேர் ஜோசேப் வெஸ்ட்றிட்ஜ்வே காலத்தில், நீர்ப்பாசனத் திணைக்களம் நிறுவப்பட்டது. இச் செயல் அரசாங்கம், நீர்ப்பாசனத் துறைக்கு கொடுத்த முக்கியத்துவத்தை விளக்குகின்றது. இத் திணைக்களம் தோன்றியபின் அதிவிரைவில் கந்தளாய், தீசரூகம், வளவைக் கால்வாய், முதலிய பதினெட்டு நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. றிட்ஜ்வே, வரண்ட பிரதேசங்களுக்கு இதயம் போன்றது குளங்கள் என்பதை உணர்ந்து, தூர்ந்துபோன குளங்களைத் திருத்தி, மக்களை மீண்டும் விவசாயத்தில் ஈடுபடச் செய்தார். விவசாயத் திணைக்களத்தில் ஒரு ஆராய்ச்சிக்கூடம் தாபிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பேராதனையில் அரசாபிமானி தாவரவியல் பூந்தோட்டம் நிறுவப்பட்டது. அதுவுமன்றி ஒரு கனிப்பொருள் ஆராய்ச்சியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். இவ்வாறு 19 ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்த நீர்ப்பாசனத் திட்டங்களும் விவசாய அபிவிருத்தியும் அந்நூற்றாண்டின் பிற்பகுதியில் துரிதமுன்னேற்றத்தை அடைந்தன.

வீதிகளும், புகையிரத வீதிகளும் எப்படிக் காசுப் பயிர்ச் செய்கைக்கு உதவியாக இருந்தனவோ, அதேபோல் வங்கிகளும் உதவின. தோட்ட முதலாளிகள் கடன்பெறவும், பணத்தைப் போட்டு வைக்கவும் இவ் வங்கிகள் உதவின. இலங்கையின் வங்கி அபிவிருத்தியை சரித்திர ரீதியில் ஆராய்வது பயன்தருவதாகும். காசுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட குடியியற் சேவையாளர் வங்கிகள் இல்லாக் காலத்தில் இந்திய வர்த்தக தாபனங்களிலிருந்து கடனைப் பெற்றனர். 1832 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியில் தோட்ட முதலாளிகள் தேவையான அளவுக்குக் கடனைப் பெறவோ பணத்தைப் போட்டு வைக்கவோ முடியவில்லை.

ஆங்கில அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை வங்கி 1840 ம் ஆண்டு கொழும்பில் நிறுவப்பட்டது. இதன் பங்காளிகள் இங்கிலாந்தில் இருந்தனர். இது வரையறுக்கப்பட்ட உத்தரவாத மூலதன வங்கியாக நிறுவப்பட்டது. 1826ம் ஆண்டு தொடக்கம் காசு நோட்டுக்களை அச்சிட்டு விநியோகஞ் செய்வது அரசாங்கத்தின் முழு வரிமையாகவிருந்தது. 1844ம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டத்தின் படி, காசு நோட்டுக்களை அச்சிட்டு விநியோகஞ்செய்யுமுரிமை வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. பலகாலமாக இலங்கையில் இருந்துவந்த 'ஓரியண்டல் பாங்கிங்கார்ப்பரேஷன்' (Oriental Banking Corporation) 1884 ம் ஆண்டு மே மாதம்3ம் திகதி மூடப்பட்டது.

இவ்வங்கி பல துறைகளில் தோட்டத் துரைமார்களின் தேவையைப் பூர்த்திசெய்தது. வர்த்தக விவசாய அபிவிருத்திக்கு இத் தாபனம் பெரும் உதவியாகவிருந்தது. இலங்கையில், கொழும்பிலும் மற்றும் பிரதான பட்டினங்களிலும் கிளைகள் நிறுவப்பட்டிருந்தன. இந்தியாவிலும், மற்றைய ஆசியாக் கண்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் கிளைகள் வைத்திருந்த இவ் வங்கி பெருமளவில் இலங்கையிலுள்ள தோட்ட முதலாளிகளுக்குக் கடன் கொடுத்திருந்தது. இவ் வங்கி மூடப்பட்ட செய்தி பரவியதும் வங்கியில் பணம்போட்டு வைத்திருந்த வர்களனைவரும் வங்கிக்குச் சென்று பணத்தைத் தரும்படி வற்புறுத்தினர். இவ் வங்கிகளால் அச்சிடப்பட்ட காசு நோட்டுக்கள் பெறுமதியற்றவைகளாக மிகக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. ஆனால் புத்திக்கூர்மையுள்ள ஆள்பதி கோடன் இவ் வங்கியால் அச்சிடப்பட்ட காசு நோட்டுக்களுக்குச் சமமான பணத்தை அரசாங்கம் கொடுக்குமென உத்தரவாதம் அளித்ததன் விளைவாக வங்கியில் பணம் போட்டு வைத்தவர்கள் ஓரளவு சமாதானம் அடைந்தனர். 1885 ம் ஆண்டு அரசாங்கம் காசு நோட்டுக்களை அச்சிடத் தொடங்கியது. ஆனால் "சாட்டேட் வங்கி" (Chartered Bank) யால் அச்சிட்ட காசு நோட்டுக்கள் இன்னும் பாவனையில் இருந்து வந்தன. 1889ம் ஆண்டி

லிருந்து காசுநோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுவது அரசாங்கத்தின் முழுவுரிமையாக இருந்தது.

தோட்டங்கள் திறக்கப்பட்டதும் அவைகளில் வேலை செய்வதற்கு ஏராளமான தொழிலாளர் தேவைப்பட்டனர். கிராமவாசிகள் தங்களது கிராமங்களிலேயே இருந்துகொண்டனர். கூலிக்கு வேலை செய்வது தமது கௌரவத்திற்கு இழுக்கெனப் பலர் கருதினர். ஆள் பதி பாண்சின் காலத்தில் 150 தொழிலாளர் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டனரெனவும், இவர்கள் இலங்கையில் நெடுங்காலம் இருக்கவிரும்பாததால் விரைவில் தாயகம் திரும்பிவிட்டனரெனவும் ஏற்கனவே படித்துள்ளோம். 1830ம் ஆண்டளவில் காடடர்ந்த மலையகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் கோப்பித் தோட்டங்கள் நிறுவப்பட்டன; தொழிலாளரைப் பெறுவது சிரமமென அறியாத தோட்ட முதலாளிகள் தோட்டங்களை நிறுவியதன்பின் அங்கு வேலை செய்வதற்குப் போதிய தொழிலாளர் பெறமுடியாது திண்டாடினர்;

ஆகவே தொழிலாளர் பற்றுக் குறையை நிவிர்த்திப்பான் பொருட்டு 1839ம் ஆண்டு 2432 தொழிலாளர் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டனர். ஆனல் இத்தொகை போதாதிருந்தபடியால் உயர்ந்த சம்பளம் வழங்கி தொழிலாளர் மேலும் வருவிக்கப்பட்டனர். தோட்டங்கள் பெருகப் பெருக தொழிலாளர் தேவை அதிகரித்துக்கொண்டே போயிற்று. எந்தத் தோட்ட முதலாளி அதிக சம்பளத்தைக் கொடுக்க முன்வந்தாரோ அத் தோட்டத்திற்கே தொழிலாளர் புலம்பெயர்ந்தனர். 1840 ம் ஆண்டு தொடக்கம் 1860 ம் ஆண்டு வரையும் தொழிலாளர் பற்றுக் குறையை ஓரளவிற்கு அரசாங்கம் சமாளித்தது. எனினும் 1860ம் ஆண்டில் மேற்கிந்திய தீவுகளிலும் மொரேஷஸ் தீவுகளிலும் அதிக சலுகைகள் அளிக்கப்பட்டதன் பயனக இந்தியத் தொழிலாளர் அங்கு பெருந் தொகையிற் சென்றனர்; இதனல் இலங்கையிலுள்ள தொழிலாளர் தொகை குறைந்தது.

இலங்கை அரசாங்கம் மேற்கிந்திய, மொரேஷஸ் தீவுகளைப் பின் பற்றி சகல வசதிகளையும் தொழிலாளருக்குச் செய்து கொடுக்க ஆரம்பித்தது. குறிப்பாக கூடிய வைத்திய வசதிகள் அளிக்கப்பட்டன. இந்தியத் தொழிலாளர் இலங்கைக்கு வந்து போவதற்குக் கப்பற்போக்கு வரவு வசதிசெய்து கொடுக்கப்பட்டது; சுகாதார வசதியுடைய இல்லிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன; அவர்களது சேவையும் நிரந்தரமாக்கப்பட்டது; இதன்பின் தொழிலாளர் பற்றுக்குறை ஒழிந்தது.

காசுப் பயிர்ச் செய்கையினாலும் போக்கு வரத்துச் சாதனங்கள், வங்கிகள் முதலியன அமைக்கப்பட்டமையினாலும் இலங்கையில் வியாபாரமும் வர்த்தகமும் அபிவிருத்தியடைந்தன; அத்துடன் வெவ் வேறு காலங்களில் இயற்றப்பட்ட சட்டங்களும் வியாபார அபி விருத்திக்குச் சாதகமாகவிருந்தது; கறுவா வியாபாரத்தில் அரசாங் கத்தினது முழுவுரிமை நீக்கப்பட்டது; மீன்வரி நீக்கப்பட்டது. குடியியற்சேவையாளர் தனியார் வர்த்தகத்தில் ஈடுபடுவதைத் தடுக்கும் ஒரு சட்டம் இக்காலத்தில் இயற்றப்பட்டது; இதன் விளைவாக இலங்கை மக்களுட் பலர் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரி களாக மாறினர்; அந்நிய வியாபாரிகளுட் பலர் இலங்கையை முத லீடு செய்யும் தளமாகவும் தாயகமாகவும் ஆக்கிக்கொண்டனர்; பிரித்தானியத் தாபனங்கள் பல நிறுவப்பட்டன. ஜோஜ் உவால் (George Wall) என்பவர் "பிளான்ரேஷன் கம்பெனி" என்னும் ஒரு வர்த்தக தாபனத்தை நிறுவினர். சட்டக்கழக அங்கத்தவரா யிருந்த இவர் தோட்டத்துரைமார் சங்கம் நிறுவப்பட்டமைக்கு காரணகர்த்தராவர்.

இங்கிலாந்திலுற்பத்தியாகும் பொருள்கள் விற்கப்படும் சந்தை யாக இலங்கை பயன்படுத்தப்பட்டது; இலங்கையில் செய்கைபண் ணப்படும் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதிக இலாபத்தைப் பெற்றனர்; "வர்த்தகர்" என்ற சமுதாயம் உரு வாயிற்று; 1839ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25ந் திகதி கொழும்பில் ஒரு வணிக மன்றம் நிறுவப்பட்டது. 1849ம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி மருதானையிலிருந்த அரசாங்கத்துக்குச் சொந்தமான கறுவாத் தோட்டம் ஏழு வருடங்களுக்கு 5,500 பவுணுக்கு குத்த கைக்கு விடப்பட்டது. இதிலிருந்து தனியார் வர்த்தகத்தை அர சாங்கம் புறக்கணிக்கவில்லையென்பது வெள்ளிடை மலை.

எங்ஙனம் வெளிநாட்டு வியாபாரம் அபிவிருத்தியடைந்ததோ, அப்படியே உள்நாட்டு வியாபாரமும் அபிவிருத்தியடைந்தது. முற் காலத்தில் ஒரு கிராமத்தின் சுயதேவை அக்கிராமத்திலிருந்தே பூர்த்திசெய்யப்பட்டது. ஆனல் தோட்டங்கள் நிறுவப்பட்டபின் தொழிலாளருக்குத் தேவையான பொருள்கள் இலங்கையில் பல் வேறு பகுதிகளிலிருந்து அங்கு கொண்டு செல்லவேண்டியிருந்தது. இதனல் உள்நாட்டு வியாபாரம் அபிவிருத்தியடைந்தது. தோட் டப்பகுதிகளிற் பலர் வியாபாரஞ் செய்தனர். நாளடைவில் பல பட்டினங்கள், நகரங்கள், மாநகரங்கள் தோன்றின; இராச காரியமுறை நீக்கப்படவே சாதிக்கட்டுப்பாட்டினல் இதுவரையும் ஒதுங்கியிருந்த கிராமவாசிகள் விடுதலையடைந்து புலம்பெயர்ந்து பல தொழில்களில் ஈடுபட்டனர்; இலங்கை மக்களுள் ஒரு சில

அதிட்டசாலிகள் தோட்ட முதலாளிகளாகவும்; ஏற்றுமதி, இறக்கு மதி, போக்கு வரத்து முகவர்களாகவும், ஒப்பந்தக்காரராகவும் மாறினர்; இன்னும் பலர் புலம் பெயர்ந்து மேசன் தொழில், தச்சுத் தொழில் போன்ற தொழில்களில் ஈடுபட்டனர்; ஆங்கிலக் கல்வி சிறிதளவு கற்றோர் கூடத் தோட்டங்களில் எழுதுவினைஞர் களாகக் கடமையாற்றச் சந்தர்ப்பமேற்பட்டது; சுருங்கக்கூறின் பொதுவாக மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததெனவே கூற வேண்டும்.

இலங்கை மக்கள் மேல்நாட்டு நாகரீகத்தைப் பின்பற்றியதன் விளைவாக அவர்கள் தங்களது நடை, உடை, பாவனை, சிந்தனை முத லியனவற்றை ஓரளவுக்கு மாற்றிக்கொண்டனர்; ஒவ்வொரு சமூகத் தவரும் தங்களது அடிப்படை உரிமைக் குரலை பத்திரிகை வாயிலாக வும், சட்டக் கழகத்திலும எழுப்பினர். வசதியுள்ளோர் மேற்படிப் பிற்காக இங்கிலாந்திற்குச் சென்றனர்; தாழ்நூமிச் சிங்களவர் மலை நாட்டுக்குச் சென்று பல்வேறு தொழில்களில் ஈடுபட்டனர்; இதனால் மலைநாட்டுச் சிங்களவருக்கும், தாழ்நூமிச் சிங்களவருக்கும் நெருங் கிய தொடர்புண்டாயிற்று;

இதுவரையும் படித்ததிலிருந்து 1831ம் ஆண்டு தொடக்கம் 19ம் நூற்றாண்டு இறுதிவரை கோப்பி, தேயிலை, றப்பர், புகையிலை, தென்னை முதலியன எந்த அளவிற்கு அபிவிருத்தியடைந்ததெனவும் நீர்ப்பாசன வசதிகள் எவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்டதென வும், அத்துடன் வங்கி வர்த்தகத் துறைகளில் ஏற்பட்ட அபிவிருத்தி யையும், அதன் விளைவுகளையும் அறிந்துள்ளோம்;

வினாக்கள்

1. 1887ம் ஆண்டுக்கும் 1914ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலங் களில் நெற்பயிர் விவசாய அபிவிருத்தி கருதி அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக்கைகளைத் தருக. (ஜூலை, '48)

2. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோப்பி அபி விருத்தியைத் தருக. எங்ஙனம் காணிகள் தொழிலாளிகள் ஆதியன பெறப்பட்டனரென்றும் துறைமுகங்களுக்கு ஏற்று மதிப் பொருள்களை அனுப்பி வைக்கப்பட்டனதெனவும் கூறுக; (டிசெம்பர், '48)

3. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எவ்வகையில் அரசாங்கம் விவசாயிகளின் நிலைமையை உயர்த்த முயன்றது? (டிசெம்பர், '49)

4. 1848 க்கும் 1928 க்கும் இடைப்பட்ட காலத்தில் விவசாயத்தை ஊக்கப்படுத்துவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை? (ஆகஸ்ட், '50)

5. இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியில் பொருளாதார முறையில் எவ்வாறு ஒன்று சேர்க்கப்பட்டது? (டிசெம்பர், '54)

6. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையில் வியாபார நடவடிக்கைகள் விருத்தியடைந்த விதங்களை விவரிக்குக. (டிசெம்பர், '58)

7. பிரிட்டிஸ் ஆட்சிக்காலத்தில் மலைநாட்டுப் பொருளாதாரம் எவ்வகைகளில் மாற்றமடைந்தது? (டிசெம்பர், '59)

8. "19ம் நூற்றாண்டில் இலங்கையின் முக்கியத்துவம் சிறப்பாகப் பிரிட்டிஷாருக்கு பொருளாதாரத் துறையிலாகும்" இதனை ஆராய்க. (ஆகஸ்ட், '60)

9. (அ) கூலியாளர் (ஆ) போக்குவரத்து என்பனவற்றைப் பொறுத்தவகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கோப்பிச் செய்கையை நன்முக அபிவிருத்தி செய்வதில் தோட்ட முதலாளிகள் எதிர் நோக்கவேண்டியிருந்த முக்கிய பிரச்சினைகள் யாவை? இவற்றை எவ்வாறு தீர்த்தனர்? (டிசெம்பர், '61)

10. இலங்கையின் தோட்டச் செய்கை விருத்தியடைந்தமையால் சமூகப் பொருளாதார விளைவுகள் யாவை? (டிசெம்பர், '62)

11. 19ம் நூற்றாண்டில் பிரித்தானியர் எமது பொருளாதாரத்தை எவ்வாறு விருத்தி செய்தனர்? இவ்வபிவிருத்திக்குக் காரணங்கள் தருக. (டிசெம்பர், '63)

12. 1850ம் ஆண்டுக்குப் பின்னர் தேயிலை, றப்பர் தோட்டங்கள் அபிவிருத்தியடைவதற்கு உதவி புரிந்த காரணிகள் யாவை? அதன் உடனடியான சமூகவிளைவுகள் யாவை? (டிசெம்பர், '64)

13. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்ததற்கும் தேயிலைச் செய்கை விருத்தியடைந்ததற்குமான காரணங்களைக் கூறுக. ஆகஸ்ட், '65)

14. பிரித்தானியக் கைத்தொழிற் புரட்சியால் இலங்கையில் ஏற்பட்ட விளைவுகள் யாவை? உதாரண வாயிலாக விளக்குக. (டிசெம்பர், '65)

15. எமது பெருந்தோட்டக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதில் இருந்த பிரதான கஷ்டங்கள் யாவை? அவை எங்ஙனம் தீர்க்கப்பட்டன? (ஆகஸ்ட், '66)

பதின்மூன்றும் அத்தியாயம்

போக்குவரத்து அபிவிருத்தி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கை அரசியலிலும் சமூகத்திலும் புதிய மாற்றங்களேற்பட்டன. ஒரு நாட்டின் முன்னேற்றத்தை விளக்கும் சாதனங்களுள் ஒன்று, அந்நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் வீதிகளாகும். இலங்கை அரசாங்கம் 1831ம் ஆண்டுக்குப் பின் வீதிகள் அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டமைக்குச் சில முக்கியமான காரணங்கள் இருந்தன. கோல்புறூக் சீர்திருத்தங்களின் பின் பேற்பட்ட பொருளாதார மாற்றத்தினால் தனியார் துறை வளர்ச்சியடைந்தது, சட்டக் கழக உறுப்பினருட் சிலர் கோப்பித் தோட்டங்களில் முதலீடு செய்தனர். தோட்டங்களிலிருந்து பொருள்களைக் கொழும்புத் துறைமுகத்திற்குக் கொண்டுசெல்வதற்குப் போக்கு வரத்து வசதிகள் இன்றியமையாததாகவிருந்தன. முன்னர், வீதிகள் இல்லாததால் கொழும்புத் துறைமுகத்திற்கு உடனுக்குடன் ஏற்றுமதிப் பொருள்களை அனுப்புவது கஷ்டமாகவிருந்தது. அது மட்டுமன்றி அதிக பணச்செலவு மேற்பட்டது; இதைத்தவிர்ப்பதற்கு வீதிகளை அரசாங்கம் அமைத்துக் கொடுக்கவேண்டுமென சட்டக்கழக உறுப்பினர் பலர் கேட்டுக்கொண்டனர். தனியார் துறை வளர்ச்சியடைந்தாற்றான் அரசாங்கத்தின் வருவாய் பெருகுமெனக் கருதி வீதிகளை அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வந்தது;

சேர் ரொபேட் வில்மட் ஹோட்டன் (1831—1837) மேற்கூறிய விடயங்களை மனதிற் கொண்டு வீதிகளை அமைக்க முனைந்தார். முதலில் அவர் ஆள்பதி பாண்டினுல் 1827ம் ஆண்டு திட்டமிடப்பட்ட கண்டி, நுவரெலியா வீதியை அமைத்தார். இவ்வீதி கண்டியிலிருந்து பேராதனை, கம்பளை, புசலாவை வழியாக நுவரெலியாவை அடைந்தது. கண்டியையும் பதுளையையும் இன்னொரு மார்க்கமாக இணைக்கும்பொருட்டு கண்டியிலிருந்து ஹரகம, தெல்தனை ஆகிய இடங்கள் வழியாகப் பதுளைக்கு ஒரு வீதி அமைக்கப்பட்டது. இவ்விரு வீதிகளினுல் அப்பகுதிகள் நன்கு அபிவிருத்தியடைந்தன.

குளங்கள் பழுதுபார்க்கப்பட்டு நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டமையால் இன்னும் புதிய வீதிகள் இலங்கையின் வடபகுதியில் தேவையாயின. இதனுல் அனுராதபுரம், யாழ்ப்பாணம் வழியாக டம்புளையிலிருந்து பருத்தித்துறைக்கு ஒரு வீதி அமைக்கப்பட்டது. தெற்கே அம்பாந்தோட்டை தொடக்கம் வடக்கே பருத்தித்துறை வரை வில்மட் ஹோட்டன் காலத்தில் வீதிகள் அமைக்கப்பட்

டிருந்தன. கண்டியிலிருந்து திருகோணமலைக்குச் செல்வதற்காக ஆள்பதி பாண்ஸ் காலத்தில் அமைக்கப்பட்டிருந்த வீதி டம்புளை தொடக்கம் கந்தளாய் வரையும் முடிவு பெறுமலிருந்தது. ஆனல் ஹோட்டன் காலத்தில் மேற்கூறிய இடங்கள் இணைக்கப்பட்டன: தற்போதைய வடமேல் மாகாணத்தின் அபிவிருத்தி கருதி குருநாகலும் புத்தளமும் வீதியால் இணைக்கப்பட்டன; முத்துக்குளிப்பிற்குப் பெயர்போன இடமாகிய அரிப்பு ஹோட்டன் காலத்தில் அனுராதபுரத்தோடு இணைக்கப்பட்டது.

ஆள்பதி மெக்கன்சி காலத்தில் (1837—1841) வருடா வருடம் முத்துக்குளிப்பினல் அரசாங்கம் பெற்றுவந்த வருமானங் குறைந்தது: இலங்கைப் பாதுகாப்புக்காக இலங்கையிலேற்படும் இராணுவச் செலவை பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு இலங்கை அரசாங்கம் கொடுக்கவேண்டியிருந்தது. இவ்விரு காரணங்களினல் புதிய வீதிகள் அமைப்பதற்கு அரசாங்கத்திடம் பணம் இருக்கவில்லை: எனவே பழைய வீதிகளைத் திருத்துவதிலேயே மெக்கன்சி கவனஞ் செலுத்தினர்: இவரது காலத்தில் கொழும்பு, கண்டி வீதியும் அம்பேபுச, குருநாகலை வீதியும் கல்லுப்போடப்பட்டன: கல்லுப் போடப்பட்ட வீதிகளை அமைத்து இலங்கைப் போக்கு வரத்தில் அரசாங்கம் ஒரு புதிய சாதனையை ஏற்படுத்திற்று: முன்பு கொழும்பிலிருந்து கண்டிக்குப்போக ஏறக்குறைய நாற்பது நாட்கள் எடுத்த மாட்டு வண்டி தற்போது ஆறு நாட்களில் போகக்கூடியதாகவிருந்தது.

ஆள்பதி கொலின் கம்பல் அவர்களின் காலத்தில் (1841—1847) அரசாங்கத்திற்குப் பணநெருக்கடி யேற்படவில்லை. இதனல் இவரது காலத்தில் போக்கு வரத்து வசதிகள் நன்கு அபிவிருத்தியடைந்தன. கொழும்பிலிருந்து எட்டியாந்தோட்டை வரை ஒரு வீதியும் இரத்தினபுரி வரை இன்னெரு வீதியும் அமைக்கப்பட்டன: எட்டியாந்தோட்டை வீதியும் இரத்தினபுரி வீதியும் அவிசாவலை வழியாகச் சென்றன. அதுமட்டுமன்றி களுதுறையிலிருந்து மத்துகம வழியாக அகலவத்தைவரை ஒரு வீதியும் காலியிலிருந்து பத்தேகம வரை இன்னெரு வீதியும் அமைக்கப்பட்டன. இவரது காலத்தில் குருநாகலை, பாணந்துறை ஆகிய பகுதிகளில் கருமுந்துத் தோட்டங்கள் நிறுவப்பட்டன. இவைகளின் வளர்ச்சிக்காக வியாங்கொடையிலிருந்து நீர்கொழும்புவரை ஒரு வீதி அமைக்கப்பட்டது: இவ்வீதி குருநாகலையையும் நீர்கொழும்பையும் இணைத்தது: அதேபோல் பாணந்துறையிலிருந்து ஹொறணை வழியாக நம்பபானைவரை வீதியொன்று அமைக்கப்பட்டது: ஏற்கனவே வில்மட் ஹோட்டனல் கம்பளை

வழியாக அமைக்கப்பட்ட கண்டி, நுவரெலியா வீதி பதுளை வரை கம்பல் காலத்தில் நீடிக்கப்பட்டது. எல்லையிலிருந்து அம்பாந் தோட்டைவரை கரத்தைப்பாதை இருந்தமையால் கம்பல் பதுளையை எல்லையோடு இணைத்தார்.

1847ம் ஆண்டில் ஆள்பதி ரொறிங்ரன் (1847—1850) பதவி யேற்றார். இவ்வாண்டில் கோப்பி வியாபாரத்திலேற்பட்ட மந்தத்தி னல் நாட்டின் நிதி நிலைமை மிக மோசமாகவிருந்தது. இதன் காரண மாக வீதி அமைக்கும் துறையில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபடமுடிய வில்லை. ஆள்பதி ஜோஜ் அண்டர்சன் காலத்தில் (1850—1855) ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கொழும்பு, எட்டியாந்தோட்டை வீதி கம்பளை வரை விஸ்தரிக்கப்பட்டது. இது கித்துல்கலை, கினி கத்தெனை, நாவலப்பிட்டி வழியாக கம்பளையை அடைந்தது. இவரது காலத்தில் தனிப்பட்டவர்களும் தோட்டமுதலாளிகளுமாகப் பலர் வீதிகளை அமைத்து காசுப் பயிர்ச் செய்கைக்கு பேருக்கங் காட் டினர்.

ஆள்பதி ஹென்றி வாட் அவர்களும் (1855—1860) வீதிகள் அமைக்கும் சேவையில் ஈடுபட்டார். சப்பிரகாமுவ மாகாணத்திற் குக் கிழக்கேயுள்ள கொத்மலைப் பகுதிகளையும் கண்டிக்கும் மாத்த ளைக்குங் கிழக்கேயுள்ள பகுதிகளையும் அபிவிருத்தி செய்யக் கருதிய வாட் புதிய வீதிகளை அப்பகுதிகளில் அமைத்தார். இவரது முதல் நடவடிக்கையாக மாத்தளையிலிருந்து இறத்தோட்டைக்கும் தெல் தெனியாவிலிருந்து இறங்காலைக்கும் வீதிகள் அமைக்கப்பட்டன. இவ்விரு வீதிகள் அமைக்கப்படுவதற்கு முன்பு அப்பகுதியிலுள்ள ஏற்றுமதிப் பொருள்கள் யாவும் தோணிமூலமே கொழும்புத் துறை முகத்துக்கு அனுப்பப்பட்டு வந்தன. தற்போது அப் பொருள்களை மிகச் சுலபமாகவும் குறைந்த செலவிலும் அனுப்பக்கூடியதாகவிருந் தது. இவரது காலத்திலேயே கொழும்பு, இரத்தினபுரி வீதி பெல் மதுளை வரை விஸ்தரிக்கப்பட்டது. நாவலப்பிட்டியிலிருந்து கொத் மலைவரை ஒரு வீதி அமைக்கப்பட்டது. ஆள்பதி வாட் காலத்தில் கண்டியும் கொழும்பும் இலங்கையின் பிரதான பட்டினங்களோடு கற்பதிக்கப்பட்ட வீதிகளினால் இணைக்கப்பட்டன. இவரால் 760 மைல் நீளமான வீதிகள் அமைக்கப்பட்டன. 1860ம் ஆண்டு 3000 மைல் நீளத்திற்கு வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே பாண்ஸ், ஹோட்டன் ஆகிய ஆள்பதிகளினால் அமைக் கப்பட்டிருந்த வீதிகள் செவ்வனே பரிபாலிக்கப்படாமல் அழிந்து போகும் நிலையிலிருந்தன. வடமத்திய மாகாணத்தில் டம்புளைவரை யும் வடபகுதியில் யாழ்ப்பாணம் தொடக்கம் ஆனையிறவு வரையு

முள்ள வீதிகள் திருத்தியமைக்கப்பட்டன. கண்டி, நுவரெலியா முத லிய பட்டினங்கள் வழியாகச் செல்லும் கொழும்பு பதுளை வீதியும் இவரால் திருத்தியமைக்கப்பட்டது. மேலும் இவரது முயற்சியினுல் பேராதனை, கம்பளை, நாவலப்பிட்டி, கித்துல்கலை, தெல்தெனியா, கட்டுகாஸ்தோட்டை முதலிய இடங்களில் பாலங்கள் அமைக்கப் பட்டன. இதனுல் இப்பகுதிகளில் போக்கு வரத்து வசதிகள் துரி தப்படுத்தப்பட்டன.

புகையிரதப் பாதைகள் அமைப்பதற்கு ஏராளமான பணத்தை இலங்கை அரசாங்கம் ஒதுக்கவேண்டியிருந்தமையினுல் ஆள்பதி மெக்காதி (1860—1863) வீதிகள் அமைப்பதில் கவனஞ் செலுத்த வில்லை. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த வீதிகளைப் பரிபாலிப்பதி லேயே அவர் கவனஞ் செலுத்தினர்; எனினும் அப்புத்தளைப் பகு தியிலுள்ள தோட்டத் துரைமாரைத் திருப்திசெய்யும் முகமாக வாட்டினுல் அமைக்கப்பட்டிருந்த இரத்தினபுரி, பெல்மதுளை வீதியை இவர் அப்புத்தளைவரை வித்தரித்தார். பொதுவேலைகளில் மட்டும் 500,000 பவுண் மெக்காதியினுல் செலவிடப்பட்டது. இத் தொகை வாட்டினுல் மராமத்து வேலைகளில் செலவு செய்யப்பட்ட தொகையிலும் பார்க்க அதிகமானதென்பது குறிப்பிடத்தக்கது. எனி னும் புகையிரதப் பாதைகள் அமைக்கும் தேவையைப் பூர்த்திசெய் யும் நோக்கோடு 525,505 பவுண் இவரது காலத்தில் சேமிக்கப்பட் டது.

மற்றைய ஆள்பதிகளைப்போல ஆள்பதி ரெபின்சனும் (1865—1872) வீதி அமைக்கும் பணியில் ஈடுபட்டார். மாவனல்லையிலிருந்து அறநாயக்கா வரை ஒரு வீதி அமைக்கப்பட்டது. இவ்வீதி டொலஸ் பாகே பகுதிகளில் நிறுவப்பட்டிருந்த தோட்டச் சொந்தக்காரருக் குப் பயன்பட்டது. அத்துடன் கினிகத்தெனையிலிருந்து டிக்கோயா வரை ஒரு வீதியமைக்கப்பட்டது. பதுளையிலிருந்து எல்லைவரை ஏற் கனவே அமைக்கப்பட்டிருந்த வீதியை வித்தரித்துச் செப்பனிட் டார். மொறவாக்கை கோறளையில் நிறுவப்பட்டிருந்த கோப்பித் தோட்டங்களின் அபிவிருத்தி கருதி காலியிலிருந்து அக்குறுசிவரை ஒரு வீதியை அமைத்தார். இதுவுமன்றி கொழும்பு, அப்புத்தளை வீதி பதுளை வரையும் வித்தரிக்கப்பட்டது. இவ்வீதி ஏற்கனவே கண்டி, நுவரெலியா வழியாக அமைக்கப்பட்டிருந்த பதுளை, கொழும்பு வீதியிலும் பார்க்க சிறந்ததெனக் கருதப்பட்டது. இப் புதிய வீதியினுல் நமுனகலை மாவட்டத்திலுள்ள தோட்டங்கள் நன்கு அபிவிருத்தியடைந்தன.

காலகதியில் கொழும்பு, பதுளை வீதி மட்டக்களப்புவரை ரெபின்சன் அவர்களால் வித்தரிக்கப்பட்டது. இதுவரையும் மட்டக்களப்புக்கும் கொழும்புக்குமிடையே வத்தைகள் மூலமே போக்குவரத்து நடைபெற்று வந்தது; இப்புதிய மட்டக்களப்பு, பதுளை வீதி முதன்முதலாக மத்திய, ஊவா மாகாணங்களோடு கீழ்மாகாணம் நெருங்கிய தொடர்பை வளர்ப்பதற்கு ஏதுவாயிற்று; அதுவுமன்றி கீழ்மாகாணத்தில் நெல் விவசாயமும், தெங்குப் பொருள்களும் அபிவிருத்தியடைவதற்கு உதவியது. கட்டுகாஸ்தோட்டைக்கூடாக பம்பரானைக்கும் கபரகலைக்கும் இரு வீதிகள் அமைக்கப்பட்டன. இன்னொன்று எல்கடுவைவரை அமைக்கப்பட்டது; ஏற்கனவே அமைக்கப்பட்ட கண்டி, தெல்தெனியா வீதி கல்மல்ஓயாவரை வித்தரிக்கப்பட்டது. ஹல்டுமுல்லை, அப்புத்தளை வீதியிலிருந்து ஒரு கிளை வீதி லேமஸ்தோட்டைவரையும் ஆள்பதி ரெபின்சனால் அமைக்கப்பட்டது.

வீதிகள் அமைத்து இலங்கையில் தொண்டு புரித்த ஆள்பதிகளுள் வில்லியம் கிரெகரியும் (1872—1877) ஒருவராவர். வடபகுதியிலுள்ள பிரதான வீதிகள் போக்குவரத்துக்கு உகந்ததாகக் காணப்படவில்லை. இவ் வீதிகள் அழிந்து மதகுகளோ பாலங்களோ இல்லாதிருந்தன; ஆள்பதி கிரெகரி, முதல் நடவடிக்கையாக டம்புளை, திருகோணமலை வீதியையும் டம்புளை, யாழ்ப்பாண வீதியையும் திருத்தியமைத்தார்; இவரது காலத்தில் அனுராதபுரத்திலிருந்து புத்தளத்திற்கு ஒரு வீதியும், மதவாச்சியிலிருந்து மன்னாருக்கு ஒரு வீதியும், மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவிற்கு ஒரு வீதியும் அமைக்கப்பட்டன. ஊவா மாகாணத்தையும் தென் மாகாணத்தையும் இணைக்குமுகமாக லேமஸ்தோட்டையிலிருந்து கொஸ்லாந்தை வெள்ளவாயா, தனமல்வில்ல வழியாக அம்பாந்தோட்டைக்கு ஒரு வீதி அமைக்கப்பட்டது; இவ்வீதி மலையகத்தில் கோப்பிச்செய்கையிலீடுபட்டிருந்த தோட்டத்துரைமாருக்குப் பயனளித்ததோடு அம்பாந்தோட்டையிலுள்ள உப்பளம் அபிவிருத்தியடைவதற்கும் உதவியது; தென்மாகாணத்தில் மேற்கூறிய வீதியை விட இறக்குவானை, புளுத்தோட்டையோடும் மத்துகம, வலிப்பன்னையோடும் இணைக்கப்பட்டன.

கீழ்மாகாணத்தில் மட்டக்களப்பு, ஏருவூர் வழியாக வண்டலூஸ்குடாவோடு இணைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட புகையிரதப் பாதையைத் தோட்டத் துரைமார் நன்கு பயன்படுத்தும் முகமாகவும் சிவனொளிபாதமலைக்குச் செல்லும் யாத்திரீகர்களின் வசதிக்காகவும், டிக்கோயா மஸ்கேலியாவோடும், சென்ட் மாக்கிரட் கந்தப்பொளையோடும் இணைக்கப்பட்டன; கோப்பி வியாபாரத்திலேற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஜேம்ஸ் லோங்டன் காலத்தில் (1877—

1883) அரசாங்கத்திற்குப் பண நெருக்கடி உண்டாயிற்று; இதன் விளைவாக வீதிகள் அமைப்பதில் தீவிரமாக ஈடுபட இவரால் முடிய வில்லை; எனினும் டிம்புளை, நானுஓயா வழியாக நுவரெலியாவோடு இணைக்கப்பட்டது.

மறுபடியும் அரசாங்கத்தின் பண நெருக்கடி தீரவே ஆள்பதி ஆதர் கோடன் (1883—1890) அவர்களால் வீதிகள் அமைக்கப்பட்டன. பொகவந்தலாவையை ஹற்றனோடு இணைக்கும் முகமாக பொக வந்தலாவையிலிருந்து நோர்வூட் வரை ஒரு வீதி அமைக்கப்பட்டது; மேலும் பூண்டுலோயா, வட்டகொடையோடும் கல்மல் ஓயா, நுகத் தலைவெளி வழியாக டன்ஸ்ரனோடும் திருவளங்கெற்றை, களவாலை யோடும் அக்குரஸ்ஸ, மொறவாக்கையோடும் மத்துகம, நாபொடை யோடும் நம்பபானை, இரத்தினபுரியோடும் இணைக்கப்பட்டன. ருவான்வலியிலிருந்து அத்தனக்கலை வரை ஒரு வீதியும் கிரியுல்லை தொடக்கம் அளவை வரை இன்னொரு வீதியும் அமைக்கப்பட்டன; மேலும் கடற்கரைப் பிரதேசங்களினது அபிவிருத்திக்காக காரை தீவிலிருந்து வீரியடிக்கு ஒரு வீதியும் அனுராதபுரத்திலிருந்து ஹொற வப்பத்தானை வழியாக திருகோணமலைக்கு இன்னொரு வீதியும் அமைக்கப்பட்டன. கடலாற் பிரிக்கப்பட்டிருந்த மன்னார்த்தீவு மூல பூமியோடு ஒரு பாலத்தால் இணைக்கப்பட்டது. 1890 ம் ஆண்டள வில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் சுவாத்தியநிலைக்கேற்றவாறு பணவருவாயுடைய பொருள்களாகிய தேயிலை, றப்பர், தென்னை முத லியன அதிக அளவுக்குப் பயிரிடப்பட்டன. குறிப்பாக வடமத்திய, வடமேல் கீழ் மாகாணங்களில் அரசாங்கம் நீர்ப்பாசன வசதிகள் ஏற் படுத்திக் கொடுத்தமையால் ஏராளமான ஏக்கர் நிலங்களில் நெற் சாகுபடி செய்யப்பட்டது; அதுவுமன்றி சப்பிரகாமுவ, மாகாணத் தில் மின்னரக்கைத்தொழிலில் பணத்தைப் பலர் முதலீடு செய்த னர். மேற்கூறிய காசுப் பயிர்ச்செய்கைகளையும் கமத்தொழிலையும் கைத்தொழிலையும் மேலும் ஊக்கப்படுத்தும் முகமாகவும் அவைகளி லீடுபட்டிருப்பவர்களின் வசதிக்காகவும் இதுவரையும் இணைக்கப் படாத பிரதான இடங்களை இணைக்க அரசாங்கம் முன்வந்தது. இத னால் வியாபாரமும், பயிர்ச் செய்கையும் அபிவிருத்தியடைந்தன.

ஆதர் ஹவ்லக் காலத்தில் (1890—1895) இறங்காலை தொடக் கம் பேண்டேல் வரை ஒரு வீதியும் கும்பலாவல்லையிலிருந்து மதுல் சீமை வழியாக நமுனகலைக்கு இன்னொரு வீதியும் அமைக்கப்பட் டன. நாவுலை ஸ்பிரிங் பள்ளத்தாக்குடனும் எலஹராவுடனும் இணைக் கப்பட்டது. ஹவ்லக் காலத்திலேயே அத்தனக்கலை, வியாங்கொடை வீதியும் ஹபறண, பொலனறுவா வீதியும் அமைக்கப்பட்டன.

1913ம் ஆண்டு வரையும் அமைக்கப்பட்ட வீதிகள்



1	யாழ்ப்பாணம்	நுவரெலியா	29
2	ஆனையிறவு	பதுளை	30
3	மாங்குளம்	பசறை	31
4	இலுப்பைக் கடவை	ஹூலண்டாவை	32
5	மாந்தை	மொனருகலை	33
6	பறையனாலையங்குளம்	அப்புத்தளை	34
7	மதவாச்சி	பெல்மதுளை	35
8	ஹொறவப்பத்தானை	இரத்தினபுரி	36
9	கிளிவெட்டி	அவிசாவலை	37
10	தலாவை	ஹொரணை	38
11	மருதங்கடவலை	நம்பபானை	39
12	கல்கமுவா	அங்குறுவாத்தோட்டை	40
13	இகல்கம	நாகொடை	41
14	நிக்கவீவா	தெபுவானை	42
15	மாஹோ	கலாவல்லைத்துறை	43
16	நிக்கவரட்டியா	அகலவத்தை	44
17	பதனியா	மத்துகம	45
18	கணேவத்தை	நிவித்திக்கலை	46
19	கலேவலை	களவானை	47
20	வாரியப்பொலை	இறக்குவானை	48
21	நாவுலை	புளுத்தோட்டை	49
22	பலாப்பத்துவலை	பத்தேகம	50
23	குருநாகலை	உடுகம	51
24	கட்டுகாஸ்தோட்டை	நாக்கியதெனியா	52
25	அம்பேபுச	மொறவாக்கை	53
26	வியாங்கொடை	அக்குறுசி	54
27	கம்பளை	ஹக்மனை	55
28	எட்டியாந்தோட்டை	பெலியாத்தை	56



1 அலுவத்கொடை
2 மாத்தளை
3 எல்கடுவை
4 கபரகலை
5 பம்பராலை
6 பேன்டேல்
7 டன்ஸ்ரன்
8 லூலுவத்தை
9 வத்தேகம
10 பன்விலை
11 இறங்காலை
12 கட்டுகாஸ்தோட்டை

13 கண்டி
14 குண்டகசாலே
15 தெல்தெனியா
16 பேராதனே
17 கலஹா
18 புப்பரச
19 புசலாவை
20 தெல்தோட்டை
21 ஹங்குரு வான் ஹெற்ற
22 இறம்பொடை
23 ஹேவஹெற்ற
24 எல்லேமுல்லே
25 மத்துறட்டை
26 புறூக்சைட்
27 ருகலே
28 உடப்புசலாவை
29 வெலிமடை
30 ஹாலி எல்லே
31 பதுளை
32 தெல்தனே
33 லுணுகலே
34 பசறை
35 தெமோதரை
36 எல்லே
37 நமுனகலே
38 பாடல்குப்பற
39 நக்கலே
40 புத்தளை
41 பண்டாரவளை
42 அப்புத்தளை
43 தம்பதென்னை
44 பூனகலே
45 கொஸ்லாந்தை
46 நோர்வூட்
47 இலக்கம்
48 டிக்கோயா
49 ஹட்டன்
50 நோட்டன் பிறிட்ஜ்
51 டிம்புளை
52 தலவாக்கெலே
53 லிண்டுளை
54 நானு – ஓயா
55 நுவரெலியா
56 பூண்டுலோயா
கொத்மலே 57
கினிகத்தெனே 58
நாவலப்பிட்டி 59
டொலஸ்பாகே 60
புளத்கோகுப்பிட்டிய 61
அறநாயக்கா 62
கம்பளை 63
கடுகண்ணாவை 64
மாவனல்லே 65
கேகாலே 66
றம்புக்கணை 67
கலகெதரை 68
பொல்காவலே 69
அளவை 70
நிற்றம்புவ 71
அத்தனகலே 72
எட்டியாந்தோட்டை 73
ஹன்வலே 74
நுகேகொடை 75
பாதுக்கை 76
நம்பபானே 77
அங்குருவாத்தோட்டை 78
திருவனங்கெற்ற 79
களுத்துறை 80

ஆள்பதி ஜோசப் வெஸ்ட் றிட்ஜ்வே காலத்தில் (1895—1903) அதிகமாக மத்திய, ஊவா மாகாணங்களில் தேயிலைத் தோட்டங்கள் நிறுவப்பட்டன. இவைகளின் அபிவிருத்தி கருதி வீதிகளை அமைக்கும் முயற்சியில் றிட்ஜ்வே முனைந்தார். இவரது காலத்தில் மஸ்கேலியாவிலிருந்து இலக்கம், குறூடன், மோரேயி ஆகிய இடங்களுக்கு வீதிகள் அமைக்கப்பட்டன. 1894 ம் ஆண்டு கும்பலாவலையிலிருந்து நமுனகலைக்கு அமைக்கப்பட்ட வீதி 1898, 1899ம் ஆண்டுகளில் முறையே பசறை வரையும் துனதெனவரையும் வித்தரிக்கப்பட்டது: அத்தனகலையிலிருந்து பசியாலைவரை ஒரு வீதியும், கேகாலையிலிருந்து புளத்கோருப்பிட்டியாவரை ஒரு வீதியும், அகலவத்தையிலிருந்து அத்வல்லோயா வரை இன்னொரு வீதியும், அமைக்கப்பட்டன:

டிம்புளையிலிருந்து லிண்டுலாவழியாக அக்கரப் பத்தனைக்கு ஒரு வீதியும், செயின்ட் மாக்கிரட்டிலிருந்து உடப்புசலாவைக்கு ஒரு வீதியும், அப்கொட்டிலிருந்து நோர்வூட்டுக்கு ஒரு வீதியும், புறூக்சைடிலிருந்து ஹைபோறஸ்ட்வரை இன்னொரு வீதியும் அமைக்கப்பட்டன: கலேவல்லை, தலாவை—கெக்கராவை வீதியிலுள்ள இகலகமவோடு இணைக்கப்பட்டது. கலேவல்லை ஏற்கனவே மாத்தளை, டம்புளை வீதியிலுள்ள பலாப்பத்துவலையோடு இணைக்கப்பட்டிருந்தது. மேலும் றிட்ஜ்வே காலத்தில் வவுனியா, பறையனலையங்குளத்தோடும்; மட்டக்களப்பு, கிளிவெட்டியோடும் நாவலாறோடும் இணைக்கப்பட்டன: ஹொறணை, அங்குறுவாத் தோட்டை வழியாக அலுத்கமவோடு இணைக்கப்பட்டது. இவ்வீதி களுத்துறை மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தென்னந்தோட்டங்களையும், றப்பர்த் தோட்டங்களையும் அபிவிருத்தியடையச் செய்தது:

ஆள்பதி ஹென்றி பிளேக் (1903—1907) இலங்கையின் வரண்ட பிரதேசங்களிலும், தென்னந்தோட்டங்கள் அநேகமாகக் காணப்பட்ட இடங்களிலும், வட கீழ் மாகாணங்களிலும் வீதிகளை அமைத்தார். வளவைகங்கைக் கரையோரமாக நெற் செய்கையிலீடுபட்டிருந்த விவசாயிகளின் நலன் கருதி அதன் கரையோரமாக ஒரு வீதி மாதம்பையிலிருந்து அம்பலாந்தோட்டைவரை சென்றது. அப்புத்தளை, தம்பெத்தனை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த தேயிலைத்தோட்டங்களின் அபிவிருத்தி கருதி இவ்விரு பட்டினங்கள் வீதிகளால் இணைக்கப்பட்டன. மொனறுகலை, வெள்ளவாயா வீதியிலுள்ள ஹிலண்டாவை, (Hulandawa) பிபிலியோடு இணைக்கப்பட்டது: வெள்ளவாயா மொனறுகலை வீதி கிழக்குத் திசையாக பொத்துவில் வரை வித்தரிக்கப்பட்டது. வாரியப்பொலையிலிருந்து இரு வீதிகள் சிலாபத்தையும் கணேவத்தையையும் இணைத்தன: புத்தளத்திலிருந்து

வடக்கு நோக்கி வண்ணத்தி வில்லுவரையும் ஒரு வீதி சென்றது; நிக்கவரட்டியா, மாஹோவோடும் பரந்தன், கரைச்சியோடும் மன்னர் பேசாலையோடும், நாகொடை நாபொடையோடும் ஹென்றி பிளேக் காலத்தில் வீதிகளால் இணைக்கப்பட்டன. இவரது காலத்திலேயே மாந்தையிலிருந்து இலுப்பைக் கடவை வரை ஒரு வீதி அமைக்கப்பட்டது.

ஹென்றி மக்கலம் (1907—1913) இலங்கையில் ஆள்பதியாகப் பதவியேற்ற காலத்திற்கூட இலங்கையில் அநேக இடங்கள் வீதிகளால் இணைக்கப்படாமலேயே இருந்தன. டொலஸ்பாகேக்கு கம்பஹ வழியாக இன்னொரு வீதி மக்கலம் அவர்களால் அமைக்கப்பட்டது. வெலிமடையை பண்டாரவளையோடும், அம்பேவலையோடும் வீதிகள்மூலம் ஆள்பதி மக்கலம் இணைத்தார். தெற்கே அகலவத்தை கலாவல்லாவைத் துறையோடு இணைக்கப்பட்டது.

வீதிகள் மூலம் இலங்கையின் பிரதான பட்டினங்கள் இணைக்கப்பட்டபோதிலும் அவ்வீதிகளின்மூலம் விரைவாகப் போக்குவரத்துச் செய்ய இன்னும் முடியாமலிருந்தது. இதன் காரணமாக விரைவாகவும் சுலபமாகவும் கொழும்புத் துறைமுகத்திற்குப் பொருள்களை அனுப்பி வைக்க புகையிரதப்பாதை அமைக்குந் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. 1845ம் ஆண்டு கொழும்பையும், கண்டியையும் இணைக்கும் புகையிரதப் பாதை அமைப்பதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்பட்டன. இதற்காக இங்கிலாந்தில் ஒரு வாரியம் நிறுவப்பட்டது. ஆனால் 1847ம் ஆண்டிலேற்பட்ட பொருளாதார மந்தத்தினால் இம்முயற்சி கைவிடப்பட்டது.

1847ம் ஆண்டு கோப்பிச்செய்கையிலேற்பட்ட வீழ்ச்சி, புகையிரதப் பாதைகளை அரசாங்கம் அமைக்கவேண்டிய காரணங்களுள் ஒன்றாகும். இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கோப்பி ஜாவா, பிறேசில், மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் கோப்பியுடன் ஐரோப்பாவில் போட்டியிடவேண்டியிருந்தது. ஆகவே இலங்கைக் கோப்பியை ஐரோப்பாவில் பெருமளவில் விற்பனை செய்வதற்கு அதனுற்பத்திச் செலவைக் குறைப்பது அவசியமாயிற்று. ஆனால் துரதிட்டவசமாக இலங்கையில் கோப்பியின் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியவில்லை. 1853ம் ஆண்டு இலங்கைக் கோப்பியின் விலை அதிகரித்ததன் பயனாக இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நிலைமை சீரடைந்தது. ஆனால் தோட்ட முதலாளிகள் தமது கோப்பியைக் கொழும்புத் துறைமுகத்திற்கு விரைவாகவும் சுலபமாகவும் அனுப்பி வைப்பதற்கு அரசாங்கம் வழிவகுக்கத் தவறிற்று.

மலைநாட்டிற்கும் கொழும்புத் துறைமுகத்திற்குமிடையே அமைக்கப்பட்ட கற்பாதைகள் யாவும் தென்மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் வெள்ளத்தால் மூடப்பட்டுக் கிடந்தன: இதனால் வீதிகளை வருடம் முழுவதும் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாமலிருந்தது. பருவப் பெயர்ச்சிக் காற்று மழைகாலம் ஆரம்பமாகும் மே மாதத்திற்கு முன்பு கோப்பியைக் கொழும்புத் துறைமுகத்திற்கு அனுப்பவேண்டியிருந்தது; அது தவறின் கோப்பியின் விலை குறைந்துவிடும்; இவற்றை மே மாதத்திற்கு முன்பு அனுப்பிவைப்பதற்குப் போதிய மாட்டு வண்டிகள் கண்டிப் பிரதேசத்தில் இருக்கவில்லை. எப்படியுந் தங்களுடைய சரக்குகளை முதலில் அனுப்பிவிட வேண்டுமென தோட்டத்துரைமார் ஒவ்வொரு வரும் எண்ணினர்; எனவே மாட்டு வண்டிகள் குறைவாக இருந்தமையினால் அவற்றின் அருமை அதிகரித்தது. இதனால் வண்டிச் சொந்தக்காரர் கூலியை அதிகரித்தனர்; கண்டிப் பிரதேசத்திலுள்ள ஏனைய மாட்டு வண்டிகளையும் பயன்படுத்தியபோதிலும் தோட்ட முதலாளிகள் அனைவருந் தங்களது சரக்குகள் முழுவதையும் குறித்த காலத்திற்குள் கொழும்புத் துறைமுகத்திற்கு அனுப்பிவைக்க முடியாமற் போயிற்று. வண்டிச் சொந்தக்காரர் கூலியை அதிகரித்தமையாலும் கோப்பியின் உற்பத்திச் செலவு அதிகரித்தது.

மேலும் 1854ம் ஆண்டு இந்தியாவில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டதால் இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளரின் சம்பளத்தை உயர்த்தவேண்டியிருந்தது. அதுவுமன்றிக் குறைந்த விலையில் தோட்டத் தொழிலாளருக்கு அரிசி விநியோகஞ் செய்யும் பொறுப்பைத் தோட்ட முதலாளிகள் ஏற்றுக் கொண்டதாலுஞ் செலவு அதிகரித்தது:

இந்நிலையில் புகையிரதப் பாதைகள் அமைக்கப்படுமேயானால் விரைவாகக் குறைந்த செலவில் தோட்டங்களிலிருந்து ஏற்றுமதிப் பொருள்களைத் துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடியதாக விருக்குமென்ற கருத்து வலுவடைந்தது. இக் கருத்தைச் சட்டக் கழகத்தில் உத்தியோகத்தரும் உத்தியோகத்தரல்லாதோரும் காரசாரமாக எடுத்துரைத்தனர். இதனாற் புகையிரதப் பாதைகள் அமைக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடலாயிற்று:

1858ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொழும்பு, கண்டி புகையிரதப் பாதை ஆள்பதி ஹென்றிவாட் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 1863ம் ஆண்டு பேவியெல் (Favielle) எனும் இலண்டன் ஒப்பந்தக்காரனிடம் கொழும்பு, கண்டி புகையிரதப் பாதை அமைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது; 1865ம் ஆண்டு செப்

டம்பர் மாதம் இறுதிப் பகுதியில் கொழும்பிலிருந்து 34½ மைல்களுக்கப்பாலுள்ள அம்பேபுசவரை புகையிரதப்பாதை அமைக்கப்பட்டது. அவ்வாண்டு அக்டோபர் மாதம் இரண்டாந் திகதி திங்கட்கிழமை கொழும்பிலிருந்து காலை 7 மணிக்கு 84 பிரயாணிகளுடன் புறப்பட்ட ஒரு புகைவண்டி காலை 9 மணிக்கு அம்பேபுசயை வந்தடைந்தது; அச் சேவையின் வசூல் 31 பவுண் — 1 சிலிங் — 11 பென்னியாகும். இங்ஙனம் ஆரம்பித்த புகையிரதப் பாதை மிகத் துரிதமாக முன்னேறி 1866ம் ஆண்டு பொல்காவலையை வந்தடைந்தது: 1867ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ந் திகதி 1,738,483 பவுண் செலவில் கொழும்பு, கண்டி புகையிரதப் பாதை பூர்த்தியாக்கப்பட்டது. இதனால் காசுப் பயிர்ச் செய்கை மேலும் அபிவிருத்தியடைய ஆரம்பித்ததென்பதைச் சொல்லவும் வேண்டுமா!

இதைத் தொடர்ந்து காசுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்த பகுதிகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முப்பது ஆண்டுகளில் புகையிரதப் பாதைகள் பெருமளவில் அமைக்கப்பட்டன: கொழும்பு, கண்டிப் பாதை 1873, 1874, 1884, 1885ம் ஆண்டுகளில் முறையே கம்பளை, நாவலப்பிட்டி, ஹற்றன், நானு ஓயாவரையும் வீத்தரிக்கப்பட்டது. இதனால் பீதுருதலகலை மலையையும் சிவனொளிபாத மலையையும் அடுத்துள்ள பிரதேசங்களில் பலர் தோட்டங்களை நிறுவினர், அதுவுமன்றித் தோட்ட முதலாளிகள் உரத்தையும் உற்பத்திப் பொருள்களையும் முறையே தோட்டங்களுக்கும் துறைமுகத்திற்கும் எடுத்துச் செல்லக்கூடியதாகவுமிருந்தது: 1880ம் ஆண்டு கண்டி, மாத்தளையோடு புகையிரதப்பாதை மூலம் இணைக்கப்பட்டது.

சட்டக்கழக உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்கவும் பதுளை மாவட்டத்திலுள்ள தோட்டங்களின் அபிவிருத்தி கருதியும் நானு ஓயா வரையும் அமைக்கப்பட்ட புகையிரதப் பாதையை பதுளை வரையும் வித்தரிக்கவேண்டிய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது: இதற்கமைய 1893ம் ஆண்டு அப்புத்தளை வரையும் 1894 ம் ஆண்டு பண்டாரவளை வரையும் நீடிக்கப்பட்டது: மேலும் 1906ம் ஆண்டு நானுஓயாவிலிருந்து வடக்கே ருகலை வரையும் ஒரு புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது. பண்டாரவளைவரையும் அமைக்கப்பட்டிருந்த பாதை பதுளைவரையும் 1924ம் ஆண்டு நீடிக்கப்பட்டது.

குருநாகலை மாவட்டத்திலும் கடற்கரைப் பிரதேசங்களிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்த தென்னந் தோட்டங்களின் நலன் கருதி புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டன. கொழும்பிலிருந்து கரையோரமாக ஒரு புகையிரதப் பாதை தெற்கே மாத்தறைவரை

யும் அமைக்குந் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இப் பாதை 1877, 1879, 1891, 1893, 1894ம் ஆண்டுகளில் முறையே மொறட்டுவை, களுத்துறை, அளுத்கம, அம்பலாங்கொடை, காலி முதலிய இடங்களை வந்தடைந்தது. 1894ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14ந் திகதி பொல்காவலை, குருநாகலைப் பாதை போக்கு வரத்துக்குத் திறந்து வைக்கப்பட்டது. கொழும்பு, காலிப்பாதை 1895ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17ந் திகதி மாத்தறைவரை நீடிக் கப்பட்டது.

காங்கேசன்துறை, குருநாகலைப்பாதை இரு முனைகளிலிருந்தும் அமைக்கப்படின், வேலை துரிதப்படுமென அரசாங்கம் கருதிற்று. இதற்கமைய குருநாகலையிலிருந்தும் காங்கேசன்துறையிலிருந்தும் வேலை ஆரம்பமாயிற்று. குருநாகலையிலிருந்து வடக்கு நோக்கி அமைக்கப்பட்ட பாதை 1900ம் ஆண்டு நவம்பர் மாதம் 1ந் திகதி அனுராதபுரத்தை வந்தடைந்தது. காங்கேசன்துறையிலிருந்து தெற்கு நோக்கி அமைக்கப்பட்டபாதை 1902ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ந் திகதி பலையை வந்தடைந்தது. பல, அனுராதபுரப் பாதை 1905ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ந் திகதி இணைக்கப்பட்டது. காங்கேசன்துறை, குருநாகலைப் பாதை, யாழ்ப்பாணம், அனுராத புரம், குருநாகல ஆகிய பிரதான பட்டினங்களை கொழும்புடன் இணைத்தது. இதன் விளைவாக யாழ்ப்பாணக் குடாநாட்டு வாசிகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று தொழில் புரியவும் உத்தியோகம் வகிக்கவும் முடிந்தது. அதுவுமன்றி இலங்கையின் பல பாகங்களுக்குஞ் சென்று குடியேறக்கூடியதாகவும் இருந்தது. இப்பாதை பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் குருநாகல மாவட்டத்தி லும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் தென்னந் தோட்டங்களின் தொகை அதிகரித்தது.

சப்பிரகமுவா மாகாணத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தோட் டங்களின் அபிவிருத்திக்காக களனிப் பள்ளத்தாக்கு வழியாக ஒரு புகையிரதப் பாதையை அமைக்க அரசாங்கம் முன்வந்தது. சிக்க னத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற் பட்டதால் அது நானுஓயா, ரூகலைப் பாதையைப்போல ஒடுக்க மான பாதையை அமைத்தது. இப்பாதை 1902 ம் ஆண்டு அவி சாவலையை வந்தடைந்தது. 1903ம் ஆண்டு வடக்கே எட்டியாந் தோட்டை வரை ஒருபாதை அமைக்கப்பட்டது. கொழும்பு அவிசா வலைப் பாதை 1912 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரத்தினபுரிவரை யும் நீடிக்கப்பட்டது. மேலும் இது 1915ம் ஆண்டு மே மாதம் ஒப்ப நாயக்காவரையும்வி த்தரிக்கப்பட்டது.

புகையிரதப் பாதைகள் 1865 — 1928



1913ம் ஆண்டு மதவாச்சியிலிருந்து ஒரு கிளைப் பாதை மன்னார் வரையும் அமைக்கப்பட்டது; இது 1914ம் ஆண்டு தலைமன்னார் பியர் வரையும் நீட்டப்பட்டது. இதனால் இலங்கையிலுள்ள இந்தியத் தொழிலாளர் தமது தாயகத்திற்குப் போக்குவரத்துச் செய்வது இலகுவாயிற்று. அதுவுமன்றி இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பும் உண்டாயிற்று.

வடமேல் மாகாணத்தில் கரையோரமாக அமைக்கப்பட்ட தென்னந் தோட்டங்களின் அபிவிருத்தி கருதி கரையோரமாக கொழும்பிலிருந்து வடக்கே புகையிரதப்பாதை அமைக்கவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது; இதற்கமைய ருகமத்திலிருந்து நீர்கொழும்பு வரையும் ஒரு பாதை 1909ம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது 1916, 1925, 1926ம் ஆண்டுகளில் முறையே சிலாபம், முந்தல், புத்தளம் வரையும் நீட்டப்பட்டது;

இக்காலத்தில் கீழ்மாகாணம், தெங்குப் பொருள் அபிவிருத்தியிலும் நெல் விவசாயத்திலும் துரித முன்னேற்றமடைந்தது. ஆகவே அம்மாகாணத்தை ஏனைய மாகாணங்களுடன் இணைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இதனால் மாஹோவை திருகோணமலையோடும் மட்டக்களப்போடும் இணைக்கும் வேலை ஆரம்பமாயிற்று. இப்பாதை கெக்கிராவை, மார்க்கமாக கல்ஓயாவை வந்தடைந்தது. அங்கிருந்து திருகோணமலைக்கு ஒரு பாதை அமைக்கப்பட்டு 1927ம் ஆண்டு பூர்த்தியாயிற்று. கல்ஓயா, மட்டக்களப்புப் பாதை 1928ம் ஆண்டு போக்குவரத்துக்குத் திறந்து வைக்கப்பட்டது; 1865ம் ஆண்டு 34½ மைல்களோடு ஆரம்பிக்கப்பட்ட இலங்கை புகையிரதச் சேவை 1928ம் ஆண்டு 894 மையில்களாக அதிகரித்தது. இது ஒரு மகத்தான வெற்றி.

இலங்கையின் வர்த்தகம், காசுப் பயிர்ச் செய்கை, பாலனம் முதலிய வற்றிற்குத் தபாற் சேவை அரிய தொண்டாற்றிற்று. 1833ம் ஆண்டு கொழும்பிற்கும் கண்டிக்குமிடையே தபாற் சேவை ஆரம்பிக்கப்பட்டது; ஆசியாக் கண்டத்தில் முதன்முதலாக இலங்கையிலேயே தபாற்சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஐந்து வருடங்களுக்குப் பின்னர் கொழும்பிலிருந்து காலிக்குத் தபாற் சேவை வித்தரிக்கப்பட்டது. "இலங்கை ஒப்சேர்வர்" பத்திரிகைக் காரியாலயம் தனது கடிதங்களைக் காலிக்கு எடுத்துச் செல்வதற்கு புறுக்களைப் பயன் படுத்திற்று. இப் புறுக் கடுகதி தபாற் சேவையை 1850ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கி வைத்தனர்.

ஆள்பதி ஹென்றி வாட் "பென்னி" தபாற் கட்டண முறையைக் கையாண்டார். இதன் முன்பு தபாலனுப்பவேண்டிய இடத்தின் தூரத்திற்கேற்றவாறே கட்டணம் விதிக்கப்பட்டது; அதாவது

சேய்மையிலுள்ள இடத்திற்கு அதிகமாகவும் அண்மையிலுள்ள இடத்திற்குக் குறைவாகவும் கட்டணம் விதிக்கப்பட்டது. ஆனல் இப் புதிய தபாற் கட்டண முறைப்படி தபால் எத்தூரத்திற்கு அனுப்பவேண்டினும் ஒரே கட்டணம் விதிக்கப்பட்டது. ஆகவேபருத் தித்துறையிலிருக்கும் நபர் ஒருவர் மாத்தறைக்கு ஒருபென்னிச் செல வில் தபாலொன்றை அனுப்பக்கூடியதாகவிருந்தது. அத்துடன் பத் திரிகை அனுப்புவதற்கு அரைப் பங்கு செலவாகவுமிருந்தது. 1858 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ந் திகதி இலங்கையில் ரெலிபோன் சேவை ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இச்சேவை கொழும்புக்கும் காலிக்குமிடையே நடைபெற்று வந்தது. காலகதியில் இச்சேவை மன்னர், திருகோணமலை ஆகிய இடங்களுக்கு வித்தரிக்கப்பட்டது.

பிரதான நகரங்களுக்கிடையே வீதிகள் அமைக்கப்பட்ட பின் ''கோச்சு'' என்னும் குதிரை வண்டியின் மூலம் பிரயாணிகளும் தபாலும் கொண்டு செல்லப்பட்டனர். இத்தபாற் ''கோச்சு'' முறை பிரபலமடைந்ததால் இலங்கையிலுள்ள பிரதான நகரங்களுக் குத் தேவையான தபால் பட்டுவாடா செய்வது சுலபமாயிற்று. பின்னர் புகையிரதப் பாதைகள் திறக்கப்பட்டதும் சீரிய முறையில் தபாற் சேவையை நடத்துவது எளிதாயிற்று. இலங்கையிலுள்ள சிறு கிராமங்களுக்கெல்லாம் தபாற்சேவையை வித்தரிக்கக்கூடிய தாகவிருந்தது. இருபதாம் நூற்றுண்டில் மோட்டார் வாகன வசதி ஏற்பட்ட பின் தபாற் சேவையை மிகவும் சிறந்த முறையில் நடாத்த முடிந்தது. ரெலிபோன் சேவையும் இலங்கையின் பல பாகங்களுக்கு வித்தரிக்கப்பட்டு மிகச் சீரிய முறையில் நடைபெற்று வந்தது. அன்று தபாற் சேவைக்கென அமைக்கப்பட்ட திணைக்களமே இன்று ஒரு தனி அமைச்சாக உருவாகியுள்ளது.

வினாக்கள்

1. பாண்ஸ் தேசாதிபதியும் ஹோட்டன் தேசாதிபதியும் பல ரோட்டுகளை அமைத்ததற்கும் தபால் போக்குவரத்துகளை விருத்தி செய்ததற்கும் காரணம் என்ன? அவற்றை எவ்வாறு விருத்தி செய்தனர்? (டிசெம்பர், '55)

2. இலங்கையின் புகையிரதப் போக்கு வரத்து வளர்ச்சியடைந்தமை பற்றி எழுதுக. உமது விடையை கொடுக்கப்பட்டுள்ள புறவரிப் படத்தில் விளக்குக. (ஜூலை, '57)

3. 1820க்கும் 1890க்கும் மிடையில் தெருக்களும் புகைவண்டிப் பாதைகளும் அபிவிருத்தியடைந்த விதத்தை புறவரிப்படமொன்றின் உதவியுடன் விபரிக்குக. (ஆகஸ்ட், '64)

4. சரித்திர சம்பந்தமான சிறுகுறிப்புகள் எழுதுக.

   (1) கண்டிக்குப் புகையிரதப் பாதை அமைத்தல் (டிசெம்பர் '56)

   (2) சேர் வில்லியம் கிறகெரி (ஆகஸ்ட், '64)

   (3) புகையிரதப் பாதையின் அபிவிருத்தி (டிசெம்பர், '64)

பதினான்காம் அத்தியாயம்

சமூக அபிவிருத்தி

(1831ம் ஆண்டுக்குப்பின்னர்)

கோல்புறூக் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின்படி இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமையால் சமூகத்தில் பல மாற்றங்கள் உண்டாயின. இராசகாரிய முறையால் கிராமங்களில் கிணற்றுத் தவளை போல் கட்டுப்பட்டிருந்தமக்கள் புலம்பெயர்ந்து வெவ்வேறு தொழில்கள் செய்து வாழலாயினர். தாம் செய்த சேவைக்கு சம்பளத்தைப் பெற்றனர். சட்டத்திற்கு முன் உயர்வு, தாழ்வு சாதிமத பேதமின்றி மக்கள் அனைவரும் சமம் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது; பேச்சுச் சுதந்திரமும், எத்தொழிலையுஞ் செய்யும் சுதந்திரமும் பெறப் பெற்றனர்; இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் உதவியது. இலங்கை இக்காலத்தில் முன்னேறியமைக்கு இராசகாரியம் ஒழிக்கப்பட்டமை ஒரு முக்கிய காரண மென்பதில் சந்தேகமில்லை.

சமூகத்தில் ஏற்படும் மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் காரணங்களில் ஒன்று அச்சமூகத்துக்கு அளிக்கப்படும் கல்வி முறையேயாகும். ஒல்லாந்தரது காலத்தில் மதம் பரப்பும் பணியில் ஈடுபட்ட புரட்டத்தாந்து மத குருமார்கள் அப் பணியை நிறைவேற்றுவதற்குக் கல்வியை ஒரு சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டனர்; மேலும் மக்கள்பால் மதக் கருத்துக்களைச் சீரிய முறையில் இடம்பெறச் செய்வதற்காகச் சுதேச மொழிகளில் கல்வியைப் புகட்டினர். பிரித்தானியரும் இவர்களது வழியைப் பின்பற்றிச் சுதேச மொழிகளிலேயே கல்வியைப் போதித்தனர்; ஆனால் கோல்புறூக் குழுவின் சீர் திருத்தங்களின் விளைவாகக் கல்வி முறையில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது; மதத்தைப் பரப்புவதற்கு கல்வியை ஒரு சாதனமாக ஏற்றுக்கொண்ட போதிலும் சுதேச மொழிகள் மூலமாகத்தான் கல்வி புகட்டப்படல் வேண்டுமென்பதை கோல்புறூக் ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளவில்லை. இக்குழு ஆங்கிலமொழி மூலக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது;

கோல்புறூக் ஆணைக்குழுவின் கல்வி சம்பந்தமான எடுத்துரைகளின் காரணமாக ஆள்பதி வில்மட் ஹோட்டன் (1831—1837) 1834ம் ஆண்டு ஒரு கல்விச் சபையை நிறுவினார்; பாடசாலைகளை மேற்பார்வை செய்வதும் கல்வி சம்பந்தமான திட்டங்களை வகுப்பதும் இச்சபையின் பொறுப்பாக விருந்தது. இச்சபையின் அதி

காரத்துக்குட்பட்டு அதற்குப் பொறுப்பு வாய்ந்ததாக எல்லாமாகாணங்களிலும் பாடசாலைக் குழுக்கள் நிறுவப்பட்டன; இவைகள் தத்தம் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் பொறுப்பை ஏற்றிருந்தன. ஒவ்வொரு மாகாணத்திலுமுள்ள பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு அந்தந்தக் குழுக்களுக்கு விடப்பட்டிருந்தது. மேலும் 1836ம் ஆண்டு கொழும்பு அக்கடமி என்ற கல்விநிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அதே ஆண்டில் கத்தோலிக்க குருமார் அரசாங்க உதவி நன்கொடையுடன் ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவினர்; ஆள்பதி ஹோட்டனின் அந்தரங்க செயலாளராகிய ரூடன் என்பவரே இலங்கையில் முதன்முதலாக சுருக்கெழுத்து முறையை அறிமுகப்படுத்திய பெரியாராவர்; ஜோச் ரேணர் (George Turnour) அவர்களால் மஹாவம்சம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது;

1841ம் ஆண்டு நிறுவப்பட்ட கல்வி விசாரணைக்குழு, கிறித்தவ சமயத்தைப் போதனை செய்யும் பாடசாலைகளுக்கு மட்டுமே அரசாங்கம் உதவி நன்கொடை அளிக்கவேண்டுமெனத் தகவுரை செய்தது. இதன் பயனுகப் புரட்டத்தாந்து கிறித்தவர்களும் கத்தோலிக்கரும் கல்வித் துறையில் பெளத்த, இந்து சமயத்தவர்களிலும் பார்க்க முன்னேற்றமடைந்தனர். 1865ம் ஆண்டு மாக்குவிசு என்பவர் இலங்கையின் கல்வி நிலையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நியமிக்கப்பட்டார். இவர் இலங்கையின் கல்விநிலையை நன்கு ஆராய்ந்து ஒரு கல்வித் திணைக்களம் நிறுவப்படல்வேண்டுமெனவும் மேற்படிப்புப் பயில விரும்பும் இலங்கையருக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் வழங்கி இங்கிலாந்துக்கு அவர்களை அனுப்பவேண்டுமெனவும் தகவுரை செய்தார். மேலும் இலங்கையின் கல்வி நிலையங்களில் எவரும் வலோற்காரமாக மதமாற்றம் செய்யப்படலாகாதெனவும் தகவுரை செய்தார்.

மாக்குவிசின் தகவுரையின்படி ஆள்பதிக்குப் பொறுப்புள்ள கல்வித்திணைக்களமொன்று நிறுவப்பட்டது. இதன் விளைவாக 1834ம் ஆண்டு நிறுவப்பட்ட கல்விச்சபை நாளடைவில் தனது அதிகாரத்தை இழந்து குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்குத் தேவையான நேரங்களில் மட்டுமே ஆலோசனை கூறும் ஒரு சபையாக மாறியது. புதிதாக நிறுவப்பட்ட கல்வித் திணைக்களம் சுயபாஷைகளிலும் கல்வியைப் புகட்டவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்தது; 1870ம் ஆண்டில் 8726 மாணவரைக் கொண்ட 156 அரசாங்கப் பாடசாலைகள் மட்டுமே இருந்தன; இத்தொகை 1872ம் ஆண்டில் 10,852 மாணவரைக் கொண்ட 200 அரசாங்கப் பாடசாலைகளாக அதிகரித்தது;

அரசாங்கப் பாடசாலைகள் நல்ல முறையில் செயற்பட ஆரம் பிக்கவே மிஷனரி சங்கங்கள் கல்வித்துறையில் கூடிய முன்னேற்றங் காண முனைந்தன: 1870ம் ஆண்டில் 8207 மாணவரைக் கொண்ட 229 பாடசாலைகள் அச்சங்கங்களின் பொறுப்பில் இருந்தன: 1872ம் ஆண்டளவில் இத்தொகை 402 பாடசாலைகளாக அதிகரித்தது: இக்காலத்தில் ஏற்கனவே நிறுவப்பட்ட கொழும்பு அக்கடமி மேல் வகுப்புகளை நடாத்தி மாணவர்களை கல்கத்தா சர்வகலாசாலைப் பரீட் சைகளுக்குத் தயார் செய்தது:

ஆகவே படிப்படியாகக் கல்வி புகட்டும் பொறுப்பை அரசாங்கம் மேற்கொண்டதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது: இதனால் சுதேச இலக்கியங்களுக்கும் மதங்களுக்கும் சிறிது முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அரசாங்கம் கல்விப் பொறுப்பை ஏற்றதன் காரணமாக எல்லாச் சமூகத்தவருக்கும் சமயத்தவர்கட்கும் அர சாங்கப் பாடசாலைகளில் பாரபட்சமின்றி கல்வி போதிக்கப்பட்டது: ஆதர் ஹவ்லக் காலத்தில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி நிறுவப்பட் டது. ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த வைத்தியக் கல்லூரியையும் தொழில்நுட்பக் கல்லூரியையும் ஆள்பதி றிட்ஜ்வே திருத்தியமைத் தார்.

அரசாங்கம் கல்விப் பொறுப்பை ஏற்றிருந்த போதிலும் மிஷனரி சங்கங்கள் பாடசாலைகளை நிறுவ எடுத்துக்கொண்ட முயற்சி தடை படவில்லை: இம்முயற்சியில் மிஷனரி சங்கங்கள் கூடிய ஊக்கங் காட்டினர். இலங்கையர் பலர் மிஷனரி சங்கங்களால் நடாத்தப் படும் பாடசாலைகளுக்குத் தங்களாலியன்ற பொருளுதவி செய்ய முன்வந்தனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வள்ளல் சாள்ஸ் டீ சொய்சா ஆவர்: இவரது நன்கொடையைக்கொண்டே இலங் கையில் கிருமி நாசினி நிலையம் தாபிக்கப்பட்டது. மேலும் இவர் பல பாடசாலைகளுக்குப் பொருளுதவி அளித்து அவற்றை ஊக்கப்படுத்தி னர். இவர்போன்றோரின் உதவியினால் அடுத்த ஐம்பது வருடங்க ளாக பாடசாலைகள் பல மிஷனரி சங்கங்களினால் நிறுவப்பட்டன:

ஆரம்பத்தில் மிஷனரி சங்கங்களின் கல்வி சம்பந்தமான நட வடிக்கைகளில் பௌத்தரும் இந்துக்களும் அதிக கவனஞ் செலுத்த வில்லை. நாளடைவில் மிஷனரிமார் கல்வியை மதபோதனைக்குப்பயன் படுத்துகிறார்களென்பதை உணர்ந்து, தாங்களும் கல்வித் தாபனங் களை நிறுவித் தத்தம் மதத்தைப் பாதுகாக்கவேண்டுமென பௌத் தரும் இந்துக்களும் விரும்பினர். இதன் பயனாக பிரதான பட்டினங் களில் அவர்கள் பாடசாலைகளை நிறுவினர்: 1839ம் ஆண்டு பாணந்

துறையைக் சேர்ந்த வலானே சித்தார்த்த தேரோ என்பவரின் முயற்சியினுல் இரத்மலானேயில் பரமதம்ம சேதிய என்ற பௌத்த மதக்கலாசாலே ஆரம்பிக்கப்பட்டது. வலிவித்த சரணங்கரா என்பவரும் அவரது சீடர்களும் கண்டிப் பிரதேசத்திலும் கடற்கரைப் பிரதேசங்களிலும் பௌத்த சமயத்தைப் புத்துயிர் பெறச்செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அத்துடன் அனகாரிக தர்மபால (Anagarika Dharmapala), ஹென்றி ஸ்ரீலி ஒல்கொட் (Henry Steele Olcott) போன்றோர் பௌத்தரிடையே தம் மதம், கல்வி இவற்றில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கினர். 1875ம் ஆண்டு நியூயோர்க்கில் நிறுவப்பட்ட "புதிஸ்ற் தியோசிபிக்கல் சொசைற்றி" (Buddhist Theosophical Society) இன் கிளையொன்று இலங்கையில் 1880ம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்காலத்தில் வித்யோதய, வித்தியாலங்கார 'பிரிவேனு' என்றழைக்கப்படும் மதக் கல்வித் தாபனங்களும், அவற்றைவிட வேறு இரு பாடசாலைகள் பாணந்துறையிலும், தொடண்டுவாயிலும் (Dodanduva) பௌத்தர்களுக்கு இருந்தன.

மேலும் ஏற்கனவே நிறுவப்பட்ட பாடசாலைகளுக்கருகாமையில் புதிய பாடசாலைகள் நிறுவப்படுவதை அக்காலத்திலுள்ள சட்டமொன்று தடைசெய்தது. இதனுல் தேவையான இடங்களிலும் வசதியான இடங்களிலும் பௌத்தராலும் இந்துக்களாலும் பாடசாலைகளை நிறுவ முடியவில்லை, எனவே ஒல்கொட் இதுவிடயமாக ஆங்கில அரசோடு தொடர்புகொண்டு இச்சட்டத்தை விலக்கல் செய்வித்தார். இதன் பினவாகப் பாடசாலைகளை எவ்விடத்திலும் நிறுவக்கூடியதாகவிருந்தது. ஒல்கொட் அவர்களின் அயராத உழைப்பினுல் 1866ம் ஆண்டு ஆனந்தாக் கல்லூரி கொழும்பில் நிறுவப்பட்டது. இதையடுத்து கொழும்பில் மியூசியஸ் கல்லூரியும், காலியில் மகிந்தாக் கல்லூரியும், கண்டியில் தர்மராஜாக் கல்லூரியும் நிறுவப்பட்டன, இதன்பின்பு ஒன்றன்பின் ஒன்றுக பாடசாலைகள் நிறுவப்பட்டன. 1900 ம் ஆண்டளவில் இருபத்தொரு இலட்சப் பௌத்தருக்கு 132 பாடசாலைகள் மட்டுமே இருந்தன. அதேசமயத்தில் மூன்று இலட்ச கிறித்தவருக்கு 1117 பாடசாலைகள் இருந்தன. இது அரசாங்கத்தின் கல்விக் கொள்கையையும் கிறித்தவ மதப் பிரசாரத்திற்கு அரசாங்கம் கொடுத்த முக்கியத்துவத்தையும் பிரதிபலிப்பதாய் இருக்கின்றது.

இந்நிலையில் சைவத்தின் நிலையையும், தமிழின் நிலையையும் அறிந்துகொள்வாம். போர்த்துக்கேயர் சைவத்தைச் சிதைத்துச் சைவர்களைக் கத்தோலிக்கராக்கினர், அதுவுமன்றி திருகோணமலை,

சீதவாக்கை முதலிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இந்துக் கோவில்களைத் தரைமட்டமாக்கினர். மேலும் ஒல்லாந்தர் சைவர் களை நிர்ப்பந்தித்துப், பலரைக் கிறித்தவராக்கினர். இவர்கள் முன்னொரு காலத்தில் சங்கபோதி புவனேகபாகுவினால் நல்லூரில் கட்டப்பட்ட கந்தசாமி கோவிலையும், புத்தூரிலுள்ள விஷ்ணு ஆலயத்தையும் அழித்து அவ்விரு இடங்களிலும் கிறித்துவ தேவால யங்களைக் கட்டினர்.

ஆனால் பிரித்தானிய ராட்சியில் ஓர் மாற்றமுண்டாயிற்று. அவர்கள் புரட்டத்தாந்து கிறித்தவ சமயத்தை வளர்ப்பதற்கு பல துறைகளில் பேருக்காங் காட்டினராயினும் சைவம் வளர்ச்சி யடைவ தற்கு முட்டுக்கட்டையாக விருக்கவில்லை. அதுவுமன்றி அவ்வாட்சி சைவர்களுக்கு சமய சுதந்திரத்தை அளித்தது. ஆகவேதான் பிரித் தானியராட்சி சைவர்களுக்குப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்தது எனக் கூறுகின்றோம். பிரித்தானியராட்சியின் ஆரம்ப காலத்தில் சைவர்கள் வாளாவிருந்தனர். அதேசமயம் புரட்டத்தாந்து கிறித் வர் பல விடயங்களில் விழிப்புடனிருந்தனர். அதற்குக் காரணம், அரசாங்கத்தின் கல்விக் கொள்கையே.

பண நெருக்கடி காரணமாக அரசாங்கத்தால் இதுவரையும் நடாத்தப்பட்ட பாடசாலைகள் அனைவற்றையும் 1805ம் ஆண்டு ஆள் பதி சேர் தோமஸ் மெயிற்லந்து நிறுத்திவிட்டாரென்று ஏற்கனவே படித்துள்ளோம். அரசாங்கம் கல்வி விடயத்தைக் கைவிடவே கிறித் தவ மதத்தை இலங்கையில் பரப்பவந்த வெவ்வேறு பிரிவினை யுடைய மிஷனரி சங்கங்கள் அத் தொண்டினை தம் பொறுப்பாக ஏற் றுச் செய்து வந்தன. முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சில ஒல்லாந்த கிறித்தவ குடும்பங்களுக்கும் ஆங்கில உத்தியோகத் தர்களுக்கும் மதம் போதிக்கும் குருவாகப் பணியாற்ற 1801ம் ஆண்டு கிறித்தியன் தாவீது என்பவர் யாழ்ப்பாணத்திற்கு அனுப் பப்பட்டார். இவர் சுண்டிக்குளியில் ஓர் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார். 1812, 1814, 1816, 1818ம் ஆண்டுகளில் முறையே பப்ரிஸ்ற் மிஷன், வெஸ்லியன் மிஷன், அமெரிக்கன் மிஷன், சேச் மிஷன் ஆகிய மிஷனரி சங்கங்கள் யாழ்ப்பாணப் பகுதிக்கு வந்து தத்தமக்குரிய தேவாலயங்களையும், பாடசாலைகளையும் விசேடமாக மானிப்பாய், உடுவில், தெல்லிப்பளை, உடுப்பிட்டி, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை முதலிய இடங்களில் நிறுவி மேற்கத்தைய கலாச் சாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஆங்கிலக் கல்வியையும், புரட்டத்தாந்து கிறித்தவ சமயத்தையும் பரப்பி வந்தனர்.

இதனால் சைவமும், தமிழும் அழியும் நிலையில் இருந்தன. சைவர்கள் உணர்ச்சியின்றி, உண்மையின்றி உறுதியின்றி வாளா

விருந்தனர்; இக்கட்டான நிலையில் அதிட்டவசமாக சைவத்தையும் தமிழையும் தழைத்தோங்கச் செய்யவும், சைவர்களுக்கு ஊக்கமும் உணர்ச்சியுமூட்டி அவர்களை விழித்தெழச் செய்யவும், 1822 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ந் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் திருவவதாரஞ் செய்தார். இந்நைஷ்டிகப் பிரமச்சாரி இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் தமிழுக்கும், சைவத்துக்கும் செய்த தொண்டுகள் அளப்பில; ஆகவே தமிழுள்ள அளவும், சைவமுள்ளளவும் நாவலர் திருநாமத்தை தமிழ்நாடு மறக்கமுடியாது;

ஆறுமுக நாவலர் நல்லூர் சுப்பிரமணிய பிள்ளையிடமும் இருபாலை சேஞதிராய முதலியாரிடமும் தமிழ் பயின்றார்; தனது பன்னிரண்டாவது பிராயத்தில் பீற்றர்பேர்சிவல் எனும் பாதிரியாரால் நடாத்தப்பட்ட மத்திய கல்லூரியில் (Methodist English School, Jaffna) சேர்ந்து ஆங்கிலம் பயின்றார்; பதினெட்டாவது பிராயத்தில் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியனவற்றில் நன்கு புலமையெய்தி ஈடும் எடுப்புமில்லாப் பெரும் புலவராய் விளங்கினர்; அதே பாடசாலையில் தனது இருபத்தெட்டாம் பிராயம் வரையும் ஆசிரியராகக் கடமையாற்றினர்; இவரது தமிழ்ப் புலமையை உணர்ந்த வண. பீற்றர் பேர்சிவல் விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியை இவரிடம் ஒப்படைத்தார். சைவத்திற்கும், தமிழிற்கும் செவ்வனே பணி புரிவதற்கு மத்திய கல்லூரியில் அவர் கற்ற கல்வியும், பேர்சிவல் பாதிரியாருடன் கொண்ட நெருங்கிய நட்புமே அவருக்குப் பெரிதும் பயன்பட்டன.

கிறித்து மதப் பாதிரிமார்களும், அவர்தம் கல்விச்சாலைகளும் எம் நாட்டிற்கும், சமயத்திற்கும் இடர் இழைத்து வந்தனர்; சைவத்திரு நெறியையும், தமிழ் மொழியையும் இரு கண்ணைக் கருதிய நாவலர் உள்ளம் வருந்தியது; ஆகவே, சைவத்தையும் தமிழையும் ஒங்கச் செய்யுந் தொண்டினையும் ஆற்றலிழந்து கிடக்கும் சோர்வு நிலையைப் போக்கி மக்களின் பண்பைப் படிப்படியாக உயர்த்தும் கடமையையும் ஏற்றுத் தன் வாழ்நாளை அர்ப்பணிக்க முன்வந்தார். இவரது குறிக்கோள் பின்வருமாறு:- செந்தமிழை வளர்த்து தமிழில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது; சைவத்தின் மேன்மையைப் பரப்புவது; கிறித்து சமயத்தின் ஊழல்களை வெளிப்படுத்தி கிறித்துவ சமய மதமாற்றத்தைத் தடுப்பது. இவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றுவதற்கு கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்த விரும்பினர். ஆகவே தமிழ்க் கல்வியும் சைவசமயமும் அபிவிருத்தியாவதற்குக் கருவிகள் முக்கியதலந்தோறும் வித்தியாசாலைகளைத் தாபித்தலும் சைவப் பிரமாணஞ் செய்வித்தலுமே என நாவலர் கருதினர்;

மிஷனரி சங்கங்களைப் பின்பற்றி நாவலர் சென்னையிலும், யாழ்ப்பாணத்திலும் இரு அச்சுயந்திர சாலைகளை அமைத்தார்: தமிழ் நாட்டில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல்களை வருந்தித் தேடி ஆராய்ந்து நன்கு பரிசோதித்து பிழையறப் பலர்க்கும் பயன் படும்படி அச்சு வாகனமேற்றினர். சைவர்கள் சமயத்தைப்பற்றி அறியாமலிருப்பதற்கு ஒரு காரணம், அநேக சைவ சமய நூல்கள் செய்யுள் நடையில் எழுதப்பட்டிருந்தமையே. இதை உணர்ந்த நாவலர் அவற்றைத் தமிழ் மக்கள் இலகுவில் கற்றுப்பயனடையும் வண்ணம் உரைநடையில் எழுதி வெளியிட்டார். சில செய்யுள்க ளுக்குஉரை எழுதியும் வெளியிட்டார். இதனாலன்றே "தமிழ் உரை நடையின் தந்தை", "வசனநடை வந்த வல்லாளன்", "உரை நடைக்கோர் நாவலன்" என இவர் போற்றப்படுகின்றார்.

சிவநெறிப் பாடசாலைகள் பலவற்றை ஊர்கள்தோறும் நிறுவி அவைதம் வாயிலாக சமயத்தையும், செந்தமிழையும் பரப்பவேண்டு மென்ற குறிக்கோளுக் கிணங்க யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணை யிலும், தென்னிந்தியாவில் சிதம்பரத்திலும் இரு சைவப்பிரகாச வித்தியாசாலைகளை நிறுவினர்; வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித் தியாசாலைக்குக் கிளையாக கந்தர்மடம், புலோலி, கோப்பாய் ஆகிய இடங்களில் பாடசாலைகளை நிறுவினர். வண்ணார்பண்ணை சைவப்பிர காச வித்தியாசாலையில் மேல்வகுப்பு மாணவர்களுக்குச் சமஸ்கிருத வகுப்புகள்; திருமுறை வகுப்புகள்; பண்டிதர்; பாலபண்டிதர்; பிரவேச பண்டிதர் ஆகிய வகுப்புகள் நடந்து வரலாயிற்று. இன் றும் இவ்வகுப்புகள் அப்பாடசாலையில் நடந்து வருகின்றன.

1960 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பொழுது வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியா சாலையில் முன்போல் மேற்கூறிய வகுப்புகளை நடாத்த முடியுமோ வென சைவப் பெருமக்கள் ஏங்கிக்கொண்டிருந்த சமயம் சைவப் பெரியார் பலரின் நன்முயற்சியால் இவ்வச்சம் நீக்கப்பட்டதோடு அப்பாடசாலையையும் அதன் கிளைகளையும் நடாத்துவதற்கு ஒரு சபை நிறுவப்பட்டது. இது யாழ்ப்பாணத்திற் சைவசமயம், தமிழ் ஆகிய வற்றின் மேம்பாட்டிற்கு விடாமுயற்சியிடன் உழைத்து வருகின்றது. நாவலரின் அயரா உழைப்பினால் உந்தப்பட்ட சைவப் பெருமக்களின் முயற்சியினால் இணுவில், மூளாய், கோப்பாய், கொழும்புத்துறை, பருத்தித்துறை, கோண்டாவில், கந்தர்மடம், வேலணை ஆகிய இடங் களில் சைவநெறிக்கழகங்கள் தோன்றி சைவர்களை விழிப்புறச் செய்து, தமிழையும் சைவத்தையும் வளர்த்தன. நாவலர் தமிழ்ப்

பாடசாலைகளை அமைப்பதோடு நின்று விடவில்லை. அவர் 1872 ம் ஆண்டு ஒரு ஆங்கிலபாடசாலையையும் (Anglo Vernacular School யாழ்ப்பாணத்தில் நிறுவினர்.

நாவலர் சமூகத்திலுள்ள ஊழல்களை அகற்றும் முகமாக பல கட்டுரைகளை தனது பத்திரிகையாகிய "உதய பானு"வில் பிரசுரித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்க முகவர் சைவர்களைப் பாரபட்சமாக நடாத்துகின்றனரென பலதினவேடுகளை அவர் மத்தியஅரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தார். சட்டக் கழகத்தில் சேர் பொன் இராமநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமென ஆள்பதி ஜேம்ஸ் லோங்டன் அவர்களுக்கு அனுப்பிவைத்த நினைவேட்டில் ஆணித்தரமாக வற்புறுத்தினர். இவர் அக்காலத்தில் தமிழும் சிங்களமும் தேசிய பாஷையாக இருக்கவேண்டுமென அபிப்பிராயப்பட்டார். ஆகவே இதுகால் கூறியதிலிருந்து சிறந்த அரசியல்வாதி, சைவசமய எழுச்சியின் தந்தை, சைவர்களின் பிரதான சீர்திருத்தவாதி, ஐந்தாம் சமய குரவர் எனப் போற்றப்படும் ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர், சைவமும் தமிழும் தழைத்தோங்க அருந் தொண்டாற்றினர் என்பது வெள்ளிடைமலை.

ஆறுமுக நாவலர் இறந்த பின்பும் அவரது பணியைச் சைவப் பெருமக்கள் பலர் மேற்கொண்டனர். சைவப் பாடசாலைகள் நிறுவுவதாற்றூன் அவை வாயிலாகச் சைவர்களிடையே அருளொழுக்கத்தையும், சிவ சின்னங்களின் மாண்பையும், திருவைந்தெழுத்துபதேசத்தின் சிறப்பையும் பரப்பலாமென இவர்கள் கருதினர். மேலும் நம் நாட்டில் சைவப் பாடசாலைகள் மக்கள் தொகுதிக்கேற்ப போதியளவின்மையே சைவ மாணவர்கள், மிஷனரி சங்கங்களால் நடாத்தப்படும் பாடசாலைகளுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றனரென இவர்கள் கருதலாயினர். இச் சைவப் பெருமக்கள் சைவச் சூழலிலே சைவ மாணவர்கள் கல்வி பயிலவேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, பாடசாலைகளை நிறுவும் பணியில் முனைந்தனர், இதன் விளைவே யாழ்ப்பாண இந்துக்கல்லூரிக் கல்விச்சபையாகும். இதில் வழக்குரைஞர் நாகலிங்கம், பசுபதிச் செட்டியார், காசிப்பிள்ளை, சபாபதி முதலியார் ஆகியோர் பிரதான அங்கத்தவர்களாவர். வழக்குரைஞர் நாகலிங்கம் அவர்கள் நெடுங்காலமாக இச்சபையின் தலைவராக இருந்து அரும்பெருந் தொண்டாற்றினர். இச்சபை 1890ம் ஆண்டில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியை நிறு

வியது; இதைத் தொடர்ந்து உரும்பிராய், சாவகச்சேரி, கொக்குவில், காரைநகர் முதலிய பிரதான இடங்களில் இந்துக்கல்லூரிகளை நிறுவிற்று.

இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் ஒப்பிலாப் பணிகள் மூலம் சைவத்திற்குப் புத்துயிரளித்து அதன் மாண்பினைப் பாதுகாத்த பெருமை இராமகிருஷ்ண மிஷனையே சாரும்; கல்வி ஆர்வமுள்ளசைவ ஆசிரியர்களைக் கொண்ட சைவப் பாடசாலைகள் கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும் நிறுவப்படுமாயின் மிஷனரி சங்கங்களால் நடாத்தப்படும் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லாது சைவப் பாடசாலைகளுக்குச் செல்வர் என்பது இச்சபையின் எண்ணமாக அமைந்தது; இதற்கொப்ப 1902ம் ஆண்டு கொழும்பில் விவேகானந்தசபை தாபிக்கப்பட்டது; இது கொழும்பில் ஒரு பாடசாலையை நிறுவிற்று. மேலும் இராமகிருஷ்ண மிஷன், இலங்கையில் தனிப்பட்டவர்களால் நிறுவப்பட்ட பாடசாலைகளை எடுத்து நடத்தியும் தாமாகவே பாடசாலைகளை நிறுவியும் தமிழ்த் தொண்டும் சைவத் தொண்டும் புரிந்து வரலாயிற்று. இதனால் நடத்தப்பட்ட பாடசாலைகள் பின்வருமாறு: வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம், சிவானந்தா வித்தியாலயம், மட்டக்களப்பு, இந்துக்கல்லூரி, திருகோணமலை, இராமகிருஷ்ண தமிழ்ப் பாடசாலை, கொக்குவில்.

யாழ்ப்பாண மக்களின் கல்வி நிலையை உயர்த்தி, சைவத்திற்காகவும் தமிழுக்காகவும் பாடுபட்ட பெருந்தகைகளில் ஒருவர் சேர் பொன். இராமநாதன் அவர்கள்; ஆங்கிலம், தமிழ், ஆகிய இரு மொழிகளிலும் சிறப்பாகப் பேசும் ஆற்றல் உள்ள இவர் 1904ம் ஆண்டு அமெரிக்கா சென்று தனது சொற்பொழிவுகளினால் தமிழின் சிறப்பையும், தமிழ்ப் பண்பாட்டின் மேன்மையையும் அங்கு எடுத்துரைத்தார். இவர் இலங்கை திரும்பிக் கல்வி சம்பந்தமான பணிகளில் ஈடுபட்டார். இந்து மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் சமயச் சூழலிலே கல்வி பயிற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்த இவர், 1913ம் ஆண்டு மருதனாமடத்தில் இந்து மகளிருக்கென இராமநாதன் கல்லூரியையும், 1919ம் ஆண்டு திருநெல்வேலியில் இந்து மாணவர்களுக்கெனப் பரமேஸ்வராக் கல்லூரியையும் தாபித்தார். இவை இன்றும் சேர் பொன். இராமநாதன் அவர்களின் ஞாபகச் சின்னங்களாகத் திகழ்கின்றன;

நாவலர், சைவப்பெருநெறியினை நாட்டக் கிராமங்கள்தோறும் சைவப் பாடசாலைகள் தோன்றவேண்டும்; அவை சைவத் திருநெறியின் சிறப்பினை உணர்த்தும் கோவில்களாகத் திகழவேண்டும் எனக் கனவு கண்டார்; சைவ மாணவர்கள், சைவப் பாடசாலைகளிற் சைவச் சூழலில் கல்வி பயிலவேண்டுமெனவும் வலியுறுத்தினார்; அதுவுமன்றி சைவமாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படல்

வேண்டுமெனவும், அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களை ஆசிரியர்களாக நியமிக்கவேண்டுமெனவும் கருதினார். அதற்கானபணியிற் தாமே முயன்றும் வழிகாட்டினார். நாவலரின் அரும் பெருஞ் சேவை, சைவர்களைப் பெருமளவுக்கு விழிப்புறச் செய்தது. சைவத்தையும் தமிழையும் பாதுகாக்க சைவப் பாடசாலைகள் அவசியமென்பதைப் பலர் உணர்ந்தனர். அவ்வுணர்ச்சியின் பலாபலனே யாழ்ப்பாணத்தில் 1923 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ந் திகதி உதயமான சைவ வித்தியாவிருத்திச் சங்கம் (Hindu Board of Education) இதன் காவலனாக ஒப்பிலாத் தலைவரெனப் போற்றப்படும் சேர். பொன். இராமநாதன் கிடைத்தமை இதன் அதிட்டமே.

இது, நாவலரது மேல்வரும் கல்விக் கருத்தைச் சிரமேற் கொண்டு பணிபுரிய முன்வந்ததில் வியப்பொன்றுமில்லை: "தமிழ்க் கல்வியும், சைவசமயமும் அபிவிருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய தலந்தோறும் வித்தியாசாலைகளை தாபித்தலும், சைவப் பிரமாணஞ் செய்வித்தலுமேயாம். இவற்றின் பொருட்டுச் சிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும் சைவப்பிரசுரர்களும் வேண்டப்படுவார்கள். ஆதலினாலே நல்லொழுக்கமும், விவேகமும், கல்வியில் விருப்பமும், இடையறாமுயற்சியும், ஆரோக்கியமும் உடையவர்களாய்ப் பரீக்ஷிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்து உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும், சைவசாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சியடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும், சைவப்பிரசுரர்களாகவும் நியோகிக்கலாம்":

தமிழ் இனத்தின் கல்வித் தராதரத்தை உயர்த்தும் வண்ணம் சகல வசதிகளோடு சிறந்த ஆசிரியர்களைக் கொண்ட பல சைவப் பாடசாலைகளை யாழ்ப்பாணம் முழுவதும் தாபிப்பதே இதன் குறிக்கோளாக அமைந்தது. 1926 ம் ஆண்டு இது 26 பாடசாலைகளை தாபித்து நடத்தியதெனின் இதன் சேவையைச் சொல்லவும் வேண்டுமா? மேலும், அதே ஆண்டு இச் சைவவித்தியாவிருத்திச் சங்கம் திருநெல்வேலியில் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையையும், ஒரு அஞ்தைப் பாடசாலையையும் தாபித்தது. இச் சங்கத்தில் அயராதுழைத்த பெருந்தகை கனம். எஸ். ஆர். இராசரெத்தினம் அவர்களே. இவர் ஊர்கள்தோறும் சென்று தம் அருமைச் சொற்பொழிவுகளின் வாயிலாக நாட்டார் மனத்தையெல்லாம் கலக்கிப் பிறமதப் பாடசாலைகளுக்கு அதுகாறும் சென்று வந்த நூற்றுக்கணக்கான சைவ மாணவர் எல்லாம் சைவப் பாடசாலைக்குப் போகுமாறு தூண்டியும், குறிச்சிக்கொரு சைவப் பாடசாலையாகப் பல பாடசாலைகளை

நிறுவியும் பணிபுரிந்தார்; இவர் போன்ற சைவப் பெருமக்களின் அயரா உழைப்பினால் பல பாடசாலைகள் நிறுவப்பட்டன. 1960 ம் ஆண்டு அரசாங்கம் பாடசாலைகளை உடமை ஆக்கியபோது, சைவ வித்தியா விருத்திச் சங்கத்துக்குச் சொந்தமாக ஏறத்தாழ 250 பாட சாலைகள் இருந்ததிலிருந்து இதன் சேவை அளப்பில என்பது புலனாகின்றது.

இதைவிட யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபை, ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, யாழ்ப்பாணத்துக் கலாநிலையம், கொழும்புத் தமிழ்ச்சங்கம், மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றம், அகில இலங்கை இந்துமாமன்றம் ஆகிய இயக்கங்கள் தமிழையும், சைவத்தையும் வளர்க்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டு இயன்ற தொண்டுகள் பலபுரிந்து வருகின்றன.

பௌத்தர்கள், கிறித்தவர்கள், இந்துக்கள் மத்தியில் காணப்பட்ட சமய மறுமலர்ச்சி முஸ்லீம்களிடையேயும் தோன்றலாயிற்று; 1891ம் ஆண்டு கொழும்பு முஸ்லீம் கல்விச் சங்கம் நிறுவப்பட்டது; இதன் பேரூக்கத்தினால் 1892ம் ஆண்டு கொழும்பு ஸாகிராப் பாட சாலை ஆரம்பமாயிற்று; இதுவே தற்போதைய கொழும்பு ஸாகிராக் கல்லூரி ஆகும்; இதைத் தொடர்ந்து கம்பளை, அலுத்கம, புத்தளம் முதலிய இடங்களில் முஸ்லீம் பாடசாலைகள் நிறுவப்பட்டன. இதன் விளைவாக முஸ்லீம் மாணவ, மாணவிகள் தங்கள் கலாச்சாரத்திற்கேற்ப கல்வி பயிலக்கூடியதாகவிருந்தது; எனவே, இலங்கை மக்களில் சில இனத்தினர் ஆங்கிலக் கல்வியை வரவேற்ற போதிலும், கிறித்தவ மதத்தையும் ஆங்கிலக் கலாச்சாரத்தையும் விரும்பாதவர்களாகவிருந்தனர்.

இலங்கை மக்களுக்கு மேற்படிப்புக்கு சந்தர்ப்பமளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்த எட்வட் மக்கலம் இதை ஆராயும்பொருட்டு ஒரு குழுவை நியமித்தார். இக் குழு இலங்கையில் பல்கலைக்கழகக் கல்லூரியொன்றை நிறுவும்படி தகவுரை செய்தது; மேலும் ஆள்பதி ஸ்ரூபேட் சாமேர்ஸ் இக்கல்லூரியை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தோடு இணைக்க எடுத்துக்கொண்ட முயற்சி பயனளிக்கவில்லை. இறுதியில் 1921 ம் ஆண்டு பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்பட்டது. இது இலண்டன் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார் செய்தது. பல்கலைக்கழகக் கல்லூரிக்குப் பதிலாக இலங்கையில் ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவும் முயற்சியை மேற்கொண்டு, 1941 ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம், தாபிக்கப்பட்டது.

இனி இலங்கைப் பத்திரிகை வளர்ச்சியை ஆராய்வது பயன் தருவதாகும். போர்த்துக்கேயர், கோவையில் ஒரு அச்சகத்தை வைத்திருந்தனர். எனினும் இலங்கையில் ஒரு அச்சகத்தை நிறுவினர் என்பதற்குச் சான்றுகள் இல்லை. ஒல்லாந்தர் இலங்கையில் ஒரு அச்சகத்தை நிறுவினர். இவ்வச்சகத்தில் சமய சம்பந்தமான புத்தகங்களையும் பாடநூற் புத்தகங்களையும் அச்சிட்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் ஒவ்வொரு பிரதியைக் கொடுத்தனர். ஒல்லாந்தர் காலத்தில் புதினப் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டதெனக் கூறுவதற்கும் சான்றுகள் இல்லை. பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பத்தில் ஆங்கில சமூகத்தின் நன்மைக்காக அரசாங்கச் செய்தி மடல் வெளியிடப்பட்டது. இது அரசாங்கப் பொறுப்பில் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இதில் விளம்பரங்கள், விவேகத்தைப் பரீட்சிக்கக்கூடிய செய்திகள், இங்கிலாந்து இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளின் சாரம் முதலியன இடம்பெற்றன. இதில் பொதுசனங்களுக்கும் தமது அபிப்பிராயங்களை விளக்கிக் கட்டுரைகளை எழுதச் சந்தர்ப்பமளிக்கவேண்டுமென ஆள்பதி வில்மட் ஹோட்டன் விரும்பினர்.

எனவே இச்செய்தி மடலுக்குப் பதிலாக 1832ம் ஆண்டு "கொழும்பு ஜேர்னல்" (Colombo Journal) என்ற பத்திரிகை வெளிவந்தது. ஹோட்டன் உட்பட ரேனர் போன்ற பெரியார்கள் இப்பத்திரிகைக்குக் கட்டுரைகள் அனுப்பினர். ஆனால் அரசாங்கம் பத்திரிகையைப் பிரசுரிக்கக் கூடாதென குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் தடைவிதிக்கவே 1833ம் ஆண்டு டிசெம்பர் மாதம் இப்பத்திரிகைப் பிரசுரம் நிறுத்தப்பட்டது. இதன்பின் கொட்டாவைத் தேவாலயத்தைச் சேர்ந்த மிஷனரிமார் ஓர் அச்சகத்தை நிறுவிச் சமய சம்பந்தமான நூல்களை வெளியிட்டனர். கொழும்பிலுள்ள வர்த்தகர் பலரின் முயற்சியினால் 1834ம் ஆண்டு பெப்புருவரி மாதம் "த ஒப்சேவர் அன்ட் கொம்மேர்ஷியல் அட்வெட்டைசர்" (The Observer & Commercial Advertiser) பிரசுரிக்கப்பட்டு வெளிவந்தது. இப்பத்திரிகை அரசாங்கத்தின் சீர்கேட்டைச் சுட்டிக் காட்டியதோடு சீர்திருத்தங்களுக்கும் போராடிற்று. இப்பத்திரிகை காலகதியில் "சிலோன் ஒப்சேர்வர்" எனப் பெயர் பெற்றது.

1850ம் ஆண்டு மாதாந்த வெளியீடாக "த ஓவர்லான்ட் கொழும்பு ஒப்சேவர்" (The Overland Colombo Observer) என ஒரு பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது. இதில் அரசியல், வைத்தியம் சமயம், விவேகம், கப்பல் நடமாட்டம் முதலிய விடயங்கள் இடம் பெற்றன. 1858ம் ஆண்டு "சிலோன் டைம்ஸ்" என்ற பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. 1837ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "பிரண்ட்"

எனும் பத்திரிகை 1845ம் ஆண்டு வெளிவராமற் போயிற்று; 1841ம் ஆண்டு "த இன்வெஸ்ரிகேற்றர்" (The Investigator) என்ற சஞ் சிகை ஆரம்பமாயிற்று; இதில் சட்டக் கழகவமைப்பு, செயல், அரசியல் முதலிய விடயங்கள் ஆராயப்பட்டன. இச்சஞ்சிகையும் 1842ம் ஆண்டு மே மாதம் வெளிவராமற் போயிற்று; 1837 ம் ஆண்டு மே மாதம் "த சிலோன் குறொணிக்கிள்ஸ்" (The Ceylon Chronicles) என்னும் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. இப் பத் திரிகை எப்பொழுதும் அரசாங்கத்தையே ஆதரித்துவந்தது. ஆள் பதியும் அரசாங்க உத்தியோகத்தரும் புனை பெயரில் பல கட்டுரை களை இப்பத்திரிகைக்கு அனுப்பினர்.

கொழும்பில் லோறன்ஸ் போன்ற சட்டவாணர் பலர் ஒரு கூட்டுப் பங்கு வாரியத்தை நிறுவி ஒரு பத்திரிகை வெளியிடும் முயற் சியில் ஈடுபட்டனர். இவர்கள் 1846ம் ஆண்டு "த எக்ஷாமினர்" (The Examiner) என்ற பத்திரிகையை வெளியிட்டனர்; பணநெருக் கடி யேற்படவே இது 1900ம் ஆண்டு வெளிவராமற் போயிற்று. 1862ம் ஆண்டு செப்டம்பர் மாதம் "இலக்மினி பஹான்" என்ற சிங்களப் பத்திரிகை வெளிவந்தது. 1867ம் ஆண்டு பெப்புருவரி மாதம் "கண்டி ஹெரல்ட்" என்ற பத்திரிகை பிரசுரிக்கப்பட்டது; 1880ம் ஆண்டு ஒல்கொட் அவர்களால் "சரசாவி சண்டராச" (Sarasavi Sandarasa) என்னும் சிங்களப் பத்திரிகையும் "த புத் திஸ்ட் (The Buddhist) என்னும் ஆங்கிலப் பத்திரிகையும் பிரசுரிக்கப் பட்டு வெளிவந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்த இப்பத்திரிகைகளில் அரசியல் விடயங்களும், கதை, கட் டுரைகள் மாத்திரமன்றி மத சம்பந்தமான விடயங்களும் அலசி ஆராயப்பட்டன. இலங்கை மக்கள் பலர் பொருளார வசதி மிக்கவர்களாயிருந்தமையினால் அவர்கள் தங்கள் அரசியலுரிமைகளை அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் எடுத்துரைக்க இப்பத்திரிகைகளைக் கருவியாகப் பாவித்தனர். இதுவுமன்றி பௌத்த, இந்துமத அறி ஞர்களால் மதவுணர்ச்சி தூண்டப்பட்டு கிறித்தவர்களின் மதப்பி சாரங்களுக்கெதிராக காரசாரமான கட்டுரைகளும் விவாதங்களும் இப்பத்திரிகையில் இடம்பெறலாயிற்று. இந்துக்களும் பௌத்தர் களும் நடந்திவந்த பத்திரிகைகள், மிஷனரிமாரின் மதப்பிரசாரத் தையும் செய்கைகளையும் கண்டிக்கும் விடயங்களையும் வெளியிட்டன. இவற்றை மறுத்து கிறித்தவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளி யிட்டனர். எனவே பல்வேறு இனத்தவரின், மதத்தவரின் வெவ் வேறு அபிப்பிராயங்களைப் பிரதிபலிப்பதற்கு ஏதுவாக பத்திரிகை கள் பயன்படுத்தப்பட்டன.

இதனால் இலங்கை மக்களின் சமூக, மத, அரசியல் அறிவு வளர்ச்சியடைந்ததுடன் நாட்டில் நடக்கும் விடயங்களையும் அவர்கள் அறியக்கூடியதாகவிருந்தது. பௌத்த இந்து மதங்களின் மறுமலர்ச்சிக்கு பத்திரிகைகள் பெருந்தொண்டாற்றினவென்பதில் சந்தேகமில்லை. இவ்வுணர்ச்சிகளின் மேலீட்டாற்றான் பல பௌத்த, இந்து சங்கங்களும் பௌத்த இந்து பாடசாலைகளும் இலங்கையில் தோன்றின, அன்றியும் பல பணம்படைத்த இலங்கையர் பத்திரிகைத் தொழிலைப் பணமீட்டும் பெருந் தொழிலாகவும் கருதி பெரிய பெரிய தாபனங்களை நிறுவினர். இவைகளின் வளர்ச்சியே இன்று இலங்கையிலுள்ள பெரும் பத்திரிகைத் தாபனங்கள்.

ஆள்பதி வில்மட் ஹோட்டன் காலத்தில் உச்ச மன்றினதும் மாவட்ட மன்றுகளினதும் பொறுப்பில் நீதிபாலனம் விடப்பட்டது 1844, 1845ம் ஆண்டுகளில் முறையே பொலிசு நீதிமன்றுகளும் விண்ணப்ப மன்றுகளும் நிறுவப்பட்டன. நடுவர் முறை இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் வித்தரிக்கப்பட்டது. 1863ம் ஆண்டின் இறுதியில் நாற்பத்தெட்டுப் பொலிசு நிலையங்கள் மட்டுமே இருந்தன; சார்டியல் போன்ற கொள்ளைக்காரரின் அட்டுழியங்கள் அதிகரித்தன. பொலிசு நிலையங்கள் இல்லாக் கிராமங்களில் இவர்கள் ஓடி ஒளிந்துகொண்டமையால் இவர்களைப் பிடிப்பது பொலிசுப் படைக்கு சிரமமாகவிருந்தது. அதுவுமன்றி, கொழும்பு கண்டி புகையிரதப்பாதை அமைக்கப்பட்டமையாற் பாதிக்கப்பட்ட மக்கள் புகையிரதப் பாதையில் தடைகளைப் போட்டு புகையிரத சேவைக்கு இடைஞ்சல் உண்டாக்கினர். இதுவுமன்றி கடுகண்ணாவைக் கணவாய் போக்கு வரத்துக்குத் திறக்கப்பட்டதும் பல புதிய எதிர்ப்புகளை சமாளிக்கவேண்டிய நிர்ப்பத்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. புகையிரத முகவராகிய பிளேவியல் குருநாகலை மாவட்டத்தில் முந்நூறு பச்சிளங் குழந்தைகளைப் பலியிடுவதற்குப் பிடிக்க முயலுகின்றரென்ற வதந்தியை எல்லை வரி வசூலித்தவர்களும் மாட்டு வண்டிகளைக் கூலிக்கு விட்டு ஊதியம் பெற்றோரும் பரப்பினர்; இது இப்பகுதி மக்களிடையே ஒரு பரபரப்பை ஏற்படுத்திற்று.

இந்நிலைமையில் பொலிசு நிலையங்களின் தொகையை அதிகரிக்க வேண்டியிருந்தது. 1865ம் ஆண்டு 16ம் இலக்கச் சட்டத்தின்படி கரும நிருவாகக் கழகத்தின் அங்கீகாரத்தோடு தேவையான இடங்களில் பொலிசு நிலையங்களை நிறுவுவதற்கு ஆள்பதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. தோட்ட முதலாளிகளின் விண்ணப்பத்தின் பேரிலும் மாகாண அரசாங்க முகவரின் தகவுரையின் பேரிலும் தோட்டப் பகுதிகளில் பொலிசு நிலையங்கள் நிறுவப்பட்டன. இப்படியான பொலிசு நிலையங்களைப் பராமரிப்பதற்கு ஏற்படும் செலவில்

ஒரு பகுதியைத் தோட்ட முதலாளிகள் கொடுத்தனர்; பொலிசு சேவையில் ஆட்களைச் சேர்க்கவும், பொலிசுப் பகுதிக்குத் தேவையான சட்டங்களை இயற்றவும் பொலிசு அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இச்சட்டத்தில் பொலிசுப் பகுதியின் அதிகாரங்களும், கடமைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன; பொலிசுப் பகுதியினருக்கு இல்வசமாக வீட்டு வசதி, வைத்திய வசதி முதலியன அளிக்கப்பட்டன,

வரண்ட பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதிகள் அபிவிருத்தியடைந்தமையால் அப்பிரதேச மக்கள் விவசாயம் செய்து பயன் பெறுவதற்கு போதியவசதி உண்டாயிற்று. வைத்தியசாலைகள் ஏராளமாக நிறுவப்பட்டமையால் பலரைப் பலியாக்கிய மலேரியா நோயின் பயங்கரம் பெரிதும் குறைக்கப்பட்டது. இதனால் விவசாயிகளது வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. கண்டிச் சிங்களவர் ஏனைய இனத்தவர்களிலும் பார்க்க முன்னேற்ற மடையாதவர்களாகவே இருந்தனர். இவர்கள் இயற்கையாகப் பழமையை விரும்பும் மனப்பாங்குடையவர்கள். இவர்களுட் பெரும்பான்மையினர் தோட்டங்களில் வேலைசெய்யவோ மற்றும் தொழில்களில் ஈடுபடவோ விருப்பமற்றவர்களாகவிருந்தபோதிலும் தமது நிலபுலன்களில் சிறிய அளவில் மிளகு, ஏலம், தேயிலை, கொக்கோ முதலியனவற்றைப் பயிர்செய்து வியாபாரிகளுக்கு விற்றுவருவாயைப் பெற்றனர்.

காசுப் பயிர்களைத்தவும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் செய்கை பண்ணப்படாததால் யாழ்ப்பாணப் பகுதி பொருளாதார ரீதியில் பெருமளவில் முன்னேற்றமடையவில்லை. ஆனால் மிஷனரிச் சங்கங்கள் பல இடங்களில் பாடசாலைகளை நிறுவியபடியால் இவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்தனர். ஆரம்பத்தில் கல்வி பயிலுவதற்காக பலர் கிறித்தவர்களாக மாறினர். இப்படி மதமாறியவர்களுக்குப் பல சலுகைகளை அரசாங்கம் செய்தது. இதைக் கண்ணுற்று இன்னும் பலர் கிறித்தவ சமயத்தில் சேர்ந்து கல்வி பயின்று அதனால் பயனடைந்தனர். அதுவுமன்றி கிறித்தவ சமயம் சாதிக் கட்டுப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடாததாலும், கல்வி பரவியதாலும் சமூகத்தில் காணப்பட்ட உயர்வு தாழ்வு பெருமளவில் மறைந்தன;

புதிதாகத் தோன்றிய மத்திய வகுப்பினரின் பிரதிநிதிகள் சட்டக் கழகத்தில் இல்லாதிருந்தபோதிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேற்பட்ட மாற்றங்களினால் இவர்கள் சமுதாயத்தில் முக்கியதானத்தை வகித்தனர். இவ் வகுப்பினரிற் சிலர் வைத்தியத் தொழி

லிலும், சட்டத் தொழிலிலும் ஈடுபாடு கொண்டனர்; இன்னுஞ் சிலர் அரசாங்கத் திணைக்களங்களிலும் வர்த்தக தாபனங்களிலும் உத்தியோகம் வகித்தனர். சிலர் வியாபாரத்திலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டுப் பெருஞ் செல்வத்தையும் செல்வாக்கையும் சம்பாதித்துக் கொண்டனர்; சிலர் தோட்ட முதலாளிகளாகவும் போக்கு வரத்து முகவர்களாகவும் ஒப்பந்தக்-காரராகவும் பதவி வகித்துப் பொருள் ஈட்டினர். சுருங்கக் கூறின் இவ் வகுப்பினர் பிரதான பட்டினங்களில் இல்லங்களை அமைத்துக் கல்வியும் செல்வமும் சௌகரியமும் ஒருங்கே அமைந்த வாழ்க்கையை நடாத்தத் தொடங்கினர்.

வினாக்கள்

1. குடியானவர்களின் நிலையை மேம்படுத்துவதற்கு 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகளைக் கூறுக; (டிசெம்பர், '49)

2. (அ) கேணல் H. S. ஒல்கொட் (ஆ) அனகாரிக தர்மபாலா ஆகியோர் 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இலங்கையின் மறுமலர்ச்சி இயக்கத்தில் எத்தகைய பங்கை எடுத்துக் கொண்டனர்? (ஜூலை, '54)

3. மேல்வருவனவற்றின் அபிவிருத்திக்கு இலங்கையில் இருபதாம் நூற்றாண்டில் கையாளப்பட்ட பிரதான வழிவகைகளை விபரி: (அ) உணவுற்பத்தி (ஆ) கல்வி (ஜூலை, '57)

4. 1832ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் நடைமுறையில் கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களைப்பற்றி விபரி; (டிசெம்பர், '59)

5. 1850 லிருந்து 1931 ம் ஆண்டுவரை அரசாங்கம் விவசாயிகளின் நிலைமையைச் சீர்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை விபரி. ('ஆகஸ்ட், '62)

6. வாலாற்றுக் குறிப்புகள் எழுதுக;

   (1) நன்கொடைபெறும் பாடசாலைகள் (டிசெம்பர், 56')

   (2) வலிவிட்ட சரணங்காரா (ஆகஸ்ட், ,64)

   (3) சட்ட நிருபண ஆட்சிக் காலத்தில் கல்வி முன்னேற்றம் (டிசெம்பர், '64)

(4) அனகாரிக தர்மபாலா (டிசெம்பர், '64)

(5) கேணல் எச். எஸ். ஒல்கொட் (ஆகஸ்ட், '65)

7. பின்வருபவர்கள் இலங்கை ஒரு சுதந்திரதேசம் என்ற முறையில் ஆற்றிய சேவைகளை விபரிக்குக.

(1) ஆறுமுகநாவலர், (ஆகஸ்ட் '66)

(2) வண. கிக்கிடுவை ஸ்ரீ சுமங்கல தேரோ (ஆகஸ்ட், '66)

பதினேந்தாம் அத்தியாயம்.

விடுதலைப் போராட்டங்களும் ஹென்றி எட்வட் மக்கலம் அவர்களின் சீர்திருத்தங்களும். 1796—1912

1796ம் ஆண்டு ஒல்லாந்தரிடமிருந்து இலங்கைக் கடற்கரைப் பிரதேசங்களைப் பிரித்தானியர் கைப்பற்றினர், 1798ம் ஆண்டுவரை இப்பிரதேசங்கள் சென்னை மாகாணத்தின் ஒரு பகுதியாகக் கிழக் கிந்திய வர்த்தக சங்கத்தினரால் பாலனஞ் செய்யப்பட்டுவந்தன: 1798ம் ஆண்டு தொடக்கம் 1802ம் ஆண்டுவரை இரட்டை ஆட்சி நிலவியது, 1802ம் ஆண்டு இலங்கை முடிசேர்நாடாயிற்று. 1815ம் ஆண்டு பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றி அதைக் கடற்கரைப் பிரதேசங்களோடு இணைத்து அவ்விரு பகுதிகளிலும் வெவ்வேறு பாலனத்தை ஏற்படுத்திக்கொண்டனர். 1829ம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பட்ட கோல்புறூக் ஆணைக்குழுவின் தக வுரைகளின்படி இலங்கை முழுவதும் ஒரே பாலனத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டது.

கோல்புறூக் ஆணைக்குழுவின் தகவுரைகளின்படி அமைக்கப் பட்ட சட்டக் கழகத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டன: உத்தியோக அங்கத்தவர் தொகை அதிகமாகவிருந்தது. இலங்கை யின் பிரதிநிதிகள் தொகை மிகக் குறைவாகக் காணப்பட்டது: தேர்தல் முறை மூலம் பிரதிநிதித்துவம் மக்களுக்கு வழங்கப்பட வில்லை. கருமநிருவாகக் கழகத்தின்மீது சட்டக் கழகத்திற்கு எவ் வித அதிகாரமும் இருக்கவில்லை. அரசியற்கட்சிப் பிரிவுகளும் இனவா ரிப் பிரிவுகளும் சட்டக் கழகத்தில் இருக்கவில்லை. அங்கு உத்தியோக அங்கத்தவர், உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர் என இரு பிரிவின ரேயிருந்தனர். மேற்கூறிய குறைபாடுகளைச் சட்டக்கழகத்திற்கு உள்ளும் புறமும் அரசியலில் அக்கறை கொண்ட பெரியார் பலர் காலத்துக்குக் காலம் கண்டித்து வந்தனர். எனினும் அரசாங்கம் எச்சட்டத்தைக் கொண்டு வரினும் அது ஐரோப்பியருக்கும் பறங்கி யருக்கும் அநுகூலமாகவும் இலங்கையருக்குப் பாதகமாகவுமிருந்தது: ஆகவே உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களுள் பெரும்பான்மை யினர் ஐரோப்பியரும் பறங்கியருமாக இருந்தமையினால் அவர்கள் அரசாங்கத்தின் செய்கையைக் கண்டியாது வாளாவிருந்தனர்:

ஆனால் இந்நிலைமை நிலை நிற்கவில்லை. 1847ம் ஆண்டளவில் மலையகத்தில் கோப்பி நன்கு அபிவிருத்தி யடையத் தொடங்கியது, மேலும் அது அபிவிருத்தி யடைவதற்கு நல்ல வீதிகள் அமைக்கப் படாமை தடையாகவிவிருந்தது. இக்கட்டான நிலையில் அரசாங்கம், வீதிகள் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட சிறுதொகை பணத்தில் இன்னும் குறைத்தபோது அரசாங்கத்தின் கொள்கையைக் கண்டித்து சட்டக் கழகத்திலிருந்து உத்தியோகத்தரல்லாதோர் வெளியேறினர். ஆத்திரத்துடன் வெளியேறிய அவர்கள் பல கோரிக்கைகள் கொண்ட நினைவேடொன்றை குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அனுப்பிவைத்தனர், அதில் பாதீட்டைப் பரிசீலனை செய்யுமுறிமையும், உத்தியோகத்தரல்லாதோருக்குக் கூடிய அதிகாரமும் வழங்கப்படல் வேண்டுமெனவும் அரசாங்கப் பாலனச் செலவு குறைக்கப்படல் வேண்டுமெனவும் கருமநிருவாகக் கழகத்தின்மீது சட்டக்கழகத்திற்கு அதிகாரம் இருக்கவேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதன் பேரில இலங்கையின் கட்டளைச் சட்டங்களை நடைமுறையில் கொண்டு வருவதற்கு முன்பு, குடியேற்ற நாட்டரசுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றிருத்தல் வேண்டுமென்னும் இதுவரையும் இருந்துவந்த நியதி நீக்கப்பட்டது. அதாவது இனிமேல் அத்தகைய அங்கீகாரம் ஆள்பதி அவர்களாலேயே அளிக்கப்படலாம். மேலும் சட்டக் கழக உறுப்பினர் பாதீட்டைப் பரிசீலனை செய்யலாமென்ற உரிமையும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் வழங்கப்பட்டது.

தெருக் கட்டும் பணத்தைக் குறைத்துக் கொழும்புக்கும் கண்டிக்குமிடையே புகையிரதப்பாதை அமைப்பதற்கு அப்பணத்தைப் பயன்படுத்துமாறு 1853ம் ஆண்டு உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டனர். இதனாலன்றே 1864ம் ஆண்டளவில் அரசாங்கத்திடம் 100,000 பவுண் மிதமிஞ்சியிருந்தது. இத்தொகையை புகையிரதப் பாதைகள், வீதிகள் முதலியன அமைப்பதற்கோ அன்றேல் பொலிசுப்பகுதி, கொழும்பு அக்கடமி, தபாற்பகுதி ஆகியனவற்றிலோ செலவு செய்யாது படையில் செலவு செய்ய ஆள்பதி முடிவு செய்தார்.

1838ம் ஆண்டுவரையும் இலங்கையின் பாதுகாப்புக்காக இலங்கையில் வைத்திருக்கும் படையின் முழுச் செலவையும் இங்கிலாந்தே பொறுத்தது. 1838ம் ஆண்டு அச்செலவின் அரைவாசியையாவது இலங்கை அரசாங்கம் பொறுத்துக் கொள்ள வேண்டுமெனவும் அத்தொகை வருடாவருடம் அதிகரிக்

கப்படுமெனவும் ஒருகட்டளை பிறப்பிக்கப்பட்டது. இதன்படி இலங்கை அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் 24,000 பவுணை வாரியிறைக்க வேண்டியிருந்தது. இங்ஙனம் இத்தொகை வருடந்தோறும் அதிகரித்துக் கொண்டே சென்று 1863ம் ஆண்டு இலங்கை அரசாங்கம் 100,000 பவுணைக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயது:

வெந்த புண்ணில் வேல் நுழைந்ததற்கொப்ப, ஏற்கனவே இத்தகைய அரசாங்கச் செயலை வெறுத்த உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களுக்கு 1864ம் ஆண்டு ஒரு பேரிடி விழுந்தது. அஃதாவது இலங்கையின் பாதுகாப்புச் செலவு முழுவதையும் இலங்கை அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டு மென்பதேயாகும்: இதைக்கேட்டுச் சீற்றங்கொண்ட அவர்கள் அவ்வரணையை எதிர்த்தனர். இந்து சமுத்திரத்தில் தமது ஆணையை நிலைநாட்டுவதற்காகவும் பிரித்தானியப் பேரரசைப் பலப்படுத்துவதற்காகவுமே இலங்கையைப் பிரித்தானியப்படை பாதுகாத்து நிற்கின்றதெனவும் பிரித்தானியக் குடியேற்றநாடுகளில் எங்காயினும் வசூலிக்கப்படாத படைச்செலவு இலங்கையில் மட்டுமே வசூலிக்கப்படுகின்றதெனவும் உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டினர்,

அதுவுமன்றி சட்டக்கழகத்தில் அவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 17ந் திகதி உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களுள் ஒருவராகிய ஜோர்ஜ் உவால் என்பவர் அரசாங்கத்தைக் கண்டிக்கும் மூகமாக பின்வரும் பிரேரணையைக் கொண்டுவந்தார். "இலங்கை அரசியற் பாலனத்துக்கான செலவுக்கு மேலதிகமான அளவில் வருமானங்களை பல்லாண்டுகளாகப் பொதுமக்களிடம் நெருக்கித் திரட்டி அவற்றை நல்ல முறையில் செலவிடாது பல திணைக்களங்களும் பழுதாகிப் போகுமாறு பணத்தைச் சிக்கனப்படுத்தும் இவ்வரசாங்கத்தின் போக்கை இச்சபை கண்டிக்கின்றது." அதிட்டவசமாக இப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அரசாங்கத்திற்கெதிராக ஒரு பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது இதுவே முதல் தடவையாகும்: இவ்வெற்றிக்குக் காரணம், அங்கு உத்தியோக அங்கத்தவர்களுள் ஐந்துபேர் மட்டுமே பிரசன்னமாயிருந்து வாக்களித்தமையும் உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் அனைவரும் ஏகமனதாகப் பிரேரணைக்குச் சார்பாக வாக்களித்தமையுமே:

பிரேரணை நிறைவேற்றப்பட்டதால் அரசாங்கம் வீழ்ந்துவிட்டது என்பது உண்மையே. எனினும் அன்றையஇராணி வழக்குரைஞரான றிச்சாட் மோகன் என்பவரின் வியாக்கியானத்தின்படி அரசாங்கம் வீழ்த்தப்படவில்லை: அவர், உத்தியோக அங்கத்தவர்களின் உதவியோடு சட்டக் கழகம் நடாத்தப்படலாமெனவும்

ஒரு கூட்டத்தின் தாழ்வெண்ணிக்கை ஆறுபேரெனவும் அபிப்பிராயம் தெரிவித்தார்; இதை ஆள்பதியும் ஏற்றுக்கொண்டார்; இதனால் வெறுப்புக்கொண்ட உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் ஒரே முகமாகச் சட்டக் கழகத்திலிருந்து 1864ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ந் திகதி விலகல் செய்தனர்; அவர்கள் பின்வருமாறு:- ஜோஜ் உவால், C. A. லோறன்ஸ், W. தோம்ஸன், J. காப்பர், J. அல்விஸ், G. ஈற்றன். (விடுமுறையைக் கழிப்பதற்காக இங்கிலாந்து சென்ற முத்துக்குமாரசுவாமி அவர்களுக்காக நியமனம் பெற்றவர் G. ஈற்றன் என்பதை மனதிற் கொள்ளவும்.)

இவர்கள் தங்கள் விலகல் கடிதங்களை ஆள்பதிக்கு அனுப்பிவைத்த போது அவர், தான் பிரித்தானிய மகாராணியாரின் பேரிலேயே அவர்களை நியமனஞ் செய்ததெனவும் அங்கடிதங்கள் மகாராணியாராலேயே ஏற்றுக்கொள்ளப்படல்வேண்டு மெனவும் கூறினார்; விலகல் செய்த அங்கத்தவர்கள் தங்களுக்கேற்பட்ட அவமானத்தையும் அநீதியையும் ஆட்சேபித்து ஆள்பதிக்கும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கும் தினவேடுகளை அனுப்பிவைத்தனர்; இதன் பேரில் குடியேற்றநாட்டரசுச் செயலாளர் இலங்கை ஆள்பதிக்கு அனுப்பிய கடிதத்தில் உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களின் விலகல் கடிதங்களை ஏற்றுக்கொள்ளுமாறு பணித்தார். அதுவுமன்றி இலங்கை விவகாரங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஒன்பதுபேர் அடங்கிய ஓர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது; இதன் விளைவே இலங்கைப் படைச் செலவை நிர்ணயிக்கும் அதிகாரத்தை குடியேற்ற அலுவலகம் 1867ம் ஆண்டு கைவிட்டமை;

சட்டக்கழகத்திலிருந்து விலகல் செய்த உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் 1864ம் ஆண்டு நவம்பர் மாதம் 16ந் திகதி இலங்கைக் கூட்டவை என்ற ஒரு சபையை நிறுவினர். இதில் இன, மத, மொழி வேறுபாடின்றி பலதுறைப் பிரமுகர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர். உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களோடு சார்ள்ஸ் அம்புறோஸ், பெர்குசன், மிற்சல், மாக்வுட், ஆமிச்றேச், கிறீன், சார்ள்ஸ் பைட், நன்னித்தம்பி முதலியார், டி சேரம், சார்ள்ஸ் எட்கார் கொறியா, பிலிப் ஜயவர்த்தனை, தர்மரத்தினை ஆகியோர் தோளோடு தோள் நின்று உழைத்தனர். அச்சுலகம் தலையங்கங்கள் தீட்டி இலங்கைக் கூட்டவையை மேலும் உற்சாகப்படுத்திற்று; இதன் கிளைகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டன;

இலங்கைக் கூட்டவையின் கோரிக்கைகளைச் செவிசாய்த்த குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் ஒரு அரசியல் ஆணைக்குழுவை நியமனஞ்செய்ய விருப்பங் கொண்டார்; ஆனால் அதற்கு அக்

காலத்து ஆள்பதி ஹோர்குலிஸ் ரொபின்சன் முட்டுக்கட்டையாக விருந்தார். ஆள்பதியின் மட்டற்ற அதிகாரம், சட்டக்கழக அங்கத்தவர் ஆயுட்காலம்வரை நியமனம் பெற்றமை, அதில் மூன்று இலங்கையர் மட்டுமே அங்கத்துவம் வகித்தமை ஆகியன காலத்துக்குக் காலம் இக்கூட்டவையின் கண்டனத்துக்குள்ளாயின.

1866ம் ஆண்டு நாட்டில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படவே மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை விநியோகஞ் செய்வது அரசாங்கத்தின் கடமையென இலங்கைக் கூட்டவை எடுத்துரைத்தது. அவ்வாண்டு அக்டோபர் மாதம் 3ந் திகதி சட்டக்கழகத் திறப்பு விழாவில் உரைநிகழ்த்திய ஆள்பதி ரொபின்சன், இலங்கையர் அலட்சியமுடையவர்களாகவும், சோம்பேறிகளாகவும் இருப்பதால் அவர்களுக்கு உணவு விநியோகஞ் செய்யும் கடமைப்பாடு அரசாங்கத்துக்கு இல்லையெனக் கூறினார். உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் ஆள்பதி ரொபின்சன் நிகழ்த்திய உரையை வன்மையாகக் கண்டித்தனர். இதன்பேரில் உணவுப் பொருள்கள் ஏராளமாக இறக்குமதி செய்யப்பட்டு விநியோகஞ் செய்யப்பட்டன. இலங்கைக் கூட்டவை அதி செல்வாக்குடையதாகக் காணப்பட்டு அதன் கோரிக்கைகள் அரசாங்கத்திற்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்தன. எனினும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்காது தங்களது அரசியல் உரிமையைப் பெறமுடியாது எனவுணர்ந்து இலங்கை கூட்டவையைச் சேர்ந்த உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கு முகமாக இலங்கைக் கூட்டவையைக் கலைத்தனர்.

பல்வேறு வீதமான கிளர்ச்சிகள் காலத்துக்குக் காலம் தோன்றின. உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களுள் ஐரோப்பிய பிரதிநிதியாகவிருந்த N. கிறிஸ்ரீ அவர்கள் இரு பிரேரணைகளைச் சட்டக்கழகத்தில் பிரேரித்தார். ஒன்று, உத்தியோக அங்கத்தவர் தம் இச்சைப்படி பேசவும் வாக்களிக்கவும் உரிமை வழங்கப்படல் வேண்டும். இரண்டு, சட்டக்கழகத்தில் அவர்களது பங்கு வரையறுக்கப்படல்வேண்டும். இப்பிரேரணைகள் தோல்வியடைந்தன. காரணம், உத்தியோக அங்கத்தவர்களுள் எவரேனும் சாதகமாக வாக்களிக்காததும் உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் அனைவரும் வாக்கெடுப்பின்போது சமூகமளிக்காமையுமே. ஜோஜ் உவால், கிறிஸ்தபர் எலியட், N. கிறிஸ்ரீ முதலிய பிரமுகர்களின் கிளர்ச்சிகளின் விளைவாக தானியவரி நீக்கப்பட்டது.

இலங்கைக் கூட்டவை கலைக்கப்பட்டபோதிலும், ஐரோப்பியரும், பறங்கியரும் இலங்கையரோடு சேர்ந்து சட்டக்கழகத்தில் உத்தியோகத்தரல்லாதோர் தொகை பெரும்பான்மையாயிருக்க

வேண்டுமென்று கிளர்ச்சிகள் செய்யலாயினர். கோல்புறூக் ஆணைக் குழு ஆங்கிலமே அரசாங்க மொழியெனப் பிரகடனப்படுத்தியதும் இலங்கையர் தீவிரமாக மிஷனரி சங்கங்களினுல் நிறுவப்பட்ட பாட சாலைகளிற் சேர்ந்து அம் மொழியிற் பாண்டித்தியம் பெற்றுவரலா யினர். இவர்களிற் பலர் அரசாங்கத்தில் உயர்பதவி வகிக்கத் தலைப் பட்டனர். இத்தகையோர் கல்வித் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் ஒல்லென அதி முன்னேற்றமடைந்தனர். இவர்களே மத்திய வகுப்பினரென அழைக்கப்படலாயினர்: இங்கிலாந்து, அமெ ரிக்கா, பிரான்ஸ், கனடா முதலிய தேசங்களிலெழுந்த புரட்சிகர மான இயக்கங்களும் அவற்றின் பல்வேறு அரசியற்றத்துவங்களும் மத்திய வகுப்பினரின் கவனத்தை ஈர்த்தது: அவர்கள் சனநாயக ரீதியில் சிந்திக்கத் தலைப்பட்டனர்:

1885ம் ஆண்டில் இந்தியாவில் நிறுவப்பட்ட இந்திய காங்கிரஸ் மத்திய வகுப்பினரை மேலும் கண்விழிக்கச் செய்தது. பொதுவாக இலங்கை இந்தியாவைப் பின்பற்றிக் கிளர்ச்சிகள் செய்வதற்கான ஆன்ம சத்தியையும் வீர உணர்ச்சியையும் பெற்றனர்: இலங்கையர் அரசியற் சீர்திருத்தங் கோரிக் கிளர்ச்சிகள் செய்தனர்: அவர்களது கோரிக்கைகளில் இலங்கையருள் 3·49 வீதம் எழுத்தறிவுள்ளவர்க ளாக இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்குத் தேர்தல் வழிகண்ட பிரதிநிதித்துவம் வழங்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட னர். மேலும் அவர்கள், 8,72,000 கண்டிச் சிங்களவரும் 2,26,000 முஸ்லிம்களும் சட்டக்கழகத்தில் பிரதிநிதித்துவமின்றி இருப்பது விச னத்திற்குரியதெனவும் ஆள்பதியால் நியமனம் பெற்ற பிரதிநிதிகள் தானும் ஆயுள் அங்கத்தவராக இருப்பது பொருத்தமானதல்ல வெனவுஞ் சுட்டிக்காட்டினர்.

தற்சமயம் பிரித்தானிய பேரரசினுல் இவர்களது கோரிக்கை களே உதாசீனப்படுத்தமுடியவில்லை. அதனுல் 1889 ம் ஆண்டு சட்டக் கழகத்தில் ஒரு மாற்றம் கொண்டுவரப்பட்டது: அஃதாவது சட்டக்கழகத்திலுள்ள உத்தியோகத்தரல்லாதோரின் தொகை ஆறிலிருந்து எட்டாக அதிகரிக்கப்பட்டுக் கண்டிச் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது: தற்போது உத்தியோகத்தரல்லாதரின் விபரம் பின்வருமாறு:-

ஐரோப்பியர்	3	தாழ்நிலச் சிங்களவர்	1
பறங்கியர்	1	கண்டிச் சிங்களவர்	1
தமிழர்	1	முஸ்லிம்கள்	1

எனினும் உத்தியோக அங்கத்தவர் தொகை பெரும்பான்மையாக விருக்கின்றதென்பது கவனிக்கற்பாலது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கையின் அரசியல் வளர்ச்சியை அநேகமாக ஐரோப்பியரே நிர்ணயித்து வந்தனர். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமானதும் மத்திய வகுப்பினரின் செல்வாக்கு அதிகரிக்க அதிகரிக்க இலங்கையர் தீவிரமாக அரசியற் போராட்டத்தைக் கொண்டு நடாத்தினர். இதைக் கண்ணுற்ற ஐரோப்பியர் அரசாங்கத்தை ஆதரிக்கத் தொடங்கினர். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாம்பெற்ற சலுகைகள் காலகதியில் குன்றவே பறங்கியர் இலங்கையரை ஆதரிக்கலாயினர்.

1903ம் ஆண்டு சட்டக்கழகத்தில் உத்தியோகத்தரல்லாத ஐரோப்பிய உறுப்பினருள் ஒருவராகிய J. N. கம்பல், கருமநிருவாகக் கழகத்தில் இரு உத்தியோகத்தரல்லாதோர் இடம்பெறவேண்டுமென ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார். அப்பிரேரணை ஆள்புதிறிட்ஜ்வே அவர்களால் தகவுரை செய்யப்பட்டதெனினும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் நிராகரிக்கப்பட்டது. 1904ம் ஆண்டு யப்பானியர் ரஷ்யாமீது போர்செய்து வெற்றிபெற்றனர். யப்பானியரது வெற்றி இலங்கையரது உள்ளத்தில் தேசியஉணர்ச்சியை வீறிட்டு எழச்செய்தது. இந்தியத் தேசியத் தலைவர்களான கோபாலகிருஷ்ண கோகலே, மகாத்மா காந்தி ஆகியோரின் சொல்லம்புகளையும் கிளர்ச்சிகளையும் ஊன்றி கவனித்த இலங்கையர் மேலும் உற்சாகமடைந்தனர்.

பிரித்தானியர் ஆளுகின்ற இனம், இலங்கையர் ஆளப்பட வேண்டிய இனம் என்னும் எண்ணம் மாறி பிரித்தானியரிலும் பார்க்க இலங்கையர் எவ்வகையிலும் குறைந்தவர்கள் அல்ல என்ற எண்ணம் அவர்களது உள்ளத்தில் வேரூன்றியது. இவர்கள், பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமே உண்மையான பிரதிநிதித்துவமாகையால் அது தங்களுக்கு அளிக்கப்படல்வேண்டுமெனவும், கருமநிருவாகக் கழகத்தில் உத்தியோகத்தரல்லாதோர் இடம்பெற்றுள்தான் அரசாங்க அந்தரங்க ஆலோசனைகளில் அவர்கள் பங்குபற்ற முடியுமெனவும், சிறுபான்மையினருக்கு விசேடமாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்படல்வேண்டுமெனவும் வாதாடினர்.

அரசாங்கம், ஐரோப்பியர், இலங்கையரெனப் பாகுபாடு காட்டியமையினால் ஐரோப்பியரிலும் பார்க்க ஆற்றல் மிகுந்த உத்தியோகத்தர் இலங்கையரிடையே இருந்தபோதிலும் அவர்களுக்குப் பொறுப்பான அதிகாரப் பதவிகள் கொடுக்கப்படவில்லை. இனப் பாகுபாட்டினால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் சேர் பொன்

அருணசலம் அவர்களாவர். "சேர் பொன். அருணசலம் ஒரு ஆங்கிலேயனாகவிருந்திருந்தால் அவர் குடியேற்றச் செயலாளர் பதவியையே வகித்திருப்பார்" எனக் குடியேற்றச் செயலாளராகிய அலெக்சான்டர் ஆஷ்மோர் வாயிலாக வெளிவந்த உண்மை. கோல் புறூக் ஆணைக்குழுவின்பின் குடித்தொகையும் அரசாங்கத்தினது வருமானமும் பன்மடங்கு அதிகரித்திருக்கின்றன: 1833ம் ஆண்டு 10 இலட்சமாக இருந்த குடித்தொகை 1907 ம் ஆண்டு 40 இலட்சமாக அதிகரித்தது. 1834ம் ஆண்டு 2,07,691 மாணவரிருந்தனர்; 1833ம் ஆண்டு அரசாங்கத்தினது வருமானம் 43,75,550 ரூபாவாகவிருந்தது. ஆனால் 1907ம் ஆண்டு 3,65.73824 ரூபாவாக அதிகரித்தது. ஆனால் இம்மாற்றங்களுக்கேற்றவாறு சட்டக்கழகத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

மேற்கூறியனவற்றை எடுத்துக்காட்டி ஜேம்ஸ் பீரிஸ் போன்ற பிரமுகர்கள் விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்; ஜேம்ஸ் பீரிசுடன் ஒரேமுகமாக அரசியற் சீர்திருத்தக்குரலை எழுப்பிப் பொதுநலத்தொண்டு செய்ய பல பிரமுகர்கள் தோன்றினர்; அவர்கள் பின்வருமாறு: H. J. C. பெரேரா, F. R. சேனநாயக, பொன். அருணசலம், பரன் ஜெயதிலக, பொன். குமாரசுவாமி, D. R. விஜயவர்த்தனா, பொன். இராமநாதன், J. W. de சில்வா, டேவிட் ரெக்வுட், E. W. பெரேரா, C. F. கொறியா. நாட்டின் பாலனம் திறம்பட இயங்க அரசியல் முறை மாற்றியமைக்கப்படல் வேண்டுமெனவும், பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும், சில அரசியற் சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்னும் எழுச்சியும் இவர்களிடையே தோன்றின. பிரதேசவாரியாகத் தேர்தல் வைத்து சட்டக் கழகத்திற்கு பிரதிநிதிகளை அனுப்பவேண்டுமென்று மேற்கூறிய அரசியல் வாதிகள் கோரினர். 1907ம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை வாழ் ஒல்லாந்தப் பறங்கியர் சங்கமும் 1908ம் ஆண்டு தாபிக்கப்பட்ட தாழ்பூமி விளைபொருள் உற்பத்திச் சங்கமும் இக்கோரிக்கைகளை ஆதரித்தன.

பல பிரமுகர்களடங்கிய இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவை (Ceylon Reform League) ஆள்பதி மக்கலம் அவர்களுக்கு ஒரு நினைவேட்டை 1908 ம் ஆண்டு அனுப்பிவைத்ததோடு அதன் பிரதியொன்றை குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அனுப்பி வைத்தது: அது, அந்நினைவேட்டில் உத்தியோகத்தரும் உத்தியோகத்தரல்லாதோரும் சமதொகையாகவுள்ள ஒரு சட்டக்கழகம் அமைக்கப்படல்வேண்டுமெனவும், உத்தியோகத்தரல்லாதோர் இலங்கை முழுவதிற்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் பொருட்டு தேர்ந்தெடுக்கப்படல் வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டது. மேலும் தோட்டத் துரைமார் சங்

கமும் வணிகர் மன்றமும் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் அனைவரும் ஐரோப்பியராய் அமைய இருப்பதால், அவர்கள் எப்பொழுதும் அரசாங்கத்தையே ஆதரிப்பர்: ஆகவே அரசாங்க முறிகள் தோற்கடிக்கப்படும் என்ற ஐயப்பாடு அரசாங்கத்திற்கு இருக்கவேண்டிய அவசியமில்லை, என அந் நினைவேட்டில் விளக்கப்பட்டது.

இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவையின் காரணங்கள் எவையாயினும் ஆள்பதி மக்கலம் சட்டக்கழக அமைப்பில் எவ்வித மாற்றத்தையும் கொண்டுவர விரும்பவில்லை. அவர், குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அனுப்பிய அறிக்கையில் இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவை, இலங்கையின் பல்வேறு சமூகங்களைக் கொண்டவொரு சங்கம் அல்லவெனவும், அது ஒரு விவாதச் சங்கமெனவும் எடுத்துரைத்தார். மேலும், அவர், தனது அறிக்கையில் இலங்கை வாசிகளுக்கு வாக்குரிமை வழங்கப்படின், அவர்கள் அவ்வுரிமையைத் துர்ப்பிரயோகப் படுத்துவரெனவும் அவர்களுக்குத் தேவையானது நல்ல அரசாங்கமேயன்றி சுயாட்சி அல்லவெனவும் அவர்களின் சிறந்த பிரதிநிதிகள் அரசாங்க முகவர்களும், குடியியற் சேவையாளருமே எனத் தகவுரை செய்தார்:

இந்நிலையில் இலங்கைச் சீர்திருத்தக் கூட்டவை ஒரு தூதுக் குழுவை, குடியேற்ற நாட்டரசுச் செயலாளரை இங்கிலாந்தில் பேட்டி காணும் முகமாக 1909ம் ஆண்டு அனுப்பி வைத்தது: அதில் H. J. C. பெரேரா F. H. M. கோபற், K. கோமஸ், J. W. de சில்வா, டேவிட் ரொக்வுட் ஆகிய சீர்திருத்த வாதிகள் அங்கத்துவம் வகித்தனர். இதற்கிடையில் யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம் தாழ்பூமி வினைபொருள் சங்கம், ஆகிய சங்கங்கள் தமது கோரிக்கைகள் நிறைந்த நினைவேடுகளை குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அனுப்பிவைத்தன. மேற்கூறிய தூதுக்குழு 1909ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதி உதவிக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளராகிய சீலி என்பவரைப் பேட்டிகண்டது. சீலி, இக்குழுவின் கோரிக்கைகள் அனைவற்றையும் நிறைவேற்ற முடியாவிடினும் பிரதிநிதித்துவமுறையில் ஏதாவது மாற்றத்தைக் கொண்டுவருவதாக உத்தரவாதமளித்தார். அக்காலத்தில் இங்கிலாந்திலிருந்த ஜேம்ஸ் பீரிஸ் அவர்களுக்கும் பேட்டியளிக்க விரும்புவதாக சீலி அறிவித்ததன் பேரில் ஜேம்ஸ் பீரிஸ் அவர்களும் தனது கோரிக்கைகளை நேரில் சமர்ப்பித்தார். அவருடன் E. W. பெரேராவும் சீலியைப் பேட்டிகாணச் சென்றிருந்தார்: ஜேம்ஸ் பீரிஸ் தனது விண்ணப்பத்தில் கல்வியறிவுள்ள இலங்கையருக்கு வாக்குரிமை வழங்கி அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஜேம்ஸ் பீரிசின் தூண்டுதலினால் இலங்கையரது விடுதலைப் போராட்டம் இங்கிலாந்து மக்களின் கவனத்தைக் கவர்ந்தது; சேர். ஹென்றி ஹோட்டன், சேர். ஹெபேட் ரெபேட்ஸ், கோபற். அலெக்சாண்டர் பெயர்லி போன்ற பொதுமக்கள் சபை அங்கத்தவர்கள், இலங்கைச் சட்டக் கழகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமை பெருங்குறையெனக் கண்டித்து தேர்தல் வழிகண்ட பிரதிநிதித்துவம் இலங்கை மக்களுக்கு வழங்கப்படல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர். அதுவுமன்றி மற்றைய இங்கிலாந்துக் குடியேற்ற நாடுகளில் காணப்படுவது போல் இலங்கையருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படல் வேண்டுமென உதவிக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரைக் கேட்டுக்கொண்டனர்;

இங்கிலாந்திலும் இலங்கையிலும் இலங்கையரின் விடுதலைப் போராட்டம் வலுவடையவே ஆன்பதி மக்கலம் அரசியற் சீர்திருத்தங்களை இலங்கையிற் கொண்டுவர வேண்டுமென உணர்ந்தார். இது வரையும் உயர்ந்த சாதியினருக்கே சட்டக்கழகத்தில் பிரதிநிதித்துவம் இருந்து வந்தது. தாழ்பூமிச் சிங்களவரின் குடித்தொகை அதிகரித்ததால் சட்டக்கழகத்தில் அவர்களது பிரதிநிதிகளின் தொகை போதாதிருந்தது. ஏறத்தாழ பத்து இலட்சம் மக்களைக்கொண்ட தமிழினத்திற்கு இதுவரை ஒரேயொரு பிரதிநிதியே இருந்தார்; மேலும் புதிதாகத் தோன்றிய மத்திய வகுப்பினரின் கோரிக்கைகளையும் உதாசீனப்படுத்தவும் ஆள்பதியால் முடியவில்லை.

ஆள்பதி மக்கலம் அவர்களின் தகவுரையின்படி 1910ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி ஒரு அரசகட்டளை பிறப்பிக்கப்பட்டு இலங்கைச் சட்டக் கழகம் மாற்றியமைக்கப்பட்டது; இலங்கை அரசியற் சரித்திரத்திலும் ஓர் புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. சட்டக் கழகத்தின் அங்கத்தவர் தொகை இருபத்தொன்றாக அதிகரிக்கப்பட்டது. அதில் உத்தியோக அங்கத்தவர் தொகை பதினொன்று; உத்தியோகத்தவரல்லாத அங்கத்தவர் தொகை பத்து. உத்தியோகத்தரல்லாதவருள் நால்வரை கல்வியறிவுள்ள இலங்கையர் வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுத்தனர்; (இலங்கையருள் நான்கு வீத மக்களே கல்வி அறிவுள்ளவர்களாக அக்காலத்தில் இருந்தனர்.) அதாவது நகர்ப்புற ஐரோப்பியருக்கு ஒன்று; நாட்டுப்புற ஐரோப்பியருக்கு ஒன்று. பறங்கியருக்கு ஒன்று; கல்வியறிவுள்ள இலங்கையருக்கு ஒன்று; எஞ்சிய ஆறு உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் ஆள்பதியால் நியமனஞ் செய்யப்பட்டனர்;

1912ம் ஆண்டு ஜனவரி மாதம் முதன்முதலாகப் புதிய சட்டக் கழகம் கூடியபோது இருந்தபடி உத்தியோகத்தரல்லாதோரின் விபரம் பின்வருமாறு:-

வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்

அலெக்சான்டர் பெயர்லி	—	நகர்ப்புற ஐரோப்பியர்
எட்வட் ருெஸ்றிங்	—	நாட்டுப்புற ஐரோப்பியர்
ஹெக்ரர் வில்லியம்	—	பறங்கியர்
பொன். இராமநாதன்	—	கல்வியறிவுள்ள இலங்கையர்

ஆள்பதியால் நியமனஞ் செய்யப்பட்ட அங்கத்தவர்

C. L. ஒபயசேகரா	—	தாழ்பூமிச் சிங்களவர்
A. J. R. டி சில்வா	—	தாழ்பூமிச் சிங்களவர்
றஸ்ற் லீவிஸ்முணமலி	—	கண்டிச் சிங்களவர்
வப்பச்சி மரக்காயர்	—	முஸ்லிம்கள்
அம்பலவாணர் கனகசபை	—	தமிழர்
J. N. திசைவீரசிங்கம்	—	தமிழர்

சட்டக்கழக அமைப்பு

21

உத்தியோக அங்கத்தவர்	உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்
11	10

இப் புதிய சட்டக்கழக அமைப்பிலும் உத்தியோக அங்கத்தவர்கள் தொகை ஏறுபடியாக இருப்பது கவனிக்கற்பாலது. தேர்தல்

வழிகண்ட பிரதிநிதித்துவம் முதல்முதல் இப்பொழுதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதுவுமன்றி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒருபடி மாறியதைக் காணலாம். ஏனெனில் கல்வியறிவுள்ள தொகுதிக்கு சேர். பொன். இராமநாதன் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராகிய டாக்டர் மாக்கஸ் பெர்ணந்து(Dr. Marcus Fernando) என்பவரோடு போட்டியிட்டு வாகைசூடினர். 1912-ம் ஆண்டு ஏற்பட்ட இம்மாற்றம் வெகு சீக்கிரத்தில் இலங்கையொரு சுதந்திரநாடாகவும் மக்கள் பிரதிநிதிகளே ஆட்சியாளர்களாகவும் மாற வழி வகுத்தது. இவ்வாண்டில் இலங்கையருக்கு வழங்கப்பட்ட தேர்தற் பிரதிநிதித்துவ முறையைத் தொடர்ந்தே பின்வந்த மனிங், டொனமூர், சோல்பரி, ஆகியோர் தீவிர மாற்றங்களைச் செய்து சில ஆண்டுகளுக்குள்ளேயே இலங்கை ஒரு பூரண சுதந்திர நாடாக எழுச்சியுற வழிவகுத்தன.

———

பதினேழாம் அத்தியாயம்

பகுதி I

விடுதலைப் போராட்டங்களும்
சேர். வில்லியம் ஹென்றி மனிங் அவர்களின்
சீர்திருத்தங்களும்.

1912ம் ஆண்டு நிறுவப்பட்ட சட்டக் கழகம் இலங்கைச் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியபோதிலும் இன்னும் கூடிய உரிமைகளைப் பெறுவதில் மக்கள் கவனஞ் செலுத்தினர். இவர்களது வெற்றிக்கு இரு சம்பவங்கள் சாதகமாகவிருந்தன: ஒன்று கம்பளையில் தொடங்கிய சிங்கள முஸ்லீம் கலகம். இரண்டாவது படிப்பாகக் குடியேற்றங்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு வழிகாணவேண்டுமென ஆங்கில அரசின் கொள்கை வரையறுக்கப்பட்டமை.

1915ம்ஆண்டு கம்பளையில் தொடங்கிய சிங்கள முஸ்லிம் கலகத்தையொட்டி அதையடக்கு முகமாக இலங்கை அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டது: படையியற் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஏவுநர் முதல்வனாகிய பிரிகேடியர் ஜெனரல் மக்கம் என்பவனின் கட்டளையைச் சிரமேற் கொண்டு கல்நெஞ்சமுடையோராய் இராணுவத்தினர் பொதுமக்களைச் சுட்டுப் பொசுக்கினர்; பொலிசு இன்ஸ்பெக்டர் நாயகம், டௌபிகன் என்பவன் தனது பஞ்சாபிய பொலிசுப் படைக்கு "கலகக் காரரைக் கண்டதும் சுடு" (Shoot at Sight) என்ற கட்டளையைப் பிறப்பித்ததன் விளைவாக அப்படையினர் ஆண் பெண் என்றுகூடப் பார்க்காமல் இலங்கையரைச் சுட்டுக் கொன்றனர். அரசியல், சமூக சேவை, தேசியப் பணி, மதுவொழிப்பு ஆகியனவற்றில் தொண்டு செய்த பல பிரமுகர்கள் தங்கள் ஆட்சிக்கு எதிர்ப்பாகத் தூண்டிய கலகமெனத் தவருக அரசாங்கம் கருதியது; இதனால் பரன் ஜெயதிலகா, W. A. சில்வா, D. S. சேனநாயகா ஆகியோர் கலகத்தைத் தூண்டியவர்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டுச் சிறைப் படுத்தப்பட்டனர்.

இத்தகைய அரசாங்கத்தின் அடக்கு முறைகளைக் கண்ணுற்ற இலங்கையர் சுதந்திர உணர்ச்சிக்கு இரையாயினர்; அந்நிய ஆட்சியை நீக்கிப் படிப்படியாக சுயாட்சி பெறவேண்டுமென எண்ணங் கொண்டனர். சேர். பொன். இராமநாதன் அவர்களது உள்ளம்

தனது நண்பர்கள் சிறையில் நலிவுற்றிருப்பதைக் கண்டு வாடிற்று; அவர் இங்கிலாந்து சென்று இலங்கையர் அனுபவித்த இன்னல்களையும், இராணுவமும் பொலிசுப் படையும் இழைத்த அநீதிகளையும் காரசாரமாகவும் இதயங் கனியக்கூடிய முறையிலும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு எடுத்துரைத்தார். அவர், உடனடியாக சிறைவைக்கப்பட்டிருக்கும் தலைவர்கள் விடுதலைசெய்யப்படல் வேண்டுமெனவும் ஆள்பதி சாமோர்ஸ் அவர்கள் திருப்பி அழைக்கப் படல்வேண்டுமெனவும், கலவரத்தை அடக்க அரசாங்கத்தால் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்யுமுகமாக ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படல் வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இக்காலத்தில், அரசாங்கம் செய்யும் அட்டூழியத்தால் சீற்றங் கொண்ட இன்னொரு பெரியார் E. W. பெரேரா அவர்களாவர். இவர் இங்கிலாந்து சென்று தனது வாய்ச் சாதுரியத்தால் பொது மக்கள் சபையிலுள்ள தாராளரின் இதயத்தை வென்று அவர்களுக்கு இலங்கையில் நடைபெற்ற அட்டூழியத்தை எடுத்துரைத் தார். இதன் பேரில இலங்கையில் நடைபெறும் அநீதியையும் அடக்குமுறைகளையும் வன்மையாகக் கண்டித்து பொதுமக்கள் சபையிலுள்ள தாராளர், ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தனர்.

சேர் பொன். இராமநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தேசியத் தலைவர்கள் உடனடியாக விடுதலை பெற்றனர். ஆள்பதி சாமோர்ஸ் இங்கிலாந்திற்குத் திருப்பி அழைக்கப்பட்டார். மேலும் 1916ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ந் திகதி புதிய ஆள்பதியாகப் பதவி யேற்ற அண்டர்சன் அவர்கள் ஆதாரமற்ற முறையில் குற்றங்கள் சுமத்தப்பட்டு சிறை வைக்கப்பட்ட 800 சிறைவாசிகளை விடுதலை செய்தார். ஒரு ஆணைக்குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

மேற்கூறிய ஆணைக் குழு தமது அறிக்கையில் 1915ம் ஆண்டுக் கலவரத்தை அடக்க அரசாங்கத்தால் மேற்கொண்ட நடவடிக் கைகள் யாவும் நல்ல நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டவை எனக் கூறிற்று. இவ்வியாக்கியானம் மேலும் இலங்கையரை ஆத்திர மடையச் செய்தது. அரசாங்கத்தினது அநீதியைத் தட்டிக்கேட்கும் அதிகாரம் தங்களுக்கு இல்லாத காரணத்தாற்றான் தங்களுக்கு அநீதி விளைவிக்கப்படுகின்ற தென்ற உண்மையை உணர்ந்தனர். ஆகவே தங்களுக்கு அத்தகைய அதிகாரம் வேண்டுமாயின் சட்டக் கழகம் மாற்றியமைக்கப்படல் வேண்டுமெனக் கருதலாயினர். பௌத்த பிரமுகர்கள் பலர் வரலாற்றுக் கட்டுரைகளை எழுதி வெளி யிட்டனர். இவை பௌத்தர்களை கண்டி மன்னர்களின் காலத்திற்கு

எடுத்துச் சென்றன. பௌத்தர்கள் தமது பழம் பெரும் பெருமையை உணரத் தலைப்பட்டனர். இதனால் அவர்கள் தம் பொற்காலம் மறுபடியும் வந்திடாதோ என எண்ணி உணர்ச்சி வசப்பட்டனர்.

சட்டக் கழகத்தில் ஐரோப்பியரது நலனைக் கருதுபவர்களே பெரும்பான்மையினராய் இருப்பதால் பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகத்தரல்லாதோர் பெரும்பான்மையாயும் இலங்கையருக்கு அதிகாரமும் பொறுப்பும் அளிக்கும் சட்டக் கழகம் ஒன்று அமையவேண்டுமென ஒரேமுகமாக இலங்கையர் அபிப்பிராயம் தெரிவித்தனர். ஆகவே இவற்றைப்பெற ஒரு சங்கத்தைக் கூட்டிக் கிளர்ச்சிகள் செய்ய விரும்பினர். இதனால் 1917ம் ஆண்டு மே மாதம் இலங்கைத் தேசிய சபை உருவாக்கப்பட்டது.

முதலாவது மகாயுத்த காலத்தில் இலங்கை, இங்கிலாந்தின் நேசநாடாக அமைந்து ஜேர்மனியோடு போர்ப் பிரகடனஞ் செய்தது; மேலும் சட்டக் கழகம் யுத்தச் செலவிற்கு நிதி ஒதுக்கிற்று; இலங்கைப்படை இங்கிலாந்து சார்பில் யுத்தத்தில் ஈடுபட்டது; இலங்கை, இங்கிலாந்திற்கு முதலாவது மகாயுத்தகாலத்தில் விசுவாசமாக இருந்த காரணத்தால் சிலவேளை யுத்தம் முடிவடைந்தும் இலங்கைச் சட்டக் கழகத்தில் மாற்றமேற்படும் எனச் சிலர் எதிர் பார்த்தனர். யுத்தத்தின் பின்பு வல்லரசுகளின் குடியேற்றங்களில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, சுதந்திரம், சமத்துவம் ஆகிய சனநாயகக் கொள்கைகள் அங்கு பரவலாயின. அக்குடியேற்றங்களில் சுதந்திர இயக்கங்கள் தோன்றின. இந்தியாவில் வங்காளப் பிரிவினை காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சி இலங்கையையுந் தாக்கியது.

1919ம் ஆண்டு டிசெம்பர் மாதம் பல்வேறு சீர் திருத்தச் சங்கங்களைச் சேர்ந்த பிரமுகர்கள் இலங்கைத் தேசிய மகாசபை என்னும் இலங்கைத் தேசிய காங்கிரசை (Ceyion National Congress) நிறுவினர்; இதன் வாயிலாக விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்து படிப்படியாக சுயாட்சி பெறுவதே இப் பிரமுகர்களின் குறிக்கோளாக அமைந்தது; இதன் தலைவராக மாபெரும் தலைவர் சேர் பொன். அருணாசலம் அவர்கள் தெரியப்பட்டமை வியப்பிற்குரியதன்று. இலங்கைத் தேசிய காங்கிரஸ் தனது அறிக்கையை வெளியிட்டது. அவ்வறிக்கையிலுள்ளபடி கோரிக்கைகள் பின்வருமாறு

1. 50 பேர் அடங்கிய சட்டக் கழகம் அமைக்கப்படல்வேண்டும்;
2. இத் தொகையில் 40 அங்கத்தினர் பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.
3. எஞ்சிய 10 அங்கத்தினர் நியமனஞ்செய்யப்பட்ட உத்தியோகத்தர்களாகவும் சில முக்கியமான சிறுபான்மையினரின் பிரதிநிதிகளாகவும் இருக்கவேண்டும்.

4. வாக்குரிமை ஆண்களுக்குப் பரந்த முறையிலும் பெண்களுக்கு சிறு கட்டுப்பாடாகவும் வழங்கப்படல் வேண்டும்.

5. கருமநிருவாகக் கழகத்தில் குறைந்தது அரைவாசியினராவது இலங்கையராய் இருக்கவேண்டும். இவர்கள் சட்டக் கழகத்திலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களிடையே தெரியப்படல் வேண்டும்.

6. அங்கத்தவர்களிடையே தேர்ந்தெடுக்கப்படும் வாசகர் சட்டக் கழகக் கூட்டங்களில் தலைமை வகிக்கல்வேண்டும்.

7. பாதீட்டை மட்டுப்படுத்தும் அதிகாரம் சட்டக் கழகத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

8. இலங்கை ஆள்பதியாக நியமனம் பெறும் நபர் பாராளுமன்ற அரசமைப்பில் நன்கு பாண்டித்தியம் பெற்றவராயும் அதில் நல்ல அனுபவம் உடையவராயும் இருத்தல்வேண்டும்.

மேற்கூறிய கோரிக்கைகள் நிறைந்த நினைவேட்டை இலங்கை ஆள்பதிக்கூடாக அக்காலத்து குடியேற்ற நாட்டரசுச் செயலாளராகிய மில்னர் பிரபுவுக்கு இலங்கைத் தேசீய காங்கிரஸ் அனுப்பி வைத்தது. இதைத் தொடர்ந்து கண்டிச் சிங்களவரும் இலங்கை வாழ் ஐரோப்பியரும் சீர்திருத்தங் கோரித் தனித்தனி நினைவேடுகளை அனுப்பி வைத்தனர். மேலும் குடியேற்ற அலுவலகத்திற்கு இலங்கை ஆள்பதியால் அனுப்பப்பட்ட அறிக்கை பகிரங்கப்படுத்த வேண்டுமெனவும், உடனடியாகத் தங்களுக்கு குடியேற்ற நாட்டரசுச் செயலாளரைப் பேட்டி காணும் உரிமை வழங்கப்படல்வேண்டுமெனவும் இலங்கைத் தேசீய காங்கிரஸ் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரைக் கேட்டுக்கொண்டது.

முதல் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டபோதிலும் இரண்டாவது வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய பரன் ஜெயதிலகா, ஜேம்ஸ் பீரிஸ், பொன். அருணாசலம் ஆகியோரைக் கொண்ட குழு மில்னர் பிரபுவைப் பேட்டி கண்டது. பேட்டியின் முடிவில் இலங்கை அரசியற் சீர்திருத்தம் விடயமாக ஆலோசனை நடாத்தும்பொருட்டு ஆள்பதி மனிங் அவர்கள் இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்டுள்ளாரெனவும் ஒல்லெனச் சட்டக்கழகம் மாற்றி அமைக்கப்படுமெனவும் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

மில்னர் பிரபுவின் உத்தரவாதத்திற்கிணங்க 1920 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் திகதி ஒரு புதிய அரசகட்டளைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டம் 1909ம் ஆண்டு இந்தியாவில்

கொண்டு வரப்பட்ட மோர்லி—மின்ரோ சீர்திருத்தங்களை ஒத்திருந்தது: புதிய அரசகட்டளைச் சட்டத்தில் காணப்பட்டதன் வண்ணம் புதிய சட்டக்கழக அமைப்பு பின்வருமாறு:-

1:	புதிய சட்டக்கழகத்தின் அங்கத்தவர் முழுத் தொகை	37	
	அதில் உத்தியோக அங்கத்தவர் தொகை		14
	உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர் தொகை	23	
2:	இந்த இருபத்துமூன்று அங்கத்தவர்களில் பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தொகை		11
	மேல்மாகாணம்	3	
	மற்றைய எட்டு மாகாணங்களுக்கு ஒவ்வொன்றின் வீதம்	8	
3.	வகுப்பு வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தொகை		3
	ஐரோப்பியர்	2	
	பறங்கியர்	1	
4:	சங்கங்களினால் தெரிவுசெய்யப்படும் தொகை		2
	தாழ்பூமி விளைபொருள் உற்பத்திச் சங்கம்	1	
	வணிக மன்றம்	1	
5.	உத்தியோகத்தரல்லாதோரில் பல்வேறு இனத்தவர் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையில் ஆள்பதியால் நியமனஞ் செய்யப்படும் அங்கத்தவர் தொகை.		7
	கண்டிச் சிங்களவர்	2	
	இந்தியர்	1	
	முஸ்லிம்கள்	1	
	ஏற்கனவே பிரதிநிதித்துவம் பெறாத இனத்தவருக்கு	3	
	முழுத் தொகை		37

மேலும் பின் வரும் சீர் திருத்தங்கள் செய்யப்பட்டன.

1: வாக்குரிமை முன்புபோல கல்வியறிவுள்ளவர்களுக்கே வழங்கப்படும். அதாவது வாக்காளர் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய பாஷைகளில் ஏதாவது ஒரு பாஷையில் எழுத வாசிக்கத் தெரிந்திருக்கவேண்டும். அத்துடன் வாக்காளர் மாதம் ஒன்றிற்குக் குறைந்தது ஐம்பது ரூபாய் வருமானம் பெறுபவராய் இருக்கவேண்டும்.

2. அபேட்சகரது யோக்கியாம்சங்கள் பின்வருமாறு:

(1) அவர்கள் 21 வயதிற்கு மேற்பட்டவராய் இருக்கவேண்டும்.

(2) பிரித்தானிய குடியுரிமையுள்ளவராய் இருத்தல்வேண்டும்.

(3) வாக்குரிமையுள்ளவராய் இருத்தல் வேண்டும்.

(4) ஆங்கிலம் எழுதும், வாசிக்கும் ஆற்றல் இருக்கவேண்டும்.

(5) அரசாங்க உத்தியோகம் எதுவும், வகிக்கல் ஆகாது.

(6) தேர்தலுக்கு முன்பு 3 ஆண்டுகளுக்குக் குறையாமல் இலங்கையில் வசித்திருத்தல் வேண்டும்.

(7) குறைந்தது 1500 ரூபா வருட வருமானம் பெறுபவராய் இருத்தல்வேண்டும். அன்றேல் 6000 ரூபா பெறுமதியான ஆதனம் இருத்தல்வேண்டும்.

3. ஆள்பதிக்கு ஆலோசனை கூறுவதற்காக் நிறுவப்பட்ட நிதிக் குழுவில் இலங்கையர் ஒருவர் அல்லது இருவர் இடம் பெறுவர்.

4. கருமநிருவாகக் கழகத்தில் உத்தியோகத்தரல்லாதோரில் மூவர் அங்கத்துவம் வகிப்பர்.

ஆள்பதி மனிங் அவர்கள் கொண்டுவந்த அரசியற் சீர்திருத்தங்களிலும் குறைபாடுகள் பல காணப்பட்டன. அவை எச் சாகியத் தவரையும் திருப்திசெய்யவில்லை. பெயரளவில் உத்தியோகத்தரல்லாதோர் மூதன்முதலாகப் பெரும்பான்மையினராக இருந்தபோதிலும் நடைமுறையில் சட்டக் கழக நடவடிக்கைகளில் ஆள்பதியை ஆதரிப்பவர்களே பெரும்பான்மையினராயிருந்தனர். ஏனெனில் வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் 2 ஐரோப்பியரும், 1 பறங்கியும், வணிகமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் 1 ஐரோப்பியரும், 14 உத்தியோகத்தரும், 7 நியமன அங்கத்தவருமாக 25 பேர் எப்பொழுதும் ஆள்பதியை ஆதரிக்கக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. மேலும் உத்தியோகத்தரல்லாதோர் அதிகப்படியாக இருந்தபோதிலும் அவர்களுக்கு அதிகாரமோ பொறுப்போ வழங்கப்படவில்லை. ஆள்பதிக்கு மட்டற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன. உதாரணமாக, தேவை ஏற்படின் அவர் உத்தியோகத்தரல்லாதோரைப் புறக்கணித்துவிட்டு உத்தியோக அங்கத்தவரின் உதவியுடன் சட்டக் கழகத்தைக் கூட்டிதான் விரும்பியனவற்றைச் சாதித்து விடலாம். கண்டிச் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இந்தியத் தமிழருக்கும் தேர்தல் வழிகண்ட பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

ஆள்பதி மனிங் அவர்களின் சீர்திருத்தங்கள் பிரகடனப்படுத்தப்பட்டதும் இலங்கைத் தேசிய காங்கிரஸ் விசேட கூட்டமொன்

றைக் கூட்டி புதிய சீர்திருத்தங்களைக் கண்டித்தது. அது, தாம்முன் னர் குடியேற்ற அரசுச் செயலாளருக்கு சமர்ப்பித்த சீர் திருத்தங் களை அமூல் செய்வதற்குக் கிளர்ச்சிகள் செய்யலாயிற்று. ஒருகா லத்தில் குடியியற் சேவையாளராயும் ஆள்பதியின் கரும நிருவாகக் கழகத்தில் அங்கத்தவனுயுமிருந்த சேர். பொன். அருணுசலம் அவர் கள் தனது தலைமையுரையில் "ஆள்பதி மனிங் ஐரோப்பியரின் நன் மையைக் கருதி பிற்போக்குவாதிகளினதும் முகத்துதி பாடுவோ ரதும் பேச்சினைச் செவிசாய்த்து இலங்கை மக்களுக்குத் துரோகம் விளைவித்திருக்கின்ருர்" எனக் கூறினர். மேலும் இவர், "எங்க ளுடைய வீடுதலைப் போராட்ட இயக்கத்திற்கு அரசாங்கம் பல முட் டுக்கட்டைகளைப் போடுவதாலும் வகுப்புவாதத்தை வளர்ப்பதா லும் நாங்கள் ஏமாற்றப்படுகின்ருேம். ஆனல் இம் முட்டுக்கட்டை களும் ஏமாற்றங்களும் இலங்கையின் பல்வேறு சாகியத்தவரை ஒற்றுமைப்படுத்தும் சாதனங்களாக அமையும் என்பது நிச்சயம்" எனக் கூறி தேசிய உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர்.

இக்கூட்டத்தில் புதிய அரச சபைச் சட்டம் இலங்கை மக்களுக்கு பொறுப்பாட்சியின் ஆரம்பத்தைத்தானும் கொடுக்கவில்லையெனவும் திட்டமிட்டே கண்டிச் சிங்களவரைப் பிரதிநிதித்துவமாரியான தேர்தற் ருெகுதிகளில் சேர்க்கவில்லையெனவும், இது சிங்களவரைப் பிரிக்கும் சூழ்ச்சியெனவும் எடுத்துரைக்கப்பட்டது. ஆள்பதியின் அதிகாரங் கள் அதிகரிக்கப்பட்டமை, சட்டக் கழகத்தின் விவாத நேரம் மட்டுப் படுத்தப்பட்டமை, மக்களின் பிரதிநிதிகள் சட்டக் கழகத்தில் அதி காரமற்றவர்களாக்கப்பட்டமை, மக்களது ஆட்சி மறுக்கப்பட் டமை, உத்தியோகத்தரல்லாதோரைத் தற்காலிகமாகச் சட்டக் கழ கத்திற்கு வராமல் இடைநிறுத்தல் செய்யும் உரிமை ஆள்பதிக்கு வழங்கப்பட்டமை முதலிய குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, இலங் கைத் தேசிய காங்கிரஸ் சட்டக்கழகத்தை ஒன்றி ஒதுக்கல் செய் யத் தீர்மானித்தது.

ஆனல் ஆள்பதி மனிங், தேசியக் காங்கிரசின் கண்டனங்களை அலட்சியம் செய்து தேர்தலுக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்தார். 1920ம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜேம்ஸ் பீரிசின் தலை மையின் கீழ் தேசிய காங்கிரஸ் ஆள்பதியைப் பேட்டி கண்டது. பேட்டியின்போது புதிய சட்டக்கழகம் அமைப்பதில் தேசிய காங் கிரஸ் ஒத்துழைக்கும் பட்சத்தில், மேலும் சில சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதாக மனிங் உறுதிகூறவே தேசிய காங்கிரஸ் அரசாங் கத்துடன் ஒத்துழைக்கவும் தேர்தலில் நிற்கவும் தீர்மானித்தது.

இலங்கைத் தேசிய காங்கிரஸ், மனிங் அவர்களின் திட்டத்தை ஏற்றுக்கொண்டதை விரும்பாத தமிழர் அதிலிருந்து விலகல் செய்

தனர். இதைத் தொடர்ந்து அதிலுள்ள ஏனைய சிறுபான்மையினர் விலகல் செய்தனர்; தேசீய காங்கிரசிலிருந்து விலகல் செய்த சிறு பான்மையினர் "சிறுபான்மை ஐக்கிய முன்னணியை" நிறுவினர். எனினும் மனிங் தேசீய காங்கிரசைச் சேர்ந்த அங்கத்தவர்களையும் சிறுபான்மை ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த அங்கத்தவர்களையும் காலத்துக்குக் காலம் ஆசைகாட்டியும் ஏமாற்றியும் அரசாங்கத்தை நடாத்துவதில் வெற்றி கண்டார்.

புதிய சட்டக் கழகம் சம்பிரதாயப்படி 1921ம் ஆண்டு ஜூன் மாதம் 7ந் திகதி திறந்து வைக்கப்பட்டு செயற்படலாயிற்று. புதிய சட்டக் கழகத்தில் பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிகளின் பெயர்களும் தொகுதிகளும் பின்வருமாறு.

W. M. இராஜபக்சே	மேல்	மாகாணம்
ஜேம்ஸ் பீரிஸ்	மேல்	,,
E. W. பெரேரா	மேல்	,,
C. E. கொறியா	வட மேல்	,,
S. D. கிருஷ்ணரத்தின	வட மத்திய	,,
வை. துரைசாமி	வட	,,
E. R. தம்பிமுத்து	கீழ்	,,
D. H. கொத்தலாவலை	ஊவா	,,
A. C. G. விஜயக்கோன்	மத்திய	,,
வண. W. E. பொத்தியு	சப்பிரகமுவ	,,
O. C. திலகரத்தின	தென்	,,

இலங்கைத் தேசீய காங்கிரஸ் அரசாங்கத்தோடு ஒத்துழைத்த போதிலும் அவர்கள் சட்டக் கழகத்தில் உண்மையான, போதிய பெரும்பான்மை அங்கத்துவம் வேண்டுமென்றும் வாக்குரிமை மிகவும் தாராளமான முறையில் இருக்கவேண்டுமென்றும் கருதினர். அவர் கள் குறிப்பாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை அடியோடு வெறுத்தனர்: புதிய சட்டக் கழகம் அமைக்கப்பட்டு ஆறுமாதங்க ளாகியும் எவ்வித சீர்திருத்தங்களும் ஆள்பதியால் கொண்டுவரப் படவில்லை என்பதை இலங்கைத் தேசீயக் காங்கிரஸ் உணர்ந்தது: அதன் முதல்வர் ஜேம்ஸ் பீரிஸ், ஓர் அரசியற் சீர்திருத்தப் பிரேர ணையை 1921ம் ஆண்டு டிசெம்பர் மாதம் சட்டக் கழகத்தில் கொண்டு வந்தார். அவர் வேண்டிய சட்டக்கழக அமைப்பு பின்வருமாறு:

1	சட்டக் கழக அங்கத்தவர் முழுத் தொகை	45
	இதில் உத்தியோக அங்கத்தவர் தொகை	6
	உத்தியோக அங்கத்தவரல்லாத அங்கத் தவர் தொகை	39

2	இந்த 39ல் பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப் படுவோரின் தொகை	28
5	பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் 28 அங்கத்தவர்களில் கீழ் மாகாணத்திற்கும் வட மாகாணத்திற்கும் ஒதுக்கப்பட வேண்டிய தானங்களின் தொகை	9
சி	சிறுபான்மையினருக்கு ஒதுக்கப்படவேண்டிய தானங்களின் தொகை	11
	முழுத்தொகை	45

மேலும் அவர் கேட்டுக்கொண்டது பின்வருமாறு:

1, சட்டக் கழகக் கூட்டங்களில் தலைமை வகிக்கும்பொருட்டு ஓர் வாசகர் உத்தியோகத்தரல்லாதவர்களிடையே தெரிவுசெய்யப் படல் வேண்டும்,

2. வாக்காளர்களின் தராதரம் மேலும் குறைக்கப்படல் வேண்டும்;

தாழ்நிலமிச் சிங்களவரையே பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ் இத்தகைய பாரபட்சமான கோரிக்கைகளைப் பிரேரணை மூலம் கொண்டுவந்ததால் இலங்கைத் தமிழர், ஐரோப்பியர், பறங்கியர், முஸ்லிம்கள், இந்தியராகிய சிறுபான்மையினர் பெரும் ஏமாற்றமடைந்தனர். இவர்களடங்கிய சிறுபான்மை ஐக்கிய முன்னணி ஆள்பதி மூலமாக குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு ஒரு நினைவேட்டை அனுப்பிவைத்தது. அது கோரிய படி சட்டக் கழக அமைப்பு பின்வருமாறு:-

1.	சட்டக் கழக முழு அங்கத்தவர் தொகை	45
	இதில் உத்தியோக அங்கத்தவர் தொகை	12
	உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர் தொகை	33
2.	இந்த 33ல் பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர் தொகை	19
3.	வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர்தொகை	11
4.	ஆள்பதியால் நியமனஞ் செய்யப்படும் விசேடஅங்கத்தவர் தொகை	3
	முழுத்தொகை	45

ஜேம்ஸ் பீரிஸ் அவர்களின் அறிக்கை தம்மை வஞ்சித்துவிட்டதெனச் சிறுபான்மையினர் எண்ணி நினைவேடொன்றைச் சமர்ப்பித்ததில் தவறில்லை. அவர்கள் தமக்கென தமது அறிக்கையில் விசேட சலுகைகள் கேட்டு குடியேற்ற நாட்டரசுச் செயலாளரை வற்புறுத்

தினர். இலங்கைத் தேசீய காங்கிரசும் சிறுபான்மை ஐக்கிய முன்னணியும் 45 அங்கத்தவர்களைக் கொண்ட சட்டக் கழகமே வேண்டுமெனக் கேட்டனர். ஆனால் இந்த 45 அங்கத்தவர்களும் எங்ஙனஞ் சேர்க்கப்படவேண்டுமென்பதில்தான் அபிப்பிராயப் பேதம் ஏற்பட்டது. பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய தொகை இருபத்தெட்டாக இருக்கவேண்டுமென தேசீய காங்கிரஸ் வாதாட ஐக்கிய முன்னணியினர் பத்தொன்பது போதுமென்றனர்.

காங்கிரஸ்காரர் தமது அறிக்கையில் பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர்களைவிட எஞ்சிய 17 தானங்களில் சிறுபான்மையினருக்கு 11 தானங்களையும் உத்தியோக அங்கத்தவர்களுக்கு 6 தானங்களையும் ஒதுக்கினர். ஆனால் ஐக்கிய முன்னணியினர் தமது அறிக்கையில் பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தவர்களைவிட எஞ்சியிருக்கும் 26 தானங்களில் பதினொன்றை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்கும்; பதினைந்தை நியமன அங்கத்தவர்களுக்கும் ஒதுக்கினர். மேலும் இப்பதினைந்தில் பன்னிரண்டை உத்தியோகத்தர்களுக்கும் மூன்றை விசேட அங்கத்தவர்களுக்கும் ஒதுக்கினர். மேலும் சிறுபான்மையினருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அளிப்பதை காங்கிரஸ்காரர் வரவேற்கவில்லை. இச்சமயத்திலேதான் யாழ்ப்பாண மகாசனசபை, சிறுபான்மையினருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டுமெனக் கோரி ஓர் நினைவேட்டை ஆள்பதி மனிங் அவர்களுக்கு அனுப்பி வைத்தது.

சிறுபான்மை, பெரும்பான்மை வகுப்பினர் வெவ்வேறாக அனுப்பிவைத்த நினைவேடுகள் எதையும் ஏற்றுக்கொள்ள ஆள்பதி மனிங் அவர்கள் மறுத்தார். அவர் சட்டக் கழக அங்கத்தவர்களில் ஒரு குழுவை நியமனஞ் செய்து புதிய சட்டக் கழக அமைப்பைப் பரிசீலனை செய்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அக்குழுவின் எடுத்துரைகளின்படி புதிய சட்டக் கழக அமைப்பு பின்வருமாறு:

1.	சட்டக் கழக அங்கத்தவர் முழுத்தொகை	47
	இதில் உத்தியோகத்தர் தொகை	12
	உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர் தொகை	35
2.	பன்னிரண்டு உத்தியோக அங்கத்தவர்களில், தாம் வகிக்கும் உத்தியோகம் காரணமாக அங்கத்துவம் வகிப்போர் தொகை	

1 ஏவுநர் முதல்வன்
2 குடியேற்றச் செயலாளர்
3 சட்டத்துறை நாயகம்
4 நிதிச் செயலாளர்
5 கட்டுப்பாட்டு நாயகம்

3 இந்த ஐவரை விட பொறுப்பு வாய்ந்த உத்தியோகம் வகிப்பதால் உத்தியோக அங்கத்தவர்களாக அங்கத்துவம் பெறுவோர் தொகை 7

4 உத்தியோகத்தரல்லாத முப்பத்தைந்து அங்கத்தவர்களில் பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தொகை 21

சிங்களவர் 14
இலங்கைத் தமிழர் 7

5 வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோரின் தொகை 6

ஐரோப்பியர் 3
பறங்கியர் 2
மேல்மாகாண இலங்கைத் தமிழர் 1

6. ஆள்பதியால் நியமனஞ் செய்யப்படும் அங்கத்தவர் தொகை 5

மூஸ்லிம்கள் 3
இந்தியர் 2

7. விசேட நன்மைக்காக ஆள்பதியால் நியமனஞ் செய்யப்படும் அங்கத்தவர் தொகை 3
முழுத்தொகை 47

சொத்துடமையும் எழுத்தறிவும் உடையோர்க்கு வாக்குரிமை வழங்கப்படும் என அக்குழு கூறிற்று:

மேற்கூறிய குழுவின் எடுத்துரைகளை ஏற்றுக்கொண்ட மனிங் அவர்கள் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரின் அங்கீகாரம் பெறும் பொருட்டு அவற்றை அனுப்பினர். இலங்கைத் தேசிய காங்கிரஸ், மேல்மாகாண இலங்கைத் தமிழருக்கு ஒரு அங்கத்துவம் அளிக்கப்பட்டதை விரும்பவில்லை. இதனால் சட்டக்கழகத்தில் தமிழரின் அங்கத்தவர் தொகை அதிகரிப்பதால் சிங்களவரின் பலம் குறையுமென அது கருதியது. ஆகவே தேசிய காங்கிரசைத் திருப்தி

செய்யும் முகமாக பிரதேச வாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் பிரதி நிதிகளின் தொகை இருபத்தொன்றிலிருந்து இருபத்திமூன்றாக அதி கரிக்கப்பட்டது. மேலும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரின் எடுத்துரைகளினால் சட்டக்கழக அங்கத்தவர்களுள் ஒருவர் உபதலை வர் என்ற கோதாவில் கழகக் கூட்டங்களில் தலைமை தாங்கும் சம் பிரதாயம் ஏற்படுத்தப்பட்டது. ஜேம்ஸ் பீரிஸ் கோரியபடி தேர்ந் தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களிடையே ஒருவரை வாசகராகத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை மறுக்கப்பட்டதென்பதைக் கவனிக்க; அதுவுமன்றி தெரிவுசெய்யப்பட்ட சட்டக் கழக அங்கத்தவர் இரு வர் கருமநிருவாகக் கழகத்தில் அங்கத்துவம் வகிக்க ஒழுங்கு செய் யப்பட்டது. இவற்றைவிட மனிங் அவர்களின் சீர்திருத்தங்களில் வேறு மாற்றங்களைச் செய்ய குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் விரும்பிலர்.

மேற்கூறிய சட்டக் கழகத்திலும் குறைபாடுகள் பல காணப் பட்டன. இப்புதிய சட்டக் கழகத்தில் ஆள்பதிக்கு எப்பொழுதும் உத்தியோக அங்கத்தவர்கள் பன்னிரண்டும் வகுப்பு வாரியாகத் தேர்தெடுக்கப்படும் அங்கத்தவர்களுள் ஐவரும் ஆள்பதியால் நிய மனஞ்செய்யப்படும் எட்டு அங்கத்தவர்களுமாக 25 அங்கத்தவர்கள் அனுசரணையாக இருந்தனர். ஆகவே 24 இலங்கையர் சிறுபான்மையி னராகவே இருக்கவேண்டியிருந்தது. சில சந்தர்ப்பங்களில் இந்த 25 அங்கத்தவர்களுள் இருவர் கூட்டங்களில் பிரசன்னமாகாமல் இருக் குங் காலங்களில் இலங்கையர் அரசாங்கத்திற்கெதிராக பிரேரணை களையோ அல்லது தங்களுக்குத் தேவையான முறிகளையோ கொண்டு வந்து நிறைவேற்றலாம். இதைத் தடுப்பதற்கு "விற்ரோ" ஆணை செய்யும் அதிகாரம் ஆள்பதிக்கு வழங்கப்பட்டிருந்தது. நாட்டின் ஒழுங்கிற்கும் அமைதிக்கும் நல்லாட்சிக்கும், தான் விரும்பும் சட்டங் களையியற்றும் அதிகாரம் ஆள்பதிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதே சமயத்தில் இலங்கையரை ஏமாற்றும் பொருட்டுச் சட்டக் கழகத் தின் ஆலோசனையையும் அங்கீகாரத்தையும் ஆள்பதி பெறவேண்டு மென விதிக்கப்பட்டிருந்தது.

சிறுபான்மையினர் கேட்டுக்கொண்டதின்படி வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இதனால் ஒவ்வொரு இனத்தவ ரும் இன அடிப்படையில் எண்ணத் தலைப்பட்டனரேயன்றி இலங் கையர் அனைவரும் ஒரே தேச மக்கள் என்று எண்ணத் தவறினர். எங்ஙனம் ஆங்கில அரசு இந்தியரிடையே பிரிவினையை உண்டாக் கியதோ, அதேபோன்று இலங்கையரையும் பிரித்து வைத்தது. இதனுற் பாலனம் சுலபப்படுத்தப்பட்டது உண்மையே. தேர்ந் தெடுக்கப்பட்ட அங்கத்தவரில் 31 அங்கத்தவர்கள் இலங்கையராய்

இருந்தபோதிலும் தாழ்பூமிச் சிங்களவர் சட்டக் கழகத்தில் சிறு தொகையினராகவேயிருந்தனர். இலங்கையின் பல்வேறு வகுப்பினர் அதிருப்தியடைந்தமைக்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை; இச்சட்டம் நடைமுறைக்கு ஒவ்வாதென்பதும் தெரிந்ததே.

1924ம் ஆண்டு அக்டோபர் மாதம் புதிய சட்டக் கழகம் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

அதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் மாணவர் மகாநாடு என்ற பெயருடன் ஒரு தேசிய இயக்கம் தாபிக்கப்பட்டது. இதில் எஸ். நடேசன், எம். பாலசுந்தரம், எஸ். ஏச். பேரின்பநாயகம், சி. நாகையா முதலியோர் முக்கிய அங்கத்தவர்களாக இருந்தனர். இதன் நோக்கங்கள் நாட்டுக்குச் சுதந்திரம் பெறுதல், வகுப்புத் துவேஷத்தை ஒழித்தல், தீண்டாமையைப் போக்கல், தமிழ் மொழியை வளர்த்தல் முதலியனவாகும். இம் மாணவர் மகாநாடு 1924ம் ஆண்டு சட்டக் கழகத் தேர்தலை ஒன்றியொதுக்கல் செய்ததும் கவனிக்கற்பாலது; 1927ம் ஆண்டு காந்தியடிகள் இலங்கைக்கு வருவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் இவ் வாலிப மகாநாட்டாரே; 1931ம் ஆண்டு டொனமூர்த் திட்டத்தை ஒன்றியொதுக்கல் செய்தவர்களும் இவர்களே; புதிய சட்டக் கழகத்தில் காணப்பட்ட பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அவர்களது தொகுதிகளும்பின்வருமாறு:

1	சேர் பொன். இராமநாதன்	—	வடமாகாணம் வடபகுதி
2	சேர். வை. துரைசாமி	—	,, மேற்கு
3	க. பாலசிங்கம்	—	,, கிழக்கு
4	ஆ. கனகரெத்தினம்	—	,, தெற்கு
5	சு. இராசரத்தினம்	—	,, மத்தியபகுதி
6	C. W. W. கன்னங்கரா	—	தென்மாகாணம் மேற்கு
7	F. A. ஒபயசேகரா	—	,, மத்தியபகுதி
8	S. விக்கிரமநாயகா	—	,, தெற்கு
9	ஜேம்ஸ் பீரிஸ்	—	கொழும்பு தெற்கு
10	C. E. கொறியா	—	,, வடக்கு
11	பரன் ஜெயதிலக்கா	—	,, மாவட்டம்
12	அ. மகாதேவா	—	கொழும்பு தமிழ்த்தொகுதி
13	C. H. Z. பர்ணாந்து	—	வடமேல் மாகாணம் மேற்கு
14	C. E. மதுவல	—	,, ,, கிழக்கு
15	H. R. பிறீமன்	—	வடமத்திய மாகாணம்
16	D. H. கொத்தலாவலை	—	ஊவா ,,
17	A. C. G. விஜயகோன்	—	மத்திய மாகாணம் நகர்
18	G. E. சில்வா	—	மத்திய மாகாணம் நாடு
19	A. H. E. மொலமுரே	—	இரத்தினபுரி மாவட்டம்
20	A. F. மொலமுரே	—	கேகாலை
21	M. M. சுப்பிரமணியம்	—	திருகோணமலை
22	E. W. பெரேரா	—	களுத்துறை
23	E. R. தம்பிமுத்து	—	மட்டக்களப்பு

பதினேழும் அத்தியாயம்

பகுதி II

மனிங் சீர்திருத்தங்களுக்கும் இந்தியாவில் 1909 ம் ஆண்டு வெளியிடப்பட்ட மோர்லி – மின்ரோசீர்திருத்தங்களுக்கும், இன்னொரு புறம், 1919ம் ஆண்டு வெளியிடப்பட்ட மொந்தேகு-செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்களுக்கும் உடன்பாடு இருப்பதால் இவ்விரு சீர்திருத்தங்களைப்பற்றிச் சுருக்கமாக அறிந்துகொள்வது பயன்தருவதாகும்:

மோர்லி - மின்ரோ சீர்திருத்தங்கள்

இந்திய அரசியற் சீர்திருத்தவாதிகளைத் திருப்தி செய்யுமுகமாக குடியேற்ற நாட்டரசுச் செயலாளராகிய மோர்லி பிரபு இந்திய ஆள்பதி நாயகமாகிய மின்ரோவின் அனுசரணையுடன் சில அரசியற் சீர்திருத்தங்களைச் செய்யத் துணிந்தார். இவை ''மோர்லி - மின்ரோ'' சீர்திருத்தங்கள்'' (Morley-Minto Reforms) என அழைக்கப்பட்டன; இச் சீர்திருத்தங்கள் 1909ம் ஆண்டு இந்தியன் கழகச் சட்டம் (Indian Councils Act of 1909) வாயிலாக வெளியிடப்பட்டன; இவற்றில் காணப்படும் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:

(1) மத்திய சட்டக் கழகத்தினது அங்கத்தவர் தொகை பதினேழிலிருந்து அறுபதாக அதிகரிக்கப்படும். இவற்றுள் இருபத்தெட்டு அங்கத்துவர்கட்கு அதிகப்படாமல் உத்தியோகத்தராயிருப்பர்; ஆள்பதி நாயகம் உத்தியோகத்தரல்லாதோரில் ஐவரை நியமனஞ் செய்வர். ஆகவே உத்தியோகத்தர் 28 பேரும் நியமனஞ் செய்யப்படும் ஐவருமாக 33 அங்கத்தவர் பெரும்பான்மையினராய் இருப்பதால் அரசாங்கத்திற்கு இவர்கள் ஆதரவாயிருப்பரென எதிர்பார்க்கப்பட்டது. 27 உத்தியோகத்தரல்லாதோர் விசேட தேர்தற்றொகுதிகளில் கூட்டு முறைப்படி (Group System) தேர்ந்தெடுக்கப்படுவர், இதன்பிரகாரம் நிலச் சுவாந்தார்கள் 7 பிரதிநிதிகளையும் முஸ்லிம்களும், சீக்கியரும் 5 பிரதிநிதிகளையும் கல்கத்தாவிலும் பம்பாயிலுமுள்ள வணிக மன்றங்கள் 2 பிரதிநிதிகளையும் மாநில சட்டக் கழகங்களிலுள்ள உத்தியோகத்தரல்லாதோர் 13 பிரதிநிதிகளையுந் தேர்ந்தெடுப்பதற்கு வழி வகுக்கும்.

(2) அதி வித்தீரணமுள்ள மாநிலங்களிலுள்ள சட்டக்கழக அங்கத்தவர்கள் தொகை ஐம்பதாகவும் வித்தீரணம் குறைந்த மாநிலங்களிலுள்ள சட்டக் கழக அங்கத்தவர் தொகை முப்பதாகவும் அதிகரிக்கப்படும், இவர்கள், பல்கலைக் கழகங்கள், வர்த்தக சங்கங்கள்,

விவசாயிகள் ஆகியோரால் கூட்டு முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர்; மாநிலச் சட்டக் கழகங்களில் உத்தியோகத்தர் தொகை பெரும்பான்மையாக இருப்பதற்கு சட்ட பூர்வமாகத் தனது சீர்திருத்தங்களில் மோர்லி பிரபு இடமளிக்காதபோதிலும், நடைமுறையில் உத்தியோகத்தரும் ஆள்பதியால் நியமனஞ் செய்யப்படும் உத்தியோகத்தரல்லாதோரும் சேர்ந்து பெரும்பான்மையினராக இருப்பரென அவர் எதிர்பார்த்தார்; நடைமுறையில் வங்காளச் சட்டக் கழகம் மட்டும் இதற்கு விதிவிலக்காயிற்று; ஏனெனில், இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எப்பொழுதும் பெரும்பான்மையினராகவே இருந்துவந்தனர்;

(3) முஸ்லிம்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுக்குப் பிரத்தியேகமாகத் தேர்தற் தொகுதிகள் ஒதுக்கப்படும். அத் தொகுதிகளில் முஸ்லிம் வாக்காளர் மட்டுமே வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

(4) சட்டக் கழகங்களின் அங்கத்தவர் தொகை அதிகரிக்கப்பட்டமைபோல அவற்றின் அதிகாரங்களும் அதிகரிக்கப்படும், பாதீட்டை விவாதிக்கவும் அதையிட்டும் வேறு பொது விடயங்களைப் பற்றியும் தீர்மானங்களைக் கொண்டுவர அதற்கு அதிகாரம் வழங்கப்படும்; தீர்மானங்கள் அனைத்தும் பரிசீலனைக்காக கரும நிருவாகக் கழகத்திற்கு அனுப்பிவைக்கப்படும், ஆனால் அத்தீர்மானங்களை ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும் நிருவாகக் கழகத்திற்கு அதிகாரம் இருக்கும். ஆகவே எச்சமயத்திலும் சட்டக் கழகம் கரும நிருவாகக் கழகத்தைக் கட்டுப்படுத்த முடியாதென எதிர்பார்க்கப்பட்டது. அதுவுமன்றி இச்சட்டக் கழகங்கள் பாதுகாப்பு, வெளி விவகாரங்கள், இந்திய மாநிலங்கள் ஆகியனபற்றி எத் தீர்மானங்களையும் கொண்டுவரலாகாது;

(5) பதிலரையனின் கீழ் இயங்கிவரும் கரும நிருவாகக்கழகத்தில் இந்தியன் ஒருவனுக்கு அங்கத்துவம் அளிக்கப்படும், சென்னையிலும், பம்பாயிலுமுள்ள கரும நிருவாகக் கழகங்களின் அங்கத்தவர் தொகை இரண்டிலிருந்து நான்காக அதிகரிக்கப்படும். அதுவுமன்றி அவற்றில் இந்தியர் நியமனஞ் செய்யப்படுவர்; இந்திய விவகாரங்களையிட்டுக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு ஆலோசனை கூறுமுகமாக இங்கிலாந்தில் நிறுவப் பட்டிருக்கும் இந்தியக் கழகத்தில் இரு இந்தியர் நியமனஞ் செய்யப்படுவர்.

மோர்லி மின்ரோ சீர்திருத்தங்கள் சட்ட பூர்வமாகத் தேர்தல் முறைகண்ட பிரதிநிதித்துவ முறையை அங்கீகரித்தது. இரண்டாவதாக, மத்திய சட்டக் கழகத்தினதும் மாநில சட்டக் கழகத்தி

னதும் அதிகாரங்களை அதிகரித்தது; கரும நிருவாகக் கழகங்களிலும் இங்கிலாந்திலுள்ள இந்தியக் கழகத்திலும் இந்தியரை நியமனஞ் செய்து ஒரு புரட்சியை ஏற்படுத்தியது.

நிறைவுகளிலும் பார்க்கக் குறைகளே அநேகமாகக் காணப்படுகின்றன. மோர்லி-மின்ரோ சீர்திருத்தங்கள் பாராளுமன்றத்தின் ஆரம்பத்தைத்தானும் கொடுக்கத் தவறிற்று. வர்க்கவாரிப் பிரதிநித்துவம் (Class representation) வழங்கப்பட்ட படியால் ஒவ்வொரு வர்க்கத்தினரும் வர்க்க ரீதியில் எண்ணத் தலைப்பட்டனரேயன்றி இந்தியா ஒரு தேசம் இந்தியர் ஒரு இனம் என எண்ணத் தவறினர். மேலும் எதிர் மறைவான தேர்தல் முறை அதாவது கூட்டு முறைப்படி அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதும் வகுப்புவாரிப் பிரதி நித்துவ முறையும் பிரதிநிதிகளை மக்களுக்கு நேரடியான பொறுப்புள்ளவர்களாக்கவில்லை; இச் சட்டக் கழகங்களை விவாதச்சங்கங்கள் எனப் பலர் வர்ணித்தனர். முஸ்லிம்களுக்குப் பிரத்தியேகமாகத் தேர்தற் ரொகுதிகளை ஒதுக்கியமைக்கக் காரணம். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இதுவரையும் பிரதிநிதித்துவ முறையில் இருந்து வந்த இடைவெளியை நிரப்புவதற்கே; எனினும் இந்தியாவில் முதன் முதலாக சனநாயகத்திற்கு முரண்பாடான வகுப்பு வாரிப் பிரதிநித்துவ முறையை இச்சீர்திருத்த வாதிகள் கையாண்டிருக்கக் கூடாது. இவர்களில் காணப்படும் குறைபாடுகளே மொந்தேகு- செம்ஸ்போர்ட் அறிக்கைக்கு வழி கோலின.

பகுதி III

மொந்தேகு—செம்ஸ்போர்ட் சீர்திருத்தங்கள்

முதலாவது மகாயுத்தம் நடைபெறும்போது இந்தியர் இங்கிலாந்திற்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்தமைக்காக அவர்களுக்கு நன்றி செலுத்து முகமாகவும் வெள்ளம் போலப் பெருகிவரும் இந்தியரின் அரசியற் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்து முகமாகவும் அக்காலத்து குடியேற்ற நாட்டரசுச் செயலாளராகிய மொந்தேகு பிரபு இந்திய ஆள்பதிநாயகமாகிய செம்ஸ்போர்ட் என்பவரின் அனுசரணையுடன் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். இதுவே மொந்தேகு செம்ஸ்போர்ட் அறிக்கை- (Montague - Chelmsford Report) என அழைக்கப்பட்டது. இவ்வறிக்கை 1919-ம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் (The Government of India Act of 1919) வாயிலாக வெளிவிடப்பட்டது. அதிற் காணப்படும் முக்கிய எடுத்துரைகள் பின் வருமாறு.

(1) அரசாங்கத்தின் தொழிற்பாடுகள் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்கள் மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் கொடுக்கப்படும். மத்திய அரசாங்கத்தின் கீழ்க் கொண்டு வரப்படும் திணைக்களங்கள் பின்வருமாறு:- அரசியலும் வெளிவிவகாரங்களும், பாதுகாப்பு, புகையிரதம், தபாலும் தந்தியும், சுங்கம், இறைமுறை, வருமானவரி, நாட்டுக் கடன், அகில இந்திய அரசாங்க சேவைகள். மாநில அரசாங்கத்தின் கீழ்க்கொண்டு வரப்படும் திணைக்களங்கள் பின்வருமாறு:- தலதாபனங்கள், கல்வி, சுகாதாரம், பொதுவுடநலம், மராமத்து வேலைகளும் நீர்ப்பாசனமும், பஞ்ச நிவாரணம், விவசாயம், சட்டமும் ஒழுங்கும், நீதிபாலனம்.

(2) இதுவரையும் இருந்துவந்த மத்திய சட்டக் கழகம் ஒழிக்கப்பட்டு அதற்குப் பதிலாக இரு மன்ற முறை (Bi Cameral System) கையாளப்படும்: அதாவது அரசுக் கழகமும் சட்ட மன்றமும் நிறுவப்படும். அரசுக் கழகம் மேல்மன்றமென அழைக்கப்படும். சட்ட மன்றம் கீழ் மன்றமென அழைக்கப்படும். அரசுக் கழகத்தில் 60 அங்கத்தவர்களுக்கு மேற்படாமல் அங்கத்துவம் வகிப்பர். இதில் 34 அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். சட்ட மன்றத்தின் அங்கத்தவர் தொகை 145. இதில் 105 அங்கத்தவர் தேர்ந்தெடுக்கப்படுவர். அரசுக் கழகத்திற்கும் சட்ட மன்றத்திற்கும் சமபங்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டபோதிலும் பாதீட்டைக் கொண்டு வரும் அதிகாரம் சட்ட மன்றத்திற்கே சில புறநடைகளுடன் வழங்கப்படும்:

(3) இதுவரையும் நிலவி வந்த மாநில பாலன முறை முற்றுமாற்றி அமைக்கப்பட்டு இரட்டை ஆட்சிமுறை (Dyarachy) கையாளப்படும். ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள திணைக்களங்கள் ஒதுக்கப்பட்ட திணைக்களங்கள் (Reserved Subjects) மாற்றப்பட்ட திணைக்களங்கள் (Transferred Subjects) என இரு பிரிவாகப் பிரிக்கப்படும்: ஒதுக்கப்பட்ட திணைக்களங்கள் சட்டக் கழகத்திற்கு எவ்வகையிலும் பொறுப்பற்ற ஆள்பதியாலும் அவரது கரும நிருவாகக் கழகத்தினாலும் நிர்வகிக்கப்பட்டு வரும்: மாற்றப்பட்ட திணைக்களங்களோ ஆள்பதியாலும் அவரால் சட்டக் கழகத்திலிருந்து நியமனஞ்செய்யப்பட்ட அமைச்சர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வரும். ஒதுக்கப்பட்ட திணைக்களங்களை நிர்வகிக்கும் கரும நிருவாகக் கழகத்தைப் போலல்லாது மாற்றப்பட்ட திணைக்களங்களை நிர்வகிக்கும் அமைச்சர்கள் சட்டக் கழகத்திற்குப் பொறுப்புடையவராயிருப்பர். அதுவுமன்றி இவ்வமைச்சர்கள் ஆள்பதியையும் திருப்திசெய்யவேண்டும். ஆள்பதி தனது செய்கைகள் அனைவற்றிற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் பாராளுமன்றத்திற்கும் பொறுப்புடையவராயிருப்பார்.

(4) மாநிலங்களில் ஒரு மன்றமுறை ஆட்சி (Uni-Cameral System) அனுட்டிக்கப்படும். மாநிலங்களில் நிறுவப்பட்டிருக்கும் சட்டக்கழகத்தில், தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளே பெரும்பான்மையினராக இருப்பர்; சீக்கியர், முஸ்லிம்கள், ஐரோப்பியர், "ஆங்கிலோ இந்தியர்," இந்திய புரட்டத்தாந்து கிறித்தவர்கள் ஆகிய பிரிவினர்களுக்கு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். பாதீட்டைத் தயார் செய்து வெளியிடுவது சட்டக் கழகத்தின் உரிமையாக இருக்கும். மாற்றப்பட்ட திணைக்களங்களின் தேவைக்கு நிதியை ஒதுக்க மறுக்கும் உரிமை இதற்குண்டு. ஆனல் ஒதுக்கப்பட்ட திணைக்களங்களின் தேவைக்குரிய நிதியை ஒதுக்க சட்டக்கழகம் மறுக்கும் பட்சத்தில் அத்தொகையைப் பிரத்தியேகமாக வழங்குவதற்கு ஆள்பதிக்கு அதிகாரம் வழங்கப்படும்.

மொந்தேகு-செம்ஸ்போர்ட் அறிக்கை இந்திய சரித்திரத்தில் ஒரு மைற்கல் எனலாம். இவ்வறிக்கை நேரடியான தேர்தல் முறையைத் தகவுரை செய்ததோடு சர்வசன வாக்குரிமையையும் வித்தரித்தது. இதுவரையும் சட்டநிரூபணத்திற்கும் நிர்வாகத்திற்கும் இருந்துவந்த இடைவெளியைக் குறைத்தது; முதன் முதலாக இந்திய அமைச்சர்களுக்குச் சில மாநில திணைக்களங்களின் பாலனப் பொறுப்பை வழங்கி பாலனத்தில் இந்தியருக்கும் சந்தர்ப்பத்தை அளித்தது; மேலும் இவ்வறிக்கை அரசியலிலும் அரசாங்கத்தை நடத்தும் முறையிலும் பயிற்சி பெறுவதற்கு இந்தியருக்கு ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது.

நிறைவுகளோடு குறைகளையும் ஆராய்வது பயன் தருவதாகும். ஒதுக்கப்பட்ட திணைக்களங்கள் அதிமுக்கியமானவையாகக் கணிக்கப்பட்டு வந்தன; ஆனல் மாற்றப்பட்ட திணைக்களங்களோ முக்கியமற்றனவாகக் கணிக்கப்பட்டு வந்தன. இதனல் இரண்டாம் பிரிவு எப்பொழுதும் புறக்கணிக்கப்பட்டே வந்தது; இப்பாரபட்சமான செயல் சனநாயகத்திற்கு ஒவ்வாததொன்றுகும். இரண்டாவதாக சட்டக்கழக அமைச்சர்கள், ஒருபுறம் சட்டக் கழகத்தையும் இன்னெருபுறம் ஆள்பதியையும் திருப்தி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்ட படியால் ஈற்றில் எச்சாராரையும் திருப்தி செய்ய முடியாமல் வாளாவிருந்தனர். மூன்றுவதாக, அமைச்சர்களுக்கு அதிகாரமின்றிப் பொறுப்பு வழங்கப்பட்டது. சட்டக்கழகங்களுக்கோ பொறுப்பின்றி அதிகாரம் வழங்கப் பட்டிருந்தது;

15, 16 ம் அத்தியாயங்களின் வினாக்கள்

1. 1865-1867-ம் ஆண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சிகளை விளக்கி அவற்றின் முக்கியத்துவத்தையும் தருக. (ஜூலை, '47)

2. 1920-ம் ஆண்டிலும் 1924-ம் ஆண்டிலும் சட்டக்கழகத்தில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்களை விரிவாக விளக்குக. இவ் விரு வருடங்களில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் எவ் வகையில் 1910-ம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ்காரர் கோரிய சீர்திருத்தங்களிலிருந்து வேறுபடுகின்றன? (நவம்பர், '47)

3. இந்திய தேசிய இயக்கத்தில் முக்கியத்துவம் வாய்ந்த மூவர் யாவர்? (ஆகஸ்ட், '48)

4. இந்த நூற்றாண்டின் முதல் இருபது ஆண்டுகளிலும் இலங்கையின் அரசியலமைப்புச் சீர்திருத்தக் கிளர்ச்சிக்குக் காரணங்களாய் அமைந்தனவற்றை எடுத்து விளக்குக. அக்கிளர்ச்சியால் ஏற்பட்ட பலாபலன்கள் யாவை? (ஆகஸ்ட், '48)

5. 1924-ம் ஆண்டு தேசாதிபதி மனிங் அவர்களின் சீர்திருத்தங்களினால் ஏற்பட்ட இலங்கை அரசமைப்பின் அம்சங்களை விரிவாக விளக்குக. அதன் பிரதான குறைபாடுகள் யாவை? (ஜூலை, '49)

6. இலங்கைச் சங்கம் என்பது என்ன? இதன் நோக்கங்களையும் கருமங்களையும் இது ஈட்டிய பயன்களையும் இலங்கைத் தேசிய சபையின் நோக்கங்களோடும் கருமங்களோடும் பயன்களோடும் ஒப்பிடுக. வித்தியாசங்களுக்குக் காரணம் என்ன? (டிசெம்பர், '54)

7. இந்தியாவில் தேசிய வாதிகள் இயக்கத்தின் எழுச்சியைப் பற்றிச் சுருக்கமாக விபரிக்க. அது இலங்கையை எவ்வாறு பாதித்தது? அதனை விளக்குவதற்கு இரண்டு சம்பவங்களைக் குறிப்பிடுக. (டிசெம்பர், '61)

8. இருபதாம் நூற்றாண்டின் முதல் இருபத்தைந்து வருடங்களில் மத்திய வகுப்பினர் அரசியல் திட்டவமைப்புச் சீர்திருத்தங்களுக்காக தொடர்ந்து கிளர்ச்சி செய்தமைக்குக் காரணம் என்ன? (ஆகஸ்ட், '64)

9. 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து இலங்கையின் மறுமலர்ச்சி இயக்கத்தில் பின்வருபவர் எத்தகைய பங்கு எடுத்துக் கொண்டனர்?

(1) சேர் பொன். அருணாசலம் (ஜூலை, '54)
(2) டாக்டர் ஆனந்தக்குமாரசுவாமி (,,)
(3) ஜேம்ஸ் டி அல்விஸ் (டிசெம்பர், '56)
(4) சேர் பொன். இராமநாதன் (ஆகஸ்ட், '63)
(5) ஜேம்ஸ் பீரிஸ் (ஆகஸ்ட், '65)
(6) சேர் பொன். இராமநாதன் (ஆகஸ்ட், '66)
(7) டபிள்யூ. ஏ. த. கில்வா (,,)
(8) சேர் பீ. பீ. ஜெயதிலக (,,)

10. வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

(1) மக்கலம் சீர்திருத்தங்கள் (டிசெம்பர், '56)
(2) இலங்கைத் தேசிய காங்கிரஸ் (டிசெம்பர், '59)
(3) இலங்கைத் தேசிய காங்கிரஸ் (டிசெம்பர், '63)
(4) 1915-ம் ஆண்டுக்குழப்பம் (ஆகஸ்ட், '67)

11. 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் (அ) பொருளாதார நிலை மைகளைப் பற்றி அல்லது (ஆ) அரசியலமைப்பு முறை அபிவிருத்தி பற்றி விபரமாக விவரிக்க. (டிசெம்பர், '67)

பதினேழாம் அத்தியாயம்

டொனமூர் அரசமைப்பு

1924ம் ஆண்டு அரசியல் திட்டம் இலங்கை அரசியல் வளர்ச்சியில் தற்காலிகமானதாக வரையப்பப்பட்டதேயன்றி, என்றும் நிலைத்திருக்கக்கூடிய ஒரு பூரணமான அரசியல் திட்டமென்று வரையப்படவில்லை. மாறிவரும் காலத்திற்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் அவ்வரசியற் றிட்டம் மாற்றியமைக்க வேண்டுமென அதை அமைத்தவர்கள் கருதினர், மேற்கூறிய அரசியற்றிட்டத்தில் பல குறைபாடுகள் காணப்பட்டன. பிரதிநிதித்துவமுள்ள சட்டக் கழகம் நிறுவப்பட்டபோதிலும் அரசாங்கத்தின் போக்குக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் எவ்வகையிலும் பொறுப்புள்ளவர்களாக விருக்கவில்லை: சட்டக்கழக அங்கத்தினர்களுக்கு தமது தீர்மானங்களைச் செயற்படுத்த அதிகாரங்கள் இருக்கவில்லை, அதேசமயத்தில் கரும நிருவாகக் கழகத்தின் தலைவராயிருக்கும் ஆளுபதியும் சட்டக்கழகத்தின் சம்மதத்தைப் பெறுமல் தனது அதிகாரத்தைச் செலுத்த முடியவில்லை. அங்ஙனம் செலுத்தவேண்டுமாஞல் விசேடஅதிகாரமொன்றைக் கையாளவேண்டும். இவ்விசேட அதிகாரத்தைக் கையாளத் தயங்கினுற் சட்டக் கழகத்தின் பெரும்பான்மையினரது ஆதரவைப் பெறுவது இயலாத காரியம். ஏனெனில் சட்டக் கழகத்தின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இவர்கள் எப்பொழுதும் அரசாங்கத்தை எதிர்த்துவந்தனர்.

ஆகவே மேற்கூறிய குறைபாடுகளை நிவிர்த்திசெய்யவும், அரசியற் றிட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமெனக் கோரும் சமர்ப்பணங்களை ஆராயவும் டொனமூர் பிரபுவைத் (Lord Donoughmore) தலைவராகக் கொண்ட ஒரு குழு 1927ம் ஆண்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இதில் டாக்டர் டிறமன் ஷீல்சும் (Dr. Drummond Shiels) சேர் ஜெவ்விறி பட்லரும் (Sir GeoffreyButler) மற்ற உறுப்பினராவர்.

இவர்கள் இலங்கையிலேற்கனவே இருந்துவந்த அரசியற்றிட்டத்தின் குறைபாடுகள் எவையென வெகுவிரைவில் அறிந்துகொண்டனர். இக்குழுவின் அறிக்கை 1928ம் ஆண்டு ஜூலை மாதம் பிரித்தானிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இலங்கைச் சட்டக்கழகத்திலும் டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகள் பரிசீலனை செய்யப்பட்டன. ஆனுல் சட்டக் கழக உறுப்பினர்கள், ஆணைக்குழுவின் எடுத்துரைகளனைவற்றையும் ஏற்றுக்கொள்ள மறுத்தனர். எனினும் பிரித்தானிய பாராளுமன்றம் ஒரு சில மாற்றங்களோடு டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளை ஏற்றுக் கொண்டது.

டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின்படி சட்டக் கழகமும் கரும நிருவாகக் கழகமும் ஒழிக்கப்பட்டு, அரசுக்கழகம் அமைக்கப்பட்டது. இதற்கு சட்டமாக்கும் பொறுப்பும், ஆட்சி அலுவல்களை நடாத்தும் பொறுப்பும் வழங்கப்பட்டன; இதன் உறுப்பினர்கள் தொகை அறுபத்தொன்று. இவற்றுள் பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தொகை ஐம்பது. தேர்தல்மூலம் பிரதிநிதிகளைத் தேர்க்தெடுக்க முடியாத சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்குமுகமாக ஆள்பதியால் நியமனஞ் செய்யப்படுவோர் தொகை எட்டு. தாங்கள் வகிக்கும் உத்தியோகங் காரணமாக அரசுக் கழகத்தில் பிரதிநீதித்துவம் பெறும் அங்கத்தவர் தொகை மூன்று. இவர்கள் பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், நீதிச் செயலாளர் ஆகியோர். மேலும் இவர்கள் ஆங்கில அரசின் பிரதிநிதிகளாகவே கருதப்பட்டனர்; அரசுக் கழகத்தின் ஆயுள் ஐந்து வருடங்களென வரையறுக்கப்பட்டது. அரசுக் கழகம் தமக்குள் ஒருவரை வாசகராகவும் இன்னுமொருவரை உப வாசகராகவும் தெரிவு செய்யலாம். 1931ம் ஆண்டு முதன்முறையாகக் கூடிய அரசுக் கழகத்தின் வாசகராக சேர் பரன் ஜெயதிலகா தெரிவு செய்யப்பட்டார்.

பொதுத் தேர்தல் முடிந்ததும் அரசுக்கழகம் ஏழு நிருவாகக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிருவாகக் குழுவும் தனக்குள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும். ஒவ்வொரு நிருவாகக் குழுவிலும் ஆறு அங்கத்தவர்களுக்குக் குறையாமலும் ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாமலும் அங்கத்துவம் வகிப்பர். ஒவ்வொரு நிருவாகக் குழு அங்கத்தவர்களும் கூடித் தமக்குள் ஒருவரைத் தலைவராகத் தெரிவு செய்வர். இவர்களே அமைச்சர்கள் என அழைக்கப்படுவர். மேற்கூறிய ஏழு அமைச்சர்களுக்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சுகள் பின்வருமாறு:-

(1) உள்நாட்டு விவகாரம்
(2) விவசாயம்
(3) தொழில், தொழிற்சாலை, வர்த்தகம்
(4) தல தாபனம்
(5) சுகாதாரம்
(6) போக்கு வரத்து, மராமத்துப் பகுதி
(7) கல்வி

ஆட்சி உத்தியோகத்தர் மூவரும் மூன்று பிரதான அமைச்சுகளுக்குப் பொறுப்பாகவிருந்தனர்; இவர்கள் அரசுக்கழகத்தில் அங்கத்துவம் வகிக்கமுடியாது. ஆனல் பிரதம செயலாளருக்கு ஒரு சலுகை வழங்கப்பட்டிருந்தது. அரசியல் திட்டத்தின் 43ம் பிரிவின்

படி அவர் எந்த நிருவாகக் குழுக் கூட்டத்திலும் கலந்துகொண்டு உரை நிகழ்த்தலாம்; பிரதம செயலாளர் அரசாங்க ஊழியர் அனைவருக்கும் பொறுப்பாகவிருந்தார்; அரசாங்க ஊழியரது நியமனம், மாற்றம், வேலை நீக்கம், பதவி உயர்வு ஆகியன அவரது கையில் இருந்தமையால் அவர் மிகவும் அதிகாரமுடையவராயிருந்தார்; நிதிச் செயலாளர் அரசாங்க இறைசேரிக்குப் பொறுப்புடையவராவர். நிதிசம்பந்தமான விடயங்களில் அமைச்சர்களுக்கு இவர் ஆலோசனை கூறினர். நீதிச் செயலாளர் பொறுப்பில் நாட்டின் நீதி பாலனம் விடப்பட்டது; இவரது அமைச்சு அரசாங்கத்திற்கு நீதி சம்பந்தமான ஆலோசனைகளை அளித்துவந்தது. அதுவுமன்றி மசோதாக்களையும் சட்டங்களையும் வரைதலும் இதன் பொறுப்பாகவிருந்தது. அரசாங்கத்தினது சிவில், கிரிமினல் வழக்குகளையும் நீதிச் செயலாளரின் அமைச்சே நடத்திவந்தது. அரசுக் கழகத் தேர்தலைச் செவ்வனே நடத்துவதும் இதன் பொறுப்பேயாகும்.

ஏழு நிருவாகக்குழுத் தலைவர்களும் மூன்று அரசாங்க உத்தியோகத்தரும் அமைச்சரவை அங்கத்தவர்களாவர். பிரதம செயலாளரே அமைச்சரவையின் தலைவராவர். ஒவ்வொரு நிருவாகக்குழுவும், அதற்குக் கொடுக்கப்படும் கடமைகளைச் செய்யும், அமைச்சரவை அரசுக் கழகத்தின் கூட்ட ஒழுங்கு முறைகளைத் தயார் செய்யும்; அரசாங்கக் காரியங்கள் யாவற்றிற்கும் பொதுவாகவும், சிறப்பாகப் பாதீட்டைத் தயாரிக்கவும் அமைச்சரவை பொறுப்புள்ளதாகவிருக்கும்; பாதீடு தயார்செய்யப்பட்டபின் ஒவ்வொரு நிருவாகக் குழுவிற்கும் எவ்வளவு பணத்தொகையைக் கொடுப்பதென அமைச்சரவை தீர்மானிக்கும். பிரதம செயலாளர், நீதிச் செயலாளர், நிதிச் செயலாளர் ஆகிய மூவருக்கும் அமைச்சரவையின் விவாதங்களில் பங்கெடுத்துக் கொள்ளுவதற்கும் ஆலோசனை கூறுவதற்கும் உரிமையுண்டு. ஆனால் வாக்களிக்கும் உரிமை இவர்களுக்கு வழங்கப்படவில்லை.

டொனமூர் ஆணைக்குழு இலங்கையிற் சர்வசன வாக்குரிமை வழங்கும் பொருட்டு விசாரணை நடத்தியபோது, இலங்கைத் தேசிய காங்கிரஸ் சர்வசன வாக்குரிமை வழங்குவதை ஆதரிக்கவில்லை. சேர் பொன். இராமநாதன், சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டால் அரசியல் அதிகாரம் போதிய கல்வியறிவில்லாத மக்களிடம் சென்றுவிடுமெனவும் இம்மக்கள் சரியான முறையில் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த மாட்டார்களெனவுங் கருதினர்; இலங்கைத் தொழிலாளர் சங்கம் மட்டுமே சர்வசன வாக்குரிமை வழங்கப்பட வேண்டுமென ஆணைக்குழுவை வேண்டிக் கொண்டது. ஆனால் பல்வேறு வகுப் பினரின் சமர்ப்பணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்ன

ரும் நேரில் விசாரணை செய்த பின்பும் டொனமூர் ஆணைக் குழு இலங்கை மக்களுக்கு சாதி, இனம், சமயம், பால், சொத்து, பணம் இவற்றின் பேதமின்றிச் சர்வசன வாக்குரிமை வழங்கத் தீர்மானித்தது.

குடியாட்சியினுல் யாவரும் பயன் பெறுவதற்கும் அரசுக் கழகத்தில் சகல இலங்கையருக்கும், சாதி மத பேதமின்றி பிரதிநிதித்துவம் வழங்குவதற்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்படல் வேண்டும். இதுவரையும் தொழிலாளர் நலனைப் பேணும் பிரதிநிதிகள் சட்டக் கழகத்தில் இருக்கவில்லை. ஆகவே தொழிலாளருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டாற்றுன் அவர்களது நலனைப் பேணும் பிரதிநிதிகள் அரசுக் கழகத்தில் இருக்கமுடியும். இதுவரையுமிருந்துவந்த வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் வேற்றுமை மனப்பான்மையை வளர்க்க வழி வகுத்தது. ஆகவே மக்களிடையே தேசாபிமானம் வளர வேண்டுமாயின் அவர்களனைவரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்க ளென உணரவேண்டும், இந்நோக்கத்தை அடைவதற்கும் சர்வசன வாக்குரிமை இன்றியமையாதது. 1931ம் ஆண்டுக்கு முன்பு ஏறக் குறைய நான்கு வீதத்தினருக்கே வாக்குரிமை வழங்கப்பட்டது. அவர்களது பெறுமதியான வாக்குகளைப் பணம்படைத்த அபேட்சகர் கள் இலஞ்சம் கொடுத்து வாங்கக்கூடியதாகவிருந்தது. ஆகவே எல்லோருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டால் அபேட்சகர் இலஞ் சம் கொடுத்து அவ்வளவு பெருந்தொகையான வாக்குகளை வாங்க முடியாது.

இவ்வாறுன காரணங்களை மனதிற் கொண்டு இருபத்தொரு வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலார்க்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது. மேலும் இவர்கள் குறைந்த பட்சம் ஐந்து வருடங் களாக இலங்கையில் வசித்தவர்களாகவும் தேர்தற் குற்றவாளிகளா கத் தண்டிக்கப்படாதவர்களாகவும் இருக்கவேண்டுமெனத் தகவுரை செய்யப்பட்டது. வருமானம், சொத்துடைமை, எழுத்தறிவு ஆகிய தகைமைகள் நீக்கப்பட்டன. சனநாயக நாடுகளுக்குத் தாயகமாக விளங்கும் இங்கிலாந்திற் கூட சர்வசன வாக்குரிமை ஆரம்பத்தி லேயே வழங்கப்படவில்லை. ஆகவே இலங்கை மக்களுக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டமை மிகப் புரட்சிகரமானதொன்றுகும். வெள்ளை நிற மக்கள் குடியேறுத நாடுகளில் இலங்கைக்கே முதன்முத லாகச் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது: மற்றைய நாடு களுடன் ஒப்பிடும்போது 1944ம் ஆண்டு ஜமேய்க்காவுக்கும், 1945ம் ஆண்டு திரினிடாட் தீவிற்கும் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட் டது. இந்தியாவிலுங்கூட 1935ம் ஆண்டு சர்வசன வாக்குரிமை வழங்கப்படாது சில சொத்துத் தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

டொனமூர் ஆணைக்குழு, இதுவரையும் ஆள்பதி அனுபவித்து வந்த அதிகாரங்கள் சிலவற்றைக் குறைத்தது. எனினும் ஒரு சில புதிய அதிகாரங்களை அவருக்கு வழங்கியது: புதிய அரசியல் திட்டத்தின்படி ஆள்பதி ஆங்கில மன்னனின் பிரதிநிதியெனவும், இலங்கையில் ஆங்கில அரசின் நலன்களைப் பாதுகாப்பவரெனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவரே இலங்கையின் ஏவுநர் முதல்வனுவார். நாட்டின் குடியியற் பாலனத்திற்கும் நீதி பாலனத்திற்கும் ஆள்பதியே பொறுப்புடையவராவர். முன்பு ஆள்பதி கருமநிருவாகக் கழகத்தில் முக்கிய பங்கு எடுத்துக்கொண்டமையால் பாலனம் அதிக அளவிற்கு அவரின்விருப்பப்படியே நடைபெற்றது.

ஆனல் டொனமூர் ஆணைக்குழு, பாலனக் கடமைகள் யாவற்றையும் நிருவாகக் குழுக்களுக்கு வழங்கியமையினல் அவரது அதிகாரங்கள் ஓரளவுக்குக் குறைக்கப்பட்டன: எனினும் அரசுக் கழகத்தின் அனுமதியுடன் நாட்டின் நலனுக்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கு ஆள்பதிக்கு அதிகாரம் வழங்கப் பட்டது: ஆள்பதி ஆங்கில அரசின் அங்கீகாரத்திற்காக சில மசோதாக்களை வரையறையின்றி ஒதுக்கி வைக்கவும், சிலவற்றை ஆறு மாதங்களுக்குப் பின்போடவும், வேறு சிலவற்றை சில தகவுரைகளுடன் அரசுக்கழகத்தின் பரிசிலனைக்காக திருப்பி அனுப்பவும் அதிகாரம் பெற்றிருந்தார்: ஆனல் இவர் எந்நடவடிக்கை எடுத்த போதிலும் அதைக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு அறிவித்து விட வேண்டும்: நாட்டின் பாதுகாப்பு; ஒரு இனம் அல்லது ஒரு சமயம்; அரசாங்கத்தின் பணிநிலைமை; அரசாங்க உத்தியோகத்தர் அல்லது அவர்களது சேவை; ஆகியனவற்றைப் பாதிக்கும் சட்டங்கள் கொண்டு வரப்படின் அவற்றிற்கு அங்கீகாரம் அளிக்க மறுக்கும் உரிமை ஆள்பதிக்கு இருந்தது. உத்தியோகரீதியில் இவர் சில அதிகாரங்களைப் பெற்றிருந்தார். குற்றவாளிகளுக்குப் பிரித்தானிய மன்னனின் பேரில் மன்னிப்பளிக்க ஆள்பதிக்கு அதிகாரம் வழங்கப் பட்டது.

குடியியற் சேவையாளரது நியமனம், தண்டனை, இடமாற்றம், பதவி உயர்வு முதலியன இவரது பொறுப்பில் விடப்பட்டன: ஒரு நிருவாகக் குழுவினுல் தெரிவு செய்யப்பட்ட அமைச்சரை ஏற்றுக் கொள்ள மறுத்து இன்னெருவரைத் தெரிவுசெய்யும்படி கேட்க ஆள்பதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அரசுக் கழகத்தின் நியமன அங்கத்தவர்களை நியமிக்கும் பொறுப்பும் இவருடையதே. உள்நாட்டுக் குழப்பம் ஏற்படுங் காலங்களில் அல்லது யுத்த காலங்களில் அல்லது வேறு ஏதாவது அவசர காலங்களில் அரசாங்கத்தின் முழுப் பொறுப்பையும் ஏற்று நடாத்துவதற்கு ஆள்பதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டது:

டொனமூர் அரசியல் திட்டம் தோல்வியடைந்தமைக்குரிய காரணங்களில் முதலில் வைத்துக் கணிக்கப்படுவது நிருவாகக்குழு ஆட்சிமுறையிற் காணப்பட்ட குறைபாடுகளாகும். நிருவாகக்குழு முறை நிர்வாக விடயங்களில் அதிக தாமதத்தை ஏற்படுத்தி வந்தது. நிருவாகக் குழு முறையில் ஒரு அமைச்சர் தனது விருப்பப்படி தீர்மானங்களைச் செய்ய முடியாமல் இருந்தார். இவர் தனது நிருவாகக்குழுவுடன் கலந்து ஆலோசித்தே தீர்மானங்களைச் செய்ய வேண்டியிருந்தது. இதன் காரணமாகச் சில சமயங்களில் அமைச்சரவை ஒரு அமைச்சரைத் திருப்தி செய்ய முடியாமலிருந்தது. மேலும் நிருவாகக் குழுக்களின் வீண் விவாதங்களினாற் பாலனத்திற் காலதாமதமேற்பட்டது. சாதாரண விடயங்களை ஆராய்ந்து நேரத்தை வீணாக்கினர். அதனாற் சில சமயங்களில் பிரயோசனமான பாலன விடயங்களை ஆராய்வதற்கு நேரமில்லாமற் போயிற்று.

நிருவாகக்குழு முறையினாற் சரியான முறையில் திட்டங்களை வகுக்கவோ ஒன்றுடனொன்று தொடர்பு கொள்ளவோ கூடியதாக இருக்கமுடியவில்லை. சில நிருவாகக்குழுக்கள், வேறு நிருவாகக் குழுக்கள் கடைப்பிடித்த கொள்கைகளைப் பின்பற்றின. சில, மற்ற நிருவாகக் குழுக்களுக்கு முரணான கொள்கைகளைக் கடைப்பிடித்தன. இதனால் நிருவாகக் குழுக்களுக்குத் தலைவர்களாக விருந்த அமைச்சர்களிடையே கருத்து வேற்றுமை நிலவிற்று. எனவே அமைச்சரவையில் கூட்டுப் பொறுப்போ ஒருமித்த எண்ணமோ இல்லாதிருந்தன. பாதீட்டைப் பற்றிய அளவிற்றான் கூட்டுப் பொறுப்பு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. நிருவாகக் குழு முறையில் காணப்பட்ட இன்னொரு குறைபாடு, பொறுப்பு சிதறுண்டு இருந்ததே அல்லாமல் ஒருமுகப்பட்டிருக்கவில்லை. உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் தம்மீது சுமத்தப்படும் பொறுப்புக்களையும் குற்றச்சாட்டுக்களையும் மற்றவர் மீது தட்டிக்கழிக்கக் கூடியதாக விருந்தது. அமைச்சரவை கூட்டாகக் குற்றஞ் சாட்டப்பட்டால், அக்குற்றத்தைத் தம்மில் ஒரு அமைச்சர்மீது சுமத்தினர்; அமைச்சர் ஒருவர் குற்றஞ் சாட்டப்பட்டால், அதற்கு அவர் தம் கீழுள்ள நிருவாகக் குழுவே பொறுப்பானதெனக் கூறினர்.

அரசாங்கத்திணைக்களத் தலைவர் உத்தியோகத்தரை நியமித்து அப்பட்டியலை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்குச் சமர்ப்பித்தார். அவர் முறையே அப்பட்டியலைக் குறிப்பிட்ட நிருவாகக் குழுவின் ஆலோசனைக்கு அனுப்பினர். நிருவாகக் குழு, திணைக்களத் தலைவரின் தெரிவுக்கு மாறாக வேறோர் பட்டியலை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சில சமயங்களில் அனுப்பியது

அநேக சந்தர்ப்பங்களில் அந்நிருவாகக்குழு தனக்குத் தேவையான வர்களையும் சுற்றமித்திரர்களையும் தகவுரை செய்தது. ஆனால் ஈற்றில் அரசாங்க சேவை ஆணைக்குழு பல சமயங்களில் நிருவாகக் குழுவோ அரசாங்க திணைக்களத் தலைவரோ தகவுரை செய்யாத ஒருவரைத் தெரிவு செய்து ஆள்பதியின் அல்லது குடியேற்ற நாட் டரசுச் செயலாளரின் சம்மதத்தைப் பெற்றது. எனவே இங்ஙனம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் மீது ஒருபுறம் திணைக்கள கத் தலைவரும் இன்னொரு புறம் நிருவாகக் குழுவும் எதிர்ப்பாக இருந்தமையால் இவ்விரு சாராரிடையே முரண்பாடு ஏற்படலா யிற்று. குறிப்பாக நிருவாகக் குழுவின் விருப்பத்திற்கு மாறுக நிய மனஞ் செய்யப்பட்ட உத்தியோகத்தருக்கு அக்குழு அங்கத்தவர்கள் பல தொல்லைகளைக் கொடுத்தனர். அதுவுமன்றி அவர்களைப் பல இம்சைகளுக்கு உட்படுத்தினர். நிருவாகக் குழுவும் அமைச்சரவை யும் காரணமாகவிருந்த பல குறைகள் அவ்வுத்தியோகத்தர் மீது சுமத்தப்பட்டன. மேலும் அவர்கள், பல எசமான்களைத் திருப்தி செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயினர். இதன்பேருக திறமை யுள்ள உத்தியோகத்தர் பலர் இளமையிலேயே பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றனர்.

நிருவாகக்குழு ஆட்சி முறையின் கீழ்ச் சாதாரண அரசுக்கழக உறுப்பினர்க்குக் கூடிய அதிகாரம் இருந்தது. ஏனெனில் அவர்கள னைவரும் ஏதாவது ஒரு நிருவாகக் குழுவில் இடம் பெற்றிருந்த னர். ஆகவே அவர்கள் ஒவ்வொருவரும் பாலனத்தைக் கட்டுப் படுத்தக் கூடியதான நிலைமை இருந்தது. மேலும் நிருவாகக்குழு ஆட்சிமுறையில் கூட்டுப் பொறுப்பு இல்லாததால் கட்சி அரசியல் வளர்ச்சி தடைபட்டது. அரசியற் கட்சிகள் சனநாயக ஆட்சி முறைக்கு முதுகெலும்பு போன்றன. இத்தகைய கட்சி ஆட்சி முறையை நிருவாகக்குழு ஆட்சிமுறை தடைப்படுத்திற்று, கட்சி ஆட்சிமுறையின் ஆரம்பத்தைத் தானும் டொனமூர் அரசியற் திட் டம் வழங்க மறுத்தமை வருந்தத் தக்கதொன்றாகும்.

அமைச்சரவையிலும் பல குறைகள் காணப்பட்டன. அமைச் சர் அனைவரும் ஒரே கொள்கையுடையவர்களாக இருக்கவில்லை. ஆற்றலிலுள்ள அமைச்சர் சிலர் சாதுரியமாகப் பேசி தங்களது அமைச்சுக்குத் தேவையான நிதியைப் பெற்று தமது துறைகளில் பெரும் முனேற்றங்களைச் செய்தனர். உதாரணமாக டி. எஸ். சேனநாயகா அவர்கள் விவசாய அமைச்சராக இருந்த காலத்தில் தனது கடமையைத் திறம்படச் செய்து முடித்தார். ஆற்றலற்ற வர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட பணியை நன்கு செய்து முடிக்க முடியாமல் வாளாவிருந்தனர்.

மேலும் மூன்று ஆட்சி உத்தியோகத்தர் அமைச்சர்களுக்குப் பல கஷ்டங்களைக் கொடுத்தனர். இம் மூவர் அரசுக்கழகத்தை வழிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டுமேயொழிய தடை செய்பவர்களாக இருக்கலாகாதென டொனமூர் ஆணைக்குழு கருதியது; ஆனால் இம்மூவர் எப்பொழுதும் மற்றைய ஏழு அமைச்சர்களுக்கு முட்டுக்கட்டையாகவே இருந்தனர்; சில அமைச்சர் தமது திணைக்களங்களுக்குத் தகுதியான உத்தியோகத்தரைத் தரும்படி கேட்ட சமயங்களில் பிரதம செயலாளர் கொடுக்க மறுத்தார். ஆக்க வேலைகளுக்குப் பணம் தேவைப்படும் நேரங்களில் அப்பணத்தை ஒதுக்கும்படி அமைச்சர் சிலர் கேட்டனர். ஆனால் அச்சமயங்களில் நிதிச் செயலாளர் சில காரணங்களைக் காட்டி அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்களிற் சிலவற்றை நிராகரித்தார். நிருவாகக் குழுக்களுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் மூன்று ஆட்சி உத்தியோகத்தர் மீது எவ்வித நடவடிக்கை யெடுக்கும் அதிகாரமும் அக்குழுக்களுக்கு இருக்கவில்லை. இந்நிலையில் சீரிய முறையில் நாட்டின் பாலனம் நடைபெற்றிருக்க முடியாதென்பது மலையில் தீபம். அமைச்சரவையோ அரசுக்கழகமோ நிறைவேற்றுஞ் சட்டங்களை நிராகரிக்க ஆள்பதிக்கு அதிகாரமிருந்தது; அதுவுமன்றி அமைச்சரவையும் அரசுக்கழகமும் ஏற்றுக்கொள்ளாத சட்டங்களைக் கொண்டு வருவதற்கும் அதிகாரம் ஆள்பதிக்கு வழங்கப்பட்டிருந்தது;

டொனமூர் அரசியல் திட்டம் மக்களின் பிரதிநிதிகளுக்கு முதன் முதலாக பாலனத் துறையில் அதிகாரங்களும் பொறுப்புகளும் கொடுத்த தென்பது உண்மையே; வெறுஞ் சட்டக்கழக அங்கத்தவர்களாகச் செயலதிகாரம் யாதுமின்றி விடயங்களை விவாதிக்கும் உரிமை மட்டும் பெற்றிருந்த மக்கள் பிரதிநிதிகள், டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின் பின்னர் ஆட்சியிற் பொறுப்பு வகிக்கும் முக்கிய அங்கத்தவர்களாக மாறினர். ஆயினும் மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அளவிறந்த அதிகாரங்களும் அரசுக்கழகத்தின் முடிபுகளையே நிராகரிக்கக் கூடிய அளவுக்குப் பெரும் அதிகாரம் படைத்திருந்த ஆள்பதியின் உரிமையும் டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளினுற் சனங்களடைந்த முன்னேற்றத்தையும் சுதந்திரத்தையும் பெருமளவுக்குக் கட்டுப்படுத்தின. அன்றியும் சர்வசன வாக்குரிமையிலும் நிருவாகக் குழுமுறையிலும் இருந்த பெருங் குறைபாடுகள், இந்த எடுத்துரைகளைத் திறம்பட அமுல் செய்வதற்குத் தடையாக விருந்தன, எனவே இத்திட்டம் இலங்கையரை அரசியற் சுதந்திரத்தில் ஓர் படி முன்னேற்றினாலும் போதுமானதாக இருக்கவில்லை; இதுவே இதன் தோல்விக்குக் காரணம்;

அரசியல் வளர்ச்சி
1833—1931

வருடம்	உத்தியோகத்தர் தொகை	உத்தியோகத்தரல்லாதோர் தொகை		முழுத் தொகை
		நியமன அங்கத்தவர் தொகை	தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர் தொகை	
1833	9	6	—	15
1889	9	8	—	17
1912	11	6	4	21
1920	14	7	16	37
1924	12	8	29	49
1931	3	8	50	61

வினாக்கள்

1. (அ) வாக்குரிமை (ஆ) சட்டசபையிற் பிரதிநிதித்துவம் அளிக்கும் கொள்கை ஆகிய இவற்றைக் குறித்து டொனமூர் கமிஷனர்கள் செய்துள்ள சிபார்சுகளைச் சுருக்கமாக விளக்குக: (டிசெம்பர், '49)

2. கோல்புறூக் அரசியல் சீர்திருத்தங்களில் முக்கியமானவற்றை டொனமூர் அரசியல் சீர்திருத்தங்களில் முக்கியமானவற்றோடு ஒப்பிடுக. ஒவ்வொருவரும் செய்த முக்கியமான சீர்திருத்தம் எது என நீர் எண்ணுகிறீர். காரணம் கூறுக. (ஜூலை, '54)

3. இலங்கை அரசியல் முறை எவ்வகையில் திருப்தியற்றதென டொனமூர்க் குழுவினர் கண்டனர். இக்குறைகளை எவ்வாறு திருத்த அவர்கள் எண்ணினர்? (டிசெம்பர், '55)

4. 1848-ம் வருடத்துக்கும் 1931-ம் வருடத்துக்கும் இடையே அரசியல் சீர்திருத்தங்களுக்காக இந்நாட்டில் நடாத்தப்பட்ட இயக்கத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. இவ்வியக்கத்தினால் பெற்ற சாதனைகள் யாவை?
(டிசெம்பர், '57)

5. டொனமூர்க் குழுவுக்கு முன்னர் கோரப்பட்ட அரசியற்றிட்டங்கள் யாவை? கோருதற்குரிய காரணங்களை ஆராய்க. டொனமூர்க் குழுவினருடைய சிபார்சுகள் தேவையைத் திருப்திபடுத்தியனவா? (ஆகஸ்ட், '60)

6. டொனமூர் ஆட்சிமுறையில் நாட்டின் நிர்மாண சேவைகள் இந் நாட்டில் எவ்வாறு வளர்ச்சியுற்றதென்பதை விளக்குக; மூன்று காரணங்கள் தருக;
(டிசெம்பர், '60)

7. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகள் எழுதுக:
(1) நிருவாகக் குழு முறை (டிசெம்பர், '61)
(2) டொனமூர் சீர்திருத்தங்கள் (டிசெம்பர், '62)
(3) டொனமூர் அரசியற்றிட்டத்தில் அரச உத்தியோகத்தர் (ஆகஸ்ட், '63)
(4) வளர்ந்தோர் வாக்குரிமை (ஆகஸ்ட், '67')

8. டொனமூர் நிர்வாகத்தின் கீழ்ச் சமூக சேம நல வேலைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விபரிக்க;
(ஆகஸ்ட், '65)

9. 1931-ம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைப்பற்றி எழுதுக. அவை 1911-ம் ஆண்டு அரசியலமைப்புச் சீர்திருத்தங்களினின்று எவ்வெவ்வழிகளில் வேறுபடுகின்றன வென்பதைக் குறிப்பிடுக: (டிசெம்பர், '66')

பதினெட்டாம் அத்தியாயம்

சோல்பரி அரசமைப்பு

டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்களினால் இலங்கை மக்கள் பொதுவாக திருப்தியடையவில்லை. பூரண பொறுப்பாட்சி இலங்கை மக்களுக்கு வழங்கப்படாமை, ஆள்பதியினது விசேட அதிகாரங்கள், ஆட்சி உத்தியோகத்தர்கள் மூவரிடம் ஒப்படைக்கப்பட்ட முக்கிய மான கடமைகள், அமைச்சர்களைத் தெரிவு செய்யும் முறை, ஆகிய விடயங்கள் கண்டனத்துக்குள்ளாயின. நிருவாகக் குழுக்கள் ஆட்சி முறை, பாலனத்திற் பிரிவினைக்கு இடமளித்தது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டமை, சிறுபான்மைச் சமூகத்தினரிடையே ஒருவித அச்சத்தை உண்டாக்கியது. டொனமூர்த்திட்டம் நடைமுறைக்கு வந்த காலந் தொடக்கம் பெரும்பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்கு மிடையே கருத்து வேற்றுமை இருந்தது வகுப்புத் துவேஷமும் வளர்ந்து வரலாயிற்று; ஒவ்வொரு இனத்தவரும் மற்ற இனத்தவர்மீது சந்தேகங் கொண்டனர்.

பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே அரசியற் றிட்டம் மாற்றியமைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி வலுப்பெற்றது. அவர்கள், அரசுக் கழகத்திற்குப் பொறுப்புள்ள மந்திரி சபையொன்று அமைக்கப்படல் வேண்டுமெனவும், அரசுக் கழகத்திலேயே பிரதம மந்திரி தேர்ந்தெடுக்கப்பட்டு அவராலேயே மற்றைய மந்திரிகள் நியமிக்கப்படல் வேண்டு மெனவும், ஆள்பதியின் விசேட அதிகாரங்கள் குறைக்கப்படல் வேண்டுமெனவும், பொறுப்பாட்சி மந்திரி சபைக்கு இருக்கவேண்டுமாயின் மூன்று ஆட்சி உத்தியோகத்தர் பதவி நீக்கப்படல்வேண்டுமெனவுங் கோரினர்; மேலும் ஆள்பதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டால் மேற்சபை யொன்று தாபிக்கப்படல் வேண்டுமெனவுங் கேட்டுக்கொண்டனர்.

இதுவுமன்றி அமைச்சரவையிலுள்ள இரு சிறுபான்மை அங்கத்தவரைவிட ஏனையோர் நடைமுறையிலிருக்கும் அரசியற் றிட்டத்தை எப்பொழுதும் கண்டித்து வந்தனர். சிறுபான்மைச் சமூகத்தினர், நிருவாகக்குழுக்கள் அமைச்சரைத் தெரிவுசெய்வதாற்றான் தாங்கள் அமைச்சர் பதவி பெறக்கூடியதாக விருக்கின்றதென அபிப்பிராயப்பட்டனர். ஆனால் நிருவாகக் குழுக்களுக்குப் பதிலாக மந்திரி சபை அமைக்கப்படின், தற்போது அரசியற் கட்சிகள் இல்லாதபடியால் சிறுபான்மைப் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியுள்ள கூட்டு மந்திரி சபையாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர்

இதற்கிணங்க குடியேற்ற நாட்டரசுச் செயலாளர், சிறுபான்மை யினரது ஆதரவின்றி சிங்களவருடைய கோரிக்கைகள் எதையும் ஏற் றுக்கொள்ள மறுத்தார்.

1936ம் ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் நிருவாகக் குழுத்தலைவர்கள் அடங்கிய அமைச் சரவை தெரிவு செய்யப்பட்டது. இதில் ஏற்கனவே அமைச்சர் களாயிருந்தவரும் சிங்களவரா யிருக்கத்தக்கதாக ஒழுங்கு செய்யப்பட்டு சர்வ சிங்கள அமைச்சரவை அமைக்கப்பட்டது. இச்சம்பவத்திற்கு முன்பு நிருவாகக் குழு ஆட்சி முறையில் சிறுபான்மைச் சமூகத்த வர்கள் தம்மில் அமைச்சராக ஒன்று அல்லது இரண்டுபேர் தேர்ந் தெடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பமிருக்கிறதென்று எண்ணினர். ஆனால் கடைசியாக நடந்த அமைச்சரவைத் தேர்தல், இதுவரையும் எண்ணியிருந்தது தவறென அவர்களுக்கு எடுத்துக் காட்டிற்று; ஆகவே சிறுபான்மைச் சமூகத்தவர், தங்கள் நிலைமையைப் பாது காக்க வேறு வழியைக் கடைப்பிடிக்கவேண்டுமென எண்ணலா யினர். இதன் காரணமாகத்தான் சிறுபான்மைச் சமூகத்தவரைச் சேர்ந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் ஐம்பதுக் கைம்பது என்ற கோஷம் எழுந்தது. பிரதிநிதிகளின் தானங்களைச் சரிபாதியாகச் சிங்களவருக்கும் சிறுபான்மையோருக்குமிடையே பிரித்தல் (Balanced Representation) அல்லது வேறு ஏதாவது முறைப்படி வகுப்புவாரியாகப் பிரதிநிதித்துவம் அளித்தல் என்பது தான் இந்த ஐம்பதுக்கைம்பதின் தத்துவம்.

இது ஒருபுறமிருக்க, சர்வ சிங்கள அமைச்சரவையிலேயே அர சியல் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற எண்ணம் வலுப் பெற்றது. 1937ம் ஆண்டு மார்ச்சு மாதம் அவ்வமைச்சரவை தனது கோரிக்கைகளடங்கிய அறிக்கையை ஆள்பதியிடம் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையைக் குடியேற்ற நாட்டரசுச் செயலாளருக்கு ஆள்பதி அனுப்பிவைத்தார். அவர், தனது அறிக்கையில் அரசியல் திட்டத்தை மாற்றியமைக்கும் முகமாக ஒரு புதிய ஆணைக் குழுவை இலங்கைக்கு அனுப்பி விசாரணை செய்யும்படி கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய 1937 ம்ஆண்டு புதிதாக நியமனம் பெற்ற இலங்கை ஆள்பதி சேர் அன்ட்றூ கால்டிகொட் அவர்களுக்கு குடி யேற்ற நாட்டரசுச் செயலாளராகிய ஒலிவர்பிகோர் ஒரு நிருபத்தை அனுப்பிவைத்தார். அதில், இலங்கை அரசியல் திட்டம் மாற்றி யமைக்கப்படல்வேண்டுமெனவும் அதற்காக சகல சமூகத்தவரின் அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் நன்கு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் அந்நிருபத்தில்

ஆள்பதி ஆராயவேண்டிய விடயங்களும் அடங்கியிருந்தன; அவை யாவன: ஆள்பதியின் விசேட அதிகாரங்கள், அமைச்சர்களைத் தெரிவு செய்வதற்குக் கையாளப்படும் முறை, அமைச்சர்களுக்கும் நிருவாகக் குழுக்களுக்கும் அரசுக் கழகத்துக்குமுள்ள தொடர்புகள், சிறுபான்மைச் சமூகத்தவரின் பிரதிநிதித்துவம், சர்வசன வாக்குரிமை: கால்டிகொட் சகல விடயங்களையும் சுயேச்சையாக ஆராய்ந்து தானுகவே அறிக்கை சமர்ப்பித்தபடியால் அதை ஒரு ''தனி மனிதன் விசாரணைச் சபையின்'' முடிபு என சிலர் விமர்சனம் செய்தனர்.

ஆள்பதியிடம் விசேட அதிகாரங்கள் இருக்கும் வரையும் மேற் சபை தேவையற்றதெனவும், வழக்கம்போல பிரதேசவாரியாகப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமெனவும், கால்டிகொட் அபிப்பிராயப்பட்டார். சிறுபான்மைச் சமூகத்தினரைத் திருப்தி செய்யும் வண்ணமாக அவர்கள் இன்னும் பத்து அங்கத்தவர்களைத் தெரிவுசெய்யக்கூடிய முறையில் தேர்தல் தொகுதிகளை மாற்றியமைக்கவேண்டுமென்றும் அவர், தகவுரை செய்தார். ''ஐம்பதுக்கைம்பது'' என்ற கொள்கையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆள்பதிக்கு நான்கு ஐரோப்பியரையும், இரண்டு பறங்கியரையும், இன்னும் வேறு இருவரையும் நியமனஞ் செய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மேலும் நிருவாகக்குழு ஆட்சிமுறையை நீக்கி விட்டு அதற்குப் பதிலாக மந்திரி சபையொன்று அமைக்கப்பட வேண்டுமெனத் தகவுரை செய்தார். இதனல், தானுகவே ஆட்சி உத்தியோகத்தர் மூவருக்கும் இடமில்லாமற் போய்விடுமென எதிர் பார்க்கப்பட்டது: ஆள்பதி அரசுக் கழகத்தில் அதிக ஆதரவுள்ள ஒருவரைப் பிரதம மந்திரியாக நியமிப்பார்; இவர் முறையே மற்றைய மந்திரிமார்களை நியமனஞ் செய்வார்.

சர்வசன வாக்குரிமையை நீக்குவதை கால்டிகொட் விரும்பவில்லை, மேலும் சிறுபான்மையோரின் பாதுகாப்புக்காக பிரதம மந்திரி, அவர்களின் ஆதரவைப் பெற்றவராகவே இருக்கவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. கால்டிகொட், பத்து உதவி மந்திரிகள் ஆள்பதியால் நியமனஞ் செய்யப்படவேண்டுமெனவும், அரசுக் கழக அங்கத்தினரின் சம்பளம் குறைக்கப்படல் வேண்டுமெனவும் தகவுரை செய்தார். ஆட்சி உத்தியோகத்தர் மூவரின் பதவிகள் ஒழிக்கப்பட்டு அவர்களின் கடமைகள் மந்திரி சபைக்கு மாற்றப்படல் வேண்டுமெனவும் தகவுரை செய்யப்பட்டது. ஆனல் பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகிய விடயங்கள் ஆள்பதியின் மேற்பார்வையின் கீழ் இருக்கும்: பிரதம செயலாளர் பதவி ஒழிக்கப்பட்ட போதிலும் அவர் ஆள்பதியின் மூதற் செயலாளராக இருப்பார்.

இவரே ஆள்பதி இல்லாத நேரங்களில் அவருக்குப் பதிலாகக் கடமை யாற்றுவார். இவரே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் முதல்வ ராவர். கால்டிகொட்டின் எடுத்துரைகளின்படி நீதிச் செயலாளர் சட்ட ஆலோசகராக்கப்பட்டார். இவரே நீதிச்சேவை ஆணைக்குழு வின் முதல்வராவர். நிதிச் செயலாளரின் பெரும்பாலான கடமை கள் நிதிமந்திரிக்கு வழங்கப்பட்டன; இவரே நிதி ஆலோசகராவர். இவரே இறைசேரியின் தலைவராக இருக்கவேண்டுமென கால்டி கொட் தகவுரை செய்தார். கால்டிகொட்டின் சீர்திருத்த அறிக்கை அரசுக் கழகத்தில் கன்கு பரிசீலனை செய்யப்பட்டது; இவரது அறிக்கை பெரும்பான்மையினராலோ அன்றேல் சிறுபான்மையின ராலோ ஏற்றுக்கொள்ளப்படவில்லை; இவ்விரு சாராருக்கிடையே எவ்வித சமரசமான முடிவும் ஏற்படவில்லை; இதற்குரிய கார ணங்களில் சிறுபான்மையினருக்கு இன்னும் பத்துத் தானங்கள் வழங்குவதைச் சிங்களவர் விரும்பாமையும் ஒன்றாகும். இதனால் கால்டிகொட்டின் சீர்திருத்த அறிக்கை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாமற் போயிற்று.

இந்நிலையில் ஐரோப்பாவில் இரண்டாவது மகாயுத்தம் ஆரம்ப மாயிற்று. ஆனால் இலங்கை மக்களது சீர்திருத்தக் கிளர்ச்சிகள் ஓய்ந்தபாடில்லை; 1941ம் ஆண்டு செப்டம்பர் மாதம் குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் அரசுக் கழகத்திற்கு ஒரு அறிக்கையை அனுப்பிவைத்தார்; அதில், இலங்கை அரசியல் திட்டம் திருத்தி யமைக்கப்படுவது இன்றியமையாததென, தான் உணருவதாகவும் வெகு சீக்கிரத்தில் அதாவது யுத்தம் முடிவடைந்ததும் ஒரு ஆணைக் குழுவை இலங்கைக்கு அனுப்பி அரசியற் சீர்திருத்தம் கொண்டு வருவதாகவும் உறுதி தந்தார்.

இன்னொரு அறிக்கை 1943ம் ஆண்டு அனுப்பிவைக்கப்பட்டது. அதில், யுத்தத்தை வெற்றிகரமாக நடாத்துவதில் இங்கிலாந்து கவ னஞ் செலுத்துவதால் இலங்கை அரசியற் சீர்திருத்த விடயங்களை ஆராய்வதற்கு அவகாசமில்லையெனவும் யுத்தத்தில் வெற்றியீட்டிய பின் அமைச்சரவையால் தயாரிக்கப்பட்ட அரசியற் றிட்டத்தை ஆணைக்குழு ஆராயுமெனவும் உறுதி அளிக்கப்பட்டது. 1944ம் ஆண்டு ஜூலைமாதம் குடியேற்றநாட்டரசுச் செயலாளர், இங்கிலாந்து பொது மக்கள் சபையில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார். அதில் அமைச் சரவையின் அரசியல் திட்டத்தை ஆராயுமுகமாக அவ்வாண்டு இலங் கைக்கு ஒரு ஆணைக்குழு அனுப்பப்படுமெனக் கூறப்பட்டிருந்தது.

1943ம் ஆண்டு குடியேற்ற நாட்டரசுச் செயலாளரின் அறிக்கையில் கேட்டுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் இலங்கை அமைச்சரவை தனது நகல் திட்டத்தைச் சமர்ப்பித்தது. அதில் பிரித்தானிய பாராளுமன்ற சனநாயகமுறையை ஒட்டிய முறைகள் சேர்க்கப்படல் வேண்டுமெனவும், பத்து அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரி சபை அமைக்கப்படல்வேண்டுமெனவும், அரசுக் கழகத்தில் ஏறக்குறைய நூறு அங்கத்தவர்கள் இருக்கவேண்டுமெனவும், கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன்படி அரசுக் கழகத்தில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்றிருக்கும் ஒருவரை பிரதம மந்திரியாக ஆள்பதி நாயகம் நியமிப்பார். மேலும் அப்பிரதம மந்திரியின் எடுத்துரைகளின்படி மந்திரிகளையும் பாராளுமன்றச் செயலாளர்களையும் ஆள்பதி நாயகம் நியமிப்பார், நீதிச் செயலாளரது கடமைகளையும் பிரதம செயலாளரது கடமைகளையும் நீதி சேவை ஆணைக்குழுவும், அரசாங்க சேவை ஆணைக் குழுவும் முறையே ஏற்றுக்கொள்ளும். நாட்டின் பாதுகாப்பு, வெளிவிவகாரம், நாணயம், வங்கி, ஆகியனவற்றில் ஆள்பதிநாயகத்திற்கு விசேட அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அரசுக்கழகத்தின் அங்கத்தவர் தொகை அதிகரித்தால், தங்களது நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு சிறுபான்மைச் சமூகத்தவர் போதிய தானங்களைப் பெறுவரென மேற்கூறிய நகல் திட்டத்தைச் சமர்ப்பித்த சர்வ சிங்கள அமைச்சரவை எடுத்துக் காட்டிற்று. இந்நகல்திட்டத்தை குடியேற்ற நாட்டரசுச் செயலாளர் அப்படியே ஏற்றுக்கொள்ள மறுத்தார். அதற்குக் காரணம், அரசுக் கழகத்தில் ஏகமனதாகவோ அன்றேல் மூன்றில் இரண்டு வாக்குப் பலத்தைக்கொண்டோ அந்நகல்திட்டம் நிறைவேற்றப்பட வில்லையென்பதேயாம். ஆனால் இந்நகல் திட்டத்தை அடிப்படையாக வைத்து அரசியல் திட்டத்தை மாற்றுவதற்கு எடுத்துரைகளைச் செய்யும் பொருட்டு சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இக்குழு 1944ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22ந் திகதி இலங்கையை வந்தடைந்தது.

டொனமூர் ஆணைக்குழு, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தகவுரை செய்தபோது பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் வகுப்புவாத மனப்பான்மையை ஒழிக்குமெனக் கருதியது. ஆனால் அக்கருத்து பிழையானதெனப் பின்பு நடந்த சம்பவங்கள் புலப்படுத்தின. ஏனெனில் தமிழர் அதிகமாக வசிக்கும் வட, கீழ் மாகாணங்களில் ஒரு சிங்களவனை அன்றேல் தென் மாகாணத்தில் ஒரு தமிழனை தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதற்கு மொழியொன்றே முட்டுக்கட்டையாகவிருந்தது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேசிய உணர்ச்சி வளருவதற்குத் தடையாகவிருந்தது. காலகதியில் மக்களிடையே கல்வி வளர்ச்சியடைந்து அவர்கள் அரசியல் ஞானம்

பெறத் தொடங்க இன, மொழி ரீதியில் எண்ணத் தலைப்படமாட் டார்களெனச் சோல்பரி ஆணைக்குழு கருதியது. எனினும் டொன மூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகள், அகில இலங்கைத் தமிழ்க் காங் கிரஸ் கருதியதுபோலச் சிறுபான்மையினரைப் பாதித்தது என்பதை யும் சோல்பரி ஆணைக்குழு ஒப்புக்கொண்டது.

ஆகவே சிறுபான்மையினருக்கு சில பாதுகாப்புகளுடன் பிர தேசவாரிப் பிரதிநிதித்துவத்தையே நிலைநாட்டத் தீர்மானித்து தகவுரை செய்தது. தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கு ஒரு தொகுதி வரையறைக்குழு நியமிக்கப்படல் வேண்டுமென சோல்பரி ஆணைக்குழு தகவுரை செய்தது. இக்குழு அங்கத்தவர்கள் அரசியற் சார்பற்றவர்களாக இருக்கவேண்டும். இலங்கையின் மாகாணம் ஒவ்வொன்றையும் பல தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கும் கடமை இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. உதாரணமாக ஒரு குறிப் பிட்ட சாதி, சமயத்தைச் சேர்ந்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு பரந்த பிரதேசத்தில் அவர்களிலும் வேறுபட்ட இன ஞெரு சாதி, சமய மக்கள் அப்பரந்த பிரதேசத்தின் சில இடங்களில் கூடுதலாக சேர்ந்து வாழ்ந்தால், அச்சிறுபான்மையினருக்கும் பிரதிநிதித்துவம் வரக்கூடியதாக தேர்தல் தொகுதிகள் அமைய வேண்டும். ஒவ்வொரு குடிமதிப்பும் எடுக்கப்பட்டவுடன் ஆள்பதி நாயகம் ஒரு தொகுதி வரையறைக் குழுவை நியமிக்கவேண்டும்.

இக்குழு 75,000 மக்களுக்கு ஒவ்வொரு பிரதிநிதியையும், அல் லது 1000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்திற்கு ஒரு பிரதி நிதியையும் வழங்கும் பொருட்டு தொகுதிகளைப் பிரித்தல் வேண்டும். மாகாணத்தின் விஸ்தீரணத்தை மூலாதாரமாகக் கொண்டு தேர்தற ஞெகுதிகள் பிரிக்கப்பட்டபொழுது மாகாணத்துக்குப் பிரதிநிதிகள் பின்வருமாறு ஒதுக்கப்பட்டனர்.

மேல்மாகாணம்		1
மத்திய	,,	2
தென்	,,	2
வட	,,	4
கீழ்	,,	4
வடமேல்	,,	3
வடமத்திய	,,	4
ஊவா	,,	3
சப்பிரகமுவ	,,	2
மொத்தம்		25

இதனல் ஒவ்வொரு வாக்காளனும் பிரதிநிதித்துவம் பெறமுடியு மெனவும்; பிரதிநிதிகள் சபையில் 53 சிங்களவரின் பிரதிநிதிகளும்

48 சிறுபான்மையோரின் பிரதிநிதிகளும் இருப்பர் என எதிர்பார்க்கப்பட்டது. வாக்குரிமை விடயத்தில் சோல்பரி ஆணைக்குழு எவ்வித மாற்றங்களையும் கொண்டுவர விரும்பவில்லை.

இலங்கைப் பாராளுமன்றம் ஆள்பதி நாயகத்தையும் கீழ்ச்சபையையும் மேற்சபையையும் கொண்டதாக இருக்கும், முதலில் கீழ்சபையைப்பற்றி அறிந்துகொள்வாம். இது பிரதிநிதிகள் சபையெனவும் அழைக்கப்படும்; ஆனால் இதன் உறுப்பினர் பாராளுமன்ற உறுப்பினர் என அழைக்கப்படுவர். பிரதேசவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படும் 95 அங்கத்தவர்களும் ஆள்பதி நாயகத்தினால் நியமனஞ் செய்யப்படும் ஆறு அங்கத்தவர்களும் பிரதிநிதிகள் சபையில் அங்கத்துவம் பெறுவர்; இவர்கள் முதலில் வாக்குரிமை உடையவர்களாக இருக்க வேண்டும், ஏதாவது ஒரு பாஷையில் எழுத,வாசிக்க, பேச ஆற்றலுடையவர்களாக இருக்கவேண்டும். இவர்கள் அரசாங்க ஒப்பந்தகாரராகவோ மூன்று மாதங்களுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்தவர்களாகவோ கைக்கூலி அல்லது உபகாரத்தைப் பெற்றவர்களாகவோ இருக்கலாகாது; பிரதிநிதிகள் சபையின் ஆயுள் ஐந்து வருடங்களென வரையறை செய்யப்பட்டது; அது வேறு காரணங்களுக்காக முதலில் குலைக்கப்படாதிருந்தால் பிரதிநிதிகள் சபை முதன் முதலாகக் கூடிய நாளிலிருந்து ஐந்து வருடங்களாகும்; பிரதிநிதிகள் சபை அங்கத்தவர் எவரும் மேற்சபையில் அங்கத்துவம் வகிக்க முடியாது; இங்கிலாந்தில் பொதுமக்கள்சபை எவ்வளவு காலத்திற் கொருமுறை கூடுகின்றதோ அதேபோல இலங்கையிலும் பிரதிநிதிகள் சபை கூடுமெனச் சோல்பரி ஆணைக்குழு தகவுரை செய்தது.

சிறுபான்மையினர், தங்களுக்கு அதிகப்படியான பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கேட்டனர்; ஆகவே மேற்சபையாகிய மூதவையொன்று நிறுவப்பட்டால் அதில் சிறுபான்மையினருக்குக் கூடிய பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு வசதியேற்படுமென சோல்பரி ஆணைக்குழு கருதியது; தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய மூதவையில் இயலாதென அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் எடுத்துக் காட்டியது; எச் சட்டங்களையும் நிராகரிக்கும் உரிமை மேற்சபைக்கு வழங்கப்படாதமையினாலும், புதிய வரி சம்பந்தமாகவோ, நிதி சம்பந்தமாகவோ எச்சட்டத்தையும் இயற்றவோ மாற்றவோ மூதவைக்கு அதிகாரம் இல்லாதபடியாலும் அச் சபையினால் தங்களுக்கு எவ்வித நன்மையு மில்லையென எடுத்துரைத்தனர்.

மேலும் அரசாங்கம், வரிகளினால் வசூல்செய்த பணத்தைத் தவறான முறையில் செலவு செய்ததெனவும் அரசாங்க உத்தியோகத்தர்களை நியமனஞ்செய்யும் விடயத்தில் பாரபட்சமாக நடந்துகொண்டதெனவும் சிறுபான்மைச் சமூகத்தினர் சுட்டிக் காட்டினர்; மேற்

கூறிய குற்றச் சாட்டுகளுக்குச் சான்றாக 1931ம் ஆண்டு பௌத்தாலயச் சட்டம், 1940 ம் ஆண்டு மீன்பிடிக் கட்டளைச் சட்டம், 1942 ம் ஆண்டு அனுராதபுரம் பாதுகாவற் சட்டம் 1942ம் ஆண்டு பஸ்வண்டி உத்தரவுக் கட்டளைச் சட்டம் ஆகியனவற்றை எடுத்துக் காட்டினர்: ஆகவே இத்தகைய அரசாங்கத்தின் போக்கைக் கட்டுப்படுத்துமுகமாகத் தங்களது பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படவேண்டுமேயன்றி அதற்கு மாற்று மருந்தாக மூதவை இருக்க முடியாதென ஆணித்தரமாக விளக்கினர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் கூற்றில் சில உண்மைகள் இருந்ததைச் சோல்பரி ஆணைக்குழு ஒப்புக் கொண்டது:

எனினும் வேறுபல காரணங்களைக் கொண்டு மூதவை அமைக்கப்படல்வேண்டுமென அது தகவுரை செய்தது. நன்றாக ஆராய்ச்சி செய்யப்படாமல் அவசரமாகச் சில முறிகள் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்படலாம். ஆகவே அவசரப்படாமல் முறிகளை அலசி ஆராய்ந்து முடிவுசெய்யக்கூடிய மூதவையொன்று இருக்குமாயின் அது, அப்படிப்பட்ட முறிகளைத் தாமதப்படுத்தித் திரும்பவும் பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பும்போது அவற்றைப் பிரதிநிதிகள்சபை பிறக்கீடு செய்யலாம்; அன்றேல் மாற்றி அமைக்கலாம். இரண்டாவதாக, கட்சி வாதம் அல்லது வகுப்புவாதம் பீடிக்காத அனுபவமும் அந்தஸ்துமுள்ள பல பிரமுகர்கள் அரசியற் சேவை புரிய விரும்பியபோதிலும் தேர்தல் சங்கடங்களில் மாட்டி அவதிப்பட விருப்பமற்றவர்களாகவிருக்கின்றனர். இத்தகையோருக்கு மூதவையில் அங்கத்துவம் அளிக்கப்படின், அவர்கள் தங்கள் தேர்தல்தொகுதிகளின் செல்வாக்குக்காகஅஞ்சி மௌனம்சாதிக்காது தம் அபிப்பிராயத்தைச் சிறிதும் கூச்சமில்லாமல் சுயாதீனமாக எடுத்துரைப்பர். ஆகவே இவர்களது சேவையை மூதவையிற் பயன்படுத்துவது இன்றியமையாததாகும். இவற்றிற்கிணங்க சோல்பரி ஆணைக்குழு, மூதவை நிறுவப்படவேண்டுமெனத் தகவுரை செய்தது:

மேற்சபை விடயமாகச் சோல்பரி ஆணைக்குழு பின்வரும் எடுத்துரைகளைச் செய்தது. மேற்சபை மூதவையெனவும் பெயர்பெறும்; இது முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட முப்பது உறுப்பினர்கள் கொண்ட ஒரு நிரந்தர சபையாக விருக்கும். இவர்களுள் பதினைந்து உறுப்பினர்கள் விகிதசமப் பிரதிநிதித்துவ முறையில் தனி மாற்று வாக்குமூலம் பிரதிநிதிகள் சபையால் தேர்ந்தெடுக்கப்படுவர். எஞ்சிய பதினைந்து உறுப்பினர்கள் ஆள்பதி நாயகத்தினால் நியமனஞ் செய்யப்படுவர். இவரால் நியமனஞ் செய்யப்படுபவர்கள் அநேகமாக தொழில், வர்த்தகம், விவசாயம், கல்வி, சட்டம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் உயர்ந்த தானங்களை வகிப்பவர்களாகவோ அன்றேல் வகித்தவர்களாகவோ இருப்பர்; முப்பதுபேர்

கொண்ட மூதவையில் மூன்றிலொரு பகுதியினர் அதாவது நியமன உறுப்பினர் ஐவர், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஐவராக 10 உறுப்பினர் இரண்டு வருட காலத்தின் பின் திருவுளச் சீட்டினால் தீர்மானிக்கப்பட்டபடி விலகுவர். அடுத்த இரண்டு வருடத்திற்குப் பின்பும் இதே முறையில் இன்னும் பத்துப்பேர் விலகுவர். விலகுபவர்கள் பின்னரும் தேர்ந்தெடுக்கப்படவோ நியமனம் பெறவோ முடியும். மூதவை ஆரம்பித்து நான்கு வருடங்களின் பின் மூதவை அங்கத்தவர் ஒவ்வொருவரும் மூதவையின் முழுக்காலமாகிய ஆறு வருடங்களுக்கும் அங்கம் வகிப்பர். பிரதிநிதிகள்சபை உறுப்பினரது தகுதிகள் போலவே மூதவை உறுப்பினரது தகுதிகளும் அமைந்திருக்க வேண்டும்.

மூதவை, தனது முதல்வராக உறுப்பினருள் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளலாம். மேலும் பிரதிநிதிகள் சபையிலுள்ள மந்திரி எவரும் மூதவையில் பிரசன்னமாக இருக்க முடியாதிருந்தது. இக்குறையை நிவிர்த்திப்பான் பொருட்டு இரண்டு பேருக்குக் குறையாத மந்திரிகளும் இரண்டு பேருக்கு மேற்படாத பாராளுமன்றச் செயலாளரும் மூதவை உறுப்பினராக இருக்கவேண்டும். நிதிமந்திரி, பிரிதிநிதிகள் சபை உறுப்பினராகவே இருக்கவேண்டு மெனவும் நீதிமந்திரி மூதவை அங்கத்தவராகவே இருக்கவேண்டு மெனவும் விதிக்கப்பட்டது. நிதி சம்பந்தமான முறிகளை நிராகரிக்கவோ அன்றேல் அதில் ஏதாவது மாற்றங் கொண்டுவரவோ அன்றேல் அதை ஒரு மாதத்திற்கு மேல் தாமதிக்கவோ மூதவைக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை, வேறு முறிகளை இரண்டுமுறை நிராகரிக்கும் உரிமை வழங்கப்பட்டது. ஆனால் மூன்றாவது முறை ஒரு முறியை மூதவை நிராகரித்தாலும் அதைச் சட்டமாக்கும் உரிமை பிரதிநிதிகள் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. நிதி முறிகளைத் தவிர வேறு முறிகளை இயற்ற மூதவைக்கு அதிகாரம் வழங்கப்பட்டது.

ஆட்சி உத்தியோகத்தர் மூவரது பதவிகள் நீக்கப்படல்வேண்டுமெனவும், டொனமூர்த்திட்டத்தில் இடம்பெற்ற நிருவாகக் குழுமுறை கைவிடப்படல்வேண்டுமெனவும் சோல்பரி ஆணைக்குழு தகவுரைசெய்தது. இதன்படி நிருவாகக் குழு முறைக் காலத்தில் இருந்துவந்த அமைச்சரவைக்குப் (Board of Ministers) பதிலாக தற்பொழுது மந்திரி சபை (Cabinet) இடம்பெறும். மந்திரி சபையின் முதல்வராகிய பிரதம மந்திரி ஆள்பதி நாயகத்தால் நியமனஞ் செய்யப்படுவரெனவும் பிரதம மந்திரியின் தகவுரையின் பேரிலேயே மற்ற மந்திரிகள் ஆள்பதி நாயகத்தால் நியமனஞ் செய்யப்படவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. ஒவ்வொரு மந்திரிக்கும் கொடுக்கப்படவேண்டிய அமைச்சுப்பதவிகள் யாவும் பிரதம மந்திரியி

ஞலேயே தீர்மானிக்கப்படும். அரசாங்கசேவை ஆணைக்குழுவின் தக வுரையின்படியே ஆள்பதிநாயகம் ஒவ்வொரு மந்திரிக்கும் ஒவ்வொரு நிரந்தரச் செயலாளரை நியமனஞ் செய்ய வேண்டுமெனவும் சோல் பரி ஆணைக்குழுவினுல் தகவுரை செய்யப்பட்டது. ஆங்கில அரசிட மிருந்து அனுப்பப்படும் கடிதங்களெல்லாம் பிரதம மந்திரிக்கே விலாசமிடப்படல் வேண்டுமெனவும், வெளிநாட்டு விவகாரம், பாது காப்பு சம்பந்தமான திணைக்களம் பிரதம மந்திரியின் பொறுப் பிலேயே இருக்க வேண்டுமெனவும் சோல்பரி ஆணைக்குழு தகவுரை செய்தது.

சோல்பரி அரசமைப்பின் கீழ் ஆள்பதி, ஆள்பதி நாயக மென அழைக்கப்பட வேண்டுமெனவும் இவரே பிரித்தானிய முடி யின் பிரதிநிதியெனக் கருதப்படவேண்டுமெனவும் தகவுரை செய் யப்பட்டது. ஆள்பதிநாயகம் இலங்கையில் இல்லாக்காலங்களில் இவ ருக்காகப் பிரதம நீதிபதியே அரசாங்கத்துக்குப் பொறுப்புடையவ ராயிருப்பர். பாராளுமன்றத்தைக் கூட்டுதல், குலைத்தல், சட்டங்க ளுக்கு அங்கீகாரம் அளித்தல், மந்திரிகளை நியமனஞ் செய்தல், அர சாங்க சேவை ஆணைக்குழு தகவுரை செய்யும் உத்தியோகத்தர்களை நியமித்தல் ஆகியன ஆள்பதி நாயகத்தின் கடமைகளாகும். மேலும் பின்வரும் சட்டங்களைப் பிரித்தானிய மன்னனின் அங்கீகாரத்திற்கு ஆள்பதிநாயகம் ஒதுக்கி வைக்கவேண்டுமெனச் சோல்பரி ஆணைக் குழு தகவுரை செய்தது,

1. இலங்கையில் குடியேற்றத்தைத் தடுக்கும் அல்லது கட்டுப் படுத்தும் சட்டங்கள்.
2. ஒரு சமூகத்தவருக்கு அல்லது ஒரு சமயத்தவருக்கு பிரத்தியேக உரிமைகளையோ அன்றேல் சலுகைகளையோ அளிக்கும் சட்டங் கள்.
3. தொழுகைச் சுதந்திரத்தைக் கட்டுப் படுத்தும் சட்டங்கள்.
4. இலங்கையின் பாதுகாப்பு, நாணயம், பொதுநலவாயத்திலுள்ள நாடுகளின் வணிகம், கப்பற்போக்கு வரத்து ஆகியன சம் மந்தப்பட்ட சட்டங்கள்.
5. ஆள்பதிநாயகம் முன்னர் நிறைவேற்றிய சட்டங்களுக்கு எதி ரான சட்டங்கள்.
6. வாக்குரிமை பற்றிய சட்டங்கள்
7. அரசியல் திட்டத்தை மாற்றும் சட்டங்கள்.

1928-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ந் திகதிக்கு முன்பு குடியேற்ற நாட்டரசுச் செயலாளரின் அனுமதியோடு நியமனஞ் செய்யப்பட்ட

உத்தியோகத்தர்களுக்கு ஓய்வு காலச் சம்பளத்துடனும் உத்தியோக நட்டஈட்டுடனும் ஓய்வு பெறுமுரிமை சோல்பரி அரசியல் திட்டத்தின்கீழும் வழங்கப்படல் வேண்டுமென சோல்பரி ஆணைக்குழு தகவுரைசெய்தது. அதுவுமன்றி 1928-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ந் திகதிக்குப் பின்னரும் சோல்பரி அரசியல் திட்டம் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முன்னரும் குடியேற்ற நாட்டரசுச் செயலாரால் அங்கீகரிக்கப்பட்டு நியமனஞ் செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தருக்கும் மேற்கூறிய சலுகைகள் வழங்கப்படல் வேண்டுமெனவும் தகவுரை செய்தது. மூன்று அங்கத்தவர்களடங்கிய ஒரு அரசாங்க சேவை ஆணைக்குழு அமைக்கப்படல் வேண்டுமெனவுந் தகவுரை செய்யப்பட்டது: அதில் ஒருவர் முதல்வராயிருப்பர், அங்கத்தவர்கள் அரசியற்பற்றற்றவர்களாகவே இருக்க வேண்டும். அக்குழுவில் இலேப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் சேர்த்துக் கொள்ளப்படலாம். அங்கத்தவர்கள் மூவரும் ஆள்பதி நாயகத்தினாலேயே நியமனஞ் செய்யப்படல் வேண்டும்: ஆண்டுக்கு 3780 ரூபாவுக்குமேல் ஆரம்பச் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியரின் நியமனம், பதவி உயர்ச்சி, மாற்றம், பதவி நீக்கம் ஆகியன அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பொறுப்பிலேயே இருக்கும்:

சோல்பரி ஆணைக்குழு நீதி பாலனத்திற்குப் பொறுப்பாக நீதிமுறைச் சேவை ஆணைக்குழுவொன்று நியமனஞ் செய்யப்படல் வேண்டுமெனத் தகவுரை செய்தது. இதில் மூவர் அங்கத்துவம் வகிப்பர். இதன் முதல்வர் பிரதம நீதிபதியாவர்; மற்றைய அங்கத்தவர்கள் இருவரும் தற்போது பதவியிலிருக்கும் உச்சமன்று நீதிபதிகளாகவும் இருக்கலாம். அன்றேல் பதவியிலிருக்கும் உச்சமன்று நீதிபதி ஒருவராகவும் மற்றவர் இலேப்பாறிய உச்சமன்று நீதிபதி ஒருவராகவும் இருக்கலாமெனத் தகவுரை செய்யப்பட்டது. இவர்களை ஆள்பதிநாயகமே நியமனஞ் செய்யவேண்டும். சகல நீதிமன்றுகள், நீதிபதிகளின் நியமனம், அவர்களின் உயர்ச்சி, மாற்றம், பதவிநீக்கம், ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியனவும் நீதிமுறைச்சேவை ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ்கொண்டு வரப்படவேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. ஆள்பதிநாயகத்திற்கு பிரதம நீதிபதியையும் உச்சமன்று நீதிபதிகளையும் நியமனஞ் செய்யும் அதிகாரத்தைச் சோல்பரி ஆணைக்குழு வழங்கியது:

சோல்பரி ஆணைக்குழுவின் எடுத்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன. இலங்கை தற்பொழுது வெளிவிவகாரம் பிறநீங்கலாக சகல பாலன விடயங்களில் பூரண பொறுப்பு வாய்ந்த சுதந்திர நாடாக விளங்கும் பாக்கியம் பெற்றது: 1948-ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 4-ந் திகதி சோல்பரி அர

சமைப்பின்கீழ் இலங்கையின் சுதந்திரம் பிரகடனஞ் செய்யப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே படிப்படியாக ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுவந்த இலங்கை மக்கள் சோல்பரி அரசமைப்பின் கீழ் முழு ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றுத் தங்களைத் தாங்களே ஆளுபவர்களாக மாறினர். எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற தத்துவம் இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது.

வினாக்கள்

1. இன்றைய பாராளுமன்றத்தின் அமைப்பும் தொழிற்பாடும் எவ்வகையில் டொனமூர் ஆணைக்குழுவின் எடுத்துரைகளின்படி அமைக்கப்பட்ட அரசாங்கத்தின் அமைப்பிலிருந்தும் தொழிற்பாட்டிலிருந்தும் வேறுபடுகின்றன வென்பதைத் தருக. (ஆகஸ்ட், '50)

2. சோல்பரிக் குழுவினர் இலங்கை அரசியல் முறையிற் கண்ட குறைபாடுகள் எவை? அவற்றை அவர்கள் எவ்வாறு திருத்த எண்ணினர்? (டிசெம்பர், '56)

3. 1931ம் ஆண்டு அரசியல் சீர்திருத்தங்கள் 1947ம் ஆண்டு அரசியல் சீர்திருத்தங்களிலிருந்து எவ்வாறு வித்தியாசப்படுகின்றன? (டிசெம்பர், '59)

4. டொனமூர் அரசியல் திட்டத்தின் குறைகள் யாவை? சோல்பரி அரசியல் திட்டம் இவற்றை நீக்குவதற்கு எவ்வாறு வழி வகுத்தது? (ஆகஸ்ட், '62)

5. இலங்கையில் மந்திரிசபை முறை அமைந்த அரசாங்கத்தின் அபிவிருத்திக்கு சோல்பரி ஆணைக்குழுவினர் செய்த உதவி யாது? (டிசெம்பர், '64)

6. கி. பி. 1910 லிருந்து கி. பி. 1947 வரை எமது நாட்டின் அரசியல் திட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களை எழுதுக. (டிசெம்பர், '65)

7. 1815 தொடக்கம் 1948 வரை இலங்கையில் மாகாணநிர்வாக முறை அமைப்பில் ஏற்பட்ட பிரதான மாற்றங்களைப் படிப்படியாக விபரிக்குக. இப்படியான மாற்றங்களுக்கான காரணங்கள் யாவை? (ஆகஸ்ட், '66)

8. சுருக்கமான விடை தருக:
பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் அரசியலமைப்பு வளர்ச்சியிலே முக்கியமான மூன்று படிகள் யாவை?

பத்தொன்பதாம் அத்தியாயம்

இலங்கை சுயாட்சிப் பாதையில்

சோல்பரி ஆணைக்குழுவின் அரசமைப்பு 1945ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சமர்ப்பணம் செய்யப்பட்டது. இக் குழுவின் அரசமைப்பு வெளிவர முன்னரே டி. எஸ். சேனநாயக்கா அவர்கள் இங்கிலாந்து சென்று இலங்கைக்கு ஆணிலப்பதம் (Dominion Status) வழங்குமாறு பிரித்தானிய ஆட்சிப் பீடத்தைக் கேட்டுக்கொண்டார். மேலும் இலங்கையின் பாதுகாப்பு, வெளிவிவகாரம் சம்பந்தமாக பிரித்தானிய ஆட்சிப் பீடத்தில் நிலவிவந்த அச்சங்களைத் தெளிவுபடுத்தும் முகமாக அதனுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளவும் உடன்பட்டார். ஆனால் பிரித்தானிய ஆட்சிப் பீடமோ டி. எஸ். சேனநாயக்காவின் கோரிக்கையையிட்டு உடனடியாக ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையில் 1945ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. இதில் இலங்கை மக்கள் சோல்பரி அரசமைப்பை ஏற்று நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் அது செவ்வனே நடைபெற்றால் வெகுவிரைவில் இலங்கைக்கு ஆணிலப்பதம் வழங்குவதாகவும் கூறப்பட்டிருந்தது. அதுவுமன்றி சோல்பரி அரசமைப்பில் ஆள்பதிக்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்கள் மாற்றப்பட்டன.

இவ்வெள்ளை அறிக்கையை இலங்கை அரசுக் கழகம், பெரும்பான்மை வாக்குகளால் ஏற்றுக்கொண்டது. மேலும் 1947ம் ஆண்டு இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைப்பது திண்ணமென்ற எண்ணம் வலுப்பெற்றதும், டி. எஸ். சேனநாயக்கா அவர்கள், இலங்கைக்கு உடனடியாக ஆணிலப்பதம் வழங்கப்படவேண்டுமென்று வற்புறுத்தினர். இவரது கோரிக்கையை இம்முறை பிரித்தானிய ஆட்சிப்பீடம் உதாசீனப்படுத்த விரும்பவில்லை. 1947 ம் ஆண்டு ஜூன் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கை, சோல்பரி அரசமைப்பின்படி இலங்கையில் அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் இலங்கை மந்திரி சபையோடு ஆணிலப்பதம் வழங்கும் விடயமாக பேச்சு வார்த்தை நடாத்தப்படும் என உறுதி அளித்தது. இதன் பிரகாரம் 1947ம் ஆண்டு ஜூலை மாதம் 4ந் திகதி அரசுக் கழகம் கூலைக்கப்பட்டது.

சோல்பரி அரசமைப்பில் காணப்பட்டபடி பிரதிநிதிகள்சபை உறுப்பினரைத் தெரிவுசெய்யும் முகமாக ஒரு பொதுத் தேர்தல் ஆகஸ்ட் மாதம் 23ந் திகதி தொடக்கம் செப்டம்பர் மாதம் 20ந் திகதி வரையும் நடைபெற்றது. இதில் 89 தொகுதிகளைச் சேர்ந்த

ஏறத்தாழ 49,78,000 வாக்காளர் 95 பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டிய கடமைப்பாடுடையவராயினர்; அத் தேர்தல் விபரங்கள் பின்வருமாறு;

கட்சிகள்	அபேட்சகரின் தொகை	பெற்ற தானங்கள்	பெற்ற வாக்குகள்
1 ஐக்கிய தேசியக் கட்சி	98	42	7,51,432
2 இலங்கை சமசமாஜக் கட்சி	28	10	2,04,020
3 பொல்ஷவிக் சமசமாஜக்கட்சி (Bolshevik Leninist Party)	10	5	1,13,193
4 பொதுவுடமைக் கட்சி	13	3	70,331
5 தொழிற் கட்சி	9	1	38,932
6 தமிழ் காங்கிரஸ்	9	7	82,449
7 இலங்கை இந்தியன் காங்கிரஸ்	7	6	72,230
8 ஐக்கிய லங்கா காங்கிரஸ்	2	0	3,953
9 சுயராச்சியக் கட்சி	3	0	1,393
சுயேச்சை வாதிகள்	181	21	5,49,,381
மொத்தம்	360	95	30,52,814

வாக்களித்தோர் தொகையின் வீதம் 61. 3

இலங்கையின் முதல் பொதுத் தேர்தலில் எவ்வரசியற் கட்சியும் பெரும்பான்மைத் தானங்களைப் பெறவில்லை. இதனால் 95 தானங்களில் 42 தானங்களைப் பெற்ற ஐக்கியதேசியக் கட்சி சுயேச்சை வாதிகளின் உதவியுடன் அரசாங்கத்தை அமைக்க முடிந்தது; அதன் தலைவர் டி. எஸ். சேனநாயக்கா அவர்கள் இலங்கையின் முதல் பிரதம மந்திரியானார். அவரது மந்திரிசபை உறுப்பினரும் அவர்களது தொகுதிகளும் அமைச்சுப் பதவிகளும் பின்வருமாறு:



பெயர்	தொகுதி	அமைச்சுப் பதவிகள்
1. கௌரவ D. S. சேனநாயக்கா	— மீரிகம—பாதுகாப்பு வெளி—விவகாரம்	
2. ,, G. E. de. சில்வா	— கண்டி — கைத்தொழில், கைத் தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி	
3. ,, R. S. S. குணவர்த்தனு	— கம்பளை — மேலதிக அமைச்சுப் பதவி	
4. ,, T. B. ஜயா	— கொழும்பு மத்தி — தொழில் சமூக சேவை	
5. ,, J. R. ஜெயவர்த்தனு	— களனி — நிதி	
6. ,, SWRD பண்டாரநாயக்கா	— அத்தனகலை, — சுகாதாரம்	
7. ,, கேணல் J. L. கொத்தலாவலை	—தொடங்கொஸ்லாந்தை—போக்குவரத்து, வேலை	
8. ,, E. A. நுகவலை	— கடுகண்ணாவை I — கல்வி	
9. ,, A. ரத்நாயக்கா	— வத்தேகம—உணவு, கூட்டுறவு	
10. ,, டட்லி சேனநாயக்கா	— டெடிகம — விவசாயம், நிலம்	
11. ,, K. சிற்றம்பலம்	— மன்னார் — தபால், தந்தி	
12. ,, C. சுந்தரலிங்கம்	— வவுனியா — வர்த்தகம், வியாபாரம்	

பிரதிநிதிகள் சபை 1947ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ந் திகதி முதன்முதலாகக் கூடிற்று. மூதவை அவ்வாண்டு நவம்பர் மாதம் 12ந் திகதி கூடிற்று.

வெகு விரைவில் பிரதம மந்திரி, இலங்கை சுயாட்சி பெறும் முகமாக பிரித்தானிய ஆட்சிப் பீடத்தோடு பேச்சு வார்த்தையை ஆரம்பித்தார். இதன் பேருக இங்கிலாந்து அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரங்கள், அரசாங்க அலுவலாளர் ஆகிய விடயங்களில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இவற்றைவிட இலங்கை சுயாட்சிச் சட்டம், இலங்கை சுயாட்சி அரசக் கழகத்துப் பணி, என இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கை சுயாட்சிச் சட்டத்தின்படி இலங்கை ஒரு பரிபூரண சுதந்திர நாடாயிற்று; பிரித்தானிய பொதுநல வாயத்திலடங்கிய

ஏனைய ஆணிலப்பதம் பெற்ற நாடுகளுக்கு வழங்கப்பட்ட அந்தஸ்து இலங்கைக்கும் வழங்கப்பட்டது. பொதுநலவாயத்தில் அங்கத்துவம் வகிக்கவும், அதிலிருந்து எச்சந்தர்ப்பத்திலும் விலகவும் இலங்கைக்கு உரிமை வழங்கப்பட்டது. இலங்கையின் சகல உள்நாட்டு, வெளிநாட்டு விவகாரங்கள் ஆகியனவற்றைப் பற்றிச் சட்டங்கள் இயற்றுவதற்குப் பூரண அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உண்டு. அதனால் இயற்றப்பட்ட சட்டங்களைக் கட்டுப்படுத்தும் உரிமை வேறு எந்நாட்டுப் பாராளுமன்றத்திற்கும் இல்லை. இனிமேல் இலங்கை அரசாங்கத்தின் செயல் எவற்றிற்கும் பிரித்தானியப் பாராளுமன்றம் பொறுப்பாயிராது. மேலும் இதுவரையும் இலங்கையின் பாதுகாப்பு, அரசமைப்பு, வெளிநாட்டுத் தொடர்பு முதலியனவற்றைப்பற்றி சட்டங்கள் இயற்றுவதற்கு கோமறைக்கழகத்திற்கு உரிமையிருந்துவந்தது. ஆனால் இவ்வுரிமை தற்போது நீக்கப்பட்டது. எனினும் பிரித்தானிய அரசாங்கம், இலங்கைப் பாராளுமன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்குத் தேவையான சட்டங்களை இயற்றலாம். அதுவுமன்றி படை, குடிமை வழங்குதல், விவாகரத்து, கப்பற் போக்கு வரத்து, பதிப்புரிமை முதலிய விடயங்களில் இலங்கையைக் கட்டுப்படுத்தும் பிரித்தானியச் சட்டங்கள் விலக்கல் செய்யப்பட்டன. சுருங்கக் கூறின் 4-2-1948 க்குப் பின்னர் 1865ம் ஆண்டின் குடியேற்ற வாய்ப்புச் சட்டம் (The Colonial laws Validity Act, 1865) இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்தாது.

இலங்கை சுயாட்சி அரசுக்கழகத்துப் பணியின்படி 1948ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 4ந் திகதிக்குப் பின்னர் ஆள்பதி, ஆள்பதிநாயகம் என அழைக்கப்பட்டார். இலங்கை ஆணிலப்பதம் பெற்று பொதுநலவாயத்தில் அங்கத்துவம் வகிக்கின்ற படியால் பிரித்தானிய மன்னர் இலங்கையின் மன்னராகவும் கருதப்பட்டார். ஆகவே ஆள்பதிநாயகம் பிரித்தானிய மன்னரின் இலங்கைப் பிரதிநிதி எனக்கூறுவது பொருத்தமாகும். ஆள்பதி இதுவரையும் குடியேற்ற நாட்டரசுச் செயலாளரின் பிரதிநிதியாகவும் மன்னர் பிரானின் பிரதிநிதியாகவும் இருந்து வந்தார். தற்போது இந்நிலைமை மாறி ஆள்பதிநாயகம், மன்னர் பிரானின் பிரதிநிதியாக மாத்திரமே இருக்கின்றார். இங்கிலாந்தில் மன்னர் பிரான் செய்யும் கடமைகளை இவர் இலங்கையில் செய்து வருகின்றார். இவர் பிரதம மந்திரியின் ஆலோசனையோடு செய்து வரும் பிரதான கடமைகள் பின்வருமாறு:- பாராளுமன்றத்தைக் கூட்டுதல்; தரிப்பிடுதல்; குலைத்தல்; முறிகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்; அரியணைப் பேச்சை நிகழ்த்துதல்; தொகுதி வரையறைக் குழு, பிரதிநிதிகள் சபை, மூதவை, அரசாங்க சேவை ஆணைக்குழு முதலியனவற்றின் உறுப்பினரை நியமித்தல்; பிரதம மந்திரி, மந்திரிகள், பாராளுமன்றச்

செயலாளர், நிரந்தரச் செயலாளர், கணக்குப் பரிசோதனை நாயகம் ஆகியோரை நியமித்தல். இலங்கை சுயாட்சி அரசுக்கழகத்துப் பணி 29-ம் பிரிவின் இரண்டாம் உப பிரிவின்படி கீழ்க்காணும் விடயங் களையிட்டு சட்டமியற்றும் அதிகாரம் இலங்கைப் பாராளுமன்றத் திற்கு வழங்கப்படவில்லை:

1. தொழுகைச் சுதந்திரத்தைத் தடுக்கும் அல்லது கட்டுப்படுத் தும் சட்டங்கள்;
2. பாரபட்சமாக ஒரு இனத்தவரை அல்லது ஒரு சமயத்தவரைப் பாதிக்கும் கட்டுப்பாடுகள், குறைபாடுகள் ஆகியனவற்றைச் சட் டமாக்குதல்.

3. மற்றவர்களுக்கு வழங்கப்படாத சில சலுகைகளையோ நலன் களையோ ஒரு இனத்தவருக்கோ அல்லது சமூகத்தவருக்கோ வழங்கும் பொருட்டுச் சட்டங்களைக் கொண்டுவருதல்.

4. ஒரு சமய நிறுவகத்தின் அங்கீகாரம் அல்லது ஒழுங்குப் பிரமா ணங்களை அதன் அனுமதியின்றி மாற்றும் சட்டங்கள்.

5. அரசமைப்பில் ஏதாவது ஒரு திருத்தம் கொண்டு வருவதற்கோ அல்லது ஏதாவது ஒரு சரத்தை நீக்குவதற்கோ பிரதிநிதிகள் சபையின் முழு அங்கத்தவர் தொகையில் மூன்றில் இரு பகுதி யினர் வாக்களிக்க வேண்டும்.

அந்நிய வல்லரசுகளிடமிருந்து இலங்கைக்கும் இங்கிலாந்திற்கும் வரும் மீச்செலவைச் சமாளிப்பதற்காகவும் அந்நாடுகளின் பாது காப்பிற்காகவும் பாதுகாப்பு ஒப்பந்தம் இவ்விரு நாடுகளிடையே கைச்சாத்திடப்பட்டது. இதன்படி இங்கிலாந்து, இலங்கையின் பாதுகாப்பிற்காகப் போதிய படையுதவி அளிக்க உடன்பட்டதுடன் இலங்கைத் துருப்புகளின் பயிற்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் தேவையான படையுதவி அளிக்க முன்வந்தது. இன்னொருபுறம் இலங்கை தனது தேவைக்கேற்ப இங்கிலாந்திற்குத் தேவையான உதவி அளிக்க உடன்பட்டது. பிரித்தானியப் படைகளின் உபயோ கத்திற்காக திருகோணமலை, கட்டுநாயக்கா ஆகிய தளங்களை இலங்கை அளித்தது. (இவ்விரு தளங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு 1957-ம் ஆண்டு திருப்பிக் கொடுக்கப்பட்டன)

அரசியல் ரீதியில் இலங்கை அதி அபிவிருத்தி அடைந்து, பொதுநல வாயத்தில் ஒரு பரிபூரண சுதந்திர நாடாக அங்கத்துவம் வகிப்பதால் உள்நாட்டு வெளிவிவகார விடயங்களைப் பொறுத்த வரையில் அது மற்ற நாடுகளுடன் சம அந்தஸ்தைப் பெற்றிருக்கின் றது. ஆகவே வெளிநாட்டு விவகாரங்கள் விடயமாக இலங்கைக் கும் இங்கிலாந்திற்குமிடையே வெளிநாட்டு விவகார ஒப்பந்தம்கைச்

சாத்திடப்பட்டது; இதன் பிரகாரம் பேரரசு மாநாடுகளில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் சம்மதித்தது. பிறநாடுகளுக்குத் தூதமைச்சரை அனுப்புவதற்கும் தேவையான சமயங்களில் இங்கிலாந்தின் தூதமைச்சரைப் பயன்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் இலங்கைக்குக் கிடைத்தது; பிறநாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும் உரிமை வழங்கப்பட்டது; இலங்கை, ஐக்கியநாடுகள் தாபனத்தில் அங்கத்துவம் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க இங்கிலாந்து ஒப்புக்கொண்டது. இலங்கையின் சார்பில் இங்கிலாந்து பிறநாடுகளோடு செய்து கொண்ட உடன்படிக்கையினால் இதுகாறும் அனுபவித்து வந்த பலாபலன்களை மேலும் இலங்கையே அனுபவிக்கும்; பிறநாட்டுத் தொடர்புகள் சம்பந்தமாக இங்கிலாந்து மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளைப்பற்றி இங்கிலாந்து இலங்கைக்கு அறிவிக்கும். அவை சம்பந்தமாக தனது சொந்தக் கருத்தை இலங்கை அரசாங்கம் அறிவிக்கலாம்; அதுபோன்றே இலங்கையும் பிறநாடுகளோடு, தான் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை இங்கிலாந்திற்கு அறிவிப்பதுடன் அதன் கருத்துக்களை நேரடியாகவோ அல்லது உயர் ஆணையாளர் மூலமாகவோ அறிந்து கொள்ளும்;

ஆட்சி அலுவலாளர் ஒப்பந்தத்தின் படி குடியேற்ற நாட்டரசுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட அல்லது முடிசார் முகவருடன் ஒப்பந்தம் செய்த அலுவலாளரது நலன்கள் பாதுகாக்கப்பட்டன; இலங்கை ஆணிலப்பதத்தைப் பெற்றவுடன் மேற்கூறிய அலுவலாளர் குறித்த காலஎல்லைக்குள் நட்ட ஈட்டுடன் தமது பதவியிலிருந்து ஓய்வு பெறலாம் அன்றேல் அவர்கள் முடிசார் குடியேற்றங்களில் வேறு பதவிகளை வகிக்கலாம். இனிமேல் அவர்கள் குடியேற்ற அலுவலகத்தின் மேற்பார்வையின்கீழ் அடங்கியவராவர். இவ்விருசலுகைகளையும் பயன்படுத்த விரும்பாத அலுவலாளர் இலங்கை அரசாங்கத்தின் அலுவலாளராயினர்.

பிரித்தானிய பாராளுமன்றத்தில் இலங்கைக்கு ஆணிலப்பதம் வழங்கி ஒரு முறி கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதன் பயனாக இலங்கை 1948-ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 4-ந் திகதி ஆணிலப்பதத்தைப் பெற்று ஒரு பரிபூரண சுதந்திர நாடாயிற்று. சேர் ஹென்றி மொங்மேசன்மூர் அவர்களை ஆள்பதி நாயகமாகவும் கௌரவ டி. எஸ். சேனநாயக்கா அவர்களை பிரதம மந்திரியாகவும்கொண்ட அரசாங்கம் நடைபெறலாயிற்று;

ஆகவே சோல்பரி அரசமைப்பு ஒரு சில மாதகாலமே நிலைத்திருந்தது எனக் கூறுவது மிகையாகாது. எனினும் சோல்பரி அரசமைப்பை அடிப்படையாகக் கொண்டு அதில் ஆணிலப்பதத்திற்குப் பொருத்தமாகச் சில மாற்றங்கள் செய்து இயற்றப்பட்டதே இன்றைய அரசமைப்பாகும்.

இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கலைச் சொற்கள்

1	அமைச்சுப் பதவி	—	Portfolio
2	அரசமைப்பு	—	Constitution
3	ஆணைக்குழு	—	Commission
4	ஆளெல்லை	—	Jurisdiction
5	ஆள்பதிநாயகம்	—	Governor General
6	இறைமுறை	—	Tariffs
7	இறைமை	—	Sovereignity
8	உச்ச மன்று	—	Supreme Court
9	உயர்குடி	—	Aristocracy
10	ஏவுநர் முதல்வன்	—	Commander in Chief
11	ஏவுநன்	—	Commander
12	ஒழிப்பு	—	Abolition
13	ஒன்றியொதுக்கல்	—	Boycott
14	கழகத்துப்பணி	—	Order in Council
15	கன்னை	—	Faction
16	குடிமை	—	Citizenship
17	குடியியற் சேவை	—	Civil Service
18	குடியியற் பாலனம்	—	Civil Administration
19	குற்றகவையர்	—	Minor
20	கூட்டுப்பங்கு வாரியம்	—	Joint Stock Company
21	கூட்டுப் பொறுப்பு	—	Collective responsibility
22	கோமறைக் கழகம்	—	Privy Council
23	சட்டத்துறை நாயகம்	—	Attorney General
24	சட்டவாணர்	—	Lawyer
25	சட்டவாதி	—	Barrister
26	சுற்றுலா மன்று	—	Circuit Court
27	தண்டச் சட்டம்	—	Penal Law
28	தாழ்வெண்ணிக்கை	—	Quorum
29	திருச்சபைக்குரிய	—	Ecclesiastical
30	நடுவர் முறைமை	—	Jury system
31	நிறுவகம்	—	Institution
32	நீதிக்களம்	—	Judicature
33	படிமுதல்வர்	—	Pay master
34	படைப்பாலனம்	—	Military Administration
35	படை மன்று	—	Court martial
36	படையியற் சட்டம்	—	Martial law

37	பட்டயம்	—	Charter
38	பணிக்காயர்	—	Director
39	பதிலரையன்	—	Viceroy
40	பாதீடு	—	Budget
41	பாலனம்	—	Administration
42	பிரசித்தம்	—	Proclamation
43	பிரதியாளர்	—	Deputy
44	பிறக்கீடு	—	Withdrawal
45	பேச்சுச் சுதந்திரம்	—	Freedom of speach
46	பேரரசு மாநாடு	—	Imperial Conference
47	பொதுநலவாயம்	—	The Commonwealth
48	மரண தண்டனை	—	Capital punishment
49	மாலியமளிநாடு	—	Feudatory
50	மீச்செலவு	—	Aggression
51	முகவர்	—	Agent
52	முடிசார் குடியேற்றம்	—	Crown Colony
53	முழுவுரிமை	—	Monopoly
54	முறி	—	Bill
55	மூதவை	—	Senate
56	மேன் முறையீடு	—	Appeal
57	மேன்முறையீட்டு மன்று	—	Court of Appeal
58	மேற்பார்வையாளன்	—	Superintendent
59	வணிக மன்றம்	—	Chamber of Commerce
60	வணிகவியல்	—	Mercantalism
61	வதிவாளர்	—	Resident
62	வாரியார்	—	Fiscal
63	விண்ணப்ப மன்று	—	Court of Request
64	விருது	—	Honour
65	விலக்கல்	—	Repeal
66	வேத்தியல் ஆணைக்குழு	—	Royal Commission

இந்நூலை எழுதுவதற்கு உதவியாக எடுத்தாண்ட நூல்கள்.

1. A History of Ceylon for Schools (British period) — Rev. Fr. S. G. Perera
2. Ceylon under the British — G. C. Mendis
3. Ceylon Yesterday and Today — ,,
4. British Governors of Ceylon — Hulugalle.
5. Story of Ceylon — E. F. C. Ludowyke.
6. Ceylon under British Rule — Lennox A. Mills
7. Ceylon under the British Occupation (Volume 1 & 2) — Colvin R. De Silva.
8. Constitution of Ceylon — Sir Ivor Jennings
9. The Constitution of Ceylon—Ceylon Govt. Press.
10. Ceylon under Western Rule — Horace Perera.
11. Our Legislature — J. R. Weinman.
12. An Introduction to Civics and Government — A. J. Wilson
13. Ceylon—A Divided Nation — B. H. Farmer.
14. இலங்கை அரசியற் சீர்திருத்த விசாரணைச் சபையின் அறிக்கை — குடியேற்றநாட்டுக் காரியாலயம்.
15. ஆட்சி இயல் — ச. ஹன்டி பேரின்பநாயகம்.
16. நோத் முதல் கோபல்லவாவரை க. சி. குலரத்தினம்
17. University of Ceylon Journals
18. Ceylon Year Books
19. Parliament of Ceylon, 1965 — Ceylon Daily News



விளாவில் வெளிவருகிறது!

[illegible]லக வரலா[illegible]

க. பொ. த. (சாதாரணதர) பா[illegible]ற்கு
அமைய எழுதப்பெற்ற

எழுதியவர்:
சி. எஸ். திரிகா[illegible]தன்

வ[illegible]ரிடு
226, [illegible] வீதி,
வாழ்ப்பாணம்.